111

# காவேரி

சர்வஜித் - மார்கழி



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 JAN 1948
MADRAS

8/ அணா



# தற்கால கட்டிட நிர்மாணம்

## தொழிலாளர் வீடு அமைப்பு

இன்று இந்தியா தேசமானது அமோகமாக தொழில் அபிவிருத்தி துறையில் ஈடுபட்டிருக்கிறது. இது விஷயத்தில் மிகவும் முக்ய பிரச்னையானது தொழிலாளிகளின் சுகவாழ்க்கை. அதிலும் அவர்களின் குடியிருப்பு வசதி. இவைகளில் அதிகாரிகள் தங்கள் காலத்தை செலுத்திகொண்டிருக்கிறார்கள் என்பதைக்காண திருப்திகரமாயிருக்கிறது. சந்தோஷகரமானதும், சுகாதாரத்துடனும் நன்கு அமைக்கப்பட்ட, வாழ்க்கை வசதிகள் தொழிலாளர்களின் திரேகாரோக்யத்தையும் அவர்களிள் திறத்தையும் அதிகரிக்கும் இதன்பிரதிபலனாக அதிக உற்பத்தி ஏற்படும்.

நீடித்த உழைப்பு, சிக்கனம் அமையக்கூடிய தன்மை, தீபயமின்மை, பரிசுத்தம் இத்தன்மைகளை ஸ்வபாவத்திலேயே கொண்ட கான்கிரீட்—தொழிலாளர் வீடுகள்—சிற்றுண்டி சாலைகள்—அனாதைபோஷணை சாலைகள்-பள்ளிக்கூடங்கள் — ஆஸ்பத்ரிகள் — நிற்கும் நீர்நிலைகள்— இவைகள் கட்டுவதற்கு ஏற்றசாதனம்.

சிமென்ட் கான்கிரீட்டின் முழுபலன்களையும் உபயோகப்படுத்திக்கொள்ளும் முறையில் தி கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியாவின் (199, மவுன்டு ரோட்டு, மதராஸ்) பரிபோஷிக நிபுணர்களின் இலவசபோதனை எப்பொழுதும் கிடைக்கும்.

“தொழிலாளர் வீடு அமைப்பு” என்னும் ஓர் கட்டுரையின் பிரதி, இலவசமாக அனுப்பப்படும்.

**தி ஸிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்.**

ADARTS CMI. 147 Tamil.

உங்களுக்குத்தெரியாமலிருக்கலாம்.

ஆனால் இந்தியா, பாகிஸ்தான்

முழுவதுமுள்ள 100-க்கு மேற்பட்ட

விமான நிலையங்களிலும் பர்மா-ஷெல்

ஏவியேஷன் சர்வீஸ் கிடைக்கப்-

பெறலாம்

**பர்மா-ஷெல்**
**ஏவியேஷன் சர்வீஸ்**

விமான கம்பெனிகளால் நம்பப்படும் சர்வீஸ்

SHELL

பர்மா-ஷெல் ஆயில் ஸ்டோரேஜ் அன்டு டிஸ்டிரிபியூடிங்
கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்.

(இங்கிலாந்தில் ஸ்தாபிக்கப்பெற்றது) ஏஜன்டுகள்.

STM




லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்
பெரியதெரு
கும்பகோணம்.

LIVER CURE Branch Office
Parekh Mansion
Sandhurst Road, (West)
BOMBAY 4.


## படித்துப் பாருங்கள்

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1 | தமிழுணர்ச்சி (யோகி சுத்தானந்த பாரதியார்) | 3 | 0 | 0 |
| | (காலிகோ பதிப்பு) | 3 | 8 | 0 |
| 2 | மேடைக்கலே (ஆ. முத்துசிவம்) | 2 | 0 | 0 |
| 3 | புரட்சித் தலேவர் ஜெயப்பிரகாஷ் (கொடுமுடி ராஜகோபாலன்) | 3 | 0 | 0 |
| 4 | சோவியத் அரசாங்கம் (S. ஷண்முகம்) | 1 | 8 | 0 |
| 5 | 1944 முதல் இன்று வரை (N. ராமரத்னம்) | 1 | 4 | 0 |
| 6 | மீண்ட இந்தியா (N. R. பத்மனபன்) | 0 | 14 | 0 |
| 7 | ஆதி கவி (கம்பதாஸன்) | 0 | 10 | 0 |
| 8 | ஆசியாவின் அறை கூவல் (பல்குநன்) | 0 | 12 | 0 |
| 9 | கவிதையும் வாழ்க்கையும் (ஆ. முத்துசிவம்) | 3 | 0 | 0 |
| 10 | ரசிகமணியின் கடிதங்கள் (பாஸ்கர்) | (அச்சில்) | | |
| 11 | மரகதம் (விக்டர்யூகோ) | ,, | | |

எல்லாப் புத்தக வியாபாரிகளிடமும் இடைக்கும்

விபரங்களுக்கு:-

**கார்த்திகேயினி பிரசுரம்**

இராமச்சந்திரபுரம் P. O.

புதுக்கோட்டை ஸ்டேட்.

198053
M211,44IKV
N47.5

# BITA CAFFIN

## பிடாகாபின்

(தலைவலி மாத்திரைகள்)




தலைவலி, பல்வலி, கால்களிலும் மூட்டுகளிலும் வலி, சூதகத்தின் போதுள்ள வலி முதலிய சகல வலிகளையும் நீக்கும். தூக்கமின்மை, மலேரியாசுரம் இவைகளையும் கண்டிக்கும். இருதயத்துக்கோ, குடலுக்கோ எவ்வித தீங்கும் செய்யாது.

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்

மூன்று மாத்திரைகள் கொண்ட பாக்கெட் அணா 1

# BITA LAX

## பிடாலாக்ஸ்

(இனிப்பான சாக்லெட் சுகபேதி)




இலேசாகவும், சுகமாகவும், மலச்சிக்கலை போக்க வல்ல குணமுள்ளது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

*Stockist:—*

**M/s DADHA & Co., P. T. Madras**

Manufactured by:—

**BOMBAY TABLET MANUFACTURING COMPANY,**

Post Box 2092, 176, Zaveri Bazaar, BOMBAY 2




KALAPI INDUSTRIES, BOMBAY, 2.

Sole Agents: KALAPI STORES, BOMBAY, 2.




KALAPI INDUSTRIES, BOMBAY, 2.

Sole Agents: KALAPI STORES, BOMBAY, 2.



டிரேட் மார்க்கை
கவனியுங்கள்!



ஒவ்வொரு
வீட்டிலும்
உட்வார்ட்ஸ்
க்ரைப் வாட்டர்
இருக்கவேண்டும்



# WOODWARD'S
## GRIPE WATER

*keeps baby well*

1-WW112-111 W. WOODWARD LTD. LONDON ENGLAND

Agent:—T. T. KRISHNAMACHARI & Co.
12A Lingha Chetty Street, — G. T. MADRAS.

இந்தியாவின் புகழ்




லோத்ரா
கர்பாசய ரோக நிவாரணி
கேஸரி குடீரம் லிட்., மதராஸ்
EASTERNS.394

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு —

ஏஜண்டுகள் :—
சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்,
பேர்ஹாம்பூர், செகந்திராபாத்,
பெஜவாடா, மதுரை.

OFFICE OF THE REGISTRAR ... JAN ... MADRAS

# பொருளடக்கம்

சர்வஜித்து மலர் 7 | மார்கழி இதழ் 5


| | |
|---|---|
| வாழ்க ராஜாஜி | 7 |
| அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் — ராமய்யா | 9 |
| கதம்பம் | 13 |
| சுதந்திர பட்ஜெட் — கே. எஸ். நாகராஜன் | 15 |
| யாசகம் — ரா. ஸ்ரீ. தேசிகன் | 19 |
| அந்த நாளிலே — விந்தியா | 24 |
| புத்தக விமர்சனம் | 31 |
| துறவி யார்? — ஆர். எஸ். | 33 |
| அணைந்த விளக்கு — வே. ரங்கராஜன் | 42 |
| இறுதியில் — கி. ஸந்தானம் | 49 |
| நியான் தீபம் — ஆர். கே. விசுவநாதன் | 53 |
| பிரேமா — ரஜனி | 58 |
| கார்த்திகை விரதம் — யோகி சுத்தானந்த பாரதியார் | 64 |
| ஸந்த்யா — அ. சுவாமிநாதன் | 66 |
| சமையல் தெரியவேண்டுமா? — கிட்டு | 69 |
| பலி — மானஸீகன் | 73 |
| நடன கலா — கே. சுந்தரம்மாள் | 80 |


குறிப்பு :—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.




அரசியல் நிர்ணய சபை காங்கிரஸ் கட்சியினரின் கூட்டம்.





**உண்மையான நீம் ஆயில் சோப் இதுதான்**

சருமத்தைப் பாதுகாக்க அவசியமென்று நிபுணர்கள் கருதும் நீம் எண்ணெயினின்றும் தயாரிக்கப்படுவது **மார்கோ** ஒன்றுதான்.

தினசரி **மார்கோ** உபயோகித்து உங்கள் மேனியைப் பாதுகாருங்கள்.

**மார்கோ சோப்**

டாய்லட் & மெடிஸினல்

கல்கத்தா கெமிகல்

CALCUTTA CHEMICAL

# காவேரி

| சர்வஜித்து மலர் 7 | “சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—” பாரதியார் | மார்கழி இதழ் 5 |
|---|---|---|

## வாழ்க ராஜாஜி

ராஜாஜியின் எழுபதாவது பிறந்த தினத்தை இன்று தமிழ்நாடெங்கும் குதூகலமாகக் கொண்டாடுகிறார்கள். இதுவரை இத்தகைய விழா ராஜாஜி விஷயத்தில் கொண்டாடப்படவில்லை என்று நாம் குறிப்பிடத் தேவையில்லை.

இவ் வருஷம் இவ்வைபவத்தை நாம் கொண்டாடக் காரணமென்ன? அறுபத்து ஒன்பது வருஷங்களாகச் செய்யாத தொண்டை இவ் வருஷத்தில் ராஜாஜி ஒன்றும் சாதித்துவிடவில்லை. எனினும் எழுபதாவது பிறந்த தினம் பெரிய விழாவாகக் கொண்டாடப்படுகிறது. ஏன்?

ராஜாஜி செய்த தொண்டு உலகமறிந்த விஷயம். தமிழர்களை வீறுகொண்டு எழச் செய்தார். சுதந்திரத் தீயில் குதிக்கச் செய்தார். முதலில் குதித்துக் காண்பித்தார். தன்னலம் என்பது அரசியல் வாழ்வில் ஈடுபட்டவர்களுக்கு இருக்கலாகாது என்பதைத் தம் வாழ்க்கையில் நிதர்சனமாக்கினார். விருப்பு வெறுப்பு என்பதும் அவர் அகராதியில் கிடையாது. தேச நலத்தைத் தான் அவர் காதலித்தது. வேறு எத்தகைய அன்பிற்கும் அவர் இடம் தருவதில்லை. தம் கூரிய புத்தியை அதற்கு அர்ப்பணம் செய்தார். மக்கள் அவரைக் கண்டு வியப்புற்றனர். மனித உணர்ச்சிகளைத் தேசத் தொண்டிற்கு இரையாக்கின அவர் பால் நேசம் பரவவில்லை. அவரை நெருங்குவது கடினமாகிவிட்டது.

பாகிஸ்தான் பிரச்னையில் தனி வழி நடந்தார்; தேச மக்களையும், தேச ஸ்தாபனத்தையும் மீறிப் பிரசாரம் செய்தார். எதற்காக? தேச நன்மைக்காக. ஆனால் பெரும்பாலோர் இதை வெறுத்தனர். தீர்க்க தரிசனமில்லாதவர்கள் அவரைக் கட்சிக் கோட்பாடுகளுக்குள் அடைக்க உத்தேசித்தனர்; விடாது எதிர்த்தார். பகிஷ்காரம் செய்யப்பட்டார்.

சென்னை மாகாணத்தில் அவரைக் கண்டு வாய் பொத்தி நின்ற பலர் அவர் கொள்கைக்கு எதிரிடையாக ஏற்பட்ட புயலைத் தங்கள் சுய நலத்துக்குப் பயன்படுத்திக் கொண்டனர். பதவி மோகம் கொண்ட பலர் புழுதியைக் கிளப்பினர். துஷ் பிரசாரப் புழுதி புயலுடன் கலந்து வீசிற்று. மக்கள் மதி கலங்கிப் புயலுடன் சென்றனர். ராஜாஜி விலகவேண்டியதாயிற்று. மோகங் கொண்டவர்கள் வெற்றி பெற்றனர். ராஜாஜி வானப்பிரஸ்தம்போனார். ராஜ்யம் கைமாறியது.

காங்கிரஸ் மேலிடத்தார் இவ் வநீதியைத் தடுக்க முயன்றனர். வெற்றி காணவில்லை. ராஜாஜியை மத்திய அரசாங்கத்தில் அழைத்துக்கொண்டனர். ராஜாஜி இதை வரவேற்கவில்லை. தமிழ் நாட்டில் தொண்டு செய்வதில்தான் அவருக்கு அவா. எனினும் ஒத்துக்கொண்டார். காரியக் கமிட்டி, மத்திய அரசாங்க நிர்வாக பதவி, கவர்னர் பதவி, கவர்னர் ஜனரல் பதவி எல்லாவற்றையும் வகித்தார். இன்று வங்க கவர்னர் பதவியில் வீற்றிருக்கிறார்.

பிரதமர் ஓமாந்தூராரும் மற்றும் பல பிரபலஸ்தர்களும் இன்று இதைக் கொண்

டாட முன்வந்து விட்டனர். ராஜாஜியின் ஆசியினால்தான் இன்று ஓமாந்தூரரார் மந்திரி சபை பதவி வகிக்கிறது என்பது எல்லோரும் அறிந்த விஷயம். அதற்கு நன்றி செலுத்த முன் வந்தது போற்றத் தக்கதே. ஓமாந்தூரார் மந்திரி சபையினர் ஸ்தல ஸ்தாபனங்கள் இவ்விழாவைக் கொண்டாடும் பொருட்டுப் பொதுப் பணத்திலிருந்து கொஞ்சம் செலவிடலாம் என்றும் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

இவையெல்லாம் எதைக் குறிக்கின்றன? மக்கள் என்றும் ராஜாஜி பக்தர்களாகத்தான் இருந்து வருகிறார்கள். ஹ்ருதயபூர்வமாக அவர்கள் அவரை என்றும் தூற்றியதில்லை. சில அரசியல் வாதிகள் சில குறுகிய நோக்கங்கொண்டு செய்த கிளர்ச்சியின் பயனால் சிலர் மனம் சலித்திருக்கலாம். சூழ்ச்சி பலித்து, பதவி கைமாறியது. இன்று புயலும் புழுதியும் ஓய்ந்துவிட்டன. வெட்ட வெளிச்சம் சூழ்ச்சிக்காரர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டது. மக்கள் ராஜாஜியின் தூய உள்ளத்தையும், தியாகத்தையும் நினைத்து அகமகிழ்கிறார்கள். அடைமழைக்குப்பின் சூரிய ஒளி. கொண்டாட்டத்திற்குக் கேட்பானேன்? பிராயச்சித்தமாகச் சிலர் இவ் விழாவைக் கொண்டாடுகிறார்கள். நன்றி தெரிவிப்பதற்காகச் சிலர் இதில் முன்னணியில் நிற்கிறார்கள். ஆனால் பொதுமக்கள் எப்பொழுதும்போல் ஒரே நிலையுடன் மனமார ராஜாஜியை வாழ்த்துவதுடன் அவர் என்றென்றும் திடகாத்திரமாக இருந்து நாட்டுக்குத் தொண்டு புரிந்து வரவேண்டுமென இந்தத் தள்ளாத வயதில் அவர்பால் அனுதாபங்கொண்டு இறைவனைப் பிரார்த்திக்கிறார்கள். மக்கள் வேண்டுகோளுக்கு இறைவன் செவிசாய்க்காமலா போய்விடுவான்?

மேடைப் பிரசங்கங்களையும் விழாவின் குதூகலத்தையும் காணும் போது தமிழ் நாட்டில் பிறந்த இத்தகைய தியாக மூர்த்தி ஏன் வங்க கவர்னராக இருக்க வேண்டும்? தமிழ் நாட்டிற்குச் செய்த நன்றி மகத்தானது என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளும் பொழுது சென்னை கவர்னர் பதவியில் அவரை ஏன் அமர்த்தக்கூடாது என்று தோன்றுவது இயல்பு.

மக்களைப் பொறுத்த வரையில் இதை முழுமனதுடன் வரவேற்பார்கள். ஆனால் நமது மாகாணப் பிரமுகர்கள் இதை எவ்வாறு ஏற்பார்கள் என்று சொல்வதற்கில்லை. அன்னிய ஆட்சியின் பயனாக ஏற்பட்ட வினைகளில் ஒன்று பதவி மோகம் என்பது. அன்னிய ஆட்சி அகன்று விட்டது. ஆனால் அது விளைவித்த பல மோகங்கள் நம்மை அடிமையாக்கி விட்டன. எனவே ராஜாஜியின் வருகை இம் மோகத்திலீடுபட்டவர்களுக்கு வேப்பங்காயாகக் கசக்கலாம். உண்மையில் தமிழ்நாட்டில் ராஜாஜிக்கு நாம் செய்யக் கூடிய கைம்மாறு, அவரைப் பிரதம பதவியிலிருந்து விலகச் செய்த தவறுக்காகவாவது, அவரை நமது மாகாண கவர்னராகச் செய்வதேயாகும். இன்று மேடைகளில் ராஜாஜியை வானளாவப் புகழும் பிரமுகர்கள் இதற்குப் பாடுபடுவார்களேயானால் அவர்கள் உள்ளும் புறமும் ஒத்தவர்கள் என்று மக்கள் ஒப்புவார்கள்.

ராஜாஜி ஒதுக்கித் தள்ளப்பட்டார். அரசியலினின்று விலகி, தியாகராயநகரில் தம் இல்லத்தில் அமைதி வாழ்வு நடத்தி வந்திருப்பாரானால் ராஜாஜியின் எழுபதாவது பிறந்த தினத்தைக் கொண்டாட இப்படி சென்னை அரசாங்கத்தார் முன் வருவார்களா என்ற சந்தேகம் நமக்குத் தோன்றுகிறது. கவர்னர் பதவியும், கவர்னர் ஜெனரல் பதவியும் வகித்த பிறகுதானா அவருடைய மகத்வத்தை உணர்ந்து பிறந்த தின விழாக் கொண்டாட வேண்டும்? இதுவும் நமது பதவி மோகத்தின் ஒரு சின்னமோ என்று ஐயுற இடமளிக்கிறது.

எந்த நோக்கங்கொண்டு செய்திடினும் ராஜாஜியின் தூய வாழ்வை மக்களுக்கு நினைப்பூட்டச் சமயம் ஏற்படுத்திக் கொடுத்த சென்னை பிரமுகர்களுக்கு நாம் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். வானப் பிரஸ்தம் சென்ற ராமனின் அரிய குணாதிசயங்களைக் கேட்டாவது மகிழ்வதற்குத் தமிழ் நாட்டாருக்குச் சந்தர்ப்பம் அளித்ததுபற்றி சந்தோஷப் படவேண்டியதே. வாழ்க ராஜாஜி.



# அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

**ராமய்யா**

சுமார் ஒரு மாதத்துக்குமுன் பங்கீட்டுக் கடையிலிருந்து நானும் அம்மாஞ்சியும் அரிசி வாங்கிக்கொண்டு வந்தோம். அந்த அரிசி எவ்விதமானது என்று சொல்லவேண்டாமே? எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தானே! உமி மாத்திரம் விலக்கப்பட்ட அரிசி, ஆனால் சிறிய கற்களும் களிமண் கட்டிகளும் கலக்கப்பட்டு, தவிடு குழம்பிக்கொண்டு, காட்சிக்குக் கர்ன கடூரமாயிருந்த அரிசிதான். பழைய காலத்தில், கலியாணங்களில் சம்பந்திப் பரிகாசப் பாட்டுகள் பாடும்போது, பதார்த்தங்களை ஏளனமாக வர்ணித்துப் பாடுவதில், சம்பந்தி வீட்டில் விருந்து சாமான்கள் "ஆட்டாம் புழுக்கை, மாட்டாம் புழுக்கை, கன்னிப் புழுக்கை, கரப்புப் புழுக்கை, எலிப் புழுக்கை, பூனைப் புழுக்கை" என்பதாகச் சொல்லுவார்களாம். அதுபோலவே இருந்தது அந்த அரிசி எனலாம். இதுநிற்க, நாங்கள் வழக்கம்போல், அந்த அரிசியை மில்லுக்கு அனுப்பித் தீட்டிக் கொண்டுவரச் சொன்னோம். போன மச்சான் திரும்பி வந்தான் புது மணத்தோடே, என்பது போல், அரிசியை யெடுத்துச் சென்ற ஆள் அப்படியே யெடுத்துக்கொண்டு திரும்பி வந்தானே! என்னடா வம்பு என்றால், மில் முதலாளிக்குச் சர்க்கார் கட்டுப்பாடு ஒன்று வந்துவிட்டதாம்! என்னவென்று? அரிசியைத் தீட்டக் கூடாது என்று! எதற்காகவைய்யா இந்தப் புதிய அமுல்? "அதுங்களா? இனிமேல் பங்கீட்டுக் கடைகளுக்கு வரப்போகும் அரிசி ஒருமுறை தீட்டிய அரிசியாகவே வரப்போகுதாம். அதினாலே, அரிசியை இன்றுமுதல் நாங்கள் தீட்டக் கூடாது. அப்படிச் செய்வதால் அரிசியிலுள்ள சத்து குறைந்து போகுமாம், அதுதானுங்க மர்மம்" என்றான் மில் முதலாளி. சபாஷ்! என்கிறான் அம்மாஞ்சி. ஆறு இருக்குதாம் காதம் தூரத்திலே, அதுக்குள்ளேயே அரை வேஷ்டியை எடுத்துத் தலையிலே கட்டினானும் கறுப்பண்ணன் என்பது போலல்லவோ இருக்கிறது இந்தச்சர்க்கார் இட்ட அமுல்! நாங்கள் அனுப்பிய அரிசியைப் பார்த்த வுடனேயே மகோதரம் வந்து விடும்போல் இருக்க, அதற்கு ஒரு விமோசனம் காணோமாம், மேல் வருஷத்தில் நல்ல அரிசி வருமாம், அதை அகௌரவப்படுத்தக் கூடாதாம், என்கிறார்களே இந்தச் சர்க்கார் அதிகாரிகள்! இதைக் கேட்டுவிட்டு வயிற்றில் அடித்துக் கொள்ளுவதா, தலையில் அடித்துக் கொள்ளுவதா?

கட்டுப்பாடுகளை எடுத்து விடுங்கள், கட்டுப்பாடுகளை ஒழியுங்கள் என்கிறார்களே பொதுஜனங்கள், அதற்கு முக்கிய காரணம் மேற்கூறிய அமுலைப்போன்ற விதிகள் தான் எனலாம். மந்திரி சபையில் இருக்கும் நமது தலைவர்கள் தம்மால் இயன்றவரை நமக்கு உபகாரமாகவும், அனுதாபத்துடனும் தான் புதிய விதிகளைப் பிரேரேபிக்கிறார்கள். அனுஷ்டானத்துக்கு வரும் தருணத்தில்தான் அந்தவிதிகளில் பெரும்பாலும் பிராரப்தங்களாகி விடுகின்றன. ஆதலால் தான் எங்கே பார்த்தாலும் "கட்டுப்பாடுகள் வேண்டாமே" என்கிற கூப்பாடு அதிகரித்து விட்டது. சானஸத்தால்

விளையும் தீங்கைவிடத் துரிதத்தால் விளையும் தீங்கு மேலாகும் என்பது மேற்கூறிய அமூலிலிருந்து தெரிய வருகிறது. இரண்டு மாதங்களுக்கு முன் சட்டசபையில் பங்கீட்டு அரிசியைக் குறித்து மிகவும் இழிவாகச் சில பிரதிநிதிகள் பேசினார்கள். அதையனுசரித்து மந்திரி சபையில் ஆலோசனைகள் ஏற்பட்டிருக்கலாம். "அரிசியைக் கடைகளுக்குக்கொடுக்குமுன் நாமே ஒரு முறை தீட்டிவிட்டுக் கொடுத்தால் நன்றாய் இருக்குமல்லவா" என்று பிரதமர் கேட்டிருக்கலாம். "ஆமாம், அப்படித்தான் இனி செய்யவேண்டும், இல்லாவிட்டால் ஆக்ஷேபனைகள் அதிகரித்துவிடும் போலிருக்கிறது" என்று த்விதியர் சொல்லியிருக்கலாம். "நாமே ஒருமுறை அரிசியைத் தீட்டிக் கொடுத்தபின் ஜனங்கள் மறுபடியும் தீட்டிக்கொள்ளக் கூடாதல்லவா? அவர்கள் அப்படிச் செய்தால் அரிசியிலுள்ள ஜீவன் நசித்துப் போகுமல்லவா" என்று த்ருதீயர் குறுக்குக் கேள்வி ஒன்று கேட்டிருப்பார். "கூடவே கூடாது! அய்யய்யோ, அரிசியிலே அப்புறம் என்ன இருக்கும், மில்களுக்கு ஒரு ஆர்டர் போட்டால் தீர்ந்தது", என்று த்விதியர் சொல்லிவிட்டு, தம்முடைய அபிப்பிராயத்தை உணவு இலாகா காரியதரிசிக்குச் சொல்லியிருப்பார். அவ்வளவு தான்! எள்ளு என்று சொல்லுவதற்கு முன்னே எண்ணெயைக் கையில் கொடுக்க வேண்டும் என்று சர்க்கார் உத்தரவு ஆயிருக்கிறதாமே! ஆகவே தந்திக்காரன் தபால்காரனைத் துரத்த, தபால்காரன் டெலிபோன்காரனைத் துரத்த, ஜில்லாக்களுக்கெல்லாம் ஆர்டர் போய்விட்டது! என்னவென்று? மில்களைப் பூட்டிவிடுங்கள், அரிசியை அறைக்கக் கூடாது, ஊதக்கூடாது, துடைக்கக் கூடாது, தொடக் கூடாது, பொறுக்கக் கூடாது, நெல்லை விலக்கக் கூடாது, கூழாங்கல், மணியாம் பொறுக்கிக் கல், களிமண் கட்டி, எல்லாவற்றுடனும், ஜலத்தில் போட்டுக் களையாமல், ஒரே கொதிவிட்டு அப்படியே யெடுத்துக் காக்கை விழுங்குகிறமாதிரி சாப்பிடவேண்டும். அப்பொழுதுதான் உடம்புக்குப் புஷ்டி என்று சொல்லிவிட்டார்கள். இதனால் அம்மாஞ்சிக்குத்தான் சங்கடம் சொல்லமுடியவில்லை! இத்தனை நாட்களாக நல்ல அரிசியோ கெட்ட அரிசியோ ஏதோ ஒன்றை அளந்து கொடுத்துவிட்டு எக்கேடு வேணுமானாலும் கெட்டுப்போ என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள்! ஒரு விதத்தில் சங்கடம் இருந்தபோதிலும், மற்றொரு விதத்தில் சௌகரியமாகத்தானிருந்தது. அரிசி வாங்கிக் கொண்டு வந்த தினத்தன்று நான், அம்மாஞ்சி, அம்மங்கா, அத்தங்கா, அத்திம்பேர், அத்தாமன்னி, என் ஆத்துக்காரி, எதிர்வீட்டு ஏகாம்பரம், பக்கத்தாத்து பஞ்சாமி, எல்லோரும் சேர்ந்து அரிசியைச்சுற்றி உட்கார்ந்துகொண்டு சாவகாசமாக ஊர் வம்பு பேசிக்கொண்டே நெல், கல், மண், புழுக்கையெல்லாவற்றையும் எடுத்துவிட்டு, மில்லுக்கு அனுப்பி, அறைத்துவந்து, அம்மாங்காவை விட்டுப் புடைக்கச்சொல்லி, நல்ல நொய்யை யெடுத்துக் குழம்பு மாவுக்கும், அடாசு நொய்யைக் கோலமாவுக்கும் வைத்துவிட்டு, அரிசியைப் பக்குவமாகச் சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். இது ஒரு விதத்திவ் தமாஷாகத்தானிருந்து. இந்தப் புதிய அமூல் வந்த பிறகு இந்தத் தமாஷ்கூடப் போய்விடும்போலிருக்கிறதே என்கிறான் அம்மாஞ்சி! என்ன கிரகசாரமோ! கடவுளே!

அரிசிக்குப் பஞ்சம்வந்து பங்கீட்டு அளவைக்குறைத்தபின் எத்தனையோ கட்டுதிட்டங்கள் எங்களுடைய வீட்டில் நாங்களே செய்துகொண்டோம். ஏகாதசியன்று அம்மங்கா, அத்தங்கா, அத்தாமன்னி இம்மூவரும் துளசி தீர்த்தம் தவிர வேறு ஒன்றும் உட்கொள்ளமாட்டார்கள். (மூன்று ஆழாக்கு அரிசி மிச்சம்) துவாதசியன்று நானும் அம்மாஞ்சியும் காலையில் ஒரு கப் காபி, சாயந்திரம் ஒரு கப் டீ, இத்துடன் இருந்துவிடுவோம். (இரண்டு ஆழாக்கு அரிசி மிச்சம்) அமாவாசையன்று எல்லோருக்கும் இரவில் அரிசி உப்புமா. பௌர்ணமையன்று எல்லோருக்கும் இரவில் சத்துமாவும் மோரும்தான். ஞாயிற்றுக்கிழமைகளில் பருப்பு உசிலி செய்துவிட்டால், அன்று ராத்திரி எல்லோரும் பட்டினிதான். கிருத்திகையன்று தேங்காயையும் வாழைப் பழத்தையுமே சாப்பிட்டுவிட்டு எல்லோரும்

ஷண்முகா, முருகா, வேலாயுதா என்று சொல்லிக்கொண்டு சும்மா இருந்து விடுவோம். வாழைப்பூ, கொத்தவரைக் காய் இவை அகப்பட்டால் அந்தக் கறியில் பருப்பு உசிலியையும் சேர்த்துச் சமைத்து, சாதத்தைக் குறைத்துக் கொண்டு அந்தக் காய்கறிகளை ஒரு தீட்டு திட்டிவிட்டு மோரைக் குடித்து விடுவோம். இதைத் தவிர அநேக நாட்களில் பெசரெட்டுத்தோசை, கேழ்வரகுக் கூழு, சோள உப்புமா இவைகளை வெகு ஜோராகப் புகழ்ந்துகொண்டு சாப்பிட்டு விடுவோம். இவ்வளவெல்லாம் செய்து அதிகாரிகளுக்குச் சிரமங்கொடுக்காமல் நடந்துகொள்ளவேண்டும் என்ற அபிப்பிராயத்துடன் இருந்து வருகையில், அவர்கள் நடுவே நுழைந்து, தவிடும் கலந்துதான் சோற்றைத் தின்னவேண்டும் என்றால் யாருக்குத்தான் கோபம் வராது? உணவை விற்றுப் பணம் சம்பாதிக்கும் உண்டிச் சாலைகளுக்கும், காபி ஓட்டல்களுக்கும் உணவுப் பொருள்களை எப்படி உபயோகிக்கவேண்டும் என்கிற விதிகள் ஏற்படுத்தட்டும். அவை பொருத்தமாயிருக்கலாம். பொது ஜனங்களுக்கு அத்தகைய விதிகள் பொருத்தமாகுமா? "இரண்டு கரண்டி சோறு எனக்குப் போதுமையா, அத்துடன் நான் காய் கறி பதார்த்தங்கள், பால், மோர், நெய் இவைகளைச் சேர்த்துக்கொண்டு சாப்பிடுகிறேன். ஆனால் அந்தச் சோறு தவிடில்லாமல் மல்லிப் புஷ்பம்போல், வெளேரென்று இருக்கவேண்டும். அப்பொழுதுதான் என் வாயிலிறங்கும். என் வயிற்றினுள் சென்று சங்கடம் செய்யாமலிருக்கும். அதில் சிறிதேனும் சத்து இல்லை என்பது எனக்குத் தெரியும். அந்தச் சத்து எனக்குத் தேவையில்லை. வேறு பண்டங்களால் எனக்குப் புஷ்டியுண்டாகும். என் வயிற்றுக்கும் எனக்கும் பல வருஷங்களாகப் பரிச்சயம் உண்டு. பரஸ்பரம் எங்களுக்கு ஒரு அன்னியோன்னியம் ஏற்பட்டுவிட்டது. சர்க்கார் அதிகாரிகளே, நீங்கள் எனக்கும் கொடுக்கும் அரிசியைக் கொடுத்துவிடுங்கள். நான் அதை என்னுடைய ஆசார, விவகார, த்வைத, அத்வைத, வேதாந்த சம்பிரதாயப் பிரகாரம் உபயோகித்துக் கொள்ளுகிறேன்" என்று சொன்னால், அவர்கள் கேட்கமாட்டேன் என்கிறார்களே, இது என்ன நியாயம்? இத்தகைய விபரீதக் கட்டுப்பாடும், ஒரு கட்டுப்பாடாகுமா? சாப்பிடும் வஸ்துவை என் சௌகரியப்படி ஒழுங்குபடுத்திச் சாப்பிடுகிறேன் என்றால், கூடவே கூடாது என்பதும் ஒரு நியாயமான கட்டுப்பாடாகுமா? இந்த நியாயப்படி, பங்கீட்டில் கிடைக்கும் துணியை வேஷ்டியாக உடுக்கக் கூடாது, லங்கோடாகத்தான் உபயோகிக்க வேண்டும், அப்பொழுதுதான் ஐந்து கஜம் துணிக்கு எட்டு லங்கோடாகும் என்பார்களோ? அல்லது அழுக்குத் துணியை வண்ணானிடம் கொடுத்துச் சலவை செய்யலாகாது, அப்படிச் செய்தால் துணி துரிதமாகக் கிழிந்துபோம், ஆகவே துணி கிழியும் வரையில் அழுக்கானதோ, வெளுத்ததோ, அப்படியே உடுத்துவரவேண்டும் என்பார்களோ? கட்டுப்பாட்டு விதிகளில் இப்படியெல்லாம் விதிக்கச் சக்தியிருந்தபோதிலும், ஜனநாயக சமூகத்திற்கு ஈடுபட்டு நடந்து கொள்ளும் அதிகார வர்க்கத்திற்கு ஆதாரம் கிடையாது என்று அறியவேண்டும். அனாவசியமான கட்டுப்பாடுகளை விதிப்பதால் பொது ஜனங்களுக்குச் சுரணை குன்றிப்போகும். வெறுப்பும் அதிகரிக்கும். அதற்கப்புறம் எல்லோரும் சேர்ந்துகொண்டு "Plan the Planners", "Control the Controllers" என்று (அதாவது கட்டுப்பாடு விதிப்பவர்களைக் கட்டு திட்டத்தில் வையுங்கள்) கூக்குரல் போடுவார்கள்!

* * *

சில நாட்களுக்குமுன் திருச்சி ரேடியோ நிலயத்திலிருந்து பிடில் வித்வான் பாபா வேங்கடராமய்யர் ஒலிபரப்பினார். அந்த நிகழ்ச்சியை அம்மாஞ்சியும் நானும் வெகு ஆனந்தமாகக் கேட்டோம். குட்டி பிடில் வாத்தியம் ஒன்று அவருக்குப்பின் அழகாகவும் அனுசரணையாகவும் வாசித்துக்கொண்டிருந்தது. பாபா வேங்கடராமய்யருடைய பாபாவோ அது (அதாவது மகன்) என்கிறான் அம்மாஞ்சி! அப்படித்தான் கேள்விப்பட்டோம். அப்படியாயிருந்தால், அதுதான் மிகவும் பொருத்தம் என்கிறோம் நாங்களிருவரும். வாத்தியங்களிரண்டும் செவிக்கு இன்பமாக அமைந்தன. நண்பர் த்வாரம் வேங்க

டசாமி நாயுடும், மாரல்ல கேசவராவும் சேர்ந்து வாசிக்கும் பாணியைத் தழுவி யிருந்தது. ஆகவே அம்மாஞ்சிக்கும் எனக்கும் மிகவும் திருப்தியா யிருந்தது. வேங்கடராமய்யர் இதுபோலவே தனி வாத்தியமாகவே வாசித்து, ரசிகர்களைத் திருப்தி செய்தால் மிகவும் பொருத்தமா யிருக்கும்.

இரண்டு நாட்களுக்குமுன் ஸ்ரீமான் செம்மங்குடி சீனுவாசய்யர் திருச்சி ரேடியோவில் பாடியிருக்க வேண்டும். என்னவித அசௌகரியத்தினாலேயோ தெரியவில்லை, நிகழ்ச்சி நடக்கவில்லை. அவர் இந்த வருஷம் சென்னை மியூஸிக் அகாடமி கூட்டத்துக்குத் தலைமை வகிக்கப் போகிறார். அன்பர்கள் எல்லோருக்கும் அவர் சுமார் இருபது வருஷங்களுக்குமுன் "சீனு" வாக இருந்தார்; பிறகு "செம்மங்குடி சீனு" வானார்; அதற்கப்புறம் "ஆஸ்தான வித்வான் செம்மங்குடி சீனிவாஸய்யர்" எனப்பட்டார்; இரண்டு வருஷங்களாக "ராஜ சேவ நிரத செம்மங்குடி சீனிவாஸய்யர்" என்று வழங்கிவருகிறார். இனிமேல் "சங்கீத கலாநிதி ராஜசேவ நிரத செம்மங்குடி சீனிவாஸய்யர்" என்று சொல்ல வேண்டிவரும். ஆஸ்தான வித்வானைச் சென்றாலும் சென்றார், சமஸ்தான அதிபதிகளுக்கு உள்ள பெயர்மாதிரி அன்பர் சீனுவின் பெயரும் வளர்ந்து விட்டது. இந்த வருஷம் அகாடமியில் அவர் தலைமை வகித்தபின் அவருடைய கியாதியும் ஏராளமாகப் பெருகி வளர வேண்டும் என்று அம்மாஞ்சியும் நானும் நம்புறோம்.

தமிழ் நாட்டில் உள்ள கலைகளின் தற்கால ரீதியைக் குறித்து அன்பர் சீனிவாஸய்யர் தகுந்தபடி தலைவர் உபன்னியாசத்தில் சொல்லுவார் என்று நம்புகிறேன். (1) சபைகளில் நடைபெறும் கச்சேரிகளில் உள்ள அசுத்த பத்ததிகள் (2) அகில இந்திய ரேடியோவின் ஆதீனத்தின் கீழ் நடைபெறும் பிஞ்சில் பழுத்த சங்கீதக்கச்சேரிகளினால் விளையும் தீங்குகள் (3) சினிமாக்கள் மூலம் ஏற்பட்டிருக்கும் கலப்பட கீதங்கள்; அவைகளினால் கர்னாடக ராகபாணிகளுக்கு விளையும் தீமைகள் (4) சுக சங்கீதம் ஒதுங்கி, விவகார சங்கீதம் அதிகரித்துவரும் புதிய இயக்கங்கள் (5) பரத நாட்டியத்துக்கு ஏற்பட்டிருக்கும் விபரீதமான செழிப்பு (6) விவகாரம் தெரியாத சிசுக்கள் பரத நாட்டியத்தில் ஈடுபட்டிருப்பதும், அந்தக்கலைக்கு அதனால் விளையும் பெருமைக் குறைவைப் பற்றியும்— இத்தகைய விஷயங்களைப் பற்றியும் அன்பர் சீனிவாசய்யர் தம் அபிப்பிராயத்தைத் தெரிவித்தால் எல்லோருக்கும் பயன்படும். அவர் பெரிய பரம்பரையைச் சார்ந்தவர், விவகாரம் தெரிந்தவர், ஏராளமான அனுபவசாலி, ஆத்மார்த்தமான ரசிகர். அம்மாஞ்சி சொல்லுவான் "மொத்தத்திலே மனுஷன் நல்லவர், என்று சொல்லிவிட்டு நிறுத்தேன்." அதே மாதிரி நிறுத்திக் கொள்ளுகிறேன்.

# கதம்பம்

## சோமநாதருக்கு நல்ல காலம்!

மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் கடவுளுக்கும் நல்ல காலம், கஷ்டகாலமென்பது உண்டு என்பது தெளிவாகிறது. இப் புவியில் தோன்றிவிட்டால் கடவுளும் தொல்லைகளுக்கு ஆளாகவேண்டியதுதான். கடவுளது சொத்துக்கள் கொள்ளையடிக்கப் படுகின்றன. அவரது குடியிருப்பு ஸ்தலம் பாழாக்கப் படுகின்றது. கடவுள் என்ன செய்வார்? அவரது கஷ்ட காலம்! விதி யாரை விட்டது?

திடீரென்று கடவுளுக்கு அதிருஷ்டம் பொங்கிவிடும். கடவுளைக் காப்பாற்றப் பக்த சிகாமணிகள் விரைந்தோடி முன் வருவார்கள்.

வடக்கே கத்தியவார் எனப்படும் பிரதேசத்தில் சங்கரன் சோமதேவர் என்ற திருநாமம் பூண்டு அவதரித்தார். ரஜபுத்திர வீரர்கள் அழகிய ஆலயம் ஒன்றை அமைத்து, சோமநாதருக்குத் திருப்பணியாற்றினர். ஆலயத்தின் சிற்ப வேலைப்பாடுகளையும், அழகையும் வர்ணிக்க ஆயிரம் நாவுகள் படைத்த ஆதிசேஷனாலும் முடியாதாம். நவரத்தினங்கள் வைத்து இழைத்த தூண்கள், பத்தரை மாற்றுத் தங்கத்தினால் நானூறு ராத்தல் எடை கொண்ட கண்டாமணி, மணியை அசைக்கத் தங்கச் சங்கிலி, சோமதேவர் சிலையின் நெற்றியிலே சோம, சூரிய, அக்னி என்ற மூன்று கண்கள் மூன்று விலை மதிப்பற்ற ரத்தினங்களால், எங்கும் பொன், நவரத்தினங்கள் — இப்படிப்பட்ட திருக்கோவிலின்மீது பரம பாகவதோத்தமர்களுக்கும் கொஞ்சம் சுயநல இச்சை பிறப்பது இயற்கை! மூர்க்கனும், ஹிந்து கோவில்களைக் 'கொள்ளை யடித்து நிர்மூலமாக்குவதில் வெறிகொண்ட முகம்மதிய சக்ரவர்த்தியுமான முகம்மது கஜனி சோமநாதர் ஆலயத்தின்மீது கண் வைத்தது ஆச்சரியமல்ல!

பலமுறை முயன்றான் கஜனி. ஆயிரக்கணக்கான ரஜபுத்திர வீரர்கள், பெண் திலகங்கள், பச்சிளம் குழந்தைகள் இவர்களைக் கொன்று குவித்து. பிணங்கள்மீது நடமாடி முடிவில் வெற்றிபெற்றான். யாவற்றையும் கொள்ளைகொண்டு. ஆலயத்தையும் பாழ் செய்து, சோமநாதரைத் தவிக்க விட்டுச் சென்றான்.

கேட்பாரற்று, கி. பி. 1025ஆம் ஆண்டு அழிந்த ஆலயத்தில் குடிகொண்டிருக்கும் சோமநாதருக்கு 1947-ஆம் ஆண்டில் சுக்ர திசை அடிக்க ஆரம்பித்துவிட்டது. ஜூனாகாட் நவாப் அவர்கள் ஊரைவிட்டு ஓடியவுடன் பிரஸித்திபெற்ற சோமநாதர் ஆலயத்தைப்புதுப்பிக்கப்பலர் முன் வந்துள்ளார்கள். லக்ஷக்கணக்கில் பணம் குவிகின்றது. சோமநாதருக்கு இனிநல்லகாலம் தொடங்கி விட்டது. அவரது கஷ்டகாலத்தைப் போக்க இந்திய மக்கள் முன்வந்ததுபோல் சோமநாதரும் இனி பாரத மக்களின் துயர்கள் நீங்க அருள்புரிய முன்வரவேண்டும்! வாழ்க சோமநாதர்! வாழ்க பாரத பூமி!

## ரங்கூன் வைரம்!

நமது மாகாண மந்திரிகளின் மூளைகள் சுறுசுறுப்பாகவே வேலை செய்துவருகின்றன. எந்த மாகாண மந்திரிகளுக்கும் தோன்றாத அற்புத அதிசய யோசனைகள் திடீர் திடீரெனக் குதிக்கின்றன.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், சம்ஸ்கிருதம் ஆகிய ஐந்து பாஷைகளில் ஆஸ்தான அல்லது அரசாங்க கவிஞர்களைத் தேர்ந்தெடுக்கப் போகின்றார்களாம். தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தப் புண்ணியவான்கள் ஐந்து வருஷகாலம் பதவி வகிப்பார்களாம். வருஷம் ஆயிரம் ரூபாய் சன்மானம் பெறுவார்களாம். கவிஞர்களை ஒரு கமிட்டி தேர்ந்தெடுக்குமாம்.

யார் தேர்ந்தெடுப்பது? கமிட்டி. ஒரு பெரிய மகா கவியைத்தேர்ந்தெடுக்கக் கமிட்டியா? மஹாகவி என்பவரை அறிஞர்கள் ஒப்புக் கொள்ளவேண்டும், பொது மக்கள் ஒப்புக் கொள்ளவேண்டும். உலகம் ஒப்புக் கொள்ள வேண்டும், தேர்ந்தெடுப்பது முறை அல்ல.

டாகூர், ராமன், ராதாகிருஷ்ணன், போஸ், சரோஜினி முதலிய கவிஞர்களைத் தேர்ந்தெடுத்துப் புகழ் கொடுத்தது அரசாங்கமல்ல. அவர்களது பெருமையை, அறிவுத் திறமையை அரசாங்கமும் அங்கீகரித்தது. அவ்வளவே!

கவிஞர்களை உற்பத்தி செய்வது கடினம். அரசாங்கம் பரிசு அளிப்பதனால் கவிஞர்கள் கூடை கூடையாகப் பெருகிவிடமாட்டார்கள்; ரங்கூன் கமலமாகவே மக்களால் கருதப்படுவார்கள். அசல்வைரம் இயற்கையில் உண்டாவது; ரங்கூன் வைரம் செயற்கையாலாவது. வெளிச்சத்தில் மின்னும்; இருட்டில் மங்கும். ஆஸ்தான கவிஞர்கள் அரசாங்க ஆதரவு என்ற வெளிச்சம் உள்ளளவும் பிரகாசிப்பார்கள்.

மஹா கவிகள் எப்பொழுதாயினும் தோன்றுபவர்கள்; இயற்கையாகப் பிரகாசிப்பவர்கள்; உலகம் போற்றுபவர்கள்.

கவிஞர்களுக்கு உற்சாக மூட்ட அரசாங்கம் எந்தப் பொருளுதவி வேண்டுமானாலும் அளிக்கலாம். ஆனால் சிலரைப் பொறுக்கி, கவி ச்ரேஷ்டர்கள் என்று கூறி, ஆஸ்தான கவிகள் என்று பட்டம் சூட்டிவிட்டால்மட்டும் கவி ச்ரேஷ்டராகிவிட முடியாது. இம்முறை கலைக்கே உலை வைப்பதாக நேரிட்டாலும் நேரிடலாம். மக்களாலும், அறிஞர்களாலும், கவிஞர்களாலும் எந்தக் கவி சிறந்த கவி என்று அங்கீகரிக்கப்படுகிறாரோ அவரை அரசாங்க கவி என்று வைத்துக் கௌரவிப்பதுதான் முறையாகும். உயரிய கவிக்கு ஊக்கமளிப்பதாகும். அரை குறை கவிகளை தூக்கிவைத்துப் போட்டி போடச் செய்து, கமிட்டி நிர்ணயம் செய்யும் முறை பலனளிக்காது.

---


## நின்றுபோன மாதவிடாய்



குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்தினால் நின்றுபோனது நீங்கும். வருங்காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகிக்கின்றார்கள்

| | | | |
|---|---|---|---|
| சாதாரண கேஸ்களுக்கு | ... | ... | ரூ. 3 |
| நீண்டநாளைய கேஸ்களுக்கு | ... | ... | ரூ. 5 |
| மிக ஆபத்தான கேஸ்களுக்கு | ... | ... | ரூ. 8 |
| கர்ப்பத்தடை (6 மாத உபயோகத்திற்கு) | | ... | ரூ. 4 |

(வி. பீ. அணா 12 கூட)

தயாரிப்பவர்கள்:-

**MRS. P. DEVEE, F.D.S. (C.M.)**
Tollygunge CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

ஹாரி & சன், 93, சைனாபஜார் ரோடு மதராஸ்.
ராகவன் & கம்பெனி, ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு பங்களூர் ஸிடி
நாதம் & கம்பெனி மட்டஞ்சேரி, கொச்சி.
K. C. மேத்யூ & கோ., கோசாஞ்சேரி, திருவாங்கூர்.
L. M. முகர்ஜி & சன்ஸ் லிமிடெட் 167, தராம்தோலா தெரு கல்கத்தா.
சிவானந்த சித்தர் மெடிகல் ஹால், 92, கடல்தெரு கொழும்பு, &
768, லோவர் தெரு, பாத்துல்லா (ஸிலோன்)

# சுதந்திர பட்ஜெட்

**கே. எஸ். நாகராஜன்**

ஒரு நாட்டின் பொருளாதார நிலையை அளக்க அந்நாட்டிலுள்ள ஒரு தனிமனிதனின் பொருளாதார நிலைதான் சிறந்த மூல அளவு. ஒரு ஏழை உழைப்பாளியிடமோ விவசாயியிடமோ சென்று அரசாங்கத்திற்கு வருட வருமானம் இவ்வளவு, செலவு இவ்வளவு என்று கோடிக்கணக்கான ரூபாய்களில் கணக்குச் சொன்னால் சிறிதும் அவனுக்குத் திருப்தியே உண்டாகாது. ஒரு தனி மனிதனுக்குண்டான தேவைகளையெல்லாம் கஷ்டமின்றி அவன் அடைய முடியுமானால்தான் அவனுக்கு நாட்டுப் பொருளாதார நிலை சரியாக இருப்பதாக ஒரு உணர்வு தோன்றும். இல்லையேல் நம் மாகாண பட்ஜெட்டுகளும் மத்திய சர்க்கார் பட்ஜெட்டுகளும் பாமர மனிதனுக்குச் சிறிதும் திருப்தியளிக்க மாட்டா. இது நம் அனைவருக்கும் தெரிந்த விஷயமே. ஆனாலும் மந்திரி அல்லது பொருளாதார நிபுணர் போன்ற பதவியை அடைந்ததும், புள்ளி விவரங்களைச் சரியாகப் போடவேண்டுமென்றும் இன்னின்ன துறைகளில் அதிகப்படி செலவழிக்க வேண்டுமென்றும் இப்படிச் செய்தோமானால் பிறநாடுகளும் பெரிய பொருளாதார நிபுணர்களும் நம்மைப்பற்றி எப்படிப் புகழ்வார்களென்றும் ஊகித்து அதற்கேற்ப நடக்கும் இயல்பு உண்டாகி விடுகிறது. ஆனால் சில சமயங்களில் உண்மையிலேயே நல்ல பட்ஜெட்டுகளும் அமுலுக்கு வருவதுண்டு. அந்த வகையைச் சேர்ந்ததே இப்போது சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார் மத்ய அசெம்பிளியில் கொண்டு வந்துள்ள பட்ஜெட்டும் என்று சந்தேகமில்லாமல் கூறலாம்.

எந்தப் பட்ஜெட்டிலும் இரண்டு பெரும் பிரிவுகள் உண்டு—வரவு, செலவு. நம் நாட்டுப் பொருளாதார நிலை எப்படியிருக்கிறது என்றால் நாட்டின் மொத்த செல்வம் போதுமென்ற அளவுக்கு இருக்கிறது. சர்க்காருக்குச் செலவோ தலைக்கு மேலிருக்கிறது. ஆனால் இவ்விரண்டிற்கும் ஒருவிதமான இணைப்பும் இல்லாமலிருப்பதொன்றே நாட்டு மக்களின் ஏழ்மைக்குக் காரணம். நாட்டின் மொத்த செல்வமெல்லாம் நாட்டு முதலாளிகளிடம் குவிந்து கிடக்கிறது. சர்க்கார் செய்யும் செலவுக்கு வேண்டிய நிதியோ பாமர மக்களின் பாதி வயிற்று வருமானத்திலிருந்து வரவேண்டியிருக்கிறது. இங்ஙனம் தான் இதுவரையிலும் நம் நாட்டுப் பட்ஜெட்டுகளெல்லாம் தயாரிக்கப்பட்டு வந்தன. இதனால்தான் நாட்டில் வறுமை, நகரத்தில் பெருமை. இப்படிப் பாதி வயிற்றுக்கும் போதாத வருமானத்தினரைக் கசக்கிப் பிழிந்ததன் காரணமாக நாட்டுக்கலை, வாணிபம், கைத்தொழில், இலக்கியம், மதானுசாரம் யாவுமே பாழ்பட்டுப் போயின. "விடியட்டும்; சூரியன் வருவான்" என்றெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகப் பல சாக்குகள் சொல்லி, நம்மை ஏமாற்றி வந்தவர்களின் திமிர் தீர, நள்ளிரவிலேயே "இதோ பார்! உன்னை வந்து காப்பாற்றுகிறேன்" என்று சொன்ன வண்ணமாய், சுதந்திர சூரியன் ஆகஸ்ட் 14-ஆம் தேதி நள்ளிரவில் உதித்தான். பிற நாட்டினர் பலரும் வியந்து நின்றனர்.

இம்மட்டுமா! சூரியன் ஒளிதந்து நம்மை அடிமை இருளிலிருந்து நீக்கியது மட்டுமன்று. வெப்பம் தந்து நமக்கு ஊக்கமும் ஊட்டுகிறான். "நாடு காப்பதற்கு உனக்கு ஞானஞ்சிறிதுமுண்டோ — வீடு காக்கப் போடா" என்று சொல்லி வந்தவர்கள் வாய் புதைக்க, "நாட்டு நிலையைப் பல துறைகளிலும் சிறப்புறச் செய்து கொள். நல் வாழ்வு எய்து" என்று சொல்லி நம்மைத் தட்டியெழுப்புகிறான். இங்ஙனம் புதிதாக வந்த சுதந்திரத்தினால்

நம் நாடு மகிழ்ச்சிச் சூழலில் இருந்து வருகிறது. புதிய இந்தியாவின் முதல் பட்ஜெட்டும் மத்திய சட்ட சபையின்முன் வைக்கப்பட்டது.

இனி இந்தப் பட்ஜெட்டின் சில முக்கிய விவரங்களைக் கவனிப்போம். 47-ஆம் வருஷம் ஆகஸ்டு 15-ஆம் தேதியிலிருந்து 48 மார்ச்சு 31-ஆம் தேதி வரையுள்ள 7½ மாத காலத்திற்குத்தான் இந்தப்பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்படி சர்க்காருக்கு வரவு 171.15 கோடி ரூபாய்; செலவு 197.89 கோடி ரூபாய்; இதனால் போதாத தொகை 26.24 கோடி. வருமானத்தில் சுங்கவரி மூலம் கிடைப்பது 50.5 கோடி; வருமான வரி மூலம் கிடைப்பது 66 கோடி; தபால் தந்தி இலாகா மூலம் 2 கோடி. இந்த வருஷம் முடிய ரயில்வேக்களிலிருந்து சிறிதும் வருமானம் எதிர்பார்க்கமுடியாது.

செலவுத் தொகையில் ராணுவத்திற்கென்று 92.74 கோடியும், தற்காலிகமாக அகதிகளுக்கென்று 22 கோடியும், உணவுப்பொருள் நெருக்கடியைத்தீர்க்க 22.52 கோடியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது தவிர மாகாண சர்க்கார்களுக்குக் கொடுக்கும் உதவித்தொகைக்கு 20.39 கோடியும், அவைகளுக்குக் கடனாகக் கொடுக்க 15 கோடியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

வருமானத்தை அதிகரிக்கச் சர்க்கார் புதிய வரிகள் ஒன்றும் போடவில்லை. ஒரே ஒரு துறையில் மட்டும் முன்னிருந்த வரி வேறு முறையில் நிச்சயிக்கப்பட்டு அதனால் அரசாங்க வருமானம் உயர்த்தப்பட்டிருக்கிறது. வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பஞ்சாடை, நூல் இவற்றின் மதிப்பில் 3 சதவீதம் வரியாக வசூலிக்கப்பட்டு வந்தது. இனிமேல் வெளிச் செல்லும் ஒவ்வொரு சதுர கஜ (பஞ்சு) துணி மேலும் அணா 4 வரி; ஒவ்வொரு பவுண்டு பஞ்சு நூல் மேலும் அணா 6 வரி சுமத்தப்பட்டிருக்கிறது. இதன் மூலம் வருடமொன்றுக்கு 8 கோடி ரூபாய் சர்க்காருக்கு வருமானமாகும்.

இனி இந்தப் பட்ஜெட்டில் நாம் கூர்ந்து கவனிக்கவேண்டிய விஷயங்கள் பல.

1. இந்தப் பட்ஜெட்டினால் வியாபாரச் சரிநிலை உறுதியாகும் என்று ஊகிக்கப்படுகிறது. ஆனால் இதைப்பற்றியொன்றும் நிச்சயமாக இப்பொழுது கூற முடியாது.

2. இதில் கூறப்படாத விஷயங்களில் முக்கியமானது சம்பள நிர்ணயக் கமிட்டியின் முடிவுப்படி அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு அதிகச் சம்பளம் கிடைக்குமா? கிடைக்குமானால் அந்த அதிகப்படி சம்பளத்திற்கென்று பணம் ஒதுக்கப்படவில்லையே? என்பது.

3. வருமானத்தைவிடச் செலவு அதிகமாயிருப்பதற்குக் காரணம் எதிர்பாராத பல சம்பவங்கள்தாம். முதலாவதாக மேற்கு பஞ்சாப், சிந்து போன்ற இடங்களிலிருந்து உயிருக்குப் பயந்து ஓடி வருவோர்க்கு உணவும் உடையும் இருக்க இடமும் கொடுப்பதற்கென்று சர்க்கார் ஏராளமாகச் செலவிட நேரிட்டிருக்கிறது. இரண்டாவதாக நாட்டிலுள்ள உணவுப்பொருள் நெருக்கடியைத் தீர்க்க, உணவு இருப்பு உள்ள இடங்களிலிருந்து அதை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. இதற்காகவும் அதிகப்படி விலைக்கு வெளி நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை வாங்கி, குறைந்த விலைக்கு நம் நாட்டினரிடை விற்பதால் உண்டாகும் நஷ்டத்தை ஈடு செய்ய 22.5 கோடி ரூபாய் செலவாகிறது. மூன்றாவதாக நாட்டிலுள்ள குழப்பங்களால் ராணுவச் செலவும் அதிகமாகவே இருந்துவருகிறது. யுத்த காலம் முடிந்த போதிலும் இத்துறையில் செலவைக் குறைக்க முடியவில்லை.

4. இந்தப் பட்ஜெட்டில் காட்டப்பட்டிருக்கும் செலவுத் தொகைகூட முடிவானதல்ல. ஏனெனில் அகதிகளுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை போதாமற் போனாலும் போகலாம். அப்படி நெருக்கடி ஏற்படுமானால் இன்னுங்கூடச் சர்க்காரின் கடன் அதிகமாகக் கூடும்.

5. மேற்கு வங்காளத்திலும் கிழக்குப் பஞ்சாபிலும் சீரான நிலை நிறுவ, அவற்றிற்குப் பணம் கொடுத்து உதவவேண்டி நேரிடலாம். அப்படி ஏற்பட்டாலும் சர்க்காரின் கடன் அதிகமாகும். இந்த

வகையில் செலவுக்கென்று ஒரு தொகையும் பட்ஜெட்டில் ஒதுக்கப்படவில்லை.

6. ராணுவத்திற்கென்று 92.74 கோடி ரூபாயும், சிவில் இலாகாக்களுக்கென்று 104.65 கோடி ரூபாயும் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

7. பஞ்சாடை, நூல் இவற்றின் ஏற்றுமதி வரி புதுவிதமாக நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. இதனால் 8 கோடி ரூபாய் வருமானம் அதிகமாகும் என்று முன் தெரிந்தோம். இது உண்மையில் யாரைப் பாதிக்கிறது என்று சிறிது பார்ப்போம். பஞ்சுக்காகவும் அதை நூலாகவோ, ஆடையாகவோ மாற்றவும் இந்திய முதலாளி ஒரு குறித்த தொகையைச் செலவிடுகிறான். அதற்கு மேல் ஏற்றுமதி வரியும் செலுத்துகிறான். இந்த வரியுள்பட அவனுக்குக் கொள் முதல் எவ்வளவோ அதற்குமேல் குறித்த சதவீத லாபம் வைத்து வெளிநாடுகளில் விற்கிறான். அதை வாங்கும் வெளி நாட்டினர்தாம் இச் செலவுகளை ஏற்றுக் கொள்ளுகின்றனர். இதனால் நம் நாட்டுத் தனி மனிதனுக்கு வரி விதித்ததாகாது.

இது பற்றியே நாம் சந்தோஷமடைந்து கொண்டிருந்தால் மட்டும் போதுமா! நம் நாட்டிலேயே ஒரு சிலரிடம் பதுங்கிக் கிடக்கும் பண மூட்டைகளை வெளியில் கொணர்ந்து, ஏழை இந்தியர்கள் பலருக்குப் பகிர்ந்து கொடுக்கவேண்டும். இப்படிக் கூறுவதால் ஏதோ முதலாளித்துவத்தை யொழிக்க, கொடும் வழிகள் கையாளப் படவேண்டுமென்று கூறுவதாக எண்ணிவிடாதீர்கள். ஏழை இந்தியனுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், ஒதுங்க ஓரிடமும் கிடைக்க வேண்டுமானால் சர்க்கார் மூலமாக முதலாளிகளிடமுள்ள பொருள் ஏழையின் குடிலுக்குப் பாய்ந்தோடி வர வேண்டும். இதற்கு ஒரு சிறந்த வழி பணக்காரர்கள் மட்டும் வாங்கக்கூடிய அத்யாவசியமற்ற பொருள்கள் மீது வரி விதிப்பதே. இப்படிச் செய்ய முன்வரும் எந்தச் சர்க்காருக்கும் எதிர்ப்பு அதிகமிருக்கும். உண்மைதான். ஆனாலும் அவ் வெதிர்ப்பைப் பொருட்படுத்தாது ஏழைக் கிரங்கி, பணக்காரர்களிடமுள்ள பொருளை வாங்கி, அவனுக்கு வழங்குபவனே தேசியவாதி; தனி மனிதனின் சுதந்திரத்திற்கு அடிகோலும் அரசியல் ஞானி. இன்னும் இக் கருத்தை விளக்க ஒரு உவமை கூறினும் பொருந்தும். ஓர் ஊரில் குளங்களிலும், ஆற்றிலும் மக்கள் கூட்டம் கூட்டமாக நீராடி விட்டுத் துணிமணிகளைச் சுத்தப்படுத்திக் கொண்டு குடிநீர் கொண்டு போவது வழக்கம். ஒருவன் அவ்வாற்றிலும் குளங்களிலுமுள்ள நீரை எல்லாம் இயந்திரங்களின் மூலம் உயர்ந்த மலையின் மீதுள்ள ஒரு பெரிய ஏரியில் சேமித்து வைத்துவிடுகிறான். பிறகு ஆறும் குளங்களும் வறண்டு போனபோது மக்கள் "நீர் வேண்டுமே" என்று கேட்டால், "நான் என்ன செய்யட்டும்; அப்படி அவசியம் நீர் வேண்டுமானால் அதோ சமுத்திரத்தில் இருக்கிறது. அதனிடம் பெற்றுக் கொள்" என்று கூறுவது போலிருக்கிறது.

தனி மனிதன் வறண்டு கிடக்கிறான். அவனுக்கு ஈரமளிக்க முதலாளிகளே நெஞ்சில் ஈரத்துடன் முன்வரவேண்டும். இல்லையேல் சுதந்திர சர்க்காராவது தீரத்துடன் முன்வரவேண்டும். நமது நிதி மந்திரி தமது பட்ஜெட் பிரசங்கத்தில் ஒரு விஷயம் பற்றிக் கூறியிருக்கிறார். வருங்கால இந்தியாவில் சர்க்காரே பல அதிக வருமானமுள்ள தொழில்களை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும். அதனால் தனி மனிதர்களுக்கு ஏதும் சிரத்தையில்லாமற் போய்விடுமே யென்றால் அவர்களுக்கும் சுதந்திர இந்தியாவின் பொருளாதார அட்டவணையில் சரியான இடம் கிடைக்கும் என்று மறைமுகமாகச் சொல்லியிருக்கிறார். இது மிகவும் திருப்தியளிக்க வேண்டிய விஷயம்.

சுதந்திரம் பெற்றுவிட்ட போதிலும் நாட்டுக் குழப்பங்களாலும் நிதியிலாகாவில் பொறுப்பேற்றுச் சிறிதுகாலமேயாகியிருப்பதால் இதற்குமுன் நாட்டிலிருந்த பொருளாதாரநிலையைத் திடீரென்று மாற்ற முடியாததனாலும் இன்னும் சுமார் மூன்று மாதங்களில் மற்றொரு பட்ஜெட் தயாரிக்கப்படுமாதலாலும் இந்திய ராணுவத்தைப்பற்றிய பெரிய பிரச்னைகளில் முடிவான நோக்கங்கள் இன்னும் அரசாங்கத்தாரால் தீர்மானிக்கப் படாமையாலும்

இந்தப்பட்ஜெட் முதல்தர பட்ஜெட்டாக வெளிவர முடியவில்லை. இருப்பினும் ஷண்முகஞ்செட்டியாரின் பரந்த பொருளாதார அறிவாலும் அனுபவத்தாலும் அடுத்த பட்ஜெட் உண்மையிலேயே "சுதந்திர இந்தியாவின் தனி மனிதனின் பட்ஜெட்" டாக வெளிவருமென்பதற்கு ஐயமில்லை.

உலகத்திலேயே ஜனத்தொகையில் முதலாவதாக நிற்கும் நாடு சீனா. அதற்கடுத்தபடி வருவது நம் இந்தியா. நாட்டுப்பிரிவினை, உள்நாட்டுக் குழப்பங்கள் இவை யிருந்தும் நம் நாட்டுப் பொருளாதார நிலை மற்ற நாடுகளுடையதைவிடப் பன்மடங்கு பெருமைப்படத் தக்கதாயிருக்கிறது.

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும்—இங்கு
வாழு மனிதருக் கெல்லாம்;
பயிற்றிப் பலகல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்."



காஷ்மீர் செல்லும் துருப்புகளை உற்சாகப்படுத்துகிறார் நேரு தம் இனிய சொற்பொழிவினால்.

# யாசகம்

ரா. ஸ்ரீ. தேசிகன்

மறைகின்ற தினகரனின் பொற்கதிர்கள் மண்டபத்தின் உச்சிமீது துள்ளி விளையாடின. மைதானத்தின் நடுவே உள்ள மண்டபத்தை நோக்கி ஊரிலுள்ள ஜனங்கள் அலைக்குமேல் அலையாக வந்து கொண்டிருந்தனர். மண்டபம் நிறைந்துவிட்டது. வெளியிலே ஜனத் திரள் வழிந்தோடிற்று. புகலரும் ஒரு தனிச் சோபையோடு மஞ்சள் ஒளியிலே மிளிரும் புல் தடத்தின் மீதும் நானும் உட்கார்ந்தேன். உபந்நியாசகர் வருகின்ற திசையை நோக்கிய வண்ணமே அனைவரும் இருந்தனர். அந்தி நாடகக் காட்சிமீது இருள் திரையும் விழுந்து விட்டது. மண்டபத்திலுள்ள மேடை மீதும் மற்றுமுள்ள இடங்களிலும் மின்சார விளக்குகள் எரிந்தன. விசிறிகள் சுழன்றன. உபந்நியாசகரும் வந்தார். கடல் போல் பரந்து கிடந்த அமைதிப் பரப்பின்மீது அவருடைய யாழொத்த இன்னிசைக் குரல் மெல்ல மிதந்து வந்தது. அவருடைய கம்பீரமான தெய்விகத் தோற்றம், உள்ளத்தில் ஆழ்ந்து உறங்கிக் கிடக்கின்ற மர்மங்களை—ரகசியங்களை அப்படியே ஊடுருவிப் பாய்ந்து அளக்கின்ற அவருடைய கண்கள், எதையும் துருவி ஆராய்கின்ற அவருடைய நுண்ணறிவு, மேன்மேலும் விரிகின்ற அவருடைய கற்பனையின் சொற்கடந்த சோபை, அவர் கவியுள்ளம், அவர் தூய்மையான வாழ்வு—இவை யாவும் என் மனத்தை விட்டு அகலவில்லை.

நம்மாழ்வாரின் ஒரு பாசுரத்தை எடுத்துக்கொண்டு அதன் நயத்தை மிகக் கவின்பெற எடுத்துரைக்கத் தொடங்கினார்.

> **இம் மன்னுலகில் செல்வரிப்**
> **போதில்லை நோக்கினோம்**

என்ற வரியைச் சுட்டி, இதன் அழகைப் பாருங்கள் என்றார். இம் மண்ணுலகில் செல்வரில்லை—இப்போது நோக்கினோம் என்று சற்று மாற்றிப் படித்தால் எத்தனை பெரிய தத்துவம் விளங்குமென்றார். இதைப் பற்றிச் சிந்தியுங்கள். நானும் நாளை இதன் உண்மையை உரைக்கின்றேன் என்று சொல்லித் தம் சொற்பொழிவை நிறுத்தினார். கூட்டமும் கலைந்தது. எத்தனை அழகாய் அவர் பேசினார், இதைப் போலச் செவிக்கின்பம் வேறுளதோ என்றார் ஒருவர்; சிந்தைக் குணவு என்றார் மற்றொருவர். இப்படியே பேசிக்கொண்டு அனைவரும் சென்றனர். வான வீதியில் கணக்கிலா விண்மீன்கள் விளக்கொளி காட்ட நானும் நகர்ந்தேன். என் முன் ஒரு சிந்தனைப் பாதை விரிந்தது அதில் நான் மெல்லப் போய்க்கொண்டேயிருந்தேன்.

எப்பொழுதுமே செல்வரில்லை — இப்போது நோக்கினோம் என்ற வரி என் உள் செவியில் ஒலித்தது. ஆம் உண்மைதான். இதுமட்டுமா—எல்லா உண்மைகளும் அப்படியே. நியூடன் தோன்றுவதற்குமுன் எல்லாவற்றையும் இழுக்கிற சக்தி இல்லாமற் போகவில்லை. அவர் புரிந்த பாக்யம், அவர் உள்ளத்தில் அவ்வுண்மை மின்னலடித்தது. அவரில்லாமற்போனால் உலகம் இருளில் மூழ்கி விடாது. உலகத்தில் ஒருவன் இருந்தே

தீரவேண்டும் என்ற அவசியமில்லை. இன்னொருவன் மூலம் இயற்கை அன்னை தன் ரகசியத்தை வெளியிடுவாள். பண்டைத் தபோதனர்கள் தங்கள் உண்மைகளைச் சுருதிகள் என்றனர். உண்மைகள் எங்கும் மிதந்து நிற்கின்றன. அவர்களுடைய செவிகள் அவைகளை உணர்ந்தன. நமக்குக் கண்கள் இருந்தும் அவைகள் பார்க்கிறதில்லை; நமக்குச் செவிகள் இருந்தும் அவைகள் கேட்கிறதில்லை.

இந்தத் தத்துவத்தை எப்படி உணர்ந்து பேசினர் அந் நாவலர் என்று உன்ன, உன்ன, என் வியப்பிற்கு அளவே இல்லை.

ஆம், எப்பொழுதுமே செல்வரில்லை. இப்பொழுது உணர்ந்தோம். சிந்தையின் நிறைவே செல்வம். ஆசை நிரம்பிய உள்ளம் யாசிக்கிற உள்ளந்தான்—வறுமைப் பேய் அடைந்த இருள் இல்லமே—இதிற் சந்தேகமில்லை—என்ற நினைப்பிலே தாயுமானவரின் பாடலை என் உதடுகள் முணுமுணுத்தன.

"ஆசைக்கோ ரளவில்லை அகிலமெல்லாங் கட்டி
ஆளினுங் கடல் மீதிலே
ஆணைசெலவே நினைவர் அளகேசன் நிகராக
அம்பொன் மிகவைத்த பேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநாளிருந்த பேரும்
நிலையாக வேயினுங் காய கற்பந்தேடி
நெஞ்சு புண்ணுவர் எல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பதும்
உறங்குவதுமாக முடியும்"

என்ற பாட்டைத் திரும்பத் திரும்பச் சொன்னேன். பிரார்த்தனை யெல்லாம் அக வறுமையைக் காட்டும் என்ற முடிவுக்கு வந்தேன். பிரார்த்தனை வேறு; தியானம் வேறு. ஆண்டவன் எல்லையற்ற எழிலில்—ஓர் அமைதிக் கடலில்—தன்னை அப்படியே கரைத்துவிடுவதுதான் தியானம். மற்ற யாவும் பிச்சைதான். பிச்சை யென்ற சொல் ஒரு விசித்திரமான ஒரு யாசகனை என்முன் நிறுத்திவிட்டது. யாசகத்திலும் ஒரு விசித்திரம் உண்டோ, பிச்சை யெடுப்போரிலும் ஒரு விசித்திர பிச்சைக்காரன் உளனோ என்று ஒருவர் வினவலாம். ஆம்; உண்டு; உண்டு என்று என் உள்ளம் ஒலித்தது. என் சிந்தையும் இமயமலைமீது ஓர் உயர் குன்றின்மீது நான் முன்பு கண்ட யாசகன் பாற் பறந்தது.

* * *

இராமேச்வரத்திலிருந்து இமயமலை வரையில் நான் பிரயாணஞ் செய்திருக்கிறேன். புண்ணியத்துறைகள் தோறும், புராதனக் கோயில்கள் தோறும், முதுகுன்றுகள் தோறும்—யாசகர்கள், யாசகர்கள்—யாசகர்கள் தாம். எத்தனை ஏமாற்றங்கள்! எத்தனை பொய் புதைந்த வேஷங்கள்! எத்தனை நோய் பிடித்தவர்கள், உண்மையிலே எத்தனை முடங்கள், ஊமைகள், கண்ணில்லாக் கபோதிகள், கைபோனதாக, கால் போனதாகப் பாவனை பண்ணுகிற பரதேசிகள். சாம்பலைப் பூசிக்கொண்டு யோகாப்பியாசஞ் செய்வதாகக் காட்டுகிற பல தோற்றங்கள், நாமங்களைத் தரித்த போலி விஷ்ணு பக்தர்கள், வயிற்றுக்காக மனிதன் போடுகிற வேஷங்கள் — இத்தகைய மனிதர்களையும், காட்சிகளையும் நினைக்கிறபொழுது நம் மனத்தில் நாணமும் இரக்கமும் எழாமற்போகா. உண்மையிலே இன்னல்களை நாம் அடைந்தாலும் கேட்டோர் நெஞ்சம் புண்படுமே என்ற எண்ணத்திலே நாம் அவைகளை நம் உள்ளத்திலேயே மறைத்து வைத்துக் கொள்ளுவது நாகரிகத்தின் தன்மையாகும். பொய் வேதனையைப் பறையடிப்பது எத்தனை அநாகரிகம் என்பது யாசகர்களுக்கு விளங்குகிறதில்லை. கற்பனைக் குழந்தைகள், கற்பனை வியாதிகள், கற்பனை இன்னல்கள், கற்பனைப் பிரசவங்கள், கற்பனைச் சாவுகள், பொய்யிலே பிறந்து வளர்ந்து தாலாட்டப் பட்ட துக்க சம்பவங்கள் எல்லாம் யாசகர்களின் மனக் கழனியில் ஒன்றுக்குப் பத்தாய் மண்டிக் கிளம்பும் என்பதில் ஐயமுண்டோ?

இத்தனை பொய்யிருட்டுக்கு நடுவே, ஒரு தூய்மையான உள்ளம் படைத்த ஒரு யாசகரின் உருவம் எப்பொழுதும் என் முன் உலாவுகின்றது.

* * *

பொழுது சாய்கின்ற வேளையிலே, இமயமலை அடிவாரத்திலுள்ள கோயில்

களைச் சுற்றிவிட்டு ஒரு குன்றின்மீது அமைக்கப்பட்ட ஓர் குடிசைக்குச் சென்றேன். அங்கே கட்டப்பட்டிருந்த கல்லாசனத்தின்மீது ஒருவர் நீண்ட தாடி, மார்பை அலம்ப உட்கார்ந்திருந்தார். என்னைப் பார்த்தவுடன் "ஒரு யாசகம்" என்றார்.

கையிலுள்ள பணத்தை யெல்லாம் பிச்சைக்காரர்களுக்கு வழங்கிவிட்டு வெறுங் கையனாய்ப் போய்ச் சேர்ந்த என்னை யாசிக்கிறாரே இப் பெரியவர், என்ன பதில் சொல்லப் போகிறேனோ தெரியவில்லையே என்று திகைத்து நிற்கும் என்னைப் பார்த்து, என் மனத்தின் சஞ்சலத்தை அறிந்தவர்போல நான் யாசிக்கிற யாசகம் வேறு என்று சொல்லத் தொடங்கினார். அப்பொழுது என் மனத்தைவிட்டு ஒரு பெரிய பாரம் நீங்கினதுபோல எனக்குத் தோன்றிற்று. இரந்தவருக்கு இல்லை என்று சொல்ல எனக்குத் தைரியமில்லை. அது குற்றமோ, அது குணமோ அறிந்திலேன். அது எவ்வாறாயினும் ஆகுக; நான் கேட்கிற யாசகம் வேறு யாசகம் என்று அவர் மொழிந்த சொல் என் உள்ளத்தில் ஓர் அமைதியைப் பெய்தது. அவர் உரைக்கும் சொல்லிற்குச் செவி சாய்த்து நின்றேன். அவர் தம் சுய சரிதத்தை ஆரம்பித்தார்.

"நான் வேதம் ஓதி யிருக்கிறேன். செய்கிற பிழைகளை யெல்லாம் நீக்கும் மந்திரங்கள் எனக்குத் தெரியும். அக் காரணத்தால் செய்யத் தகாதன பிழைகளைத்—தீயச் செயல்களைத் துணிந்து செய்தேன். இரவில் செய்கிற தீச் செயல்களுக்குக் காலையில் முணுமுணுக்கிற மந்திரம் மாற்றாகும். நடுப் பகலில் புரிகிற அக்கிரமங்களை அகற்றக்கூடிய ஜபங்களுண்டு. பகலில் செய்கிற பாபங்களைப் பறக்கும்



படி செய்யக்கூடிய அந்தி வந்தனங்களுண்டு. வெளிக்குத் தவ வேஷம் பூண்டேனே ஒழிய, உள்ளத்தில் ஒரு புலைய வாழ்வை நடத்தினேன். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகின்ற வஞ்சனை நிரம்பிய மனத்தை உடையவன் நான் கீழ்ச் சாதியில் பிறந்த —என்ன கீழ்ச் சாதி என்ற பேச்சு வேண்டியிருக்கிறது. நான் அல்லவோ செயலால் நீசக் குடியைச் சேர்ந்தவன். பிறப்பிலா உயர்விருக்கிறது? செயல்களில் அல்லவோ—உயர்வும் தாழ்வும் இருக்கின்றன?

என்ன சொன்னேன் என்று தயங்கினார். கீழ்ச் சாதியில் பிறந்த—என்று அடியெடுத்துக் கொடுத்தேன். கீழ்ச் சாதியில் பிறந்த ஒரு மகள்பாற் காதல்கொண்டேன். எனக்குக் குழந்தையும் பிறந்தது. அந்தக் குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டு அந்தப் பெண் என் தகப்பனிடம் வந்து, "உன் பேரப்புள்ளியை பாருங்களேன் என் ராஜாவே" என்று நாணமில்லாமற் சொன்னாள். நான் எத்தனை நாணமுள்ளவன் என்றதை நீங்களே கவனியுங்கள். அவள் இறந்ததாகக் கேள்விப்படுகின்றேன். குழந்தையின் நிலை என்ன ஆயிற்றோ என்று சொல்லுகிறபொழுதே அவர் கண்களிலிருந்து நீர் சொரியத் தொடங்கிற்று. எனக்கு ஒன்றுந் தோன்றவில்லை. என் மனத்தில் ஒரு பெருந் துயர் வெள்ளம் பொங்கிப் பாய்ந்தது. இந்தத் தீச் செயலைத் துடைக்க வழியுண்டோ என்றார், துக்கம் நெஞ்சை அடைக்க, கண்ணீரில் நீர் அருவி பாய.

"ஆமாம் வழியுண்டு. உங்கள் கண்ணீரே அத் தீச்செயலின் கறையை நீக்கி, உங்களை வெள்ளுயிராக்கி விட்டது. கவலைப் படவேண்டாம்" என்றேன்.

"இன்னும் என்ன புரிந்தேன் தெரியுமா? பங்காளிப் பகையிலே வைக்கோல் குவியல்களின் மீது தீயை வைத்தேன். ஒரு பங்காளிக்காரனுக்குக் கண்நோவு எடுத்தபொழுது மருந்து தருகிறேன் என்று சொல்லிக் கண்ணை அவிக்கும் மருந்தைக் கலந்து கொடுத்து விட்டேன். அந்த மனிதனின் கண்கள் முழுவதும் கெட்டுப்போகாது போனாலும் அவர் வாழ்வு இன்பமற்ற இருள் சூழ்ந்த வாழ்வாய்ப் போய்விட்டது. அவர் எங்கே ஏங்கித் திரிகிறாரோ தெரிந்திலேனே! ஒவ்வொரு தீச் செயலும் என் முன் நிற்கிறது. அது என்னை வாட்டுகின்றது, ஆனால் ஒரு சம்பவம் என்னை முற்றிலும் மாற்றிவிட்டது."

"அதென்ன?" என்று உசாவினேன்.

"ஒரு நாள் இரவு எட்டுமணி இருக்கும். ஒரு தனிப் பாதை வழியாய் நான் சென்று கொண்டிருந்தேன். திடீரென்று வானங் கறுத்தது. இடைவிடாமல் மின்னிற்று. மேகங்கள் குமுறின. காற்றுச் சீறி ஓலமிட்டது. மழையோ குடங் குடமாகக் கொட்டிற்று. என் வீட்டிற்குப் பக்கத்திலே ஓர் ஆதித் திராவிடன் மண்டையில் அடிபட்டுக் கீழே கிடந்தான். அவனைப் பார்த்ததும் என்னுள்ளத்தில் என்னை அறியாமல் ஒரு திரை சட்டென்று விலகிற்று. என்னுடைய கல்நெஞ்சிலும் இதுகாறும் மறைந்து கிடந்த ஓர் அன்பூற்று இருக்கக் கண்டேன். எனக்கொரு புதிய தைரியமும், ஆற்றலும் வந்தன. அவனைத் தூக்கினேன். கள்ளின் நாற்றம் குப்பென்று அடித்தது. அதை நான் பொருட்படுத்தவேயில்லை. அவனை என் படுக்கையில் படுக்கவைத்து, அடுப்பை மூட்டி, குளிரைப் போக்கினேன். இதை அறிந்த என் உபாத்தியாயர் சாத்திரப் பாடசாலையிலிருந்து என்னை விலக்கிவிட்டார். அன்பைக் காட்டிலும் அறமுண்டோ என்ற உண்மை யார் செய்த தவத்தாலோ என் உள்ளத்தில் சுடர்விட்டெழுந்தது. அந்த ஒளியை லட்சியமாய் வைத்துக் கொண்டு என் வாழ்வை நடத்தி வருகின்றேன். பண்டைய தீச் செயல்கள் இடைவிடாமல் என் உள்ளத்தில் சீறி எழுகின்றன; கலகஞ் செய்கின்றன; பூசலிடுகின்றன; அட்டஹாசம் செய்கின்றன. வகை யறியாமல்,

ஊரிலேன் காணியில்லை உறவு மற்றொருவரில்லை
பாரில் நின்பாத மூலம் பற்றிலேன் பரமமூர்த்தி
காரொளி வண்ணனே கண்ணனே கதறுகின்றேன்
ஆருளர் களைகணம்மா அரங்கமா நகருளானே

என்று என் உள்ளங் கதறுகின்றது.

"பழையவாசனைகள் திரைத்தெழுகின்ற கடல்போல என்னைத் தாக்குகின்றன. அவ்வாசனை வெள்ளத்தைத் தடுக்க என்னால் இயலவில்லை. என் குற்றங் குறைகளைக் கூறுவதால் பிறர் மனம் துன்புறுமே என்று என் மனஞ் சஞ்சலப் படுகிறதுண்டு. ஆனால் இப்படிச் சொல்வதனால்தான் எனக்கு ஆறுதல் வருகிறது. என் செய்வேன் ஏது மறிந்திலேனே. பண்டைத் தீவினைகள் என்னை வேட்டை நாய்கள்போலப் பல மூலைகளிலிருந்து என் மீது பாய்ந்து பிய்த்துப் பிடுங்குகின்றன. கூவிக் கொள்ளும் காலம் குறுகாதோ என்று நான் பலதரம் ஓலமிட்டதுண்டு. எனக்காக ஆண்டவனிடத்தில் பிரார்த்தனை செய்யுங்கள். நான் கேட்கிற யாசகம் இதுவே" என்று நீர் மல்கிய கண்களோடு என் பக்கந் திரும்பினார்.

சற்று நேரம் அங்கே தங்கிவிட்டு வீடு திரும்பினேன். அன்று முதல் அந்தச் சோகவுருவம் என்னைத் தொடர்ந்தே வருகின்றது. அந்தத் தூய உபந்நியாசகர் உரைத்தவாறு செல்வரில்லை எல்லோரும் யாசகர்கள்தாம். நான் எத்தனையோ யாசகர்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இத்தகைய யாசகனை நான் பார்த்ததில்லை. நீச யாசகத்தையே புனிதமாக்கி விட்டாரே இப்பெரியவர்! ஆமாம், இவ்விஷயத்தில் ஒருவரை யொருவர் யாசிக்க வேண்டியதுதான். இந்த இருள் செறிந்த சிறையிலே எல்லோரும் குற்றவாளிகள்தாம். "அண்ணே! நீயுமா வந்து சேர்ந்தாய்" என்று சொல்லி ஒருகுற்றவாளியை மற்றொரு குற்றவாளி தழுவ வேண்டியதுதான். ஒரு குற்றவாளி உலகச் சிறையிலிருந்தாலும் பரமபத நீள் வாசல் மூடித்தானிருக்கும் என்று ஏழை உள்ளம் முணுமுணுத்துக் கொண்டேயிருக்கிறது. யாசகம் என்ற சொல் எழும்போதெல்லாம் இமயமலையில் ஒரு முது குன்றின்மீது என்னை யாசித்த அத்தூயோனின் மாசற்ற உருவம் தோன்றும். என் கண்களில் நீர் பாயும். வடதிசைநோக்கி என் கைகள் சென்னிமேற் சென்று அஞ்சலிசெய்யும்.



இந்திய தேசிய முஸல்மான்களின் கூட்டம்.

# அந்த நாளிலே!

"விந்தியா"

"இனிது! இனிது!" என்று ஔவையாரால் போற்றப்படும் ஏகாந்தம், எனக்கும் எப்போதும் இனிதாகவே இருப்பது வழக்கம். இந்த நாளிலே, தனிமையை நன்மையும் இன்பமும் பயக்கும் வகையில் பயன்படுத்திக் கொள்ளச் சாதனங்களுக்கு என்ன குறைச்சல்? ஆனால் இன்று எனது ஏகாந்தத்தை இனிப்பாக்கியது படிப்புமல்ல, பாட்டுமல்ல, தையல் வேலையுமல்ல, இன்பமயமான சில பழைய சம்பவங்களின் நினைப்புத்தான்.

எங்கள் பக்கத்து வீட்டிற்குக்குடிவந்திருப்பவர்கள் ஒரு இளம் தம்பதிகள் என்று அறிந்த என் உள்ளம், "ஐயோ பாவம்! எத்தனை நாள் வீடு கிடைக்காமல் பிரிந்திருந்தவர்களோ! இனிமேலாவது சந்தோஷமாயிருக்கட்டும்!" என்று அவர்களை வாழ்த்தியது. போன வருடம், இந்த நாட்களில், வீடு நெருக்கடிக் கஷ்டத்தினால் நான் வேதனைப்பட்டதும், அதையடுத்து நடந்த சில வேடிக்கையான சம்பவங்களும், என் நினைவுக்கு வந்தன.

முன்னிருளைத் தொடர்ந்து வரும் நிலவொளியையும், நட்சத்திரங்களின் ஜ்வலிப்பையும் காணும்போது ஏற்படும் உவகையில், இருளின பயங்கரம் மனதை விட்டு மாயமாய் மறைந்து போகிறதன்றோ? அதுபோலவே, வேதனையையொட்டியே சில களிப்பூட்டும் சம்பவங்கள் அந்நாள் நடப்பினும், இப்போது என் உள்ளங்களுக்கிடையிலே, அந்தச் சந்தோஷமளித்த அனுபவங்கள் மட்டுமே துள்ளி விளையாடுகின்றன.

கண் வளர்ந்திருக்கும் மகவு தனக்குத்தானே சிரித்துக் கொள்வது போல, நானும், அந்த நாட்களை நினைத்துவிட்டால், எனக்குள் சிரித்துக் கொள்கிறேன்.

என் கணவருக்கு அப்போது இந்தச் சென்னைப் பட்டணத்திலே புதிதாக உத்தியோகமாயிருந்தது. அவர் மட்டும் இங்கே ஒரு ஜாகையில் இருந்துவந்தார்; நான் பிறந்தகத்தில் இருந்தேன். எங்களை ஒன்று சேர்க்கும் குடித்தனம் அமர்த்தப்படுவதற்குத் தடையாக நின்றது 'வீட்டுக் கஷ்டம்.'

இரண்டு வருஷங்களாக அவர் ஏதேதோ பரீக்ஷைகளுக்குப் படித்துக் கொண்டு இருந்து, வேலையில் அமராததால், புக்ககத்திலும் பிறந்தகத்திலுமாக மாறிமாறி இருந்துவந்த எனக்கு, குடித்தனம் வைக்க அடங்காத ஆவல். 'வீட்டுக் கஷ்டம்,' என்று புதிதாக ஒரு கஷ்டம் உலகத்திலே இருப்பதையே மறந்து, இன்பக் கோட்டைகளைக் கட்டி வந்த எனக்கு, 'வீடு கிடைப்பதில்லை' என்று செய்தி கொணர்ந்த என் கணவரின் கடிதம் சொல்லொணாத வேதனை தந்தது. "இடி விழுந்ததுபோல" என்று கூறுவார்களே, அது போல பேரதிர்ச்சி ஏற்பட்டிருந்தது. சீட்டுக் கட்டைக் கொண்டு வீடு கட்டிவிட்டு, அது குலைந்ததைக் கண்டு வருந்தும் குழந்தையைப் போல நானும் வருந்தினேன்.

மனக் கோட்டைகள் துகள் துகளாகி, ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் உணர்ந்த நான் கடைசியில் அதிர்ச்சியையகற்றி, அமைதி நிலைநாட்டிக்கொள்ள, "இடி விழுந்ததற்குப்" பழியை என் மேலேயே சாற்றிக்கொண்டேன். என் புத்தியின்மையையே நொந்துகொண்டு, ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் வெளிக்காட்டிக்கொள்ளாமல் தவித்தேன். "வீடு கிடைப்பது இந்த நாளில் கஷ்டம் என்பதை ஏன் என் முட்டாள் புத்தி நினைக்கவில்லை?" என்று என்னையே திட்டிக்கொண்டேன்.

எப்படியோ என் மனக் கொந்தளிப்பு அடங்கியது. ஆனால் அது எத்தனை நாட்களுக்கு? ஒரு பத்து நாட்களுக்குத்தான்!

என் ஒன்றுவிட்ட அத்தையின் வருகை, தட்டிவிட்டுவிட்டது அடங்கியிருந்த மனதை. என் மனத்தின் அடியில் படுத்துக்கிடந்த உணர்ச்சிகள் சீறி எழுந்தன.

சென்னைக்குப் போகும் வழியில் சௌகரியத்தை யுத்தேசித்து எத்தனையோ பேர் என் பிறந்தகத்தில் தங்கிச் செல்வதுபோல் இந்த அத்தையும் வந்தாள்.

"யார் யாரோ சென்னைக்குப் போகிறார்கள். நாம் எப்போது போகப் போகிறோமோ?" என்ற ஏக்கம் நிறைந்த கேள்வி என் அந்தரங்கத்தில் பிறந்தது முதலில்.

"இன்றிரவு அத்தையுடன் புறப்பட்டால், நாளை விடியற்காலத்திற்குள் 'அவரை'ப் பார்க்கமுடியும்!"......ஆனால் "......"என்று எழுந்தது அடுத்த வினா.

"'ஆனால் என்ன? குடித்தனம் வைத்தால்தான் சென்னை போகணுமா? உன் சித்தி யிருக்கிறாளே, அங்கே போய் இரேன்! அவரைப் பார்க்க முடியுமே! என்று குறிப்புக் கொடுத்தது என் இதயரங்கம்.

"ஆ! ஆம்! சித்தியிருக்கிறாள்! என்னைப் பார்த்து மூன்று வருஷமாச்சு என்றும், பார்க்க ஆவல் மிகுந்திருக்கிறதென்றும் சமீபத்தில் எழுதியிருந்தாள்! அங்கே போகலாமா?...அவரைப் பார்க்கமுடியும், சித்தியகத்தில்! நிஜந்தான்! முன்னர் எப்.ஸி.எஸ். பரீக்ஷக்கு அவர் அங்கே படித்துவந்த நாட்களில், எப்போதாவது சித்தப்பாவை—தன் சின்ன மாமனாரைச் சிரத்தையுடன் போய்ப் பார்த்துவிட்டு வருவாராம்! இப்போது உத்தியோகத்தில் அமர்ந்ததும், கட்டாயம், போய் வந்துகொண்டிருப்பார்! அடிக்கடி போய் வருவார்! ஆம், சித்தியகத்திற்கு வரும்போது அவரைப் பார்க்கலாமே!"......என்றது ஆசை.

"ஆம்! அவரைப் பார்க்கலாம் சித்தியகத்திலிருந்துகொண்டிருந்தால். இங்கே இருந்தால் என்ன, சித்தி வீட்டிற்குப் போயிருந்தால் என்ன! இரண்டும் பிறந்தகம். யாரும் குற்றம் கூற வகை ஏது! இன்று அத்தையுடன் போனால், என் ஆசையும் நிறைவேறும்; சித்தியின் விருப்பமும் நிறைவேறும்! ஆம், இதுதான் சரி! இன்று அத்தையுடன் சென்னைபோக முயற்சி செய்ய வேண்டும்!"

"முயற்சி என்ன! நிச்சயம் போக வேண்டும்!......ஆம், போகப் போகிறேன் சென்னைக்கு நானும்!"

இப்படி ஒரு முடிவுக்கு வந்து விட்டது என் மனம் சில விநாடிக்குள். மனதில் சலனம் ஏற்பட்டதனால் உண்டான கிளர்ச்சியினால், மனப்புற்றிலிருந்து மளமளவென்று ஊறின உணர்ச்சிகள், கிளம்பின யோசனைகள்—சாரி சாரியாகச் செல்லும் எறும்புக் கூட்டம் போல! செல்லெறும்புக் கூட்டம்தான்!

என் யோசனைகள் இந்த முடிவுக்கு வந்ததும், ஒரு சந்தேகமும் தோன்றியது. அப்பா அம்மா ஒப்புவார்களா? அத்தை என் யோசனையில் அதிருப்தி காட்டாமல், 'மீனமேஷம்' பாக்காமல், கூட்டிக்கொண்டு போவாளா?

உடனே ஏதோ ஒரு இன்றியமையாத தடையத்தைக் கண்டு பிடித்து விட்ட துப்பறிபவரைப்போல், ஒரு துள்ளுத் துள்ளியது என் உள்ளம். அப்பா அம்மாவைச் சம்மதிக்கச்செய்ய ஒருகாரணம்கண்டுகொண்டேன். பெற்றோர் சம்மதித்து விட்டால், அத்தை கூட்டிக்கொண்டு போக ஏன் சம்மதிக்க மாட்டாள்? பார்க்கலாம்!

அம்மாவிடம் முதலில் போனேன். "அம்மா! அத்தையை நாளைக்குப் புறப்படச் சொல், நானும் அத்தையுடன் சென்னை போய், சித்தியகத்தில் கொஞ்சநாள் இருக்கிறேன்!"

"இதென்ன திடுதிப்பென்று இந்தயோசனை?" என்று கேட்டாள் அம்மா. "மாப்பிள்ளைக்குச் சரியான பெண்ணாக இருக்கணுமென்றுதான், இந்த திடுதிப்பு எண்ணம்!" என்றேன் சிரித்துக்கொண்டே.

அம்மாவுக்கு என் யோசனை ஒருவாறு புரிந்துதான் இருந்தது. "சரி போய்ட்டு வா!—ஆனால் அப்பாவையும் கேள் ஒரு வார்த்தை!" என்றாள்.

அம்மாவே சம்மதம் என்றபின், அப்பா செய்யும் தடை ஏதும் இராது என்று தெரியும் எனக்கு. "அப்பா பெண்" நான். அதுவுமல்லாமல், என் யோசனைகள் தவறுயிரா என்பது அப்பாவுக்கு நம்பிக்கை.

நான் அப்பாவைக் கேட்டேன்; "சரி போ!—ஸ்டேஷனுக்கு யாரை வரச்சொல்லி எழுதட்டும்? சித்தப்பாவையா?—அல்லது மாப்பிள்ளையையா?" என்று கேட்டார்.

"ஐயையோ, மாப்பிள்ளைக்கு எழுதவேண்டாமப்பா! சித்தப்பாவையே வரச்சொல்! மாப்பிள்ளைக்குத் தெரியாமல், சித்தப்பா வகத்திற்குப் போகணும், அங்கே எப்போதாவது வந்தால் மாப்பிள்ளை திடுக்கிடணும் என்றுதானே நான் இந்த யோசனை செய்திருக்கிறேன்!" என்றேன்!

அப்பா என் மனதை நன்றாகத் தெரிந்து கொண்டு விட்டார். "ஓகோ!" என்றார்

சிரித்துக்கொண்டே! "சரிதான்!—பதிலுக்கு பதிலா! உம், ஆகட்டும்! நான் எழுதவில்லை மாப்பிள்ளைக்கு! சித்தப்பாவை வரச் சொல்லுகிறேன் ஸ்டேஷனுக்கு! என்று கூறிவிட்டார்.

சித்தியகத்திற்கு வந்து ஓரிரண்டு நாட்கள் வரை, சித்தியுடனும், சித்தி பிள்ளைகளுடனும் உல்லாசமாகப் பொழுது போக்கினேன். சென்ட்ரலிலிருந்து சிற்றப்பா என்னை அழைத்துவரும்போது, என் கணவர்பால் ஊசலாடியவண்ணமிருந்தது என் உள்ளம். "கடிதம் போட்டிருந்தால், அவர் வந்திருப்பாரே, இத்தனை நாழி அவரோடு பேசிக்கொண்டிருந்திருக்கலாமே!..........." என்று தோன்றியது. ஆனால் உடனே, "வேண்டாம் என்றுதானே தெரிவிக்கவில்லை! மறுபடியும் ஏன் இந்தச் சபலம்!" என்று சமாதானம் செய்துகொண்டேன். அருமையான யோசனையொன்றைச் செய்து விட்டு, அதற்கு வருந்துவது முட்டாள்தனம்! நம் யோசனைமட்டும் வெற்றியோடு நிறைவேறிவிட்டால்......ஆகா!......" என்று என் மனம் குஷியே அடைந்தது மீண்டும். அந்தக் குதூகலத்துடனே, சித்தியகத்தில் ஓடியாடிக் களித்துவந்தேன்.

பெண் குழந்தையில்லாக் குறையுள்ள சித்தி எப்போதும் என்னிடம் அடங்காத பிரியம் உடையவள். இப்போது மூன்று வருஷங்களுக்குப் பின் என்னைப் பார்த்த அவளுக்குச் சந்தோஷம் எத்தனையென்பதைக் கூறுவது சாத்தியமாகுமா? கொள்ளையோ கொள்ளை சந்தோஷம்!

நான் வந்த சிறிது நேரத்திற்கெல்லாம், அவளுடைய கேள்விக்குப் பதிலாக, என் கணவர் சென்னையில் சமீபத்தில்தான் வேலையாக அமர்ந்ததைப்பற்றிக் கூறினேன்.

"அட, எனக்குத் தெரியாதே!...அவரும் வரவில்லை இங்கே! நீயும் எழுதவில்லை!...... நீ வந்திருப்பது தெரிந்தாவது, இன்று வருவாரோல்லியோ!" என்றாள் சித்தி.

"நான் இங்கு வந்திருப்பது அவருக்குத் தெரியாது, சித்தி; நான் தெரிவிக்கவில்லை! தாமாக இங்கு வந்தால்தான் தெரியவேணும்!" என்றேன்.

"ஏன் கமலம்!... நன்னா எழுதாமலிருந்தாய்! அவர் விலாசத்தைக் கொடு! நான் ராஜு-விடம் சொல்லியனுப்புகிறேன்!"

"வேண்டாம் சித்தி! சொல்லியனுப்பாதே!.........நான் ஒரு காரணமாகத்தான் தெரியப்படுத்தவில்லை........."

"என்ன, சண்டையோ!"

"இல்லையில்லை, சண்டையில்லை! ஆனால் போட்டி! என்ன போட்டி தெரியுமா? சிரிக்காமலிருந்தால் சொல்லுகிறேன்!" என்றுதுவக்கினேன் என் அந்தரங்க யோசனையைக்கூற. சித்தியிடம் எனக்கு அபார சலுகை உண்டு.

"சொல்! சிரிப்பானேன்!" என்றாள் குறும்பாகச் சிரித்தவண்ணம், சித்தி.

"சித்தி! அவர் ஒரு தடவை ஒரு நாடகத்தனம் பண்ணப்பார்த்தார். சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று வந்து ஆத்துலே குதிக்கணும், எங்களை ஆச்சரியப்படவைக்கணுமின்னு நினைத்தார். ஆனால்நான்மானஸீகமாய்க் கண்டு பிடித்து விட்டேன். பதிலுக்கு அவரை நான் திடுக்கிடவைக்க எப்போதாவது சந்தர்ப்பம் கிடைக்காதா என்று அப்போதே எனக்கும் ஆசை எழுந்திருந்தது. இப்போது தான் சமயம் கிடைத்திருக்கிறது. சமீபத்திலே அவர் ஒருநாள் இங்கேவருவார், கட்டாயம். அப்போது நான் அவர் முன்னே திடுதிப்பென்று தோன்றணும்; அவரிடம், "பார்த்தேளா, நீங்கள் நினைத்ததை நிறைவேற்ற முடியாவிட்டாலும், நான் நினைத்ததைச் செய்துவிட்டேனே! நீங்கள் என் யோசனையைக் கண்டுபிடிக்க முடிந்ததா?" என்று கேட்கணும்! இதுதான் ரொம்ப நாளாக என் ஆசை! ........... அதனால்தான் எழுதவில்லை!" என்றேன்.

"ஓஹோ, சரிதான்!......" என்றாள் சித்தி. சித்திக்கும் என் போல் குறும்புத்தனம் அதிகம். ஆதலால் தானும் என்னுடன் ஒத்துழைக்க முற்பட்டாள் போலும்! கேட்டாள் போலும்.........

"அவர் வந்தால் சாயங்காலமாகத்தான் வருவது வழக்கம்!......உம், அதிருக்கட்டும்! அவர் எப்படி வேடிக்கை பண்ணினர், நீ எப்படிக் கண்டுபிடித்தாய், எல்லாம் சொல்லு! நாம் அதற்கு மேலே பெரிய நாடகத்தனம் பண்ணலாம்! நானும் யோசனை பலமாகச் செய்கிறேன்!" என்றாள்.

நான் கூறலானேன்:—

"அவருக்குப் போன வருஷம் இங்கே ஏதோ 'இண்டர்வ்யூ'க்கு வரவேண்டியிருந்தது சித்தி! நான் அப்போது புக்ககத்தில் இருக்கவில்லை, அம்மாவிடம் தான் இருந்தேன். பங்களூரிலிருந்து மாப்பிள்ளை சென்னைக்குப் போகவேண்டியிருக்கும் அந்த மாதத்திற்குள் என்ற

விஷயம் மட்டும் தெரிந்திருந்ததே ஒழிய, எந்தத் தேதி புறப்படுவார், எப்போது இண்டர்வ்யூ என்று ஒரு சமாசாரமும் 'அவர்' எழுதவில்லை.

எப்படியும் அங்கே இறங்கி விட்டுத் தான் போவார், ஆனால் ஏன் அதைப்பற்றி எழுதவில்லை என்று எனக்குச் சந்தேகம் தோன்றிவிட்டது. மாதக் கடைசி வந்தும் ஒரு வார்த்தைகூட அவர் தெரிவிக்காமல் இருக்கவே என் சந்தேகம் பலப்பட்டு, யோசனைமேல் யோசனை தோன்றிவந்தது.

''அவர் திடீரென்று வரப்பார்க்கிறார்! ஆமாம்! அதனால்தான், ''குட்டா''க இருக்கிறார்'' என்ற நிச்சயம் ஏற்பட்டுவிட்டது எனக்கு.

''அப்படி வேடிக்கை செய்யக்கூடியவர் தான் அவர்!.........நாமும் ஏன் வேடிக்கையாக, 'குட்டா'க அவரை முந்திக்கொள்ளக் கூடாது!'' என்று எனக்கு தோன்றியது!

அதென்ன மாயமோ, எனக்கே ஆச்சர்யமாயிருக்கிறது சித்தி! ஒரு ஞாயிற்றுக் கிழமை. அன்று அம்மாவிடம் போய், ''அம்மா, மாப்பிள்ளை இந்தச் செவ்வாய்க் கிழமை ராத்திரி கட்டாயம் வருவார், பார்!......ஆனால் கடுதாசி வராது, வேணுமானால் பார்! திடீரென்று வரத்தான் அவர் இவ்வளவு அமுக்காய் இருக்கிறார்!'' என்றேன்.

அதற்கு அம்மா, ''போடி, போ! அப்படியெல்லாம் கடுதாசி போடாமல் வரமாட்டார்! ராவேளை, திடீரென்று 10 மணிக்கு வந்தால், சமையல் சாப்பாட்டுக்குக் கஷ்டம் என்று தெரியாதா? அப்படித்தான் என்ன, பத்து வருஷம் ஆச்சா, மாப்பிள்ளை அவ்வளவு சகஜமாய்க் கடிதம் போடாமல் வர!'' என்று கூறிவிட்டு, என் வார்த்தைகளைக் கொஞ்சமும் ஏற்கவில்லை. ஆனால் நான் மட்டும் செவ்வாய்க்கிழமை சாயங் காலம்கூடச் சொன்னேன். ''இன்று மெயிலில் வந்துகொண்டிருப்பார் நிச்சயம்!'' என்றேன். பிறகு, ''அம்மா, உனக்கு நம்பிக்கையில்லாவிட்டால் சமைத்துவைக்க வேண்டாம்! சாதம் கொஞ்சமும், தயிரும் எடுத்துவை போதும்! சொல்லாமல் வருகிற மாப்பிள்ளைக்கு அது போதாதா?'' என்றேன்.

அப்போதுதான் அம்மா திடுக்கிட்டாள்... ''இதென்னடி ......போகிறது! இவ்வளவு நிச்சயமாய்ச்சொல்கிறாயே! உனக்கு மட்டும் எழுதியிருக்கிறாரா ஏதானும்!'' என்றாள். அப்போதுதான் அவளுக்கு நம்பிக்கை தோன்றலாச்சு.

''சரியாப்போச்சு! அப்படித்தெரிந்தால், ஏன் மறைக்கிறேன்! அவர் ஒரு வார்த்தையும் எனக்கு எழுதவில்லை. என் மனசு தான் சொல்கிறது! அவர் சுபாவம் தெரியும் எனக்கு! ஆறு மாதம்தான் பழகியிருக்கிறேனென்றாலும், தமாஷ்பேர்வழியா, இல்லையா என்று கண்டுபிடிக்க முடியாதா?... அவர் கட்டாயம் வரத்தான் போகிறார் இன்றைக்கு!... நீ அப்பாவை ஸ்டேஷனுக்குப் போகச் சொல்லேன் அம்மா? அவரை ரயில் ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்து விட்டுவிடும்...ஆனால், வீட்டுக்குவரச் சிரமப் பட்டாலும் படுவார்!... அதுவுமல்லாமல், அவருக்கு நாம் எதிர்பார்ப்பதும் தெரிந்துபோகும் வெட்ட வெளிச்சமாய்!... அப்பா ஸ்டேஷனுக்குப் போகமாட்டாளாம்மா?'' என்று கேட்டேன்.

அம்மா என் நிச்சயத்தைப் பார்த்து ஆச்சர்யப்பட்டுக் கொண்டே, அப்பாவைப் போய்க் கேட்டாள்... அப்பா, 'சரி' என்று புறப்பட்டார் ஸ்டேஷனுக்கு அன்றிரவு. சாதாரணமாக இருந்தால் அப்பா, ''கடிதம் வராதபோது வீணாக ஏன் என்னை அலைக்கழிக்கிறாள்!'' என்று கோபித்திருப்பார். ஆனால் அன்றோ, ''கமலு இவ்வளவு சொல்லும்போது, போய்ப் பார்த்துவிட்டு வந்தால் போச்சு!'' என்று தான் புறப்பட்டுப் போனார். இரண்டுநாளாக நான் அவ்வளவு நிச்சயமாய்ச் சொல்லிவந்ததை அலக்ஷியம் பண்ண முடியவில்லை.

கடைசியில் நான் சொன்னபடியே நடக்கவும் நடந்தது!.

ஸ்டேஷனுக்குள் ரயில் வந்து, பெட்டிகள் எல்லாம் தம்மைத் தாண்டிக் கொண்டு போகும்போது, அப்பாவுக்குத் தம் கண்களையே நம்ப முடியவில்லையாம், சித்தி! ஒரு பெட்டிக்குள், 'அவர்' நின்றுகொண்டு, மேல் தட்டிலிருந்து பெட்டிகளை இறக்குவதிலே மூழ்கியிருந்ததை, ஓடுகிற ரயிலில் கண்டாராம் அப்பா! மாப்பிள்ளை, யாரையும் ரயிலடியிலே எதிர்பாராததால், தம் பாட்டுக்கு காரியத்திலே கவனமாயிருந்தாராம். அப்பா அவர் முகத்தைப் பார்த்து விட்டதும், ''அட, நிஜமாகவே மாப்பிள்ளை வந்திருக்கிறாரே! எப்படி அவ்வளவு நிச்சயமாய்க் கமலு சொன்னாளோ!'' என்று ஆச்சர்யப்பட்டுக் கொண்டே, மாப்பிள்ளையைப் பார்த்த பெட்டி பக்கம் ஓடி, பெட்டி நின்றதும், அதற்குள் ஏறி, ''வாருங்கள் மாப்பிள்ளை!'' என்றாராம். ''ஆ! யாரது!'' என்று திடுக்கிட்டு 'அவர்' திரும்பிப் பார்த்தாராம். ''உங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' என்று முதலில் கேட்டாராம்.

அப்படிக் கேட்கும்போது அவர் முகத்தைப் பார்க்கவே பரிதாபமாயிருந்ததாம் அப்பாவுக்கு.

கமலு சொல்லிக்கொண்டே யிருந்தாள், இன்று நீங்கள் வருவீர்களென்று. நாங்கள் கடிதம் போடாமல் வரமாட்டார் என்று சொல்லிவந்தோம். ஆனால் அவள் நச்சுப் பொறுக்காமல் வந்தேன். ரயில் வந்து, உங்கள் முகத்தைப் பார்க்கும் வரை, அவள் சொன்னதும், நான் அவள் வார்த்தையைக் கேட்டு வந்ததும் பைத்தியக்காரத்தனமென்றே எண்ணினேன்! ஆனால் இப்போதுதான் அறிந்தேன். அவள் தீர்க்கதரிசனத்தை! — எப்படித்தான் அவள் அப்படிச் சொன்னாளோ?—உம்! சரி, சரி, புறப்படுங்கள்! நாழியாகிறது! சமையல் எல்லாம் ஆறிவிடும்!" என்று தட்டி எழுப்பினாராம் பிரமை பிடித்து நின்ற மாப்பிள்ளையை.

அப்புறம் அவர் வீட்டிற்கு வந்ததும் அம்மாவிற்கும் ஆச்சர்யம்! எனக்கோ "நாம் சொன்னது உண்மையாயிற்றே!' என்ற சந்தோஷம்! அம்மா என்னைப் பார்த்துப் பார்த்து" எப்படியடி தெரிந்தது! 'எப்படியடி சொன்னாய்!" என்று அதிசயத்துடன் கேட்டவண்ணமிருந்தாள்.

சாப்பாடு நடந்துகொண்டிருக்கையில் நான், அவரைப் பார்த்து, "நீங்கள் இன்று வருவதாக எழுதியிருந்தீர்களா? சொல்லுங்கள்! அம்மாவுக்குச்சந்தேகம், நீங்கள் எனக்குமட்டும் தெரிவித்திருப்பீர்களோ என்று!" எனக் கேலியாகக் கேட்டேன்.

அப்போது மாப்பிள்ளையே அம்மாவிடம் சொல்லிக்கொண்டுவந்தார்: "என் வாழ்நாளிலேயே முக்கியமான, அரிதான சந்தர்ப்பம் ஏற்பட்டதுஎன்று நினைத்து பெரிய பிளானைப் போட்டேன், மாமி! $1\frac{1}{2}$ மாதமாக இதற்கு யோசனை பண்ணியிருந்தேன். கமலிக்கு எழுதவில்லை, எப்போது புறப்படணும், என்றைக்கு இங்கு வருகிறேன் என்று! இண்டர்வ்யூ, 29, 30 தேதிவாக்கிலே இருக்கும் என்றுமட்டும் குறிப்பிட்டிருந்தேன்; ஆனால் 26 ஆம் தேதி, இன்று வருவேனென்று ஒரு குறிப்பும் தரவே இல்லை.

இங்கு திடீரென்று வரணும், ஆச்சர்யப்பட வைக்கணும், ஆனால் என் திடும் பிரவேசத்தால் சிரமமிருக்கக் கூடாது, என்று 10 மணிக்கு வண்டியிறங்கினதும், ரிப்ரஷ்மெண்டு ரூமில் சாப்பிட்டுவிட்டுச் சாவதானமாக வந்து கதவைத் தட்டணும், இப்படியப்படி என்று பல நாளாக நான் கோடித்ததெல்லாம், ஒரு நிமிஷத்தில், பொத்துவிட்ட பலூன்மாதிரி ஆகிவிட்டது! ............இனிமேல் இதுபோல் வேடிக்கை செய்யச் சந்தர்ப்பமே கிடைக்கப் போவதில்லை!.........என் ஆசை வீணாகிவிட்டது! மாமா, "வாருங்கள் மாப்பிள்ளை!" என்றதும், எனக்குத் தலை கிறுகிறுப்பு ஏற்பட்டதுண்டோல்லியோ.....சொல்லவே முடியாது! இப்போதுகூட எனக்கு, மாமா அழைத்ததை நினைத்தால், படபடக்கிறது உடம்பு!" என்று ஆவேசம் வந்தவர்போலப் பேசிக்கொண்டே போனார்!

அவர் அவ்வளவு தூரம் வருத்தப்பட்டதைப் பார்த்தபோது எனக்குக்கூட பரிதாபமாயிருந்தது சித்தி! ஏன் அப்பாவை ஸ்டேஷனுக்குப் போகச் சொன்னோம்! அவர் ஆசை பூர்த்தியாவதைத் தடுத்துவிட்டோமே! பாவம்! ரயிலை விட்டு இறங்கும் சமயத்தில் தம் திட்டம் நிறைவேற இன்னும் கொஞ்ச நேரம் தான் என்று அவர்மனது துள்ளும் அந்த அரியசமயத்தில், அப்பா போனதனால், எத்தகைய ஏமாற்றம் ஏற்பட்டிருக்கும்!..............பொத்துவிட்ட பலூன் என்று ஏன் சொல்லமாட்டார்!...... நான் மூந்திக் கொள்ளணும் அவரை, என்ற எண்ணம் ஏன் ஏற்பட்டதெனக்கு!" என்று நானே நொந்துகொண்டேன்.

அந்தச் சம்பவத்திற்கப்புறம் எனக்கும் ஆசை சித்தி! அவர் செய்ததுபோல் நாமும் செய்யணும்! அவர் கண்டுபிடிக்கிறாரா பார்க்கணும்! ஏன் சித்தி! இப்படி போட்டி போட்டு வேடிக்கை செய்தால் நன்றாயிராதா, சித்தி!" என்றேன். எப்படியோ சித்திக்கு என் மனதைத் திறந்து கூறிவிட்டேன்!

"ஓ! பேஷாகச் செய்யலாம் பார்! ஒரு நாடகமே நடத்திவிடலாம்" என்றாள் உத்ஸாகமாகச் சித்தி.

சித்தியின் யோசனை எப்படிப் போகிறதென்பதை நான் ஒருவாறு ஊகித்தறிந்து கொண்டேன், உள்ளம் பூரித்தேன். நான் போட்ட திட்டத்திற்கு மேலே, பிரமாதமான திட்டமாகப் போடுகிறாள்! சரி; போடட்டும். நல்ல உயர்ந்த தமாஷாய் இருக்கட்டும் என்று எட்டிப் பார்த்த கூச்சத்தைக் களைத்தெறிந்து, சித்தியின் யோசனைகளை ஆமோதிக்கலானேன்.

சித்தி அவ்வாறெல்லாம் என்னுடன் என் எண்ணங்களுடனும், யோசனைகளுடனும் ஒத்துழைக்க முன் வந்ததற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவது என் அதிர்ஷ்டத்தைக் குறிப்பிட வேண்டும். ஆதிமுதல் ஒருதடையின்றி அப்பா, அம்மா, அத்தை முதலானவர்களின் சம்மதத்துடன்

இவ்வளவுதூரம் பலித்துவிட்ட என் யோசனைகள், முழுக்க நிறைவேறவிருந்தபொழுது எப்படித் தடை ஏற்படக்கூடும்? மேலும் சித்தியும் என்னைப்போலவே குறும்புக்காரி. இது போன்ற வேடிக்கைகள் செய்வதில் பிரியமுடையவள். என்னைவிட 5, 6 வருடங்களே பெரியவள், என் கணவருடைய சரளமான சுபாவத்தையும் அறிந்தவள். தமாஷ் செய்தால், அவரும் சேர்ந்து சிரித்து மகிழ்வார் என்ற தைரியம் அவளுக்கும் உண்டு. எல்லாம் ஒருங்கு சேர்ந்து, ஒழுங்காய் யோசனைகள் பலிக்க உதவி புரிந்தன!

நான் சென்னை வந்து ஒருவாரமாகியும், அவர் சித்தியகத்திற்கு வரக் காணோம். "இன்று வருவார்" "இன்று வருவார்" என்று அந்த ஏழு நாட்களும், மாலைவேளைகளில் வீட்டைவிட்டு நகராமல் இருந்தேன். அவர் வராதது கண்டு, மனம் சிறிது கவன்றாலும், என் கணவரைச் சீக்கிரம் காண்பேன் என்ற எண்ணம் தீவிரமாக ஆட்சி செலுத்தி, மனதைக் கலங்காமல் நிறுத்தியது. வெகு சமீபத்திலேயே இருவரும் இருக்கிறோம் என்ற எண்ணமும் ஒரு உத்ஸாகம் ஊட்டி வந்தது. நட்சத்திர ஒளியின் உதவியால், மனந்தளராமல், இருளின் அடர்த்தியைப் பொருட்படுத்தாமல் வழி நடக்கும் பிரயாணியின் மன நிலையை ஒத்திருந்தது என் மன நிலையும். அந்த ஏழு நாட்களும் மாலை கழிந்து இரவு படர்ந்ததும் என் மனதிலும் இருள் கவியும். ஆனால் நம்பிக்கை என்னும் தீபத்தை ஏற்றிவைத்ததும், இருள் ஒருவாறு அகலும்.

அன்று மாலை வாசலில் பூக்காரனிடம் பூ வாங்கிக்கொண்டிருந்தேன். கொஞ்சம் தொலைவிலே சைகிள் மணியோசை கேட்கவே, சடாரெனத் தலை நிமிர்ந்து பார்த்தேன்.

"ஊஹூம்!......" அப்போதும் ஏமாற்றம்! உடனே ஏதோ உள்ளுணர்ச்சியினால் தூண்டப்பட்டு, என் கண்கள் அடுத்தபடியாக அந்தத் தெரு முழுவதையும் ஊடுருவிப் பார்த்தன.

"ஆ!" அது யார் தெரு முனையிலே நுழைகிறது!......அவர்தான்! ஆம்! அவரேதான்! அதோ! அந்தக் கைவீச்சு! இருப்பு! கண்ணாடி!...அவரேதான்!

ஒரு நொடியில், கையில் பையுடன் வரும் அவரை ஊன்றிக் கவனித்துவிட்டது கண். அவர் இன்றும் என்னைப் பார்த்திருக்க முடியாது!...கையில் பூச்சரத்துடன் சரேலெனச் சமையலறைப்பக்கம் ஓடிப்புகுந்து கொண்டேன்.

"அவர் வருகிறார் சித்தி! நான் கண்ணில் படவில்லை! நீயே பூக்காரனுக்குக் காசைக் கொடுத்துவிடு! அவர்பாட்டுக்குச் சிற்றப்பாவோடு மாடியில் போய்ப் பேசட்டும்! பேச்சு வாக்கிலே, சித்தப்பா ஒன்றும் சொல்லிவிடமாட்டாரே!" என்றேன் வியர்த்துக்கொட்ட. எனக்கு ஒரே படபடப்பு. தரையில் கால் பாவாததுபோல ஒரு உணர்ச்சி. முதன் முதலாக நாடக அரங்கம் ஏறும் நடிகைகூட அவ்வளவு படபடப்பு அடையமாட்டாள்!

"ஓ! மாப்பிளையா? வாருங்கள்!" என்று வரவேற்புக் கூறிய சித்தியின் குரல் வாசலிலிருந்து கேட்டது.

"இதோ வந்தேன்! மாமாயிருக்காரோல்லியோ?" ஆ! அவர் குரல்தான் அது!

"உம்! மாடியிலே இருக்கார்! நீங்கள் பட்டணத்துக்கு உத்தியோகமாய் வந்திருக்கிறீர்கள் என்று நேற்றுத்தான் கமலா கடித மூலம் தெரிந்தது! நாளாச்சு உங்களைப் பார்த்து என்று பேசிக்கொண்டிருந்தோம். நல்ல வேளை, ரொம்பநாள் காக்கவைக்காமல், இன்றே நீங்கள் வந்துவிட்டது ரொம்ப சந்தோஷம்!..........மாடியிலே இருக்கார் அவர்! அங்கேயே போய்க் காற்றாடப்பேசிக் கொண்டிருக்கிறீர்களா?" என்று கூறி, சித்தி, நாடகத்தைத் துவக்கி விட்டதையும் கவனித்தேன்!

சித்தி அவரை மாடிக்கு அனுப்பிவிட்டு, என் பக்கம் வந்து நின்றாள். மணப்பெண்ணுக்கு இன்பம் அளிக்கும் வகையிலே தைரியமூட்டும் சகியைப்போல. ஒரு குறும்புத் தனத்துடன், "பார். எல்லாம் ஜோராக நடக்கும்!" என்றாள். நான் சமையலறையை விட்டு வெளிவந்தேன். மாடியிலே அவர்கள் பேசுவதை உன்னிப்பாகக் கேட்கலானேன். சித்தியின் யோசனைப்படி சகலமும் நடக்க இன்னும் ஒரே ஒரு தடையிருந்தது. ஒரு அகன்ற நீரோட்டத்தின் வேகத்தை, நீர் மட்டத்தின் மேல் இருக்கும் ஒரு சிறுகோல் தடை செய்கிறது, அந்தக் கோலை அகற்றினால், மளமளவென்று போகிறது தண்ணீர்......ஆம். அதுபோலத்தான் எங்கள் திட்டங்கள் தங்கு தடையின்றி நடக்க ஒரு சிறு தடையிருந்தது அப்போது.

"மாப்பிள்ளை! இன்றிரவு இங்கேயேதான் சாப்பிடணும், தூங்கணும். நாளைக்கு ரகுவுக்கு ஆயுஷ்ஹோமம். நாளைக்கும் சாப்பிட்டு விட்டு, ஆபீஸ் போகலாம்! தடை சொல்லக்கூடாது! தெரிந்ததா? ... இதற்கு முன் நான்கைந்து தடவை வந்தும், நீங்கள்

ஒரு வேளைகூட சாப்பிடவில்லை. அதற்கு ஈடாக இன்று தங்கிவிட்டு, காலையிலும் விருந்து சாப்பிட்டுவிட்டுத்தான் போகணும்!'' என்று கொஞ்ச நேரத்திற்கெல்லாம் சிற்றப்பா தொடர்ந்தார், நாடகத்தைத் துவக்கினார் தம் பாகத்தை!

ஆ! அதோ! ''சரி மாமா!'' என்று கூறிவிட்டார். 'அவர்'! பிடியிலிருந்து விடுபட்ட புறாப்போல பறந்துசென்றேன் சித்தியிடம்.

''அவர் ஒப்புக்கொண்டு விட்டார் சித்தி!'' என்றேன், என்னெஞ்சில் கையைவைத்த வண்ணம்! சித்தியின் கண்களில் புலனான எக்களிப்பு எனக்குக் கூச்சம் தோன்றக் காரணமாயிற்று. என்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டுவர, அப்பால் நகர்ந்தேன். சிறிது பொறுத்துத் திரும்பிவந்தேன்.

''சித்தி! அவருக்கு மைசூர் ரசமும், டொமொடோ வெங்காய கொச்சும் ரொம்ப பிடிக்கும்! பண்ணலாமா? நான் பண்ணட்டுமா?'' என்று கூறியவாறே, சித்தியின் பதிலுக்குக் காத்திராமல் அவற்றைத் தயார் செய்யலானேன். சித்தி தடைகூறாள் என்பது எனக்குத் தெரியாதா?

நான் அந்த இரண்டு உண்டிகளையும் பக்குவம் செய்யும் விதம்தான் அவருக்கு ரொம்ப பிடிக்கும். அந்த இரண்டு உணவுகளினாலும் என் நினைவு வரட்டும், என்னைப் பற்றி யோசனைகளும் உணர்ச்சிகளும் பெருகட்டும் அவர் உள்ளத்திலே என்றே அவ்வாறு செய்தேன்.

சாப்பாட்டின் பொழுது சித்தி எல்லோருக்கும் பரிமாறினாள். நான் உவகையுடன், சமையலறையிலிருந்தவாறே அவருடைய குரலினிமையைப் பருகிக் கொண்டிருந்தேன். இன்பத் தேனென்னப் பாய்ந்து வந்த அவருடைய பல மொழிகளுக்குப் பின், அந்தத் தேனினும் உயர்ந்த அமிழ்தும் என் செவிகளில் பாய்ந்தது.

''இந்த ரசமும் பச்சடியும் கமலிசெய்வது போல வேறுயாரும் செய்து நான் இதுவரை பார்த்ததில்லை! மாமி இன்று அப்படியே செய்திருக்கிறாள்!'' என்றார் அவர்.

அப்படி அவர் கூறி முடித்ததுதான் தாமதம், சித்தியின் குறும்புப் பார்வை என் பக்கம் திரும்பியது. அடுத்தாற்போலச் சாப்பிட அமர்ந்திருந்தவர் பக்கம் சென்றது, சித்தப்பாவைப் பார்த்துத்தான் போலும். ஒரு பொருள் செறிந்த பார்வை பார்த்தாள்!

என்னைப் பற்றி அவர் வாயிலிருந்து வந்த புகழ்மொழிகள் என் பொறுமையைச் சோதித்தன! அவரைக் காண, கண்களாரக் காணத் துடித்தேன். அந்த நாளிலே இலங்கைச் சிறையில் அடைந்து கிடந்த சீதை, ராமனைப் பார்க்க எப்படித்தான் துடித்திருப்பாளோ?............நல்ல வேளை, சீதைக்கிருந்த பொறுமையில் ஒரு மயிரிழை எனக்கும் இருந்தது.

''சே, என்ன வெட்கக்கேடு! எவ்வளவோ சலுகையோடு நாமும் சித்தியிடம் எல்லாம் சொல்ல, சித்தியும் சிரத்தையுடனும் நம் ஏற்பாட்டுக்கு மேல் பெரிய ஏற்பாடு செய்திருக்க, கலைப்பதா நாம்? 'ஆக்கப் பொறுத்து ஆறப் பொறுக்கவில்லையே!' என்று சித்தப்பா சிரித்தால்?......'' ஆவலை அடக்கினேன். மேலும் அது எழாமல்'' நல்ல வேளை, சாப்பாடு முடிந்து அவர்களும் மாடிக்குப் போய்விட்டார்கள்.

கீழே நானும் சித்தியும் காரியங்களை முடித்துக் கொண்டோம்.

''உம், சீக்கிரம்! டாய்லெட் செய்து கொள்!'' என்றாள் சித்தி! அசாத்தியக் குறும்புக்காரி யாச்சே அவள்!

''போ, சித்தி! நீயே இப்படிக் கேலி பண்ணினால்!'' என்றேன். சூழ்ந்துகொண்டிருந்த கூச்சத்துடன், அவ்விடம் விட்டுப் பெயர்ந்தேன்.

''படுக்கப் போகலாமா?'' என்று மாடியிலே சிற்றப்பா அவரிடம் சொல்லிக் கொண்டிருந்தது காதிலே விழுந்தது, சிறிது பொறுத்து!

''அறைக்குள்ளே புழுங்குமோ என்னவோ! மாடி வராந்தா நன்றாயிருக்கே! காற்றோட்டமாய் இங்கே படுக்கக்கூடாதா?'' அவர் கேள்வி!

''வேண்டாம் மாப்பிள்ளை! இந்த அறைதான் சுகப்! இன்று தூங்கிப்பாருங்கள், பேஷாக இருக்கும்! நானும் இங்கேயே, உங்கள் பக்கத்தில் படுத்துக்கொள்கிறேன், அதுதான் இங்கேயே போடச் சொன்னேன் இரண்டுபேருக்கும்! என் இடம் எப்போதும் இங்கேதான்!''

(அடுத்த இதழில் முடியும்)

# புத்தக விமர்சனம்

## யோக ஸமுச்சயம்

ஸ்ரீ அரவிந்தர் அருளியது. தமிழாக்கியவர் கே. எஸ். வேங்கடராமன். ஸ்ரீ அரவிந்த லைப்ரரி பிரசுரம், எஸ்பிளனேட் ஜார்ஜ் டவுன் சென்னை. விலை ரூ. 2 0 0

யோகி அரவிந்தர் யோக நெறி மேற்கொண்டு தாம் பயின்று கண்ட அனுபூதி மார்க்கங்களை யெல்லாம் மற்றவர்களும் அறிந்துய்யும் வண்ணம் 'ஆர்ய' என்னும் பத்திரிகையில் ஆங்கில மொழியில் பல கட்டுரைகளில் வரைந்தனர். அவைகளைத் தமிழ்ப்படுத்தி நமக்கு இப்பொழுது இப்புத்தக வடிவில் அளிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ அரவிந்தரின் பூரண யோக நெறி பண்டை வேதாந்த வழியில் வந்தது. வாழ்க்கையே வேள்வி. நம் இயக்கங்களில் கடவுள் ஒற்றிப்பை உணர்ந்து, கடவுள் உணர்வின் ஒளி நம்முன் உண்டாகியவுடன் நமது இயற்கையைக் கடவுள் இயற்கைபோல் அறிவு அன்பு இயக்கங்களில் ஆக்கிக்கொண்டுவிட்டால் நாம் அனைவரும் இறைவனின் நடமாடும் கோவில்களாவோம்.

## முத்தி நிச்சயப் பேருரை

தருமபுர ஆதீன வெளியீடு.

ஸ்ரீலஸ்ரீ ஆதி குருஞான ஸம்பந்த பரமாசாரிய சுவாமிகளால் தமிழில் 22 வெண்பாக்களில் முத்தி நிச்சயம் என்னும் உயர்ந்த நூல் இயற்றப்பெற்றது. அதற்கு ஸ்ரீமத் வெள்ளியம்பலவாணத் தம்பிரான் பெரியதொரு விரிவுரை இயற்றினர். இருமொழி வன்மையும், சாஸ்திர தோத்திர அனுபூதி ஞானம் வாய்ந்தவரும், ஞான சம்பந்தருக்கு ஞான புத்திரருமான இவர்கள் அருளிய உரை, உரை செய்யும் முறைக்கு ஓர் மேல்வரிச் சட்டமாகும். ஆராய்ச்சித் திறனுடன், அழகிய முறையில் கற்போருக்குக் களஞ்சியமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கும் இந்நூல் தருமபுர ஆதீனத்தாரின் சமயத் தொண்டுக்கும் தமிழ்த் தொண்டுக்கும் சிறந்த விளக்கு.

## வரப்பெற்றோம்

தருமபுர ஆதீனத்தாரால் சந்நிதான மாத ஜன்ம நக்ஷத்திரத் திருநாட்களில் சிவஸ்தலங்களில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, தலப் பதிகங்களை ஏனையோர் அறியும்வண்ணம் பதிப்பித்து விலையின்றி வழங்குவது வழக்கம். அவ்வாறான திருத் தருமபுரத் திருப்பதிகம், திரு எதிர்கொள்பாடித் திருப்பதிகம், திரு மயிலாப்பூர்த் திருப்பதிகம், திருஒற்றியூர்த் திருப்பதிகங்கள், திருக்கருப்பறியலூர்த் திருப்பதிகங்கள் என்ற வெளியீட்டுக்களையும், ஆலய வழிபாடு என்னும் மக்கள் கோவிலில் நடந்துகொள்ளவேண்டிய முறையை விளக்கும் சிறு நூலையும் வரப்பெற்றோம்.

## திராவிடஸ்தான்

S. முத்தையா முதலியார் பிரசங்கம்.

திருச்சி திராவிடமணிப் பதிப்பக வெளியீடு விலை ரூ. 0—10—0

வடநாட்டு வர்த்தகர்கள் தென் நாட்டைச் சுரண்டி வருகிறார்கள். அதை ஒழிக்க வழி திராவிடநாடு தனிச் சுதந்திர நாடாகி, காங்கிரஸின் ஆதிக்யத்தினின்றும் விடுதலை அடைவதே என்று இப்பிரசுரத்தில் வாதிக்கப்படுகிறது. அப்படித் தனியாகப் போகும் நாடு பொருளாதார நிலையில் தனித்து நிற்கச் சக்தி வாய்ந்தது என்றும் பாதுகாப்பு விஷயங்களிலும் தனித்திலங்கக் கூடியதே என்றும், பாகிஸ்தான் பிரிவினையை எதிர்த்துப் பயன்படாததுபோல் திராவிடஸ்தானை எதிர்ப்பதும் பயனற்ற பிரயாஸை என்றும் விவரிக்கப்பட்டிருக்கிறது. திராவிடநாடு என்பது தமிழ் நாடு மட்டுமல்ல. தற்போதைய சென்னை ராஜதானி முழுவதும்தான் என்று நிச்சயமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் இருக்கும் மாகாண சுயாட்சியையே திராவிட ஆட்சியாக்கிக் கொள்ளலாமே. ஏன் இக் கிளர்ச்சி?

## மீண்ட இந்தியா

N. R. பத்மநாபன் எழுதியது.

புதுக்கோட்டை இராமச்சந்திரபுரம் கார்த்திகேயினி பிரசுரம் விலை ரூ 0—14—0

புத்தகம் உள்ளும் புறமும் கவர்ச்சிகரமாக அமைந்திருக்கிறது. இழந்த சுதந்திரத்தை இந்தியா பெற்றுவிட்டது, எனினும் அத்துடன் வேலை முடிந்துவிடவில்லை என்றும் சுதந்திரர்களாக மக்கள் வாழ நாம் செய்யவேண்டியவை என்ன என்ன என்பதை ஆசிரியர் விளக்குகிறார். பழங்கணக்கு முடித்து ஐந்தொகையைப் பார்த்து, புதுக்கணக்குப் பேரேடு போட்டுக்கொள்ளத் தூண்டுகிறார் ஆசிரியர்.

## வீர விளக்கு வ. வே. சு. ஐயர்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் இயற்றியது. திருச்சி ஜில்லா இராமச்சந்திரபுரம் அன்பு நிலையப் பிரசுரம் விலை 4—0—0

ஐயரிடம் மோகம் கொண்டவர் யோகியார். அவர் வரலாற்றையும் தொண்டையும் நாம் கண்டபின் இப்புத்தக வாயிலாக நாமும் அவ்வாறே மோகம் கொள்கிறோம். காரணம்—புரட்சி வீரர், கலைக்

களஞ்சியம், புதிய வாழ்வின், புதிய சகாப்தத்தின் முன் ஒளி ஐயர், அவரது தமிழ்த் தொண்டும் நாட்டுத் தொண்டும் ஒருவாறு இந்நூலில் விளக்கப்பட்டிருப்பினும் இன்னும் அவரைப்பற்றிய விவரங்கள் வெளிவராமல் இருப்பவை பல. விரைவில் யோகியாரே வெளியிடுவார் என்று எதிர்பார்ப்போம்.

### பூச்சூட்டல்.

ஆசிரியர். வித்வான் விசு. திருநாவுக்கரசு,

திருச்சி பாலக்கரை ஸ்டார் பிரசுரம் விலை ரூ. 2—0—0.

புலமையும் இனிமையும் கொண்ட 18 இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பு இது. இரு கண்ணகிகள் என்னும் கட்டுரையும் 'பத்துப் பாட்டில் வரும் பழந்தமிழர்' என்னும் கட்டுரையும் படிக்கவேண்டியவை. புலவர் கொஞ்சம் என்னும் சொல்லைக் கொஞ்டசம் என்று பிரிப்பது மட்டில் நமக்குப் புரியவில்லை.

### அனுபவ ரேகை சாஸ்திரம்.

ஆசிரியர், சா. மு. நா. சுவாமி.

ஆர். எஸ். புரம். கோயமுத்தூர். விலை ரூ 2—0—0.

கற்பவர்களுக்குப் பயன் தரக்கூடிய புத்தகம். 12 படங்கள் விவரமாக விளக்கிக் காட்டுகின்றன. "நிகழ்ச்சிகள் நடக்கப் போவதை அவ்வப்பொழுது சில குறிகள் தோன்றி நமக்கு அறிவிக்கின்றன. ஆதலால் அவ்வப்பொழுது தான் அந்நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ள முடியும்" என்கிறார் ஆசிரியர். அதனால் வாசகர்களுக்கு ஊக்கம் குறையுமோ? கலை என்று பயிலவேண்டும்.

### கீதத்தமிழ்.

ஆசிரியர், கே. எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்,

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை. விலை ரூ 3—0—0.

பக்திப் பாடல்கள் இவை. படிக்கவும் பாடவும் அழகியவைகள். பொருள் எளிதில் விளங்குமாறு இயைக்கப் பெற்றவை. ஆசிரியர் விரைவில் சுவரப்படுத்திப் பதிப்பாராயின் இவைகள் கச்சேரிகளுக்கு மிகவும் உபயோகப்படும். அரும் பதங்களுக்கு உரையும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

### அரசியல் நிர்ணயசபை.

தி. ஜ. ர. மொழி பெயர்ப்பு,

கலைமகள் காரியாலயப் பிரசுரம். விலை ரூ. 2—0—0.

பண்டித ஜவாஹர்லால் நேரு அவ்வப்போழுது எழுதிய, தேசிய இந்தியாவின் எதிர்கால அமைப்பைப்பற்றிய கருத்துக்களைத் தமிழில் அழகாக இப்புத்தகத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் மந்திரிகளின் தூது கோஷ்டித் திட்டமும் இந்திய சுதந்திர குடியரசுத் தீர்மானமும் மொழி பெயர்த்து அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

### பெண்.

'அகிலன்' எழுதியது,

கலைமகள் காரியாலயப்பிரசுரம். விலை ரூ. 1--8--0.

கலைமகள் 1946ல் பொறுக்கி எடுத்துப் பரிசு கொடுத்த நாவல். நமது பண்பாட்டை ஒட்டிய புதுமைப் பெண்ணைச் சித்திரித்திருக்கிறார் ஆசிரியர். கதைப்போக்கும் சுவாரஸ்யமாகவே இருக்கிறது.

### தெய்வத்திற்கு மேல்.

கி. சரஸ்வதி அம்மாள் எழுதியது.

கலைமகள் காரியாலயப்பிரசுரம். விலை ரூ. 2—8—0.

6 அழகிய சிறுகதைகளும் (ஏற்கனவே பத்திரிகைகளில் வெளிவந்தவை தாம்) டி, கே. சி. எழுதிய ஒரு சிறப்புரையும் சேர்ந்த இப் புத்தகம் படிக்கப்படிக்கத் தெவிட்டாத இனிமை வாய்ந்தது,

### ஜீவாவின் சிறுகதைகள்.

ஆசிரியர், நாரண-துரைக்கண்ணன்.

ஸ்டார் பிரசுரம், பாலக்கரை, திருச்சி. விலை ரூ. 3—0—0.

இப் புத்தகத்தில் 18 சிறு கதைகள் இருக்கின்றன. கற்பனை தாம் எனினும் பத்திரிகை ஆசிரியராயிருக்கும் ஒருவரது கற்பனையானபடியினால் ஜீவகளைக்கும் துடிப்புக்கும் குறைவில்லை. வேஷதாரிகளை வெளிப்படுத்துவதில் ஆசிரியருக்கு ஆவல் அதிகம்.

### விஷ கன்னிகை.

'அகிலன்' எழுதியது.

கலைப்பிரசுரம், புதுக்கோட்டை. விலை ரூ. 1—0—0.

ஒதுக்கப்பட்ட ஸ்திரீக்கு இழைக்கப்பட்ட கொடுமையை அடிப்படையாகக் கொண்டு அன்பும் அஸூயையும் எவ்வளவு தூரம் வரையில் செல்லும் என்பதைக் கதாசிரியர் இதில் காட்டியிருக்கிறார். ஏதோ ஒரு ஆங்கிலக்கதையின் மொழி பெயர்ப்பு இது என்று ஆசிரியர் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். ஆங்கில ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை.

### அமுத கீதம்.

சாம் ராஜ் எழுதியது.

தியாகராயநகர் தமிழ்ப்பண்ணை வெளியீடு. விலை ரூ. 1—6—0.

நாமக்கல் கவிஞரது முன்னுரையுடன் 'வெள்ளி மணி' ஆசிரியர் 'சாவி'க்கு ஸமர்ப்பணம் செய்யப்பட்டிருக்கும் இப் புத்தகத்தில் அடங்கிய 9 சிறு கதைகள் ஆசிரியரது சமூக சீர்திருத்தக் கொள்கைக்குச் சான்றாக விளங்குகின்றன.



# துறவி யார்?

ஆர்.எஸ்

அறையில் அமைதி நிலை கொண்டது.

உள்ளே நுழைந்த ரமானந்தன் அசையாமல் நின்றுகொண்டிருந்தான். கொந்தளித்துக் கொதித்த உள்ளத்தை அடக்கி, "உனக்கு என்ன வேண்டும்" என்றார் பரமானந்தர்.

"ஸ்வாமி! இன்று மாலை முதல் உள்ளம் அமைதியின்றித் தவிக்கிறது. உங்களிடம் சற்றுப் பேச விரும்புகின்றேன். நந்தவனத்துக்குச் சற்றுவர உங்களால் இயலுமா?"

பரமானந்தரின் மனம் புயலில் அலை எறியும் கடலைப்போல இருந்தது. "இதோ வருகிறேன் அப்பா" என்று கிளம்பினார் அவர்.

விண்ணை இடிக்கும் வெள்ளிப் பனிமலையின் சரிவிலே பனியும், பசுஞ் சோலையும் திரண்டு எழிற்கோலம் பூண்டு நிற்கும் இடத்தில் ஒரு மடம் அமைந்திருந்தது. தேன்மணஞ் சுமந்த தென்றல் அச் சோலைப் புறத்தில் யாவரையும் இழுத்தது. இறைவனே உயிராய், இன்பமே வளமாய் இலங்கி, பாட்டும் பணியும் பூண்டு, மாதவனை மனக்கோயிலில் இருத்தி, வாய் மொழியால் வழிபாடு செய்யும் அடிகள் அந்த மடத்தை வாடாத் தெய்வ மணத்தால் நிரப்பி நின்றனர்.

ஒரு புறத்தே அமைந்த சோலையுள் இருவரும் புகுந்தனர்.

"ஸ்வாமி! இன்னதென்று விவரிக்க இயலாத உணர்ச்சி என் உள்ளத்தை உந்துகிறது. மனத்தை வேதனை அரிக்கிறது. இதைத் தங்களால் தவிர்க்க முடியாதா? இன்று மாலை நடந்த நிகழ்ச்சி தங்களுக்கு நினைவு இருக்கிறதா?"

பரமானந்தருக்குத் தூக்கிவாரிப்போட்டது. பள்ளத்தைத் தடுத்து அதில் விழுந்து விடாமல் இருக்க நினைத்தவன் அதனுள்ளேயே இழுத்துத் தள்ளப்பட்டால் எவ்விதம் நினைப்பானோ அந்த நிலையை அவர் அடைந்திருந்தார். எந்த நிகழ்ச்சி அவருடைய உள்ளத்தை உறுத்தியதோ அதே நிகழ்ச்சி அவருடைய சிஷ்யனையும் துன்புறுத்துவதை உணர்ந்தார். இது அவர் எதிர்பார்த்தது தான்; ஆனால் நேரில் கேட்டபோது நெஞ்சு திடுக்குற்றது. எதிர்பார்த்த அம்பு நெஞ்சில் தைத்துவிட்டது.

* * *

அந்த நகரம் அன்று அளவிறந்த மகிழ்ச்சியில் ஆழ்ந்து கிடந்தது. அறிவுக் குன்றாய், ஆத்ம ஜோதியில் அமிழ்ந்த மகான் பரமானந்தர் வரப்போவதாக யாவரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

வீதிகள் யாவும் தோரணங்களால் நிரம்பி யிருந்தன. ஒரு பெரிய அரசனுக்குரிய ஆடம்பரங்களுடன், பெரும் முரசு முழக்கங்களுடன் அவர் வருவாரென்று எல்லோரும் எண்ணிக்கொண்டிருந்தார் கள். ஆனால் எதிர்பாராத அதிசயம் நிகழ்ந்தது.

ஒரு கையில் மடத்துக்கு உரிய கொடி யும், ஒரு கையில் கமண்டலமும் ஏந்தி, பரமானந்தர் நடந்துவந்தார். அறிவுப் புலத்தில் விளைந்த ஆத்ம ஜோதி அவர் முகத்தில் ஒளி வீசிக்கொண்டிருந்தது. அவரைப் பின் தொடர்ந்து அவருடைய சிஷ்யர்கள் அனைவரும் வந்தார்கள். அடிகள் அனைவரும் சென்ற காட்சியைக் கண்டு எல்லோரும் மெய் மறந்து போனார்கள். அவர்கள் எளிமையைக் கண்டு மனம் உருகிப் போனார்கள்.

ஒவ்வொருவராக வந்து அவரை அடி வணங்கிப் போனார்கள். காணிக்கை களைப் பாத கமலங்களில் சமர்ப்பித்து விட்டுப் போனார்கள். நகர் முழுதும் வாழ்த்துக்கூறி, மக்கள் இறைத்த மலர் களைப் பெற்றுக்கொண்டு, நகர் எல்லையை அவர் அடைந்தபோதுதான் அது நிகழ்ந்தது.

ஊர் ஓசையினின்றும் ஒதுங்கி நின்றது, ஓர் குடிசை. அசுத்தமும், அநாகரிகமும் அங்கேகுடிகொண்டிருந்தன. அதிலிருந்து ஒரு தாயும் மகளும் வெளிப்பட்டனர். தீராத வியாதியும் துயரும் கிழவியை நடைப்பிணமாக்கிவிட்டிருந்தன. அவ ளுடைய மகள் அவளைத்தாங்கிக்கொண்டு வந்தாள்.

"தூ! தரித்திரம்! உன்னை எல்லாம் யார் இங்கே வரச்சொன்னது? ஓடிப் போகிறாயா, இல்லையா?" என்று மக்கள் அவளை விரட்டினார்கள். எல்லோரை யும் மதிக்காமல் யாவரையும் விலக்கிக் கொண்டு ஓடிவந்து அவர் காலடிகளில் விழுந்தாள் அவள்.

"அம்மா! உலகத் துயர் தவிர்க்க உள்ளத்தைச் சுத்தப் படுத்திக்கொள். உலகப்பற்றைத் தவிர்த்து அறிவை உள் முகமாய்த் திருப்பு" என்று பரமானந்தர் அன்பு மொழிகள் கூறினர்.

அவள் தலைநிமிர்ந்து பார்த்தாள். ஏக்கமும் ஏமாற்றமும் அவள் கண்களில் தேங்கி நின்றன. அடுத்தபடியாக, அவள் பார்வை பரமானந்தருக்குப் பின் நின்ற ரமானந்தனின் மேல் விழுந்தது. அவள் திடுக்கிட்டாள். "அந்த விழிகள்! அந்தப் பார்வை! அந்தச் சாயல்! அதை எங்கே பார்த்திருக்கிறோம்?" அவள் மனக் கொந்தளிப்பு அவள் முகத்தில் சிந்தனை ரேகைகளாகப் படர்ந்து மறைந் தது. அவள் தலை சுற்றியது. மறு கணம் அவள் மூர்ச்சையாகி விழுந்தாள்.

பரமானந்தரின் முகமும் துன்பத்தால் வேறுபட்டது. ஆனால் சிறிது நேரத்தில் மனதை அடக்கி முன்னால் நடந்தார்.

## 2

அந்த நிகழ்ச்சிதான் அந்த இரு உள் ளங்களையும் துயர்க்கடலில் தத்தளிக்கச் செய்தது. மனத்தை அடக்கி நிறுவ வேண்டிய அவர்கள், அளவில்லாத துன் பத்தால் சஞ்சலமடைந்தார்கள். வெளி யே குளிர் காற்று வீசிக்கொண்டிருந்தது; ஆனால் இரு உள்ளங்கள் வேதனையால் வெந்துகொண்டிருந்தன.

பரமானந்தர்தான் முதலில் பேசினர். "ரமானந்தா! இவ்வளவு நாட்களாக உனக்கு ஒளித்து வைத்த ஒருவிஷ யத்தை இன்று நான் கூறிவிடுகிறேன். சதைக்குள் புதைந்து கிடக்கும் வரை யில்தான் முள் நம்மை உறுத்துகிறது. முள்ளை வெளிப்படுத்தத் தீர்மானித்து விட்டேன். ஆனால் நீ அதைக் கண்டு திடுக்கிடாதே."

நிலவு எரித்தது. விண் மீன்கள் ஒளி பரப்பின. செடிகள் மீதும் புல்மேலும் பனித்துளிகள் படிந்தன. நான்கு கண் இமைகளினின்று நீர்த்துளிகள் உருண்டு ஓடச்சித்தமாயிருந்தன. 'என்ன நடக்கப் போகிறதோ' என்ற கவலையே ரமா னந்தன் உள்ளத்தில் மேலிட்டு மீக்கூர்ந்து நின்றது.

• * •

"சுமார் இருபது வருஷங்களுக்கு முன் நான் அந்த நகரத்தின் ஒதுப்புறத்தில் நம் முடைய அடிகள் கூட்டத்துடன் தங்கி

யிருந்தேன். மனச் சாந்தியைப் பெருக்குவதற்கேற்ற சாதனங்களாக நீலமலைகளும், வெண்சிகரங்களும் தெள்ளியசுனைகளும் நெருங்கிப் படர்ந்த கொடிகளினின்றும் தொங்கிய கனிகளும் அங்கு நிறைந்திருந்ததால் சற்று அளவுக்கு மிஞ்சியே அங்கே தங்கிவிட்டோம்.

கடைசியாக ஒருநாள் புறப்பட நினைத்தோம். மறு நாள் நாங்கள் செல்லப் போவதால் மடத்தில் கூட்டம் அளவின்றி நிறைந்திருந்தது. ஆயிரக் கணக்கானவர்கள் மடத்தில் எல்லா இடங்களிலும் நிறைந்து அமர்ந்து, சித்தாந்த வினாக்களுக்கு விடை கூறி, நான் செய்த நீண்ட பிரசங்கங்களைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

மாலையிலேயே குமுறிக்கொண்டிருந்த வானத்தில் மழை மேகங்கள் மேலும் நெருங்கிவிட்டதால் கூட்டத்தைச் சீக்கிரத்திலேயே கலையச்செய்துவிட்டேன். சுமார் அரைமணி நேரம் மடம் அமர்க்களப்பட்டது. நடந்தது இன்னதென்று யாருக்கும் புரியவில்லை. மழைபொழிந்து ஆரவாரித்தது. புயல் சீறி அடித்தது. காற்றடித்ததிலே, கணக்கற்ற மரங்கள் நாற்றைப்போல் சிதறி விழுந்தன. இரவு முழுதும் காற்றும் மழையும் அளவின்றி அடித்தன. சுமார் ஒருமணிக்கு என் சிஷ்யன் ஒருவன் என்னை எழுப்பினான்.

கண் விழித்தேன். அவன் கையில் ஒரு சிறுவன் இருந்தான். அவன் பால் வடியும் முகம் என்னைப் பரிந்து இழுத்தது. அவனை யார் அங்கே விட்டு விட்டுச் சென்றார்கள்?

மழையில் நனைந்திருந்தான் அவன். அவன் உடலைத் துடைத்துத் துணியைப் போர்த்தி விட்டேன். இரவு முழுதும் அவன் பக்கத்தில் அமர்ந்து அவனையே கவனித்துக்கொண்டிருந்தேன். இரவு நல்ல சுரம் அடித்தது. மூலிகைகள் சில வற்றைக் கஷாயம் வைத்து, அவனைக் குடிக்கச்செய்தேன். விடியற்காலையில் அவன் சுரம் தணிந்தது.

**“இரவி நின்றதுகாண்—விண்ணிலே**
**இன்ப வொளித்திரளாய்**
**பரவி யெங் கணுமே—கதிர்கள்**
**பாடிக் களித்தனவே”**

என்ற கோஷம் எழுந்தது. மூட்டைகளை யெல்லாம் கட்டியாகிவிட்டது. எல்லோரும் புறப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

நான் முயன்றிருந்தால் அந்தச் சிறுவனை நகருக்கு எடுத்துச் சென்று நியாயஸ்தலத்தில் ஒப்படைத்துவிட்டு வரச் சொல்லி இருக்கலாம். ஆனால் நான் ஏன் அப்படிச் செய்யவில்லை. ஆம், அதற்குக் காரணம் இருந்தது.

அந்த உடல் நிலையில் அவனை நிராதரவாகவிட்டுச் செல்ல நான் விரும்பவில்லை. மேலும் என்னைப்பிடித்து உந்தியது வேறொரு ஆவல்.

அந்தச் சிறுவனுடைய முகத்தில் கலைமகளின் அருள் பூரணமாக ஒளி வீசியது. நான் கற்றவை அனைத்தையும் வேறொருவனுக்கு உபதேசம் செய்துவிடலாம் என்று தீர்மானித்தால் அது இவன்தான் என்று என் மனம் கூறியது. சரியான முறையில் இவனை வளர்த்தால் மிகச் சிறந்த தத்துவஞானியாக இவன் ஆகக் கூடும் என்று என் உள்ளுணர்வு கூறியது. அவ்வளவு நாட்களாக, ‘என் தலை சாய்ந்தால் எனக்குப் பின் இந்த மடத்தின் பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் தகுதியானவன் ஒருவனும் இல்லையே’ என்ற ஏக்கம் எனக்கு இருந்தது. அதைத் தீர்க்க அவனைச் சுவீகரித்துக்கொண்டேன். அவன் பெயர் ரமணன் என்று கூறினான். அவன் பெயரை மாற்றி அடிகள் கூட்டத்தோடு அழைத்துக் கொண்டு போய்விட்டேன்.

என் மனச் சாட்சி என் முடிவை மறுத்தது. தாயன்பைச் சிறு வயதில் இப் பிள்ளைக்கு மறுத்துவிட்டோமோ என்று எண்ணினேன்.

“வீடிருக்க, நல்ல விருந்திருக்க, காடுகளில் அவனை அலைக்கழிக்கிறாயே? மின் தவழும் மேனி மெலிந்துலரும் வண்ணம் வன்தவத்தைக் காட்டில் வளர்க்க நினைத்தாயோ?” என்று மனம் வாதித்தது.

ஆயினும் மனத்தை அடக்கினேன். “எல்லாம் அவன் அருள்” என்று கூறி என்னையே சமாதானப் படுத்திக்கொண்டேன். ஆசை தீர அவனுக்கு நானறிந்த

கலைகளனைத்தையும் கற்றுக் கொடுத்தேன். ஒவ்வொரு நாளும் அவன் வளர்ச்சியைக்கண்டு என் உள்ளத்தில் இன்பம் ஊறியது. இன்னதென்று கூற இயலாத பரிவு அவனிடம் எனக்கு ஏற்பட்டது. துறவிகளுக்கு இந்தப் பலவீனம் இருக்கக் கூடாது. ஆனால் நீரில் எவ்வளவு ஆழத்தில் அமுக்கி விட்டாலும் மரக்கட்டை மேலே வரத்தானே செய்கிறது!

ரமானந்தா! நீதான் அந்தச் சிறுவன். இந்தச் சரித்திரத்துக்கும் இன்று மாலை நடந்ததற்கும் என்ன சம்பந்தம் என்று நீ கேட்கலாம். ஒரு சிஷ்யன் மூலமாக நான் ஒரு விவரம் அறிந்துகொண்டேன். அவன்தான் உன்னை முதலில் கண்டெடுத்தவன்.

இன்று மாலை நீ ஒரு கிழவியைச் சந்தித்தாயல்லவா? அவள்தான் உன் தாய். ஒரு சிறுமி இருந்தாளல்லவா அவள்தான் உன் தங்கை. இதுதான் நான் அறிந்தது........." அவர் நாத்தழுதழுத்தது. என்ன காரணத்தினாலோ அவர் கண்களிலும் நீர் பெருகி வடிந்தது.

ரமானந்தன் "ஓ" என்று அலறினான். கரிய மலையின் சாரலில் அது பயங்கரமாக எதிரொலித்தது.

ஒரு சிஷ்யன் வந்து. "ஸ்வாமி! ரமானந்தனை யாரோ ஒரு சிறுமி தேடிவந்திருக்கிறாள். அவள் யாரென்று தெரியவில்லை" என்று கூறினான்.

"சற்றுப் பொறுத்திருக்கச் சொல்லு," என்று கூறிவிட்டு, பரமானந்தர், "ரமானந்தா! இப்போதுதான் உன் துறவறத்துக்கு உண்மையான சோதனை வந்திருக்கிறது அப்பா!" என்று கூறினார்.

* * *

## 3

இருவரும் ஒரு அறைக்குள் சென்றார்கள். அமைதி நிலவிய முகத்துடன் பரமானந்தர் கூறினார். "குழந்தாய், ரமானந்தா! நான் கூறுவதைக் கேள். சிறு வயதிலிருந்து இதுவரை உன்னை ஞானத்தில் ஊறி வளரும்படி செய்தேன். தத்துவங்களைத் தண்ணீர்போல் எளிதாக்கினேன். உலகப்பற்று அற்றுப்போன வனாக இருந்தும் உன்னுடைய உயர்வை முக்கியமாகக் கருதினேன். இதெல்லாம் எதற்காகத் தெரியுமா? எதற்காக நான் இரவும் பகலும் கண்ணும் கருத்துமாய் உருகி உருகி உன்னை வளர்த்தேனென்று உனக்குத் தெரியுமா?

இவ்வளவு பெரிய மடத்தை இப்போது நான் ஒருவன் நிர்வகித்து வருகிறேன். எனக்குப் பின் ஒருவன் இதை ஒழுங்காக நிர்வகிக்கவேண்டாமா? அத்தகைய ஒருவனைத் தெரிந்தெடுத்து அவனிடம் என் சுமையை இறக்கிவிட்டுச் செல்லவேண்டியது என் பொறுப்பல்லவா? சிறு வயதிலிருந்து வளர்த்து உன்னை ஒரு தத்துவ ஞானியாகச் செய்துவிட்ட எனக்கு இந்த ஒருகைம்மாறு நீ செய்வாயா?

இயற்கையை எதிர்த்துப் போராடி விட்டேன். அது எப்பொழுது என்னை ஆழ்த்திவிடலாம் என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறது; இப்போது உன்னைச் சோதிக்கிறது. தாயின் அன்புக்கும் கடமைக்கும் நடுவில் உன்னை இழுத்து நிறுத்தியிருக்கிறது. இரண்டு காந்தங்களுக்கு நடுவே சிதறிய இரும்புத் துகளைப்போல் நீ நிற்கிறாய்.

உன் தங்கை உன்னை அழைக்க வந்து விட்டாள். விதி சதி செய்யத் தீர்மானித்துவிட்டது. என் ஆசையில், ஒரே நம்பிக்கையில் மண்மாரி பொழிய விதி சூழ்ந்து கொண்டுவிட்டது. இப்போது எனக்கு ஒரு வாக்குக் கொடுப்பாயா? உன் குரு என்ற முறைமையில் எனக்கு ஒரு வாக்கு, அல்ல, ஒரு வரம் கொடுப்பாயா? மடத்தின் பெருமையைக் காக்க மன்றாடி நிற்கும் என் பெருமையைக் காப்பாற்றுவாயா?"

பரமானந்தர் கீழே குனிந்து ரமானந்தனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். உணர்ச்சி பெருகியது. ரமானந்தன் "ஓ" என்று அலறினான்.

"ஸ்வாமி! ஸ்வாமி! என்ன காரியம் செய்கிறீர்கள்! இந்தப் பாவியிடம் வரமா கேட்கிறீர்கள்?........." என்று விக்கினான்.

அமைதியுடன் பரமானந்தர் எழுந்து நின்றார். அவன் கண்களைத் துடைத்தார். "ஆம்! அப்பா! வரம்தான்

விவசாயிகள் கஷ்டம் நீங்க
உணவு நெருக்கடியைத் தவிர்க்க

**BMB**

# PLOW-MATE 6 h. p. Light Tractor.

டிராக்டர்களை உபயோகியுங்கள்!

**குறைந்த ஆட்கள்! குறுகிய நேரம்!**
**அதிகப்படி தானியம்!! சிக்கன செலவு!!**
**நிரந்தர விளைச்சல்!!!**

நிலத்தை உழுதல், செம்மைப்படுத்துதல்
விதை விதைத்தல், அறுவடை செய்தல்
இவைகள் B.M B. டிராக்டர்களினால் சுலப
மாகச் செய்யப்படுகின்றன!



*Sole Distributors for South India:*

**SIMPSON & Co., Ltd.,**
202/203, Mount Road, MADRAS 2.

*Branches at:*
Bangalore, Ootacamund, Trichinopoly and Secunderabad (Dn.).

*Apply to the Dealers for TANJORE District:*

**TANJORE MOTOR TRADES,**
PENNINGTON ROAD,
TANJORE.

கேட்கிறேன்! ஏன் கேட்கக் கூடாது? இந்த இக்கட்டான நிலையில்குரு, சிஷ்யன் என்ற மனோபாவம் நம்மிடை நிலவ வில்லை. நான் கடமையை அளிப்பவன், நீ அதைப் பெற்றுக்கொள்பவன் என்ற உறவுதான் நம்மைப் பிணித்து நிற்கிறது. என்னுடைய கௌரவத்தை, அல்ல. இந்த மடத்தைக் காப்பாற்றும் செல்வனாக நீ நிற்கிறாய். இந்த மடத்துக்காக நீ ஒரு மகத்தான தியாகம் செய்ய வேண்டும் அப்பா!'' என்றார்.

"ஸ்வாமி! இந்த ஏழை உங்கள் அடிமை. எந்த விதமான தியாகத்தை என்னிடம் எதிர்பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டான் ரமானந்தன்.

"அப்பா! உன் தங்கை இப்போது வரப் போகிறாள். அண்ணன் என்ற முறையில் தன் தாயின் பெயரைக் கூறி உன்னை இழுக்கப் போகிறாள். இது வரையில் நீ கண்டிராத அன்பு, உலகத்திலேயே எங்கும் நீ அநுபவித்திராத அன்பு, எல்லாவற்றிலும் மேலான தாயன்பு உன்னை இழுக்கப் போகிறது. எனக்காக, இந்த மடத்துக்காக நீ அதை மறுக்க முடியுமா? உன்னைச் சுமந்து பெற்றவள் தன் அந்திம காலத்தில் உன்னை வேண்டுகிறாள் என்று கூறி, தாயன்பு என்ற பாசத்தை அவள் வீசினால் கடமை யென்ற வாள்கொண்டு அதை அறுப்பாயா? விரும்பினால் என்றும் துறவறத்தை விட்டுவிட்டு இல்லறத்தை மேற்கொள்ளுவதற்கு இந்த மடம் அனுமதிக்கிறதென்று உனக்குத் தெரியும். ஆனால் இவ்வளவையும் தள்ளி விட்டு நீ கடமையை ஏற்றுக் கொள்கிறாயா? உன்னால் இதைச் செய்ய முடியுமா? அளவுக்கு மிஞ்சிய நிலைக்கு உன்னை ஆளாக்கி விட்டேனா?'' என்று கேட்டார்.

"ஸ்வாமி! எப்படி என்னை மறுத்துக் கூறச் சொல்கிறீர்கள்? என்ன பதில் கூறச் சொல்கிறீர்கள்?'' என்றான் ரமானந்தன்.

பரமானந்தர் கூறினார், "அப்பா! நான் அறிவேன்.. அவளுக்கு நேர்முகமாக நீ மறுப்புக் கூறமுடியாது. நீ ரமணன் இல்லையென்று கூறிவிடு. அவள் தமையன் நீ அல்ல என்று மறுத்துவிடு.'' அவரால் மேலே பேச முடியவில்லை. உணர்ச்சி மேலிட்டு நாத் தழுதழுத்தது, "முடியுமானால் படுக்கைக்குப் போகுமுன் என்னைப் பார் அப்பா!'' என்று கூறிவிட்டுத் தம் தியான அறைக்குச் சென்றுவிட்டார்.

சிறிது நேரத்தில் அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு ஒரு சிஷ்யன் உள்ளே வந்தான். அந்தப் பெண்ணை நிறுத்திவிட்டு இருளில் மறைந்து போனான்.

## 4

அறையில் விளக்கு மங்கி அணைந்து கொண்டிருந்தது. மறையப் போகும் மதியின் கதிர்கள் தரையில் தவழ்ந்து கொண்டிருந்தன. அமைதியைக் கலைத்துக்கொண்டு ஒரு விசும்பல் எழுந்தது.

"அண்ணா!''

ரமானந்தன் ஒரு கணம் கலங்கினான். இதுவரை அவன் கேட்டிராத பரிவு கலந்த குரல் அவனைக் கலங்கச் செய்தது,

"அம்மா! நீ யாரை அழைக்கிறாய்? உன் அண்ணன் இங்கே எங்கே இருக்கிறான்?''

"ஸ்வாமி! மன்னிக்க வேண்டும். தாங்கள் அறியாததா? இன்று மாலை தாங்கள் பார்க்கவில்லையா? அவள் தான் என் தாய். அவள்தான் என்னை இங்கு அனுப்பினாள். தலைவர் பரமானந்தரை அவளுக்கு நன்றாகத் தெரியும். தாங்கள் தான் என்னுடைய சகோதரன் என்று அவள்தான் சொல்லி அனுப்பினாள். பாடலிபுரத்தில் பரமானந்தருடைய மடத்தில் ஒரு நாள் நள்ளிரவில் உங்களைக் கைநழுவ விட்டுவிட்டதாகக் கூறினாள். நல்முத்து நழுவி விட்டால் திரும்பக் கிடைக்கக் கூடாதா? மாணிக்கம் குப்பையில் மறைந்துவிட்டால் மறுபடி அகப் படக்கூடாதா?''

"அம்மா! நீ சொல்வது என்ன என்று எனக்குப் புரியவில்லையே? என்னை வேறு யாரோ என்று எண்ணிக்கொண்டு பேசுகிறாயோ?''

"அல்ல, ஸ்வாமி! ஒருகாலும் இல்லை. ரமானந்தர் என்பது தாங்கள்தான் என்ருல் நான் உங்களைக் குறித்துத்தான் பேசுகிறேன்"

"அம்மா! மறுமுறை கூறு. நீ ரமானந்தனைத்தான் உன் அண்ணன் என்று அழைக்கிருயா?"

"இல்லை! ஸ்வாமி! மன்னிக்கவேண்டும். ரமணன் என்றுதான் என் தாயார் சொல்லி அனுப்பினுள். இங்கு வந்து கேட்டபோது ரமானந்தர் என்றுதான் ஒரு அடிகள் இருப்பதாகக் கூறினுர்கள். அதனுல்தான் தங்களிடம் வந்தேன்"

ரமானந்தன் கற்சிலைபோல் அமர்ந்திருந்தான். உணர்ச்சிகள் பலவிதமாக அவன் அகத்தில் நிழலிட்டன.

"ஸ்வாமி! ஸ்வாமி! தாங்கள்தானே என் சகோதரர்? கூறுங்கள் ஸ்வாமி! அளவு கடந்த மனக்கோட்டைகள் கட்டியிருக்கிறேன். அவற்றில் இடிவிழுந்து விடாதல்லவா? இவ்வளவு தூரமும் எதை எண்ணிக்கொண்டு நான் நடந்து வந்தேனே அந்த ஒரே ஆசையில் மண் விழுந்து பாழ்த்து விடாதல்லவா?"

"அம்மா! உன்னுடைய முறையீட்டை நான் கேட்கிறேன். நீ ரமணன் என்று சொன்னுயே, அப்படி ஒருவன் இருந்தது வாஸ்தவம்; ஆனுல் அது நானல்லவே?"

"ஸ்வாமி! ஸ்வாமி! அப்படியானுல் என் அண்ணன் எங்கே? சீக்கிரம் சொல்லுங்கள் ஸ்வாமி! தன் ஒரே மகனை எதிர்பார்த்து, குழி விழுந்த கண்களில் பிரகாசம் பிரதிபலிக்கக் காத்திருக்கும் என் அன்னையிடம் அவனை அழைத்துச் செல்ல வேண்டும் ஸ்வாமி!"

"இதோ இருக்கிறேன்" என்று வாய் விட்டுக் கதறவேண்டும் போலிருந்தது அவனுக்கு. ஆயிரமாயிரம் உணர்ச்சிகள் அவனை அலக்கழித்தன. கடமை குறுக்கிட்டது; அவன் குரலை அமுக்கியது.

"பொறு அம்மா! பொறு! ரமணனைத்தானே கேட்கிருய்? நான் கூட அவனை அறிவேன். நானும் அவனும் இணை பிரியாமல் இருந்தோம். நானும் அவனும் ஒரேமாதிரி இருந்ததால் ரமணன் வேறு, நான் வேறு என்று அறிய இயலாமலிருந்தோம். சமீபத்தில் சிம்மகிரியில் நாங்கள் தங்கியிருந்தோம் அல்லவா? அப்போது நானும் அவனும் மூலிகைகள் சில பறித்துவரக் காட்டுக்குப் போயிருந்தோம். மழை பொழிந்து எங்கள் இருவரையும் பிரித்துவிட்டது. இருளில் யாரும் கண்ணுக்குப் புலப்படவில்லை. காலையில் காடு முழுவதும் அவனைத் தேடி அலைந்தேன். மறு நாள் நான் மடத்துக்குத் திரும்பினேன். வருத்தத்தினுலும் பசியாலும் அடைத்திருந்த என் காதில் விழுந்த ஒரு செய்தியை என்னுல் நம்ப முடியவில்லை. அதைக் கேட்பதற்கு முன்பே காட்டில் இடித்த இடி என் காதுகளைச் செவிடாக்கி விட்டிருக்கக் கூடாதா என்று எண்ணினேன்."

"ஆம், ஸ்வாமி! அப்படி என்ன செய்தி அது?"

"அவன் இறந்துவிட்டான் அம்மா!"

"ஐயோ!" என்ற அலறல் அந்த அறையில் எதிரொலித்தது.

"பொறுத்துக்கொள் அம்மா!"

"நிறுத்துங்கள் ஸ்வாமி! போதும் பொறுமைக்குப் பலன். பொறுத்துப் பொறுத்துத்தான் என் தாய் இளமையிலேயே தன் கணவனைக் கைநழுவவிட்டாள். என்ருவது ஒரு நாள் அந்திம காலத்தில் அனல் தூவுவதற்காகவாவது வருவானென்று பொறுத்துக் காத்துத்தான் இன்று என் அண்ணனையும் இழந்துவிட்டாள். இவ்வளவு நேரம் நீங்கள் என் மனதுக்குத் தேறுதல் கூறும் வகையில் ஏதாவது செய்து கூறுவீர்கள் என்று பொறுத்திருந்து நான் என்ன கண்டேன்? பொறுமை? யாருக்கு இதனுல் என்ன பயன்? ஐயோ! என் தாய்க்கு என்ன பதில் சொல்வேன்? இதைக் கேட்டால் அவள் இறந்துவிடுவாளே! எப்படி அவளைத் தேற்றுவேன்? இவ்வளவு நாட்களாக நான் ஏங்கியிருந்து இன்று கிடைத்திருக்கிருர் என்று எண்ணின அண்ணனை இழந்து விட்டேனே? தாங்க முடியாத இடி தலையில் விழுந்துவிட்டதே! துயரச் சுமை




தாங்காது என் நெஞ்சு விரிந்துவிடும் போலிருக்கிறதே? என்ன செய்வேன்?'' திரும்பி அவள் வாசற்புறத்தை நோக்கி ஓடினாள். விளக்கு அவள்மேல் இடித்துக் கீழே விழுந்து அணைந்தது. அவள் ஓடி விட்டாள்.

ம்தி மேகத்துள் புதைந்துகொண்டிருந்தது. அறையில் இருள் சூழ்ந்தது. ரமானந்தன் அவளைக் கூப்பிட நினைத்தான். துயரமிகுதியால் சொல் தொண்டையிலேயே தங்கிவிட்டது. பல ஆண்டுகளாக ஏங்கியிருந்து கிடைத்த தாயைக் கடமைக்குப் பலியிட்டு விட்டான். தியாகத் தீயில் அவன் வெந்துகொண்டிருந்தான். ரமானந்தனால் அந்தத் தியாகத்தைத் தாங்க இயலவில்லை. துயரம் பொங்கிவந்தது. வெகு நேரம் விம்மி விம்மி அழுதான்.

* * *

நள்ளிரவுக்குத்தான் அவனால் எழுந்திருக்க முடிந்தது. இப்போது அவன்

உள்ளம் அமைதியுடன் இருந்தது. கலங்கிய தண்ணீர் வண்டல் படிந்து தெளிந்திருந்தது. கடமையை ஆற்றி விட்ட பெருமை அவன் மனத்தில் அள விலாத சாந்தியை நிலவச் செய்திருந்தது. தன்னுடைய குரு தனக்குக் காட்டிய வழியை எண்ணி அவரை வாழ்த்தத் தொடங்கினான். அவர் அறைக்குச்செல்ல வேண்டுமென்ற ஆவல் அவனை மிஞ்சி எழுந்தது.

அவர் அறைக் கதவு சாத்தியிருந்தது. வெளியே இருந்து கூப்பிட்டான். கதவு திறக்கவில்லை. மௌன நிலையில் யோகத் தில் ஆழ்ந்திருப்பாரோ என்று எண்ணிக் கதவைத் திறந்தான். உள்ளே விளக்கு மட்டும் எரிந்துகொண்டிருந்தது. அவ ரைக் காணோம். அவனையுமறியாமல் அவன் மனம் துடித்தது. ஆசனத்தில் விளக்கொளியில் ஒரு லிகிதம் அவன் கவ னத்தைக் கவர்ந்தது.

"ரமானந்தனுக்கு,

இவ்வளவு நேரம் நீ உன் கடமையை முடித்திருப்பாயென்று நினைக்கிறேன். பாவம்! சிறு வயதில் உனக்குச் சோதனை கள் அளவுமீறி வருகின்றன, மனித னுக்குச் சோதனைகள் சேர்ந்தாற்போல் வந்தால் அவன் சமாளிக்கக் கஷ்டப்படு கிறான்.

இந்த ஒரு காரணத்துக்காகத்தான் இன்று மாலை ஒரு விஷயத்தை உன்னிடம் மறைத்தேன். மனத்திலிருந்த முள்ளை அகற்றிவிட்டேன் என்று கூறினேன் அல்லவா? அது மெய் அல்ல. இதோ கடைசி முள். என் மனத்தில் இனிமேல் எதுவும் உறுத்தமுடியாது.

உன் தந்தை யாரென்பதை நான் அறிந் தேன். அதனால்தான் நான் போகிறேன். உன் தந்தை நான்தான். என் செல்வமே! நீதானடா என் புதல்வன்!

நான் போகிறேன். இன்று மாலைதான் உனக்குத் தாய் கிடைத்தாள், தங்கை, தந்தை எல்லோரும் கிடைத்தார்கள். எல்லோரையும் நீ இழந்துவிட்டாய். இப்போதுதான் உன் துறவு பூர்த்தியாகி யிருக்கிறது.

இந்த விஷயத்தை மனத்துள் மறைத்து என்னால் இங்கேயே இருக்க முடியும். ஆனால் நான் அதை விரும்பவில்லை. மனத்துள் எதையும் மறைத்து என்னால் வைத்திருக்க முடியாது. என்னால் உன் னிடம் இனிமேல் பாரபட்சம் பார்க்காமல் இருக்க முடியாது என்ற பலவீனம் எனக்குக் கிடையாது. அது என்னைத் துரத்தவில்லை. தாயையும் சகோதரியையும் இழந்து மனம் புண்பட்டு ஆறுமல் கிடக்கும் உன்னால் உன் தந்தை நான்தான் என்று அறிந்து கண்முன் என்னை வைத்துக் கொண்டு துறந்து இருக்கமுடியாது. உன் மனம் அதற்கேற்ற முதிர்ச்சியை அடைய வில்லை. நான் போகிறேன்!

புத்தரின் பேருள் உன்னைக் காக் கட்டும். மடத்திலுள்ள அடிகளுக்கு என் ஆசியைக் கூறு. எனக்குப் பின் தலைமையை ஏற்று நேர்மையாக நட. நான் போகிறேன்"

பரமானந்தன்.

ரமானந்தன் உள்ளம் அதிர்ந்து கிடந்தது. பண்பட்டுப் பக்குவப்பட்ட மனத்தில் அவனுடைய குருவின் உருவம் ஒளிவீசி எழுந்தது.

"ஸ்வாமி! இத்தனை நேரம் நான்தான் பெரிய தியாகியென்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் இப்போது தான் உங்களுடைய தியாகம் என் முன் ஒளி வீசுகிறது. நான் முற்றும் துறந்த துறவியாக வேண்டும் என்பதற்காகத் தங்கள் அரிய மடத்தை விட்டும் போய் விட்டீர்கள். "உங்களைவிடப் பெரிய தியாகி யார்?"

ரமானந்தன் கண்ணீர் உகுத்தான்.

* * *

இமயமலைச் சாரலில் நெடிதுயர்ந்த உருவம் ஒன்று மறைந்துகொண்டிருந்தது.

சென்ற இதழ் தொடர்ச்சி

# அணைந்த விளக்கு

வே. ரங்கராஜன்

## 4. கோர்ட்டின் தீர்ப்பு

ஆனால் கிராமத்து ஜனங்கள் அவ்வளவு சாமான்யமானவர்களா? சுவாமியின்மீது பயபக்திகொண்டவர்கள் கிராமத்து ஜனங்கள். சுவாமி சந்நிதிக்குமுன் முடிவு கட்டியதை மாற்றமாட்டார்கள் என்று வக்கிலய்யா எண்ணியது பொய்த்துவிட்டது! நான் அப்போதே நினைத்தபடி அவர்கள் வழக்கைத் தொடர்ந்துதான் நடத்தினார்கள். வாபஸ் பெறவே இல்லை.

நான் மட்டும் என்னைப் பொறுத்தவரை வழக்கை முடிவு செய்திருந்தேன். நம் சமுதாய அமைப்பில் நியாயத்தின் பக்கம் கோர்ட்டார் தீர்ப்புக் கொடுப்பது துர்லபம். அதுவும் இப்படிக் கோவில் தர்ம ஸ்தாபன வியாஜ்யங்களில், நியாயாதிபதி கொஞ்சம் தீவிர ஆஸ்திகராகவும் வைதீகராகவும் இருந்துவிட்டால் கேட்கவேண்டியதில்லை!

* * *

வழக்கு முடிந்தது. ஆம்; நான் எதிர்பார்த்தபடிதான்!

தேவதாசி கோவில் உள்ள வட்டக் கிராமத்திலேதான் வசிக்க வேண்டுமென்றும் அவளுடைய சௌகரியத்தை உத்தேசித்துக் கொடுக்கப்பட்டுள்ள ஆறு மாத வாய்தாவுக்குள் கிராமத்தை அடைந்துவிடவேண்டுமென்றும், இல்லாவிட்டால் தேவதாசியின் மான்யமும், கோவில் பொது மான்யத்தோடு சேர்க்கப்பட்டுவிடுமென்றும் தீர்ப்புக் கூறிவிட்டார், ஜஸ்டிஸ் கச்சாபிகேச சாஸ்திரி.

நீலகண்டேச்வரர் சந்நிதியின் முன் கிடைத்த தீர்ப்புக்கு நேர் மாறானது!

நான் எதற்குப் பணிவது?

## 5. சோதனை

ஒருவித முடிவும் செய்யாமல் மனம் போனவாறு எண்ணிக்கொண்டு நடமாடிக் கொண்டிருந்தேன். மனதில் எழுந்த பெரும் போராட்டங்களின் விளைவாக உள்ளூர ஜ்வரம் அடித்துக்கொண்டிருந்தது. வாய் கசந்துவிட்டது, வாழ்வை எண்ணி எண்ணி மனம் கசப்படைந்ததைப்போலே!

* * *

முன் ஒரு நாள் இரவு வந்ததைப்போலே, கோர்ட் தீர்ப்பின் நகல்களை எடுத்துக் கொண்டு வந்தார், வக்கிலய்யா.

வழக்குப் பாதகமாக முடிந்ததைப்பற்றி என் மனோ நிலையில் ஒருவித மாறுதலும் இல்லை; அதற்காக நான் வருந்தவில்லை என்பதை அவர் அறிய வேண்டுமென்பது என் அவா. முக மலர்ச்சியை வருவித்துக் கொண்டு அவரை வரவேற்றேன்.

என்னுடன் பழகியதால் என் விபரீத மனப்போக்கை அறிந்துகொண்டோ என்னவோ அவரும் புன்னகையுடன் வந்தார்.

ஆ! அந்தப் புன்னகை! அது இப்போதும் என் மனக் கண்முன் உள்ளது. அதனுள் எவ்வித ஆலகால விஷம் அடங்கியிருந்தது! அப்போது அதை நான் அறியவில்லையே, பேதை!

எப்போதும் இரவில் வந்தால் காலையில் சென்னைக்குப் போய்விடுபவர் அன்று போகப் புறப்படவில்லை. அவர் பேச்சி விருந்து மேலும் இரண்டொருநாள் தங்கப் போவதாகத் தெரிந்தது.

ஈசுவர சோதனையைப் பாருங்கள். அப்போது வீட்டில் வீசம்படி அரிசிகூட இல்லை. முதல் நாள் இரவு நான் ஒன்றுமே சாப்பிடவில்லை. இரண்டுமாதச் சம்பளம் பாக்கியிருந்ததால் வேலைக்காரியும் கோபித்துக் கொண்டு இரண்டு நாள் முன்பே நின்றுவிட்டாள். இனி விற்பதற்கோ, அடகு வைப்பதற்கோ நகைகள் ஒன்றும் இல்லை. அன்றாட உபயோகத்திற்கு உதவாத ஓரிரு பித்தளைப் பாத்திரங்களையும் முன்பே விற்றுவிட்டிருந்தேன். இந்த நிலையில் வக்கீலய்யா அதிதியாக வந்துவிட்டார்!

என் மனம் பட்ட பாட்டை என்ன என்று சொல்வேன்!

வக்கீலய்யாவுக்கு நான் எவ்வளவோ செய்யக் கடமைப் பட்டிருக்கிறேன். கேஸ் ஹைக்கோர்ட்டுக்குத் தாக்கலான நாட்களாக ஸ்டாம்புச் செலவுக்கென்றோ பீஸ் என்றோ அவருக்கு நான் ஒரு செல்லாக் காசும் கொடுத்தது இல்லை.

அகதிகளுக்குத் துணையாக வந்த தெய்வம் அவர் என்று எண்ணியிருந்தேன். அவரே என்னை இப்போது கடும் சோதனைக்கு உள்ளாக்கிவிட்டார்.

கண்ணனைக் காண, துவாரகைக்குச் சென்ற குசேலர், தம் கந்தைத் துண்டில் முடிந்து வைத்திருந்த அவலை மறைத்து மறைத்து வைத்துத் திக்குமுக்காடினதைப்போல், மதிப்பிற்குரிய அவர்முன் என் வறுமையை மறைக்கமாட்டாமல் சஞ்சலப்பட்டேன்.

என் நிலையை அவர் நன்றாகத் தெரிந்து கொண்டார். அவரே வெளியே சென்று கிளப்பில் சாப்பிட்டுவிட்டு எனக்கும் பலகாரம் வாங்கி வந்தார். அத்துடன் ஒரு மாதத்திற்கு வேண்டிய அரிசி, பருப்பு முதலியவைகளையும் வாங்கி வந்துவிட்டார்.

இதெல்லாம் எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. அதுவரை நிஷ்களங்கமாய், தூய்மையாய் இருந்த அவர் மனதிலே ஏதோ களங்கம் புரையோடிவிட்டதை உணர்ந்தேன்.

அன்று மத்தியானம் என் கைச் சமையலை அவர் சுவைத்துச் சாப்பிட்டதில் எனக்குப் பரம திருப்தியுண்டாயிற்று. ஆகா! மனமொத்த ஒரு கணவருக்கு இப்படித் தினம் சமைத்துப் போட்டுக்கொண்டு கிரஹலக்ஷ்மியாகச் சமூகத்திற்கு முன்னே நடக்கக் கொடுத்துவைக்கவில்லையே! என்று ஏங்கினேன்.

அந்த ஏக்கமும் நினைவும் என்னுள்ளிருந்த பெண்மையைக் கிளறிவிட்டன. நாணம் வந்து மனதைக் கவ்விக்கொண்டது. அது முதல் வக்கீலய்யாவுடன் பேசும்போது எல்லாம், 'நீ பெண்! நீ குமரி!' என்று என் மனம் உணர்த்தியது. என் உறுதி குலைந்தது. உணர்ச்சி மேலிட்டது. பெண்மையின் பலஹீனம் மிகவே, ஆதரவற்றுக் காற்றில் அலைப்புறும் கொடி கிடைத்த சிறு கொம்பை எட்டிப் பற்ற முயல்வது போல் ஊசலாடியது என் மனம். என் குறைகளை எல்லாம் யாரிடமாவது சொல்லி ஒருகுரல் அழவேண்டுமென்று விரும்பிற்று.

அன்றிரவு முன் நிலவு காய்ந்து கொண்டிருந்தது. பால்போன்ற அந்நிலாவிலே குளுகுளுவென்று காற்று வீசிற்று. அப்போதுதான் சாப்பிட்டுவிட்டு மேல் மாடியில் உலாவிக் கொண்டிருந்தார், வக்கீலய்யா. நான் சாப்பிட்டுவிட்டு மேல் மாடிக்கு, அவருக்காகத் தாம்பூலத்தட்டை எடுத்துச் சென்றேன்.

அவர் இரவு நெடுநேரம் வரை ஏதேதோ வாய் ஓயாமல் பேசினார். வாதத் திறமையால் வழக்கை வெல்லாவிட்டாலும் என்னை வென்றுவிட்டார்.

பால்போன்ற நிலவை அனுபவியாது உறங்குபவன் குருடனென்றார்; பணமிருந்தும் கொடுக்காதவன் லோபி என்றார். இளமையை அனுபவிக்காதவன் பேடி என்றார். நான் அழகில் யாருக்கும் ஈடில்லாதவள் என்றார். நான் பரதநாட்டியம் ஆடினால் மேனகையே மலைத்து விடுவாள் என்று வானளாவப் புகழ்ந்தார். கலையுலகில் என்னை ஒப்பற்ற நக்ஷத்திரமாக ஆக்கி விடுவதாக வாக்களித்தார். முடிவில் என் பெண் நலத்தை விரும்பினார்.

குசேலர் கடைசியில் அவல் முடிச்சைக் கொடுத்ததுபோல் நானும் என் உடலை அவருக்கு அர்ப்பணித்து விட்டேன், பிடி சாம்பலாகப்போகிற உடல் பிரயோஜனப் படட்டுமே என்று. ஆம்! அப்போது, அந்த நிலைமையில், நான் செய்யமுடிந்தது அவ்வளவுதானே! வேறு உண்டா?

## 6. மலரும் வண்டும்

பின்பு என் வாழ்க்கை ஒரு வியாபாரமாகி விட்டது. வக்கீலய்யா அடிக்கடி சென்னை







## லக்ஸ் டாய்லட் சோப்
# எம். வி. ராஜம்மாவின்
## மென்மைவாய்ந்த மிருதுவான மேனியை காப்பாற்றுகிறது . . .

கீர்த்திபெற்ற பாடகியான இந்நட்சத்திரம் தனது களங்கமற்ற மிருதுவான மேனியை விசேஷ மதிப்புடன் வைத்திருப்பதனாலேயே மேனிக்கு எப்பொழுதும் ஒப்பற்ற பாதுகாப்பை அளிக்கிறார். அழகைத்தரும் பாதுகாப்பு முறையை தவறாமல் கையாள்வதனாலேயே நீடித்து நிற்கும் மேனியழகைப் பெறலாம் என்பது அவருக்குத் தெரியும். இதனால்தான் எம். வி. ராஜம்மா லக்ஸ் டாய்லட் சோப்பை உபயோகிக்கிறார்.

நீங்களும் இந்த சுத்தமான, வெண்ணிறம் கொண்ட சோப்பை எப்பொழுதும் உபயோகியுங்கள். இதன் சுறுசுறுப்பான சுகந்த நுரை உங்கள் சருமத்தை மென்மையாகவும், களங்கமற்றதாகவும், பிரகாசமாகவும் வைத்துக்கொள்வதைக் காண்பீர்கள்.

*வாஹினி பிக்சர்ஸாரின் புதுப்படமான "யோகி வேமனா" வில் எம். வி. ராஜம்மாவின் நடிப்பு, அவரது பழைய விசிறிகளுக்கு மகிழ்ச்சியளிப்பதுடன், இன்னும் பல ரஸிகர்களின் நன்மதிப்பையும் பெறச்செய்யும்.*

# லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 166-23-40 TM.

LEVER BROTHERS (INDIA) LIMITED

யிலிருந்து மாயவரம் வந்து போய்க் கொண்டிருந்தார், துளித்த தேனைச் சுவைத்துத் திரும்பும் வண்டைப் போலே.

* * *

நல்லதங்காள் கதையைப் போல் என் கதை வளர்கிறது. இப்போது இப்படி நொண்டிக்கொண்டு திண்டாடுகிறேனே அந்தச் சம்பவத்தை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன்.

* * *

கொஞ்ச நாட்களில் வக்கிலய்யாவின் நடவடிக்கைகளில் ஒரு மாறுதலைக் கண்டேன். முன்பிருந்த கண்யமும் பெருந் தன்மையும் மறைந்து கேவல சுபாவங்கள் அதிகமாயின.

இதன் காரணம் முதலில் விளங்காத புதிராக இருந்தது. பின்பு ஒரு நாள் இரவு தூக்கத்தில் அவர் பிதற்றிய பிதற்றல்களைக் கேட்டதும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

இரவில் நிசப்தத்திலே அவர் பிதற்றிய தொடர்பற்ற சொற்கள் காதில் பயங்கரமாய் ஒலித்தன. ஆனால் விஷயம் வெளிப் படையாகத் தெரிந்துவிட்டது. அன்று முதல் நாள் அவர் குதிரைப் பந்தயத்தில் நூற்றுக்கணக்கான ரூபாய்களைத் தோற்று விட்டு வந்திருக்கிறார்!

அன்று இரவு பூராவும் நான் பட்ட வேதனை பஞ்சுகூடப் பட்டிருக்காது.

''இவள் தான்! இவள் தான்! பாவி! பெரிய குடும்பத்தைச் சின்னாபின்னமாக்கி விட்டாள். எவ்வளவு கண்ணியமான மனுஷர்! எத்தனை ஆயிரம் ரூபாய் வருமானமுள்ள பிராக்டிஸ். எங்கோ ஒரு கிராமத்திலிருந்து வந்தாள். தேவதாசிகளில் தான் ஒருத்திதான் பதிவிரதை என்று பறையடித்துக் கொண்டு ஹைகோர்ட் வரை போராடினாள். பின்பு, கேஸ் தோற்றுப் போகவே, வக்கிலையே தன் வலையில் இழுத்துப் போட்டுக்கொண்டாள். அவர் மூளையைக் குழப்பி விட்டாள்; குதிரைப் பந்தயத்திற்குத் தூண்டி விட்டாள். குடும்பம் அல்லோல கல்லோலப்படுகிறது. பாவம்! நல்ல நிலையிலிருந்து நழுவிய அவர் மனைவி விடுகிற கண்ணீர் சாபமாக் மாறி இவள் புழுத்துச் சாகமாட்டாளா?'' என்று அனைவரும் என்னைச் சுட்டிக்காட்டி, எள்ளி உமிழ்ந்து கசப்போடு பார்ப்பதாக உணரலானேன்.

ஆனைதாண்டவபுரம் நாட்டாண்மைக் காரனும் குடியானவர்களும் நாலு பேர் கூடும்பொழுதெல்லாம் என் பேச்சைப் பேசி எள்ளி நகையாடுவதாக உணர்வு உண்டாயிற்று, என் மனதிலே.

உலகம் வேறு எப்படி நினைக்கும்?

ஆனால் உண்மையில் நிகழ்ந்தது என்ன?

இவ்வுலகில் ஆலகால விஷத்தை விடக் கொடியது உண்டென்றால் அதுவே காமம்! உலக இன்பங்களில் ஒப்பற்ற இன்பமும் காமமே! சுவைத்தவன் மறக்கமாட்டான். சுவைக்காதவன் மடியமாட்டான்!

ஆழங்காண முடியாத மனவேதனையில் அழுந்திக்கிடந்த நான் அவர் அணைப்பில் இன்பம் கண்டேன். உண்மையைச் சொல்வதில் தப்பென்ன இருக்கிறது? என் உடம்பும் தசை நார்களாலும் பஞ்சபூதங்களாலும் ஆனதுதானே? ஜீவராசிகளுக்குப் பொதுவான காம உணர்ச்சிக்குப் புறம்பாக முடியாதல்லவா?

நான் இன்பத்தை விற்கவில்லை. உடலை அடகு வைக்கவில்லை. இந்தப் பரிவர்த்தனையில் அவரிடமிருந்து ஒரு பைசாவையும் தொடர்பு படுத்தவில்லை.

பின் ஏன் அவர் குதிரைப் பந்தயத்தில் மோகம் கொள்ளவேண்டும்? ஏன் தன் மனைவியைப் பேசாத தூஷணை மொழிகள் பேசி இம்சிக்க வேண்டும்? ஏன் மதுவுண்ட குரங்கின் கைப்பூமாலையைப் போல் தம் சொத்தையெல்லாம் குதிரைப் பந்தயத்திலும் சீட்டாட்டத்திலும் வாரி இறைத்து வெறித்துத் திரிய வேண்டும்?

ஒருகால் ஊரார் சொல்வதுபோல் குதிரைப்பந்தயத்தில் ஒரு ஐந்து லக்ஷம் சேர்த்து ஒரு பெரிய சினிமாக் கம்பெனி வைத்து, என்னைப் பெரிய நக்ஷத்திரமாக்க எண்ணினாரா?

நான் எதைக் கண்டேன்!

எட்டி பழுத்தென்ன? அவர் குதிரைப பந்தயத்தில் ஆயிரக்கணக்கான ரூபாய்களை வாரி இறைத்துக்கொண்டிருந்த பொழுது நான் தினம் ஒரு வேளைதான் சாப்பிட்டு நாட்களை எண்ணிக்கொண்டு வந்தேன். வாழ்வதா, சாவதா என்ற பிரச்னைக்கு முடிவு காணாமல் திகைத்துக் கொண்டிருந்தேன்.

"வீட்டில் விலை போகக்கூடிய சாமான்கள் எதுவும் இல்லை. பட்டுப் புடவைகளைக்கூட வந்த விலைக்கு விற்று விட்டேன்; இன்னும்

ஒன்றே ஒன்றுதான் பாக்கி. ஆனைதாண்டவபுரத்திலிருக்கும் நீலகண்டருக்கு நான் கட்டிக்கொண்ட உக் கழுத்து மாங்கல்யத்தைத்தான் சொல்கிறேன்! அவர் என்னை இத்தனை சோதனைக்கு உள்ளாக்கிய பிறகும் கூட ஏனோ அதை விற்க மனம் வரவில்லை!

* * *

இப்படியெல்லாம் என்னைக் கொண்டு வந்து விட்ட என் விதியின் விசித்திரத்தை நினைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கையில் வாசல் கதவைத் தட்டும் சப்தம் கேட்டுத் திறந்தேன்.

ஆஜானபாகுவான ஆள். கருக்கான மீசையும், மிடுக்கான பார்வையும். பார்க்கப் பயங்கரத்தைக் கொடுத்தன. விலை உயர்ந்த ஆடைகளை உடுக்கத்தெரியாமல் சுற்றியிருந்தான். கையில் பழக்கூடையும் பக்ஷணப் பொட்டலங்களும் பூவும் சந்தனமுமாக ஏக தடபுடலுடன், ராஜ தர்பாரில் வரும் கட்டியக்காரனைப்போல், நடந்து விடுவிடென்று உள்ளே வந்துவிட்டான்.

வக்கீலய்யாவை எதிர் பார்த்துக் கதவைத் திறந்த நான் அவனைக் கண்டதும் பயந்து போய் 'ஓ' வெனச் சத்தம் போடலாம் என எண்ணினேன். நா மேலண்ணத்தில் ஒட்டிக்கொண்டது. கால்கள் நடக்க முடியாமல் ஒன்றோடொன்று பின்னின. ஒரு வாரமாக ஒரு வேளைச் சாப்பாட்டிலேயே காலம் கடத்தினதால் கண்கள் சுழன்றன, ஒரே மயக்கமாய் வந்தது.

* * *

மறுபடியும் நான் கண்ணை விழித்துப் பார்க்கும் போது என் நிலையைக் கண்டு அழுவதா சிரிப்பதா எனத் திகைத்தேன்.

நான் மூர்ச்சித்து விழுந்த இடத்திலிருந்து என்னைத் தூக்கி வந்து மஞ்சத்தில் கிடத்தி மூர்ச்சை தெளிவித்து, தாம் கொண்டு வந்திருந்த பழ வகைகளை என் வாயில் திணித்துக் கொண்டிருந்தார் வந்த அந்தப் புதிய மனிதர்!

அம்மம்மா! இந்தக் காமம் மனிதர்களை எவ்வளவு கீழான மிருகமாக்கிவிடுகிறது.

ஒரு வாரமாக அரைப் பட்டினி கிடந்து கஷ்டப்பட்ட வயிறு, பழங்களை யார் கொடுக்கிறார்கள்? தின்னலாமா? கூடாதா?


பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

**குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து**

**சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்**

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

**போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்**

## டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

1, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளைதெரு, தெப்பகுளம் போஸ்ட்.

எந்த நோக்கத்தோடு கொடுக்கிறார்கள்? என்றெல்லாம் எண்ணவில்லை. அப்பழவகைகளைச் சுவைத்துத் தின்று கொண்டிருந்தேன்!

மனம் மட்டும் ஏதேதோ எண்ணிற்று.

உயிரைவிட மானந்தான் பெரிது, உயிரை விட்டாலும் விடலாம், மானத்தை இழக்கக் கூடாது என்று கதைக்கலாம். நடைமுறையில் இது சாத்தியமா? உயிரைவிட யார் விரும்புகிறார்கள்? உடலெல்லாம் புழுத்து நெளியும் குஷ்டரோகி தற்கொலை செய்து கொண்டு சாகாமல் வாழ விரும்புகிறான். தெருவிலே எச்சிலிலையை நம்பி வாழும் நாயைவிட நிர்க்கதியாக வாழும் ஜனங்கள் ஏன் சாவை விரும்பவில்லை? வங்கப் பஞ்சத்தில் ஒருவேளை உணவுக்காக, குலஸ்திரீ தன் மானத்தையும் விற்கத்துணிந்தாள் என்று கேள்விப்பட்டேனே, அது பொய்யாகுமா?

இப்படியெல்லாம் எண்ணினேன், என்னுடைய பாவச்செயலுக்குச் சப்பைக்கட்டுக் கட்டினேனா, அல்லது இவைகள் நியாமான எண்ணங்கள் தானா?

என் நினைவின் தொடர்பைத் துண்டிப்பது போல் வாயில் கதவு இடிபட்டது,

"யார் அங்கே?" என்று இடி இடிப்பது போல் கர்ஜித்தார், புதிதாக வந்த மனுஷர்.

இதைக் கேட்டதும், "ராஜம்!" என்றழைத்த அந்தக் கோபக் குரல் என் உச்சி முதல் உள்ளங்கால் வரை மெய் சிலிர்ப்பை உண்டாக்கிற்று. குப்பென்று எழுந்த வியர்வையால் உடல் முழுதும் நனைந்துவிட்டது.

புதிய வண்டு மலரின் அகத்திலே தேன் உண்டு களித்திருக்கும்போது, வழக்கமாக மலரைத்தேடி வரும் வண்டு பூவிதழ்களின் மேல் சுற்றிச்சுற்றி வந்து ஓங்கார நாதம் செய்து ஆர்ப்பரித்து அப்புதிய வண்டைத் துரத்த முயற்சிப்பதுபோல் இருந்தது, வக்கிலய்யாவின் குரல்!

நான் படுக்கையை விட்டு நகரவில்லை. வந்த புதியவர் சென்று கதவைத் திறந்தார். கொஞ்ச நேரம் நிசப்தம் நிலவிற்று. கதவு திறக்கப்பட்டவுடன் ஒருவரை ஒருவர் பார்த்துப் பிரமித்து நின்றிருக்க வேண்டும்.

உடனே எரிமலை கக்கும் பெரும் சுவாலையைப் போன்ற கோபாவேசத்துடன், வக்கிலய்யா என் அறையில் நுழைந்தார். முகத்தைக் கையால் பொத்திக்கொண்டு விம்மி விம்மி அழுதுகொண்டிருந்த என்னை, தலைமயிரைப் பிடித்துக் கரகரவென்று முற்றத்திற்கு இழுத்துவந்து, மனம் கொண்ட மட்டும் அடித்தார். கைத் தடியின் இரும்புப் பூண் என் முழங்கால் முட்டியிலே பலமாகப் பட்டு முழங்கால் சில் எலும்பு முறிந்து சதையைக் கிழித்துக் கொண்டு இரத்தம் சொட்டும்வரை அடித்தார். இரத்தத்தைக் கண்டதும் வந்த புதிய மனிதன் கம்பி நீட்டிவிட்டான். வக்கிலய்யாவும் வெளியே சென்றார்.

கொஞ்ச நாழிகை கழித்து ஒரு ஸ்ட்ரெச்சர், இரண்டு ஆள், வண்டி, டாக்டர் இவர்களுடன் வந்தார் வக்கிலய்யா. என்னைத் தூக்கி ஸ்ட்ரெச்சரில் போட்டுக்கொண்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோயினர்.

அடிபட்டதின் விவரத்தை டாக்டர் கேட்டபொழுது மெத்தைப் படிகளிலிருந்து தவறி விழுந்துவிட்டதாகப் பொய் சொன்னேன். நான் இப்படிச் சொன்னவுடன் என்னை நன்றியறிதலுடன் பார்த்தார் வக்கிலய்யா. அவர் மனம் பட்ட வேதனையைக் கண்கள் புலப்படுத்தின.

அதுதான். நான் அவரை அப்புறம் பார்க்கவே இல்லை.

மறுநாள் உங்கள் மாமி என்னைத் தேடிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு வந்தார்கள்.

* * *

"என்ன! என்ன! இவ பாட்டியா?" என்று கேட்டாள், கமலா, அலமுவைச் சுட்டிக் காட்டிக்கொண்டு.

* * *

"ஆமாம்மா. அந்த மகாலக்ஷ்மிதான் தேடிக்கொண்டு வந்தார்கள். இல்லாவிட்டால் நான் இறந்து எத்தனையோ வருஷங்கள் ஆகியிருக்கும். இப்போது அவர்கள் செத்த இடத்தைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டு போகலாம் என்று வந்தவள் உங்கள் வீட்டு வேலைகளை எல்லாம் கெடுத்துக்கொண்டு என் கதையைச் சொல்லிக்கொண்டு உட்கார்ந்திருக்க மாட்டேன்."

"பரவாயில்லை! என்னைக்குந்தான் செக்கு சுத்தற மாதிரி கிடக்கிறதே வீட்டு வேலை, உங்களைப்போல் பால் மனசு உள்ளவங்க என்னைக்குமா வருவாங்க. உம்! அப்புறம்? மேலே சொல்லுங்க!" என்றாள், கமலா.

அந்த அம்மாள் மேலே தொடர்ந்தார்கள்.

## 7. விஷமும் எதிர்விஷமும்

"வக்கிலய்யாவுக்குக் குதிரைப் பந்தய மோகம் பிடித்ததிலிருந்து அவருடைய குடும்பத்தின் நிலை கேவலமாகிக் கொண்டு வந்ததாம். அம்மாள் எத்தனையோ விதங்களில் எவ்வளவோ மன்றாடியும், கண்ணீர் விட்டும், காலில் விழுந்தும், பட்டினி கிடந்தும் அவரை நல்ல வழிக்குக் கொண்டுவர முடியவில்லையாம்.

கடைசியாக அம்மாவின் மனமும் வெறுத்துப்போய், வேலைக்காரியிடம், "அவர் வந்தால் சொல்லிவிடு" என்று சொல்லிவிட்டு ஊருக்குக் கிளம்பும் பொழுதுதான் வேலைக்காரி ஒரு யோசனை கூறினாளாம்.

அதன்படிதான் வேலைக்காரி மூலமாகவே ரௌடி ஒருவனைத் தயார் செய்து, வக்கீலய்யா என் வீட்டிற்கு வரும் நாள் பார்த்து முன்னால் போகும்படியும் அவர் கண்களில், நான் அவரை ஏமாற்றிச்சோரம் போகிறேன் என்று படும்படியும் செய்தார்களாம்!

அவர்கள் தந்திரம் பலித்து விட்டது; நோக்கமும் நிறைவேறி விட்டது. அந்தச் சம்பவத்திற்குப் பிறகு வக்கீலய்யாவின் மனம் அடியோடு மாறி, முன் போலாய்விட்டாராம்.

எனக்கு நேர்ந்த அசம்பாவிதங்களை எண்ணி நான் வருத்தப்படவில்லை. கிரகலக்ஷ்மியைப்போல் விளங்கிய அம்மாவின் மனது சந்தோஷம் அடைவதற்கு அச்சம்பவம் காரணமாக இருந்ததற்காக என் வருத்தத்தை எல்லாம் மறந்துவிட முயன்றேன்.

அம்மா பத்துப் பதினைந்து தடவை என்னை ஆஸ்பத்திரியில் வந்து பார்த்துவிட்டுச் சென்றார்கள். சுமார் இருநூறு ரூபாய் வரை செலவும் செய்தார்கள். பணம் பெரிதல்ல. அவர்கள் அன்பிலே, ஆதரவிலே, சகிப்புத் தன்மையிலே, இழந்த தாயின் வாத்சல்யத்தைக் கண்டேன், நான்.

ஆஸ்பத்திரியில் ஒரு மாதம் இருந்தேன். அந்த ஒரு மாதத்தில்தான் என் மனோநிலை முற்றிலும் மாறிவிட்டது.

ஆஸ்பத்திரியிலிருந்து வெளி வந்த அன்று வக்கீலய்யாவின் ஞாபகம் வந்தது. அன்று ஒரு நாள், நிலவு பொழிந்த இரவிலே, என்னைப் பரத நாட்டியக் கலா ராணியாக்குவதாக அவர் கொடுத்த வாக்குறுதி நினைவுக்கு வந்தது.

ஆம்! அவர் வாக்கும் நிறைவேறிவிட்டது! என்னால் முன்போல் நடக்க முடியவில்லை. சர்வ விகாரமாய் நொண்டி நொண்டி நடந்தேன். இவ்வாறு யாரால் நடக்கமுடியும்? நான் நடனராணிதானே!

ஆஸ்பத்திரியை விட்டு வந்த அன்றோடு கோர்ட்டார் கொடுத்த ஆறுமாத கெடுவும் முடிந்தது.

மறுநாள் காலை ஆனைதாண்டவபுரத்தை நோக்கி வண்டியில் போய்க்கொண்டிருந்தேன்.

அங்கே உண்டு உடுத்து வாழப் போகவில்லை. அங்கு நடக்கும் அக்கிரமங்களைப் பார்த்துக்கொண்டும் பராமுகமாய் இருக்கும் சுவாமிக்குத் தொண்டு செய்யப் போகவில்லை! அடுத்துக் கெடுக்கப் போனேன். பகட்டிப்பழிதீர்த்துக்கொள்ளப்போனேன்.

வீட்டிலே அசுத்தத்தைக்கண்டு வெளியேறும் லக்ஷ்மியைப் போல் அன்று கிராமத்தை விட்டு வெளியே வந்தேன்.

அதே அசுத்தத்தைக் கிளறிவிட்டு, வாந்திபேதியை, வைசூரியாக மாற்றி உயிரைக் கொள்ளையிடும் மகாமாரியைப்போல் கிராமத்தை நோக்கிச் சென்றேன்.

கிராம விடர்களில், மீசை நரைத்தாலும் ஆசை நரைக்காத கிழ—வர்களின் காம உணர்ச்சியைச் சூத்திரமாகக்கொண்டு, அவர்கள் குடும்பங்களை அல்லோக கல்லோலப்படுத்திப் பழி தீர்த்துக்கொள்ளும் நோக்கத்தோடு போனேன்.

நான் மட்டும் போகவில்லை. அப்போது, என் அம்மா தன் காவலுக்காக வைத்திருந்த கில்லாடி காத்தானைப்போல் எனக்கு யாரும் துணை கிடைக்கவில்லை. ஆனால் அபின், கஞ்சா, உயர்ந்த சீமைச் சரக்குகள் இவைகளுடன் போனேன்!

நான் வெற்றியடைந்தேன்! என் வலையில் சிக்கிய கிராமக் குடித்தனக்காரன் ஒவ்வொருவனும் தன் தலையில் துணியைப் போட்டுக்கொண்டு, நகரங்களை நோக்கிப் பிழைக்கப் போய்விட்டான். அவர்கள் நிலங்களில் சில எனக்கும், பெருவாரியானவை மார்வாரிக்கும் சொந்தமாயின.

கிராம ஜனங்கள் விழித்துக்கொண்டனர்.

விட்டில்கள் விளக்கை விளக்கென அறிந்துகொண்டன.

* * *

'டாண், டாண்' என்று மணி ஆறடிக்கவே, "உட்காருங்கோ! இதோ விளக்கேற்றி வைத்துவிட்டு வந்து விடுகிறேன்!" என்று சொல்லிவிட்டு எழுந்தாள், கமலா.

"ஆமாம்மா! ஏற்றி வையுங்கள்! தூங்கா விளக்காக தங்கள் குடும்பத்திற்கு ஒளி வீசிய அம்மாவின் ஆவி பிரிந்த இடத்திலே விளக்கேற்றி வையுங்கள்! மாயவரம் வண்டிக்கு நேரமாய் விட்டது. நான் போய்வருகிறேன்!" என்று சொல்லிக் கொண்டு எழுந்தாள், அந்த அம்மாள்.

கமலா குத்து விளக்கேற்றி ரேழித் திண்ணையிலே வைத்தாள். நாங்கள் எல்லோரும் ஏககாலத்தில் விளக்கை நோக்கிக் கைகூப்பி வணங்கினோம். எந்த விளக்கை நமஸ்கரித்தோம்?

**ஆம்! அணைந்த விளக்கைத் தான்!**

# இறுதியில்

கி. ஸந்தானம்

சாம்பசதாசிவம் உலகநாதம் கம்பெனியில் ஓர் குமஸ்தா. மாதம் அறுபது ரூபாய் சம்பளத்தில் அவர் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார்—இல்லை! வாழ்க்கை அவரை நடத்திக் கொண்டு சென்றது. அதன் பாதையில் அவர், ஓய்ச்சல் ஒழிவின்றி, அலுப்பு சலிப்பு இல்லாமல், ஐம்பத்துநாலு 'கல்லு' கடந்துவிட்டார். இன்னும் ஒரு 'கல்லு'—காலக் கணக்கில் ஒரு வருடம் ஓட்டிவிட்டால் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்—சாலையோரத்தில் உள்ள குளத்திலே இரண்டு கை நீரருந்தி, மர நிழலிலே சற்றுத் தலை சாய்த்துக் கனவு காணும் ஓர் பிரயாணி போல.

வாழ்க்கையின் முடிவை, ஒப்பந்த உழைப்பின் இறுதியை அவர் இன்னும் எட்டிவிடவில்லை. ஆனால் அவர் சம்பளம் அதன் சிகரத்தை எப்படியோ எட்டிவிட்டது. முப்பத்தைந்திலே ஆரம்பித்த அது இரண்டாண்டிற்கு ஒன்றரை வீதம் வேகமாய் முன்னேறி, ஐம்பதை அடைந்ததும், அயர்ந்துபோய் அறை குறைந்து, அப்புறம் ஒன்று, ஒன்று, ஒன்றாய் உயர்ந்து, உயர்ந்து, உயர்ந்து உச்சியை எட்டிப் பிடித்து, ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு நின்றது. ஆம்! இப்பொழுது அதற்கு அறுபதாம் கலக்கம்.

இன்னொரு விதத்திலும் சாம்பசதாசிவம் தம் சம்பளத்தினின்றும் வேறுபட்டார். அதைப் போல் அவர் ஓடவும் இல்லை, ஓய்ந்துவிடவுமில்லை. அவர் வாழ்க்கை ஒரே சீராய்ச் சென்று கொண்டிருந்தது. நாட்கள் வந்தன; நாட்கள் சென்றன. இரண்டு உலக மகாயுத்தங்கள் தோன்றி ஊழிக் கூத்து ஆடி ஓய்ந்துவிட்டன. கட்டுப்பாடுகளும் கள்ளமார்க்கெட்டுகளும் முளைத்து, அங்காடித் தெருவிலே அல்லாடி நின்றவர்களையெல்லாம் அரண்மனைக் குபேரர்களாக்கி, அன்ன தாதாக்களை யெல்லாம் அன்னம் 'தா, தா' என்று கையேந்தி நிற்கவைத்தன. ஆனால் அவைகள் சாம்பசதாசிவத்தை ஒன்றும் செய்யவில்லை. முதல் தேதி தோறும் அவர் சம்பளம் ஒழுங்காய் வந்துகொண்டிருந்தது. அவர் வாழ்க்கைச் சகடமும் கட்டுவிடாமல், கரகரப்பில்லாமல் நிதானமாய் ஓடிக் கொண்டிருந்தது—கதையில் வரும் ஆமை போல.

அதிர்ஷ்டம்தான் அவர் பக்கலில் இல்லை. துரதிர்ஷ்டம்கூடவா அவருக்கு எதிராய்ச் சதிசெய்ய வேண்டும்? அவர் பெற்றோர்கள் காலகதியடைந்தபின் அவர் வீட்டில் சாவு எட்டிப் பார்க்கக்கூட இல்லை. அணு குண்டிலும், ஆகாய விமானத்திலும், பஞ்சாபிலும் பர்மா பின்ஸிலும், போர் முனையிலும் பிறர் மனையிலும் அவசர அவசரமாய்ப் புகுந்து புறப்பட்டுக்கொண்டிருந்த அது, அவர் வீட்டிற்குச் செல்லும் வழியை அடியோடு மறந்துவிட்டது. ஆகவே ஒரு நோவு நொடியின்றி, கேவலம் அரையணு 'ஆஸ்ப்பிரின்' தலைவலிகூட இல்லாமல், அறுபது ரூபாய் ஐசுவரியத்தில், அரை டஜன் குழந்தைகள்கொண்ட அவர் குடும்பம் அமோகமாய் வாழ்ந்துகொண்டிருந்தது.

வீட்டில்தான் இப்படியென்றால், ஆபீசு வேலையிலும் அவர் ஓர் மாறுதலையும் கண்டதில்லை. கம்பெனி நிர்வாகம் பல பேர் கைமாறிவிட்டது. ஆனால் அவர் பதவி மாறவில்லை. அவருக்கு எதிர்ச் சுவரில் அவரைப் பார்த்துக் கண் சிமிட்டிக்கொண்டிருந்த பழைய கடியாரத்தைப் புதிதாய் வந்த மானேஜர் தமக்கு எதிரிலே அமைத்துக்கொண்டு, கணத்துக்

குக்கணம் சதா அதைநோக்கிக்கொண்டிருந்தார்—தம் விழியினாலேயே அதன் முள்ளை ஓட்டிவிடுபவர்போல. இந்த "கிராண்டுபாதர்" கடியாரமும் சாம்ப சதாசிவமும் சர்விஸில் ஒரே காலத்தில் நுழைந்தவர்கள்.—முப்பது வருடமாய் இணைபிரியா நண்பர்கள். அவர் இதயத் துடிப்பிற்குச் சரியாய் அதுவும் 'டிக்டிக்' என்று இடைவிடாமல் துடித்துக் கொண்டுதானிருந்தது. ஆனால், பாவம்! அதற்கு அடித்த யோகம்கூடச்சாம்பசதாசிவத்திற்கு அடிக்கவில்லை. அவர் மேஜையும் நாற்காலியும் போலவே, அவரும் வேரூன்றிவிட்டார்.

ஆனால் அவருக்குக் கடியாரத்தின் உதவி அவசியமில்லை. அவருக்கு மட்டுமல்ல; அவர் குடியிருந்த தெருவில் ஒருவருக்கும் அது அவசியமாயிருந்ததில்லை. அவர் வீட்டில் துணிதோய்க்கும் சத்தம் நின்றவுடன் மணி ஏழு அடித்துவிட்டதென்று நீங்கள் நிச்சயம் செய்துகொள்ளலாம். "ஸ்வஸ்தி பிரஜாப்பிய: பரிபாலயந்தாம் ந்யாயேன மார்க்கேண மகீம் மகீசா:" என்கிற சுலோகம் உங்கள் காதில் விழுந்தால், அவர் பாராயணம் முடிந்து விட்டது, மணியும் எட்டு அடித்துவிட்டது என்று அர்த்தம். அப்புறம் பத்தரை மணி வரையில் ஆபீசு தஸ்தாவேசுகளின்மேல் அவர் பேனாவால் உழுது கொண்டிருப்பார். இதற்கிடையில் மணி தெரிந்துகொள்ள இச்சையுள்ளவர்கள் அவர் மூக்குக்கண்ணாடி எவ்வளவு தூரம் கீழே மூக்கில் இறங்கியிருக்கிறது என்கிற அளவைக்கொண்டு தெரிந்து கொள்ளலாம். உச்சியில் தலைப்பாகை, அதன் கீழ் அசைந்தாடும் இரண்டு மயிர்கள், காதில் பேனா, கட்கத்தில் தஸ்தாவேஜிக்கட்டு, வாயில் பாக்கு, கையில் வெற்றிலைச் சுருள், முழங்காலுக்கு மேல் வேஷ்டி, பித்தானில்லாத ஐதர் காலக் கோட்டு—இத்யாதி அலங்காரங்களுடன் ஒருவர் ஓட்டமும் நடையுமாய்த் தெங்குவார் தெருவில் தென்பட்டால் உங்கள் கடியாரத்தைச் சரியாய் 10-55-ல் திருத்திவைத்துக் கொள்ளலாம்.



சாம்பசதாசிவம் ஆபீஸிற்குக் காலம் கடந்து சென்றார் என்பது ஒருபோதும் இல்லை. சரியாய்ப் பதினோருமணி அடித்து முடிப்பதற்குள் அவர் தலைப்பாகையை எடுத்துஆணியில் மாட்டிவிட்டு, நாற்காலியில் (நாற்காலியென்பது உபசார வார்த்தைதான். உண்மையில் அதற்கு மூன்றரைக்கால்கள் தானிருந்தன. சர்க்கஸ் வித்தையில் உங்களுக்குப் பழக்கமில்லாவிட்டால் அதில் உட்கார்ந்து பழகிக் கொள்ளலாம்) அமர்ந்துவிடுவார். காதிலிருந்த பேனா கைக்கு நழுவிவிடும். அப்

புறம் 'கிறீச் கிறீச்' என்ற சத்தம் உங்கள் காதைத் தொளைக்கும்.

அவர் என்னதான் எழுதுவாரோ எனக்கு ஆச்சரியமாயிருக்கும். அவர் கழுத்தும் நிமிராது, பேனாவும் நிற்காது. எப்போதாவது இரண்டொரு வார்த்தை வாய் பேசினாலும் அவர் கை ஓயாது. பொடி உறிஞ்சுவதும், புகையிலை போடுவதும் அவர் பழக்கிக் கொள்ளவில்லை. சிற்சில தொழிலாளிகள் அவ்வப்போது கை வேலையை நிறுத்திவிட்டு, ஒற்றை வெற்றிலையை இடது கையில் வைத்துக் கொண்டு, அதை அருமையாய்த் தடவிக்கொடுத்து, வலது கையால் அதற்கு வர்ணம் தீட்டி, ஐந்து நிமிஷம் அழகு பார்த்து, புகையிலையை எடுத்துத் தட்டி முறுக்கி, இப்படிக் காலத்தை ஓட்டுவார்களே கண்டிருக்கிறீர்களா? அம்மாதிரிகூட அந்த அப்பாவி மனுஷன் செய்ததில்லை. காலை பதினொரு மணி முதல் ஒரே கிறீச், கிறீச், கிறீச்தான். பக்கத்திலுள்ள நவயுவப் பட்டதாரிகளுக்கு இது தலைவலியாயிருக்கும். மானேஜருக்கோ தாலாட்டாயிருக்கும். டிங், டிங் என்று ஐந்து அடிக்கும் சத்தத்தோடு மானேஜரின் டக் டக் என்ற பூட்ஸ் ஒலியும் சேர்ந்து கேட்கும். அப்புறம் ஒரே மௌனம்தான்—அதாவது டிக், டிக், கிறீச், கிறீச், இந்த ஒலிகளைத் தவிர. ஆனால் மணி ஏழாகும் வரையில் அவர் கைப்பேனா காதில் ஏறாது.

பாவம்! கடியார ஒழுங்குபோல் ஓடிக்கொண்டிருந்த அவர் வாழ்க்கையிலும் இறுதியில் புயல் புகுந்துவிட்டது. இந்த 'லிவிங் வேஜ்' காரர்கள் எங்கிருந்துதான் முளைத்தார்களோ அவரைச் சீர்குலைக்க. அவருக்குக் கிடைத்து வந்த அறுபது ரூபாயைத் தொண்ணூறாய் ஆக்கிவிட அவர்கள் ஏன் கங்கணம் கட்டிக்கொள்ள வேண்டும்? சம்பள உயர்வா? அதுவும் ஒரேயடியில் ஒரே பாய்ச்சலில் முப்பது ரூபாய்! இன்று உங்களுடைய இருபதாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நீங்கள் நாளைக்கே ஐம்பதாம் ஆண்டை எட்டிவிட முடியுமா?

லக்ஷியம்தான் அவருக்குப் பிடிக்கவில்லையென்றால் அதையடைய அவர்கள் கையாண்ட வழியும் அவருக்குப் பிடிக்கவில்லை. எங்கும் வேலைநிறுத்தம் என்பதே பேச்சாய் இருக்கும் இந்தக் காலத்தில் உலகநாதம் கம்பெனியின் சிப்பந்திகளும் வேலைநிறுத்தம் செய்யத் தீர்மானித்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆனால் போராட்டம் என்று சொல்லிக்கொண்டு, ஆயுதத்தைக் கையில் எடுத்துக்கொள்வதற்குள் பதிலாய்க் கீழே எறிந்துவிடுவது எங்கேயாவது உண்டா? வீரனுக்கு லக்ஷணம் அவன் கை ஆயுதம்தானே?

> "வென்றி வாள்புடை விசித்து மெய்ம்மைபோல்
> என்றும் தேய்வுருத் தூணி யாத்திரு
> குன்றம் போன்றுயர் தோளில் கொற்றவில்
> ஒன்று தாங்கினான் உலகம் தாங்கினான்."

என்று குதூகலமாய் வர்ணிக்கிறார் கவி, வீரனை. உலகத்தையெல்லாம் தாங்கிய வீரன் தோளிலே கவி, உலகத்தைக் காணவில்லை, கொற்ற வில்லைத்தான் காண்கிறார்; குமாஸ்தாவின் கொற்ற வில் கூர்முனைப் பேனா தானே? இந்த வீரனை நாம்,

> வென்றி தாள் புடைவிசித்து மெய்ம்மைபோல்
> என்றும் தேய்வுரு இங்கியேற்றொரு
> குன்றம் போன்றுயர் காதில் எழுதுகோல்
> ஒன்றுதாங்கினான் உலகம் தாங்கினான்.

என்று வர்ணிக்க என்ன தடை?

உலக நாதம் கம்பெனியின் அஸ்திவாரத்தைப் பேனா முனையிலே தாங்கி நின்ற அந்த வீரருக்குத் தம் ஆயுதத்தைக் கீழே போட்டுவிடுதல் அவ்வளவு எளிதாயில்லை. பயிர்ச் செலவைப் பள்ளியிலே பயின்ற பட்டதாரிகள், ஒரு வருடம் மழை பெய்யாவிட்டால் உழவை நிறுத்திவிடலாம், பரம்பரைக் குடியானவன் நிறுத்தி விடுவானா? வேலை நிறுத்தம்! இருபதாம் நூற்றாண்டின் எட்டாவது விசித்திரமா இது?

ஆனால் காலப் போக்கும், கவியின் உள்ளமும் விசித்திர விசித்திரமாய்த் தானே இருக்கும்? ஆயிற்று. நவம்பர் மாதம் நாலாம் தேதி கெடு வைத்தாய் விட்டது. உலகநாதம் கம்பெனியின் தலைமை ஆபீசிலும், தேசம் முழுவதும் பரவியிருந்த அதன் கிளை ஆபீசுகளிலும், நவம்பர் மாதம் நாலாம் தேதி, பகல் பன்னிரண்டு மணிக்கு அபிஜித் முகூர்த்தத்தில் வேலைநிறுத்தம்

198053

செய்வதாய், பெருவாரியான ஓட்டுகள் கிடைத்ததின் பேரில், நிச்சயம் செய்து விட்டனர் சிப்பந்திகளின் சங்கத்தார்.

நவம்பர் நாலாம்தேதி வந்தது. வழக்கம்போலில்லாமல், எங்கும் பொங்கிய உத்ஸாகத்தில் கலந்துகொண்டு, மணியும் வேகமாய்ச் சென்று பதினொன்றை எட்டி விட்டது. சாம்பசதாசிவத்தின் பேனாவும் காதிலிருந்து கைக்கு நழுவிற்று. எங்கும் ஓரே அல்லோல கல்லோலம்! ஓரே அமளிதுமளி! இதன் வேகம் சாம்பசதாசிவத்தின் பேனா முனையிலும் தென்பட்டது.

11-55 ஆய்விட்டது. புயலுக்கு முன் அமைதிபோல் எங்கும் ஓரே நிசப்தம்! பதுங்கித்தானே பாயவேண்டும்? ஆச்சு! ஒன்று, இரண்டு............ஜேய் ஹிந்த்! என்று வானைப் பிளந்துகொண்டு ஒரு பேரிரைச்சல் எழுந்தது. அதையும் பிளந்துகொண்டு சாம்பசதாசிவத்தின் பேனாவின் ஒலி கி...றீ...இ...ச்! என்று எழுந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு மோட்டார் ஹாரன் 'பாம் பாம்' என்று ஒலித்தது. அதிலிருந்து ஓர் அதிகாரி இறங்கினார், இரு துப்பாக்கிச் சேவகர்கள் சகிதம். தம் ஜேப்பிலிருந்த ஓர் கடிதத்தை எடுத்து அங்கே கூடியிருந்த கூட்டத்திற்கு முன்னால் அதை ஒரு விசிறு விசிறி அவர் வாசித்தார். ஐயோ கடவுளே! ஆரம்பச் சம்பளம் அறுபது ரூபாய்க்கு உயர்ந்துவிட்டது! அறுபதும் தொண்ணூறுக்கு ஏறி விட்டது! மறுபடியும் ஜேய் ஹிந்த்! என்று ஓர் மாபெரும் ஒலி எழுந்து வானமுகட்டைப் பிளந்தது.

அல்லோலகல்லோலத்தில் சாம்பசதாசிவத்தை மறந்திருந்த இரண்டொரு பழைய நண்பர்கள் அவரிடம் ஓடி வந்தனர் கூவிக்கொண்டே.

"அடே சாம்பு! அடேபழி! இனி உன் பேனா நிற்கவே வேண்டாம். ஓட்டு, வேகமாய் ஓட்டு. உன் சம்பளமும் தொண்ணூறுக்கு ஓடிவிட்டது. உன் பேனாவும் ஓடட்டும்!"

பாவம்! அவர் பேனாவின் கிறீச்சொலி நின்று விட்டது. கடியாரமும் பன்னிரண்டு அடித்து ஓய்ந்தது. அவர் இதய ஒலியும் அதோடு ஓய்ந்துவிட்டது.

காருண்யக் கம்பெனியார் அவர் குடும்பத்திற்கு முழுதாய், தொண்ணூறு ரூபாய் போனஸ் அளித்தனர்!


## காவேரி சந்தா விகிதம்

| சந்தா விபரம் | உள்நாடு | ஸிலோன் பர்மா & மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு |
|---|---|---|
| ஒரு வருஷம் | 6 0 0 | 7 8 0 |
| அரை வருஷம் | 3 0 0 | 3 12 0 |
| தனிப்பிரதி ஒன்றுக்கு | 0 8 0 | 0 10 0 |

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், காவேரி,
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.



# நியான் தீபம்

ஆர். கே. விசுவநாதன்

தீப ஆராதனை நம்மிடையே தொன்று தொட்டு இருந்துவரும் வழக்கம். ஆண்டுதோறும் அண்ணாமலை கார்த்திகை தீபத்தைப் பார்க்கச் செல்லுபவர்கள் அனேகம் பேர்கள். கார்த்திகையன்று வீடுகளின் முன்புறத்தில் வரிசையாக அகல்களை ஏற்றிவைத்துத் தீபத்தை வணங்கி வருகிறோம். கோவில்களினுள்ளே என்றும் கார்த்திகைதான். பிராகாரங்களிலும், கர்ப்ப கிரகங்களிலும் தொங்கும் சர விளக்குகள் பிரதிதினமும் ஏற்றி வைக்கப்படும். மற்றும் பூஜை வேளைகளில் பல வடிவங்களில் விளக்குகளை ஏற்றி விக்ரகத்திற்கு ஆராதனை செய்வார்கள். இவ்வாறு நம் முன்னோர்கள் தீபத்தைத் தெய்வமாகக்கொண்டாடி வந்திருக்கிறார்கள். இதில் வியப்பு ஒன்றுமில்லை. வான வெளியின் தீபம் மறைந்ததும் சூழும் இருளைக் கண்டு பயந்து அதை அகற்றுவதற்கு வழி தெரியாமல் நெடு நாட்கள் கஷ்டப்பட்டிருக்கிறார்கள் அல்லவா? தீபத்தை ஒரு கலைச் சின்னமாகவும் கருதி வந்திருக்கிறார்கள். நம் நாட்டுச் சிற்பிகள் உலோகங்களில் பல உருவங்களை உண்டாக்கி அவற்றின் கைகள் தீபத்தை ஏந்தியவாறு செய்வது வழக்கம். அழகிய பதுமைகள் கொண்ட குத்து விளக்குகளை இன்றும் நாம் காணலாம். நவராத்திரியில் அரண்மனைகளும் கோவில் கோபுரங்களும் விளக்குகளால் அலங்கரிக்கப்படும். நவராத்திரி சமயத்தில் மைசூர் அரண்மனையின் தோற்றத்தைக் கண்டு களிப்பதற்காகக் கூட்டம் கூட்டமாக ஜனங்கள் அங்கே செல்லுவார்களாம். தெய்விக அம்சம், கலை அம்சம் என்ற இரண்டையும் தவிர, தீபத்திற்கு மற்றொரு அம்சம் உண்டு. அதுதான் விஞ்ஞான அம்சம். அதை இக் கட்டுரையில் பார்ப்போம்.

விளக்குகளுக்கு உபயோகப்படும் எண்ணெய்களில் கரியும் (Carbon) நீரக வாயுவும் (Hydrogen) இருக்கின்றன. திரியின் வழியாக எண்ணெய் மேலேறி அதன் நுனிக்கு வரும்போது அங்குள்ள வெப்பத்தின் விளைவாக இது ஆவியாக மாறுகிறது. இதில் உள்ள கரியும் நீரகமும் காற்றில் உள்ள பிராண வாயுவுடன் சேர்ந்து கரியமில வாயுவாகவும் (Carbon-di-oxide), நீராவியாகவும் மாறுகின்றன. பிராண வாயுவுடன் கரியும் நீரகமும் சேருவதைத்தான் 'எரிதல்' (Burning) நிகழ்ச்சி என்று கூறுகிறார்கள். இப்பொருள்கள் எரியும்போது வெளிப்படும் சூட்டின் விளைவாக ஒளி உண்டாகிறது. நெடுநாட்கள் வரை தாவர எண்ணெய்களையே விளக்குகளுக்கு உபயோகப்படுத்தி வந்தார்கள். மண்ணெண்ணெய் பிரபலமானவுடன் தாவர எண்ணெய்களை உபயோகப்படுத்துவதில்லை. சில இடங்களில் பூமியினடியில் 'பெட்ரோலி

யம்' என்ற ஒருவித எண்ணெய் அகப்படுவதைக் கண்டார்கள். பெட்ரோலியத்தில் கரியும் நீரகமும் வெவ்வேறு அளவுகளில் கலந்திருக்கின்றன. இவற்றுக்கு நீரக கரிச் சத்துகள் (Hydro carbons) என்று பெயர். இவற்றில் சில திரவ நிலையிலும் சில வாயு நிலையிலும் இருக்கின்றன. இவற்றை எல்லாம் தனித்தனியே பெறுவதற்குத் தெரிந்துகொண்டார்கள். பெட்ரோலியத்திலிருந்து முதன் முதலில் பெற்ற பொருள் 'கிரோஸின்'(Kerosine). இதைத் தான் மண்ணெண்ணெய் என்று நாம் கூறி வருகிறோம். மின்சார விளக்குகள் ஏற்படும் வரை மண்ணெண்ணெய் விளக்குகளே எல்லா நாடுகளிலும் பயன்பட்டு வந்தன.

மண்ணெண்ணெய் விளக்குகளில் அனேக வகை உண்டு. நாடாவுக்குப் பதிலாக மாண்டில் (Mantle) எனப்படும் வலை அமைப்பு பெட்ரோமாக்ஸ் விளக்குகளில் இருப்பதை அனைவரும் பார்த்திருக்கலாம். நாடாவுள்ள ஹரிகேன் விளக்குகளைக்காட்டிலும் மாண்டில் விளக்குகளே பன்மடங்கு பிரகாசத்துடன் எரியும். சில தாவரங்களிலிருந்து சன்ன நாரை எடுத்து அதை முதலில் வலையாகப் பின்னுகிறார்கள். பின்னர் அதைத் தோரியம் (Thorium) சிரியம் (Cerium). என்ற பொருள்களின் நைட்ரேட் உப்புகள் (Nitrate) கரைந்த நீரில் ஊறவைப்பார்கள். ஊறியபின்னர் வலையைக் காயவைத்து அதை உருவங்கெடாமல் எரித்து மறுபடியும் "செலுலாயிடு" (Celluloid) திரவத்தில் முழுக்கி எடுக்கிறார்கள். இவ்வாறு தயார் செய்த மாண்டிலை விளக்குகளில் மாட்டி முதலில் பற்றவைக்கும் போது அதன் மீதுள்ள செலுலாயிடு எரிந்துபோய் விடும். பின்னர் மாண்டிலைக் கைதவறித் தொட்டுவிட்டால் அது தூள் தூளாகக் கொட்டிவிடும். விளக்கில் மாட்டும் வரை மாண்டில் வலுவுடன் இருப்பதற்காகவே அது செலுலாயிடு திரவத்தில் முழுக்கி எடுக்கப்படுகிறது. தற்காலம் செயற்கைப் பட்டு (Artificial silk) இழைகளில் வலை அமைப்பைப் பின்னி முன் சொன்ன நைட்ரேட் உப்புகளில் தோய்த்து மாண்டிலைத் தயார்செய்து வருகிறார்கள். மாண்டில் விளக்கில் மண் எண்ணெய் ஒரு சிறு துவாரத்தின் வழியாகப் பீரிட்டு வெளிவரும். அது ஆவியாக மாறி அதில் உள்ள நீரக சத்துகள் எரிந்து மாண்டிலைத் தாக்கும். அதனால் மாண்டில் மிகுந்த பிரகாசத்துடன் எரியும். இவ்விளக்குகளின் பிரகாசத்திற்கு மாண்டிலில் உள்ள தோரியம், சிரியம் ஆக்ஸைடுகள் தான் காரணம் என்று கூறப்படுகிறது.

மின்சாரசக்தியைக் கொண்டு ஒளியைப் பெற முதன் முதலில் வழிகாட்டியவர் "டேவி" (Davy) என்ற விஞ்ஞானி. இவர் கண்டுபிடித்த விளக்குக்குச் சுடர் விளக்கு (Arc lamp) என்று பெயர். சினிமாப் படங்கள் காண்பிப்பதற்கு இன்றும் அனேக இடங்களில் இச்சுடர் விளக்குகளே உபயோகப்பட்டு வருகின்றன. இரண்டு கரிக்குச்சிகளின் மூலம் மின்சாரசக்தியைச் செலுத்தி அக்குச்சிகள் ஒன்றை ஒன்று தீண்டுமாறு செய்து பின் அவற்றைச்சற்று விலகச்செய்தால் அவற்றினின்றும் மிகப்பிரகாசமான ஒளி வெளிப்படும். மேல் நாடுகளில் மண் எண்ணெய் விளக்குகளுக்குப் பதிலாக இச்சுடர் விளக்குகளைத் தெருக்களில் உபயோகித்து வந்தார்கள். இவ்விளக்குகளில் தொல்லைகளும் உண்டு. இவை வீடுகளில் உபயோகிக்கத் தகுதியற்றவை. அதற்கு ஏற்ற விளக்கைக் கண்டுபிடித்தவர் 'எடிஸன்' (Edison) என்ற விஞ்ஞானி. இவர் ஒரு கண்ணாடிக் குமிழினுள் கரி இழை (Carbon filament) ஒன்றைப் பற்றவைத்து அதன் மூலம் மின்சாரத்தைச் செலுத்தினார். கரி இழை சூடேறி ஒளியைக் கொடுத்தது. எவ்வளவுக் கெவ்வளவு இழை சூடேறுகிறதோ அதை ஒட்டி ஒளியின் பிரகாசமும் அதிகப்படுவதைக் கண்டார். ஆனால் கரி இழையை அதிகமான சூட்டிற்கு உயர்த்த முடியவில்லை. அவ்வாறு உயர்த்தினால் கரி ஆவியாகி, குமிழின் பக்கங்களில் கறுப்பாகப் படிந்து வெளிச்சத்தைக்குறைத்துவிடுகிறது. கரிஇழைஅவ்வளவு திருப்திகரமாக இல்லாவிட்டாலும் அதை உபயோகித்த பல்புகளே சிறிது காலம் உபயோகப்பட்டுவந்தன. கரிக்குப் பதிலாக வேறொரு பொருளில் இழையைத் தயாரிக்க முயன்றார்கள். பிளாடினம் (Platinum), டாண்டலம் (Tantalum) என்ற பொருள்களில் இழையைத் தயாரித்தால் அது கரி இழையைவிட அதிக

பிரகாசத்துடன் ஒளியைக் கொடுப்பதைப் பார்த்தார்கள். இவை இரண்டும் அரிதாக அகப்படும் பொருள்கள். இவற்றின் விலையும் அதிகம். கரியைப்போலவே மலிவாகவும் ஆனால் அதைவிட இவ்வேலைக்குச் சிறந்ததாகவுள்ள பொருளைக் கண்டுபிடிக்க முயன்றார்கள். 'டங்ஸ்டன்' (Tungsten) என்னும் பொருளை மிக உயர்ந்த சூட்டிற்குக் காய்ச்சினபோதிலும் அது ஆவியாகாமல் இருப்பதை உணர்ந்து இப் பொருளைப் பயன்படுத்த எண்ணினார்கள். ஆனால் இது கட்டியாக இல்லாமல் பொடியாகவே பூமியிலிருந்து அகப்படுகிறது. இப்பொடியைக் கட்டியாக மாற்றினால்தான் இதில் இழைகளை இழுக்க முடியும். பொடியைக் கட்டியாக மாற்ற வழிதெரியாமல் சிறிதுகாலம் தவித்தார்கள். 'கூலிட்ஜ்' (Coolidge) என்றவிஞ்ஞானி இதைச்சாதித்துக் காண்பித்தார். இவ்வாறு பெற்ற இழைகளை நெருங்கிய சுருள்களாக வளைத்து, குமிழில் பற்றவைத்து, குமிழினுள்ளே இருக்கும் காற்றை வெளியேற்றி, அதற்குப் பதிலாக "ஆர்கான்" (Argon) போன்ற ஜடவாயுக்களில் (Inert gases) ஒன்றை அடைத்தார்கள். சூடு தணியாமல் நீண்டநேரம் இருப்பதற்காகவே இழைகள் நெருங்கிய சுருள்களாக அமைக்கப்படுகின்றன. ஜடவாயுவை அடைத்ததினால் கம்பி ஆவியாகி மாறுவது தடுக்கப்படுகிறது.

மின்சார விளக்குகளில் மற்றொரு வகை விளக்குகள் சமீபத்தில் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. கம்பிக்குப் பதிலாகச் சில வாயுக்களின் மூலம் மின்சாரத்தைச் செலுத்தினால் அவையும் ஒளியைத் தருகின்றன. கம்பி விளக்குகளைக் காட்டிலும் இப்புதுவகை விளக்குகளில் அனேக சௌகரியங்கள் உண்டு. இவ் விரண்டு வகை விளக்குகளும் வெவ்வேறு பௌதிக தத்துவத்தைக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு பொருளிலும் கோடிக் கணக்கான அணுக்கள் இயங்கிக்கொண்டு இருப்பது அனைவரும் அறிந்த விஷயம். அணுக்கள் ஒவ்வொன்றின் உள்ளேயும் ஒரு நடு முதலைச் (Nucleus) சுற்றி மின்னுருக்கள் (Electrons) என்னும் மிக நுண்ணிய துகள்கள் ஓடி வருவது தெரியவந்தது. கோவிலில் கர்ப்பகிரகத்தைச் சுற்றிப் பல பிராகாரங்கள் இருப்பதுபோல நடுமுதலைச் சுற்றிப் பல பிராகாரங்கள் இருக்கின்றன. இப்பிராகாரங்களில் மின்னுருக்கள் ஓடி வருகின்றன. ஒரு பொருளைச் சூடேற்றும்போது அதன் அணுக்களின் இயக்கம் அதிகரிக்கின்றது. அத்துடன் அணுக்களினுள் இருக்கும் மின்னுருக்களின் இயக்கமும் அதிகரிக்கின்றது. இவ்வியக்க அதிகரிப்பினால் ஒளி ஆற்றல் வெளிப்படுகிறது. இவ்வாறுதான் பலவித எண்ணெய் விளக்குகளிலும் மின்சார விளக்குகளிலும் ஒளி உற்பத்தி ஆகின்றது. இது ஒரு விதம். ஒரு வாயுவின் மூலம் மின்சாரத்தைச் செலுத்தும்போது வாயு அணுக்களிலுள்ள மின்னுருக்கள் தம் பிராகாரங்களை விட்டு வெளியே தள்ளப்படுகின்றன. உடனே வெளிப் பிராகாரங்களில் உள்ள மின்னுருக்கள் காலியாக இருக்கும் உள் பிராகாரங்களுக்குத் தாவுகின்றன. இம்மாதிரி தாவுதலினாலும் ஒளி உற்பத்தி ஆகிறது.

கம்பியைபோலக் காற்று அவ்வளவு சுலபமாக மின்சாரத்தைக் கடத்திச் செல்லாது. காற்றின் இறுக்கம் (Pressure) குறைவாக இருந்தால்தான் அதன்மூலம் மின்சாரம் பாயும். ஆனாலும் மின்சாரத்தைச் செலுத்த மிகுந்த மின்னியக்க சக்தி (Voltage) வேண்டும். காற்று ஒரேயொரு வாயுவினால் மட்டும் அமைந்ததல்ல. அது பல வாயுக்கள் சேர்ந்த கலவை. அதில் பெரும்பாலும் வளிரம் (Nitrogen) என்னும் வாயுவே உண்டு. இது நூற்றுக்குச் சுமார் எழுபத்தெட்டு பங்கு இருக்கும். இத்துடன் பிராணவாயு நூற்றுக்கு இருபது பங்கு இருக்கும். சிறிதளவுக்குக் கரியமில வாயுவும் நீரகமும் இருக்கின்றன. இவ்வாறு நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பங்கு வரை காற்றில் உள்ள வாயுக்களின் விகிதத்தைச்சுலபமாகக் கண்டுபிடித்தார்கள். பாக்கி இருப்பது ஒரு பங்குதானே, அது என்னவாயிருந்தால் என்ன என்று அசட்டையாய் இராமல் அதில் என்ன என்னவாயுக்கள் இருக்கின்றன என்று "ராலே" (Raylagh), "ராம்ஸே" (Ramsay) என்ற விஞ்ஞானிகள் கண்டுபிடித்தார்கள். அவற்றுக்கு ஆர்கான் (Argon) நியான் (Neon), கிருப்டான் (Krypton) ஸீனன் (Xenon) என்று பெயர்கள். காற்றின் இறுக்கத்தை மிகக்குறைவாக வைத்துக்கொண்டு அதன் மூலம் மின்சாரத்தைப் பாய்ச்சும்போது

அது கண்ணைக் கவரும்படி ஒளியை வெளியிடுகிறது. இந்த ஜொலிப்புக்குக் காரணம் இவ்வாயுக்கள் தான் என்று அறியப்பட்டது. அதிலும் முக்கியமாக நியானுக்கு நிறப்பண்பு அதிகம் என்று தெரியவந்தது.

நியான் விளக்கின் அமைப்பு மிக எளிது. ஒரு கண்ணாடிக் குழாயில் சிறிதளவு நியான் வாயு அடைக்கப்பட்டிருக்கும். இதன் இறுக்கம் (Pressure) காற்றின் இறுக்கத்தில் நூற்றில் ஒரு பங்கு இருக்கும். குழாயின் இரு முனைகளிலும் உட்புறமாக இரண்டு இரும்புக் கம்பிகள் பற்றவைக்கப்பட்டிருக்கும். ஒரு கம்பியிலிருந்து மற்றொரு கம்பிக்கு மின்சாரம் நியான் வாயுவின் மூலமாகவே பாயும். இதற்கு மின்சாரம் மூவாயிரம் முதல் நாலாயிரம் வோல்ட் (Volt) வரை மின்னியக்க சக்தி கொண்டிருக்க வேண்டும். நியான் மூலம் மின்சாரம் பாயும்போது அது சிவப்பு நிற ஒளியை வெளியிடுகிறது. அதன் இறுக்கம் குறைவாக இருந்தால் ஒளி ஆரஞ்சு நிறமாக மாறிவிடுகிறது. மற்ற நிற ஒளிகளைவிடச் சிவப்புநிற ஒளி மூடுபனி, புகை, தூசி இவற்றின் மூலம் மங்காமல் பாய்ந்து செல்ல வல்லமையுடையது. எனவே சிவப்பு ஒளிதான் ஆகாய விமான கூடங்கள், கப்பல் துறைமுகங்கள் முதலிய இடங்களில் அபாய அறிவிப்புக்கு உபயோகப்படுகிறது. மின்சாரக்கம்பி விளக்குகளில் குமிழைச் சிவப்புக் கண்ணாடியில் செய்துவிட்டால் சுலபமாகச் சிவப்புநிற ஒளியைப் பெற்றுவிடலாமே, நியான் விளக்கு எதற்கு என்று நினைக்கலாம். கம்பி விளக்கு வெளியிடும் வெள்ளொளியில் சிவப்புநிறம் நீங்கலாக மற்றப் பகுதிகள் கண்ணாடிக் குமிழ் சிவப்பாக இருப்பின் நீக்கப்படுகின்றன. குமிழ் இப்பகுதிகளை உறிஞ்சிவிடுவதால் ஒளியின் பிரகாசம் குறைந்து விடுகிறது. இத்தகைய கெடுதி நியான் விளக்குக்கு இல்லை. ஏனெனில் அது சிவப்புநிற ஒளியைமட்டும் வெளியிடுவதினால் பிரகாசம் குமிழினால் பாதிக்கப்படுகிறதில்லை. நியான் விளக்குகளில் வேறு

ஆயுர்வேத வித்வான் 'B.V. பண்டிட்' அவர்களின்
சத்வைத்யசாலை: நஞ்சன்கூடு.
"நஞ்சன்கூடு பல்பொடி"
I.D.L நெ 61, மெடிகேடட் [பல் உபாதைகளுக்கு]
குழந்தைகளுக்கு
காஸ்மஸ்
கஸ்தூரி மாத்திரை
கர்ஜன்
கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ்
பேதியாக மாத்திரை
ஜ்வரேக்
[எவ்வித ஜ்வரங்களுக்கும்]
ஜிஞ்சிப்
[அஜீர்ண பித்த சமனி]
கூலெக்ஸ்
[உஷ்ண சமன ஸ்நான தைலம்]
கவனிப்பு:- மாதர்களுடைய சூதக, கெர்ப்பாசய உபாதைகளுக்கு விபரம் எழுதி சிகிச்சை பெறலாம்
ஸான்டலக்ஸ் நறுமண சரும ரக்ஷிணி முகப்பரு, புண், சொறி குணமடைய.
காஷ்மீர்-குஸும் கூந்தல் செழிப்புக்கு நீங்களே தைலம் செய்ய உதவுகிறது.
மைசூர் "பிரேமலீலா" உயர்தர ஊதுபத்திகள்.
'அகர் ஸ்பெஷல், ஜவாது, ஜெயலக்ஷ்மி'
யுனைடெட் கன்ஸர்ன். 54, பந்தர்தெரு, மதராஸ்.

வாயுக்களைச் சிறிது சேர்த்து ஒளியின் நிறத்தை மாற்றிவிடலாம். ரச ஆவியை, (Mercury vapour) சிறிது சேர்த்தால் ஒளியின் நிறம் நீலமாக மாறிவிடுகிறது. கரியமில வாயுவைச் சேர்த்தால் ஒளி வெண்மையாக மாறிவிடுகிறது. சாதாரணமாக விளக்குகள் ஒளியை வெளியிடும்போது வெப்பத்தையும் சேர்த்து வெளியிடுகிறது. ஆனால் நியான் விளக்கு மின்மினிப் பூச்சியைப்போல ஒளியை மட்டிலும் தரும். குழாய் சிறிதும் சூடேறுவதில்லை. இதில் செல்லும் மின்சாரம் முழுவதும் ஒளியாக மாற்றப்படுகிறது. இதற்கு நேர்மாறாகக் கம்பி விளக்குகளில் மின்சார சக்தியில் நூற்றில் ஐந்து பங்கு மட்டிலும்தான் ஒளியாக மாற்றப்படுகிறது. இராக்காலங்களில் கட்டிடங்களைச் சிங்காரிப்பதற்கு எல்லாப் பெரிய நகரங்களிலும் நியான் விளக்குகள் உபயோகப்பட்டு வருகின்றன. நாம் விரும்புகிற வடிவங்களில் இவ்விளக்குகளைத் தயாரித்து விடலாம். விளம்பரங்கள் எழுத்து எழுத்தாகத் தோன்றி வரிமுழுவதும் பூர்த்தியானவுடன் ஒவ்வொன்றாக விளக்குகள் அணைந்து மீண்டு இதைப் போலவே நிகழ்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கலாம். கம்பி விளக்குகளைக் கொண்டு இத்தகைய விளம்பரங்களைப் போடமுடியாது. ஏனெனில் அவற்றின் மூலம் ஓடும் மின்சாரத்தை நிறுத்திய நொடியிலேயே அவை ஒளியற்றுப் போவதில்லை. நியான் விளக்குகளில்தான் மின்னருவி நின்ற நொடியிலேயே விளக்கும் ஒளியற்றுப்போகிறது. ஆனால் நியான் விளக்குகளில் ஒரு அசௌகரியம் உண்டு. வீடுகளில் நாம் பெறக்கூடிய மின்னியக்க சக்தி இருநூற்று இருபது ஓல்ட்கள்தான். ஆனால் இவ்விளக்குகள் எரிவதற்கு ஆயிரக்கணக்கான ஓல்ட்கள் வேண்டியிருக்கின்றன. எனவே வேறு சாதனங்களைக் கொண்டு மின்னியக்க சக்தியை உயர்த்திக்கொண்டு அப்புறம்தான் இவ்விளக்குகளை உபயோகிக்க முடியும்.

நியானுக்குப் பதிலாக "ஸோடியம்" (Sodium Vapour) ஆவி, ரசஆவி இவற்றில் ஒன்றைக் குழாய்களில் அடைத்துக் கொண்டால் மின்னியக்க சக்தி குறைவாக இருந்தபோதிலும் அதன் மூலம் மின்சாரம் பாய்ந்து ஒளி உண்டாகிறது. ரசஆவிக் குழாய்களிலிருந்து சிவப்புநிற ஒளி நீங்கலாக மற்ற எல்லாநிற ஒளிகளையும் பெற்றுவிடலாம். இவை மிகவும் மலிவானவை. எனவே இவ் விளக்குகள்தான் ரோடுகள், பெரிய ஆலைகள்போன்ற இடங்களில் இப்பொழுது உபயோகப்பட்டு வருகின்றன. ரசஆவி விளக்குகள்தான் வருங்காலத்தில் எல்லா விளக்குகளைக் காட்டிலும் அதிகமாகப் பிரபலமாகும் என்று நினைக்கிறார்கள்.

# பிரேமா

ரஜனி

சித்திரை மாதப் பௌர்ணமி!

பால்போலக் காய்கிறது புது நிலவு. வாசலில் கயிற்றுக் கட்டிலைப் போட்டு உட்கார்ந்து அரட்டை அடிக்கிறார்கள் சிலர். இன்னொரு வீட்டில் தடபுடலாகச் சீட்டாட்டம் நடக்கிறது.

அதோ சில குழந்தைகள் நிலவு வெளிச்சத்தில் "பலீம் சடு குடு" விளையாடுகிறார்கள் கட்சி போட்டுக்கொண்டு.

"அம்புலிமாமனைப் பாருடா கண்ணு! வா வா சொல்லு! அம்புலிமாமா வாவா! அழகாக ஓடிவா! பாலுஞ் சோறு தின்ன வா!"

இப்படிக் கிருஷ்ண விக்ரகம் மாதிரி ஒரு குழந்தையைக் கையிலேந்தி மதியைக் காட்டி விளையாடுகிறாள் ஒரு இளம்பெண். பறக்கும் சக்திமட்டுமிருந்தால் அந்தக் குழந்தை இலேசில் விட்டிருக்காது சந்திரனை. அப்படித் துள்ளுகிறது முழு மதியைப் பார்த்து.

'சந்திரன் அங்கில்லை! இதோ இருக்கு பார்! எப்படியிருக்கு இந்த சந்திரன்" என்று குழந்தையைத் தாயின் முகத்துக்கு நேராகத் திருப்புகிறான் கணவன். ஒரு கையினால் தாயின் கூந்தலைப் பிடித்திழுத்து மற்றொரு கையினால் அவள் முகத்தைப் பிறாண்டுகிறது குழந்தை. எவ்வளவு ஆனந்தத்தை விளைவிக்கிறது அந்த நிலவு இளம் தம்பதிகளுக்கு!

அதோ எவ்வளவு அற்புதமான ஆலயம்! கோவிலும் பிராகாரமும் கட்டி அதற்கு நான்கு வாசல்களும் வைத்துவிட்டாள் அலமு! தெருத் திண்ணையில் கொட்டி இருந்த களி மண்ணிலே ஆசையுடன் சின்னஞ்சிறு கரங்களினால் அலமு நிர்மாணித்த கோவில் மற்றவர் கண்களுக்கு அர்த்தமற்ற மண் குவியலாகத் தோன்றலாம். ஆனால் அவள் பெற்றோர்களுக்கு? மகா காவ்யங்கள் புகழும் மயனின் சிருஷ்டியையும் மீறிய மனோகரமான கலாஸ்வரூபத்தை அந்தக் களிமண் குவியலிலே கண்டு பூரிக்கும் சக்தி அலமுவின் பெற்றோர்களைத் தவிர மற்றவர்களுக்கேது!

சுந்தரமான நிலவு வெளிச்சத்தில் சகல ஜீவராசிகளும் சந்தோஷ பரவசமடைந்திருக்கும்பொழுது அந்த மூங்கில் மரங்கள் மட்டும் "கிரீ......கிரீ......ரீ...ச்' சென்று மெல்லிய குரலில் அழுவானேன்? தெருக்கோடியிலிருக்கும் அகண்ட தடாகத்தைத் தாண்டிவரும் குளிர்மையான தென்றல் சோகத்தையா விளைவிக்கும்? "ஆம்! ஆம்" என்று துக்கத்துடன் சொல்லும் மூங்கில்கள் பேசும் சக்திமட்டுமிருந்தால்!

அந்தச் சோக சம்பவம் நிகழ்ந்த பொழுதும் இப்படித்தான் பால்போலக் காய்ந்தது நிலவு! ஈவு இரக்கமற்ற பௌர்ணமி சந்திரன் இரு பரிசுத்த ஆத்மாக்கள் கண்ணீரும் கம்பலையுமாகக் குளக்கரையில் நின்றதைக்கண்டு கேலி செய்தான் அன்று. அதன் பிறகு நிகழ்ந்த சம்பவம் மூங்கில் மரங்களின் வாழ்வையே சோகத்திலாழ்த்திவிட்டன.

* * *

மாலை நான்கு மணி. பள்ளிக்கூடம்விட்டு, குழந்தைகள் ஏக அமர்க்களத்துடன் சப்தம செய்துகொண்டு வருகிறார்கள். "அம்மா! தடிப்பயல் முரளியைப் பாருடி!" நான் குதிரையாம்! பின்னலைப் பிடித்து இழுத்து "ஹை! ஹை!"ன்னு ஓட்டிண்டு வர்ராண்டி!" என்று புத்தகமும் கையுமாக அழுதுகொண்டே வந்து தாயாரிடம் புகார் செய்கிறாள் பிரேமா.

"இல்லே மாமி! அவதான்.........!"

"இல்லையுமாச்சு ஓட்டையுமாச்சு! பேசாமெ போடா வீட்டுக்கு!" என்று முரளியைத்திட்டிவிட்டு, குழந்தை பிரேமாவுக்குத் தின்பண்டம் ஏதோ கொடுக்கிறாள் தாயார்.

"முரளி! முரளி; இதோ மைசூர்பாகு! ஓடியா!" என்று சப்தமிட்டு அழைத்துக் கொண்டே தெருப்பக்கம் ஓடுகிறாள் பிரேமா! ஒரு நிமிடம் முன்பு சண்டை. மறு நிமிடம் சல்லாபம்! குழந்தை மனதின் போக்கே விசித்திரமானது.

தினசரி பிரேமாவைப் பள்ளிக்கூடத்திலிருந்து அழைத்துவரும் முரளி ஒரு நாள் ஏதோ சண்டை பிடித்துக்கொண்டு பள்ளிக்கூடம் விட்டதும் ஒரே ஓட்டமாக ஓடிவிட்டான். "முரளி! முரளி!" என்று அலறிக்கொண்டே பின்னால் ஓடி வந்தாள் பிரேமா. இரைக்க இரைக்க, குழந்தை ஓடிவருவதைக் கண்டு கொஞ்சமாவது இரக்கம் தோன்றவேண்டுமே அந்தப் பயலுக்கு!

அவிழ்ந்து விழுந்த இடுப்புத் துண்டை எடுத்துக் கட்டிக்கொள்ளச் சிறிது நின்றான் முரளி. அப்பொழுது வந்த ஒரு கிழவர் அவனைப் பிடித்து வைத்துக் கொண்டார். அதற்குள் பிரேமாவும் அங்குவந்து நின்று தேம்பித் தேம்பி அழுதாள். அவ்விருவரையும் கிழவர் சமாதானப்படுத்தி அனுப்பினார். அவர்கள் மறுபடியும் நண்பர்களாகக் கைகோத்துக்கொண்டு போனபொழுது "இப்படியே இவர்கள் தம்பதியானால்......!" என்று ஏதோ தமக்குள் சொல்லிக் கொண்டார் கிழவர். ஆனால் அவருக்கு எப்படித் தெரியும் பிரேமா கிறிஸ்துவப் பெண்ணென்பதும் முரளி ஹிந்து குடும்பத்தில் பிறந்தவனென்பதும்!

பிரேமாவுக்கும் முரளிக்கும் கிழவர் என்ன சொன்னாரோ ஒருவருக்கும் தெரியாது. அன்று முதல் முரளியின் முரட்டுத்தனம் திடீரென்று மறைந்துவிட்டது. பிரேமாவை உயிருக்கு உயிராக மதித்து நடத்த ஆரம்பித்தான். அவர்களுக்கிடையில் சண்டையே இல்லாதது பெற்றோர்களுக்கும் அதிசயமாகத்தானிருந்தது.

* * *

சென்னை பச்சையப்பன் கல்லூரி ஹாஸ்டல் மாடியில் விரித்த புத்தகத்துடன் கயிற்றுக்கட்டிலில் படுத்திருக்கிறான் முரளி. கண்கள் பார்க்கும் பொருள்களை, மனம் உணர்த்துகிறதென்கிறார்கள் மனோதத்துவ நிபுணர்கள். எவ்வளவு அபத்தமான கூற்று! முரளியின் கண்கள் புத்தகத்தில் இருக்கின்றன. எழுத்துகளுக்குப் பதிலாகப் புத்தகப் பையைத் தோளில் போட்டுக் கொண்டு பள்ளிக்கூடத்திலிருந்து வரும் சிறுமி பிரேமாவைக் காண்கிறது அவன் மனம்! அதோ அவள் பக்கத்தில் வரும் தனது சொந்த ஸ்வரூபத்தையும் அவன் காண்கிறான்! எப்பொழுதும் அதே போலக் குழந்தைகளாகவே இருந்துவிடலாகாதா?

நீரிலே தோன்றும் காட்சி ஒரு சிறிய இலை விழுந்தாலும் கலைந்துவிடுகிறது. ஆனால் மீண்டும் தோன்றுவது, மாறுதலற்ற அதே பழைய காட்சிதான். உயிரில்லா நீர் நிலைக்கும், ஜீவனுள்ள மனித உள்ளத்துக்கும் வித்யாசமில்லையா? முரளியின் கலைந்த கனவு புதிய கனவைத் தோற்றுவித்தது.

கிணற்றங்கரை. பிரேமா ஜலம் இழுத்துக் கொண்டிருக்கிறாள். அதே பள்ளிக்கூடச்சிறுமியின் முகம்தான். வயது எப்படி ஓடிவிட்டது! எட்டு வருட நகரவாழ்க்கைக்குப் பின் கிராமத்துக்குத் திரும்பிய முரளிக்கு அவன் கண்களை அவனால் நம்ப முடியவில்லை. தன் வீட்டுக் கொல்லைப் புறச் சுவரினருகிலே நின்று இமை கொட்டாமல் பார்க்கிறான் பிரேமாவை.

அன்று முரளி கிராமத்துக்கு வருவது பிரேமாவுக்குத் தெரியும். இல்லாவிட்டால் வீட்டிற்குள்ளிருக்கும் தொட்டி ஜலம் முழுவதையும் காலி செய்துவிட்டு ஜலம் எடுக்க அடிக்கடி கொல்லைப் புறத்துக்கு வருவாளா? கிணற்றடிக்கு முரளி வருவானென்று நினைத்து, கை வலியையும் பொருட்படுத்தாமல் எத்தனை குடம் ஜலம் இழுத்துவிட்டாள் காலையிலிருந்து!

"சௌக்கியமா பிரேமா! அடையாளமே தெரியாமல் மாறிவிட்டாயே!" என்றான் முரளி,

"உங்களைக் கூடத்தான், அடையாளம் தெரியவில்லை! இருந்தாலும் பட்டின வாசமல்லவா?" என்று என்ன பேசுகிறோமென்ற உணர்வில்லாமலே ஏதோ பதிலுக்குச் சொன்னாள் பிரேமா. "சீச்சீ! வயதாகிவிட்டால் எவ்வளவு வெட்கமும் நாணமும் வந்துவிடுகிறது பெண்களுக்கு!" என்று அவள் நினைத்தாள் போலிருக்கிறது. இத்தகைய ஒரு எண்ணம் அவள் மனதில் படர்ந்ததை முகம் பிரதிபலித்தது.

இரண்டு தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் முரளி கேட்டான். "எனக்காக இவ்வளவு ஜலம் இழுக்கிறாயே பிரேமா! பாவம் கை வலிக்காதா?" என்று.

"உங்களுக்காகவா?"

## உங்கள் தினசரி உபயோகத்திற்கு




பனிமலைத் தென்றல் போன்று குளிர்ச்சி வாய்ந்ததும், அரிய மலர்களின் நறுமணம் போன்று களைப் பாற்றுவதுமான **டாடா ஓடிகொலோன்** உங்கள் தினசரி உபயோகத்திற்காயினும் சரி, ஜுரத்தால் வேகும் நெற்றித் தடத்தைக் குளிரப் பண்ணுவதற்காயினும் சரி, உகந்ததுதான்.

எப்பொழுதும் ஒரு பாட்டில் வீட்டில் கையோடு காவலாய் வைத்திருங்கள்.



**டாம்கோ விற்பனை இலாகா 19A, வாணியர் தெரு, தபால் பெட்டி நெ. 31, மதராஸ்.**

"இல்லே, கிணற்றடிக்கு வருவதற்காக என்றுதான் வைத்துக்கொள்ளேன். இரண்டும் ஒன்றுதானே!"

"இல்லே, உங்களுக்காகத்தான் உட்காருங்கள், தலையில் கொட்டுகிறேன்!"

"ஓ! ஆனந்தமான ஸ்நானம் ஆகிறது!" இருவரும் கொல்லென்று சிரித்து விட்டார்கள். அந்தச் சிரிப்பு மறு நிமிடமே அவர்களுக்கு ஒரு பயங்கர உணர்ச்சியை உண்டுபண்ணியது. உணர்ச்சியை மட்டுமல்ல, காட்சியையும் கூட! பிரேமாவின் தகப்பனாரை ரௌத்ராகாரத்துடன் அங்கே தோன்றச் செய்ததும் அந்தச் சிரிப்புத்தான்.

* * *

ஒரு வாரம் கழிந்தது. இந்த ஏழு நாட்களிலும் பிரேமா கிணற்றடிப் பக்கமே திரும்பவில்லை. காத்திருந்தும் பார்த்துக் கண் பூத்து விட்டது முரளிக்கு.

அதோ கதவு திறக்கும் சப்தம். சிறுமி லல்லு வருகிறாள் எச்சில் இலையை எறிய.

"லல்லு! லல்லு! இங்கே வாயேன்!"

"ஏன்?"

"லல்லு! இன்னிக்கு ராத்திரி நான் பட்டணம் போறேன் தெரியுமோ?"

"இந்த ஊரிலே இருக்காப்லே அங்கேயும், கிணறு, குளம், பூ, எல்லாம் இருக்குமா மாமா!"

"ஓ! எல்லாம் இருக்கும்! நல்ல நல்ல பொம்மைகள்கூட நிறைய இருக்குமே பட்டணத்திலே! அடுத்த தடவை வரச்சே உனக்கு நல்லபொம்மையா இரண்டு வாங்கி வரட்டுமா?"

"வாங்கிண்டு வாங்கோ மாமா! நிஜம்மா வாங்கிண்டு வரேளா?"

"நிஜம்மா வாங்கிண்டு வரேன். உன் அக்காட்டே சொல்றையா மாமா இன்னிக்கு ராத்திரி பட்டணம் போறார்னு?"

"சொல்றேன்! சொல்றேன்!"

அரைமணி நேரம் கழித்து லல்லு மறுபடியும் கொல்லைப்புறம் வந்தாள் ஒரு மாத சஞ்சிகையை எடுத்துக்கொண்டு. சுவரின் அருகில் தவமிருந்த முரளியிடம் அதைக் கொடுத்து, "மாமா மாமா! இதிலே நல்ல நல்ல கதை எல்லாம் இருக்காம். யாருக்கும் தெரியாமல் இதை உங்கிட்ட கொடுக்கச் சொன்னா அக்கா! ஒத்தருட்டேயும் காட்டாமல் உள்ளே எடுத்துண்டு போய்டு!" என்று மழலையில் சொல்லிவிட்டுப் போனாள் லல்லு.

முரளி உள்ளே போய்ப் பத்திரிகையைப் பிரித்துப் பார்த்தான். இரண்டு பக்கங்களைச் சேர்த்து ஒட்டி இருந்தது ஒரு இடத்தில். அதைக் கிழித்துப் பார்த்த பொழுது பின் கண்டவாறு எழுதிய ஒரு கடிதத்துண்டு அதில் இருந்தது.

ஸ்வாமி!

லல்லுவிடம் எனக்குச் சொல்லியனுப்பிய செய்தி கிடைத்தது. ஊருக்குப் போகும் சமயத்தில்கூட உங்களைத் தரிசிக்கமுடியாத துர்ப்பாக்யசாலியாயிருக்கிறேன். கிறிஸ்து வப்பெண் ஒரு ஹிந்துவைப் பார்ப்பதும் பாபமா? விசித்திரமாய் இருக்கிறது கட்டுப்பாடு.

சென்னை சென்று எம். ஏ. பட்டம் பெற்று வெற்றியுடன் திரும்பி வாருங்கள். கிராம வாழ்க்கை மனிதரின் உடலமைப்பை மாற்றலாம்; ஆனால் மன உறுதியை மாற்றுவதில்லை. நகர வாழ்க்கை எப்படியோ நான் அறியேன்.

நமஸ்காரம்,

பிரேமா.

அன்றிரவு முரளி சென்னைக்குப் புறப்பட்டு விட்டான்; சோர்வுடனல்ல உற்சாகத்துடன்!

* * *

காதைத் துளைக்கும் சப்தத்துடன் ஓடுகிறது ரயில் வண்டி. இரண்டாவது வகுப்பு வண்டியில் படுத்துக்கொண்டே பிரேமாவின் பிரேம காகிதத்தைத் திருப்பித் திருப்பிப் படிக்கிறான். புதைபொருள்களைத் தோண்டி எடுப்பதைப்போலப் புதியபுதிய வியாக்யானங்களைக் கற்பிக்கின்றது அவன் மனம்.

கிராம வாழ்க்கை மனிதரின் உடலமைப்பை மாற்றலாம்; ஆனால் மன உறுதியை மாற்றுவதில்லை! இதன் பொருள் பிரேமாவின் பிரதிக்ஞையைப் பிரதிபலிப்பதைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்? நகர வாழ்வின் தன்மையை அறியேனென்கிறாள். ஆம்! என் நெஞ்சத்தைப் பிளந்துகாட்டும் சக்தி இருந்தால் காட்டி இருப்பேன் நகர வாழ்வின் தன்மையை!

இது வீண் ஆசையாகிவிடுமா? அல்லது............

ஒரு கிறிஸ்துவப்பெண் ஹிந்துவை எப்படி மணக்க முடியும்? அவள் பெற்றோர்கள் சம்மதித்தாலும் என் பெற்றோர்கள் இணங்குவார்களா? தேசியம் பேசுகிறார் என் தகப்பனார். உடுப்பதும் கதர்தான். ஒரே தேசம், ஒரே சமுதாயமென்ற கொள்கையை அனுபவத்தில் கடைப் பிடிப்பவர்கள் எத்தனை பேர்?

எப்படியானால் என்ன? இதோ பிரேமா பிரதிக்ஞை செய்திருக்கிறாள். இறைவன் முன் நிலையில் நானும் சபதம் செய்கிறேன் மணந்தால் அவளை மணப்பதென்று!

"போடா பயித்தியக்காரா!" என்கிறார் அடுத்த வண்டியில் யாரோ ஒருவர் இன்னொருவரைப் பார்த்து!

* * *

பச்சையப்பன் கல்லூரி ஹாஸ்டலில் புத்தகத்தை விரித்து வைத்துக்கொண்டு படுத்திருந்த முரளிக்கு மேற் குறிப்பிட்ட காட்சிகள் ஒவ்வொன்றாகச் சினிமாப்படம் மாறுவது போல மாறி மாறித் தோன்றின புத்தகத்தில்! பரீட்சை முடியும் வரையில் தான் தலை விதியே என்று படிப்பில் கவனம் செலுத்தவேண்டும். பரீட்சைமுடிந்து விட்டதால் நாளை கிராமத்துக்குக் கிளம்ப வேண்டியவன்தானே? கிராமத்தை நினைத்தால் பிரேமாவை எப்படி நினைக்காமலிருக்கமுடியும்?

"முரளி! முரளி!"

முரளியின் கனவு சிதைந்தது. இரண்டு நண்பர்கள் அறையில் நுழைந்தார்கள்.

"பரிட்சைதான் முடிந்து தொலைந்து விட்டதே. இன்னும் ஏன் கட்டி அழுகிறாய் புத்தகத்தை! இதோ ஒரு புது சிநேகிதனைக் கொண்டுவந்திருக்கிறேன் பார்!" என்றான் சாம்பசிவன் என்ற ஒரு நண்பன்.

"ஓ! வாருங்கள்! உட்காருங்கள்!" என்று நண்பர்களை உபசரித்துத் தானும் பக்கத்தில் உட்கார்ந்தான் முரளி.

"முரளி! இவர்தான் மிஸ்டர் லூயிஸ்! எம்.பி.பி.எஸ். பரீட்சைக்கு இவ்வருஷம் எழுதியிருக்கிறார். உங்க ஊர் மாப்பிள்ளையப்பா!" என்றான் சாம்பசிவன்.

"என் கிராமத்து மாப்பிள்ளையா? ரொம்ப சந்தோஷம்?......ஆனால் நான் கிராமத்தில் பார்த்ததே இல்லையே உங்களை!............ மாமனார் பெயர்?..............."

"இனிமேல் பார்ப்பாய்! கல்யாணமே அடுத்தவாரம்தானே! பத்திரிகை கொடுக்கத்தான் வந்தோம்!" என்று சொல்லி விட்டு அழகாகஅச்சிட்ட ஒரு பத்திரிகையை முரளியிடம் சாம்பசிவன் கொடுத்தான்.

முரளிக்கு அவன் கண்களை அவனால் நம்ப முடியவில்லை. பத்திரிகையில் பிரேமாவின் பெயரல்லவா இருக்கிறது. பிரேமாவுக்கும் லூயிஸுக்கும் கல்யாணமா? பிரேமாவின் வைராக்யம் என்னவாயிற்று?

முரளியின் மூளை குழம்பியது. எதிரில் இருப்பவைகளெல்லாம் "விர்" என்று சுற்றுவதைப் போலிருந்தன. வானம் இடிந்துவிடவில்லை; பூமியும் பிளந்துவிடவில்லை. ஆனால் இரண்டையுமே விழுங்கிய பிரளயம்தோன்றிவிட்ட மாதிரி இருந்தது முரளியின் திருஷ்டிக்கு.

"என்ன அப்படிப் பார்க்கிறாய் பத்திரிகையை! அச்சுப் பிழை இருக்கிறதோ! அவசரத்தில் அடித்ததுதானே அப்பா! மிஸ்டர் லூயிஸ் கிளம்புகிறார் நாளை கிராமத்துக்கு; நீயும் சேர்ந்துபோகலாமே!"

"இல்லை! எனக்குச் சென்னையில் இன்னும் கொஞ்சம் வேலை இருக்கிறது.........!"

"என்ன வேலை இருந்தாலும் கல்யாணத்துக்கு முதல் நாளாவது வந்துவிட வேண்டும்; உங்களை எதிர்பார்ப்பேன்" என்று சொல்லிவிட்டுப் போனான் லூயிஸ்.

சில நிமிடங்களுக்கு முன்பு வரையில் பிரேமாவைப் பற்றி இன்பக் கனவுகள் கண்டுகொண்டிருந்தான் முரளி! எவ்வளவு பயங்கரமான, துரிதமான சிதைவு! மேஜை மீதிருந்த பத்திரிகை அவனைப் பரிகசித்தது.

"போடா பைத்தியக்காரா! ஜாதி, மதம், குலம், ஆசாரம் எல்லாவற்றையும் விட்டு ஒரு கிறிஸ்துவப் பெண்ணிடம் ஆசையாம், காதலாம்! நாவலென்று நினைத்து விட்டாயோ நிஜவாழ்க்கையை! பொழுது போகாத சோம்பேறி எழுத்தாளர்கள் பேனா முனையில் கட்டுவார்கள் கற்பனைக் கோட்டைகளை! அனுபவ அனுஷ்டானக் காற்றிலே சிதறிப் போகுமடா அந்தக் கோட்டைகள்! சபதமும் விரதமும் வைராக்யமும் சமூக சம்பிரதாயங்களுக்கு முன் எம்மாத்திரம்?"

இப்படிக் கேலி செய்கிறது மேஜையின் மீதிருந்த உயிரும் உணர்ச்சியுமற்ற அச்சடித்த காகிதம்.

"இந்தக் கல்யாணத்துக்கு, பிரேமா சம்மதித்திருப்பாளா? சம்மதிக்காமல் என்ன செய்ய? என்ன இருந்தாலும் அவள் பெண் தானே?......பெண்ணாயிருந்தால் அவளை ஹ்ருதயத்திலே வைத்து இன்பக் கோட்டைகள் கட்டிய என் கதி? பெண்களின் வைராக்யமும் விரதமும் இவ்வளவுதானா?............"

அறையைப் பூட்டிக்கொண்டு வெளியே கிளம்பினான் முரளி. கடற்கரையில் போய் உட்கார்ந்துகொண்டான். அரைப் பிறைச்சந்திர வெளிச்சத்தில் எதிரே அலை மோதியது. சிகையைப் பிய்த்துவிடும் போல அவ்வளவு வேகமாக அடித்தது காற்று. அவை முரளியின் ஹ்ருதயக்கொந்தளிப்பை ஒத்திருந்தன.

* * *

சித்திரைப் பௌர்ணமி! பால்போலக் காய்கிறது நிலவு. கிராமத்தில் தெருக் கோடியிலுள்ள குளத்தங்கரையினருகில் மூங்கில் தோப்பு. அங்கே தன்னந்தனிமையாக நிற்கிறான் முரளி.

எங்கோ ஒரு கிறிஸ்துவ தேவாயலத்தில் மணிகள் அடிக்கின்றன, அன்றிரவு ஆலயத்தில் ஒரு திருமணம் நடைபெறப் போவதை அறிவிக்க. இன்னும் ஒரு மணி நேரத்தில் பிரேமாவும் லூயிஸூம் இறைவன் சன்னிதானத்தில் கணவன் மனைவிகளாகிவிடுவார்கள். பிறகு எவரால் பிரிக்கமுடியும் அவர்களை!

எல்லோரும் இப்பொழுது புறப்பட்டுக் கொண்டிருப்பார்கள் கோவிலுக்கு. மலர் மாலையுடன் மண உடையில் பிரேமா எப்படி இருப்பாள்? முரளியின் கண் முன் செல்லுவது போலிருக்கிறது மண ஊர்வலம். பிரேமா போகிறாள் முன்னால்! எவ்வளவு உற்சாகம்! எவ்வளவு முக மலர்ச்சி! அட பாபி! மனிதரின் மனதை மாற்றுவது கிராமமா நகரமா? சதி செய்து விட்டாயே என் வாழ்வில்!

"சதி செய்தாளா? யார் யாருக்குச் சதி செய்தது. பெண்கள் சபல சித்த முடையவர்களென்பது தெரிந்தும் அவளிடம் அமித நம்பிக்கை வைத்தது உன் தவறா, அவள் தவறா?" என்று கேட்டு நகைப்பது போல் ஆடியது சந்திரபிம்பம் குளத்தினுள்.

"காதல் இன்றேல் சாதல் என்று பிதற்றினானே கவியரசன் பாரதி! இப்பொழுது நீ செத்துவிடுவாயோ? எங்கே மரணத்தை அழை பார்ப்போம்! அந்தத் துணிவு ஏதடா உனக்கு?" என்று கிண்டல் செய்தது மூங்கில்களின் வழியாக அடித்த இளம் காற்று.

"ஸ்வாமி!"

நிசப்தத்தைப் பிளந்துகொண்டு வந்தது மிருதுவான, ஆனால் தழுதழுத்த ஒரு குரல். முரளி திடுக்கிட்டான்.

"ஸ்வாமி!"

மீண்டும் அதே குரல்.

"யார்? பிரேமா........"

"ஆம். ஸ்வாமி! உங்கள் பிரேமா!"

பூர்த்தியான அலங்காரங்களுடன் குளக்கரையோரமாக மூங்கில் தோப்பினுள் நுழைந்தாள் பிரேமா.

"பிரேமா! இங்கே ஏன் வந்தாய்? இந்த அலங்காரங்களுடன் இந்த நேரத்தில்......"

"லல்லு சொன்னாள் நீங்கள் குளக்கரை போனதாக! ஆகையால்தான் கொல்லைக் கதவைத் 'திறந்துகொண்டு ஒருவரும் அறியாமல் ஓடிவந்தேன்!"

"ஏன் வந்தாய் என்றுதான் கேட்டேன்?"

"ஏன் வந்தேனா?.........ஸ்வாமி.........."

"அழாதே பிரேமா! விதி அவ்வளவுதான். என்ன செய்யலாம்! போ! யாராவது பார்த்துவிடப் போகிறார்கள்."

"போகவா? போவதற்காக வரவில்லை நான்!"

பிரேமாவின் தொனி மாறியது. கண்கள் கண்ணீரை வடித்தன. ஆனால் உறுதியைப் பிரதிபலித்தது குரல்.

"இது உண்மையா பிரேமா! இன்னமும் என்னை நேசிக்கிறாயா?............"

"இல்லாமலா இங்கு வந்தேன் ஸ்வாமி!"

"பிரேமா! நம் மனோரதம்............"

"நிறைவேற்றும் சக்தி நமக்குண்டு!"

"எப்படி?"

"அதோ அந்தத் தடாகம் சொல்லும்!"

சில நிமிடங்களுக்குப் பின் தடாகத்திலே ஒரு சப்தம். ஜலத்தினுள் தெளிவாகப் பிரதிபலித்த சந்திரனின் பிரதிபிம்பம் சிதைந்தது.

பால்போன்ற நிலவு மீண்டும் காய்ந்தது. குளத்தில் மிதந்த பிணங்களைப் பார்த்துப் பரிகசித்தான் சந்திரன். அந்தச் சோகக் காட்சியைக் காண மனம் தாளாமல் 'ஓ' வென்று அழவாரம்பித்தன மூங்கில்கள். அந்த அழுகை இன்னும் நிற்கவில்லை.

# கார்த்திகை விரதம்

யோகி சுத்தானந்த பாரதியார்

இந்து தர்மத்தின் வேர் அறம், கிளை பொருள், மலர் இன்பம், கனி மோட்சம். இவையே ஒரு மனிதன் அடையவேண்டிய நாற்பொருள்கள். இந்த நாற்பொருளடைவிற்கும் மனிதனைத் தயாராக்க இந்து தருமம் ஆச்ரம விதிகளையும், விரத நியமங்களையும் விதிக்கிறது.

நமது விரதங்கள் சுகாதாரமானவை.

"நீ எதை உண்டாலும் செய்தாலும் அதை எனக்கே அர்ப்பணமாகச் செய்—தத் குருஷ்வ மதர்ப்பணம்—என்பது கீதா வாக்கு. உண்பதுகூட வைச்வானர பூஜையாகவே இந்து தருமம் கருதுகிறது.

உண்ணும் பணியை
உடல் வாழ் பரமனுக்கே
பண்ணும் பணியாகப் பார்.

நமக்கெல்லாம் ஞாயிறு விடுமுறை வேண்டியிருக்கிறது; ஓயாது வேலை செய்தால் அலுத்துப் போகிறது; கண்ணுக்கு உறக்கம் வேண்டியிருக்கிறது; உடம்பு சும்மா நடக்கவே உழைக்கவே முடியாது; கொஞ்சம் விழுந்து புரளவேண்டும்; உண்ட மயக்கம் தொண்டருக்கும். அதே மாதிரி அல்லும் பகலும் தானாக வேலை செய்யும் வயிற்றுக்கும் குடலுக்கும் ஓய்வு தரவேண்டி யிருக்கிறது. இந்த ஓய்வினால் உள்ளே அடைந்த சாக்கடைச் சரக்குகளெல்லாம் வெளியேறும். வயிறு புதிய தீவனத்திற்குத் தயாராகும்; நல்ல பசி யெடுக்கும். அத்துடன் நரம்புகள் வசப்படும். மனம் அடங்கும். கட்டுக்கு மீறித் துள்ளிக் குதிக்கும் மனமே எல்லாத் தொல்லைக்கும் காரணம். ஒருநாள் பட்டினி போட்டால் அதன் கொட்டம் அடங்கிப்போகும். இதுதான் உபவாச ரகசியம்.

"உண்ணுமை மாற்றும்
உடற்பிணியைக் காற்றொளி நீர்
மண் வாழ்வார்க் காகு மருந்து"

இதில் சுகாதார விதிகளெல்லாம் அடங்கியுள்ளது. "லங்கணம் பரம ஔஷதம்" பட்டினியே சிறந்த மருந்து என்பது பழமொழி.

இந்தக் கருத்தைக்கொண்டுதான் ஏகாதசிவிரதம், சாந்திராயணம், அமாவாசை விரதம், பக்ஷோபவாசம், பிரதோஷ விரதம், கார்த்திகை விரதம் முதலியவை ஏற்பட்டன. இவற்றை அனுஷ்டித்தால் நோயுமில்லை, மருந்தும் தேவையில்லை; சுகமாக நூறாண்டு வாழலாம்.

இந்தக் காலம் கண் சொக்கிப் படுக்கையில் விழுமட்டும் மனிதன் அசை போட்டுத் தீர்க்கிறான். உணவுக் கட்டுப்பாடு கடுமையாயிருந்தும் வாய்—வயிறுகளை அவன் கட்டுப்படுத்தவில்லை. காப்பிக் கடைகள்வேறு மஸால் வடை முதல் மைசூர் பாகு வரையில், பண்ணிக் குவித்து வயிற்றுக்குச் சுமையேற்றுகின்றன; வெங்காயம் பச்சைமிளகாய் சர்க்கரை சேர்த்த எதுவானாலும் ஆட்கள் வயிற்றுக் கச்சந்தியில் வாரியடைக்கின்றனர். காப்பி, தேயிலை, கோகோ முதல் விஸ்கி வரையில் ஆளைக் கெடுக்கும் குடிகள்வேறு வயிற்றைக் கெடுக்கின்றன. இக்காலம் விரதம், தவம், ஜபம் என்றால் நம்மை ஒண்ணும்பசலி அசடுகளாக நினைக்கின்றார்கள்.

என்னையும் அப்படி நினைத்தாலும் சரி—ஏகாதசி விரதமும், கிருத்திகை விரதமும் இருந்து பாருங்கள் என்றே சொல்லுகிறேன்.

கிருத்திகை இந்துக்களுக்குப் புண்ணிய நாள். இது சிவனுக்கும், முருகனுக்கும் சிறந்தநாள். இன்று உபவாசமிருந்து, வயிற்றை மறந்து, கடவுளையே நினைத்து, அவன் அருட் சோதியைத் தியானம் செய்யவேண்டும். இந்த அருட் சோதியை உருவாகக் காட்டத்தான் கார்த்திகை தீபம் ஏற்பட்டது. திரு அண்ணாமலைச்

சிகரத்தில் எரியும் தீபம் நமது சிகர ஜோதியான, சிவஜோதியை, சுத்தான்ம சூரிய ஜோதியைக் குறிக்கும். வேத காலத்தில் உருத் தொழுகை இல்லை. சிவன், விஷ்ணு, பிரம்மா, அக்னி, சூரியன், வருணன், இந்திரன் முதலிய தேவதைகள் ஒரே பிரம்மத்தின் பல குண வடிவங்களே.

பலர் பற்பலவாகப்
பாரிற் பகர்வர்
உளன் ஒருவனென்றே யுணர்.

இந்த ஒரே பொருளை வேதரிஷிகள் இயற்கையின் உள்ளத்திலும், உயிர்களின் உள்ளத்திலும் ஆத்மஜோதியாகக் கண்டனர். இந்தச் சுத்தான்ம ஜோதி வணக்கமே காயித்திரி உபாஸனையாகும்—தத்ஸவிதுர் வரேண்யம்—சூரிய சாவித்திரியான சுத்த பரமாத்மனே உயர்ந்த பொருள்; அதைத் தியானிப்போம், அது நம்மைப் பரஞ்சோதி காட்டி நடத்தும் என்பதே நமது மந்திரங்களின் பொருள். புருஷஸூக்தம் இந்த சுத்தஜோதியை இவ்வாறு விளக்குகிறது.

ज्वालमाला कुलं भाति
विश्वस्यायतनं महत्

இதய மத்தியில் பிரம்மாக்னி பெருந் தீக் கொழுந்தாகப் பொலிகிறது. அதுவே உடலைக் கனலுறுத்தும் மஹாக்னி. அதுவே உலகின் சக்திக் கனல். இந்த ஜோதிப் பிரம்மத்தின் அந்தப் பிரம ஜோதியாலேதான் எல்லா உயிர்களும் ஒளிர்கின்றன.

तस्य भासा सर्वमिदं विभाति

"ஆயிரம் கதிர்வீசி, விச்வரூப ஜோதி சூரியன் ஹ்ருதயவானில் எழுகிறதுபார்!" என்று வேத ரிஷி நம்மை அழைக்கிறார்.

இந்த ஜோதி ப்ரம்மத்தியான சித்திக்கே வேத ரிஷிகள் சூரியன், அக்னி முதலிய ஒளிப் பொருள்களைப் பாவனா வஸ்துக்களாகக் கொண்டனர்.

கார்த்திகை தீபத்தின் உட்பொருள் இதுதான்—புறவொளி நிறைவைக் கண்டு உள்ளொளி நிறைவை உணர்தல். அந்த உள்ளொளிக் காட்சிக்கு மனதையும் இந்திரியங்களையும் கட்டுப்படுத்தும் வைராக்யம் வேண்டும். வைராக்கியத்திற்கு விரதம் ஒரு சாதனம். புலனடக்கிச் சிரத்தையுடன் அனுஷ்டித்தால் அறிவொளி பெறலாம்.

ச்ரத்தாவான் லபதே ஞானம்
தத்பர: ஸம்யதேந்த்ரிய:

கார்த்திகையன்று விசேஷமாக முருகனை உபாசிப்பவர் பலர். முருகனுக்குக் கார்த்திகேயன் என்று பெயர். முருகன் என்றால் தமிழருக்கு ஆவேசம் உண்டாகிறது. காவடியும் திருப்புகழும் எதிரே நிற்கின்றன. முருகோபாசனையின் உயர்ந்த பயனை அருணகிரிநாதர் கந்தர் அனுபூதியிற் பாடுகிறார்.

தூசா மணியும் துகிலும் புனைவான்
நேசா முருகா நினதன்பருளால்
ஆசா நிகளம் துகளாகிய பின்
பேசா அனுபூதி பிறந்ததுவே!

முருகன் என்பதும் ஜோதி வடிவே. சிவக்கனல் வடிவே முருகன். கனல் என்பது தெய்வ சக்தி. மனிதான் மாவைக் காமக் குரோதாதிப் படைகளால் அழிக்கும் அகங்கார ராக்ஷஸனான சூரபத்மனை, தெய்வக் கனலால் வென்றொழிப்பதுதான் ஸ்கந்த புராண ரகசியமாகும். சிவக் கனலான முருகன் நம்மவரை ஆவேசப்படுத்துகிறான், முருகன் என்றாலே அறிவு, இளமை, அழகு, எழில், இன்பம், வீரம், ஆற்றல், சக்தி இவை உள்ளத்தில் ஊறுகின்றன. கார்த்திகையன்று சிவ ஷண்முகனை இவ்வாறு தியானிப்போமாக:—

நமது நாட்டை அழிக்கும் அசுர அதர்மப்பேய்கள் ஒழிய முருகனை வணங்குவோம்.

சக்திக் கனலே சமர்செய் பகையைக்
குத்திக் குமுறும் கொதிவேற் கரனே
தொத்தித் தொடருந் துயரம் களைவாய்
பத்தர்க் கருளும் பரமன் மகனே!
அருளார் முகமும் அடியார்க் கபயம்
தருபொற் கரமுந் தணலார் விழியும்
கருணை பொழியும் கனிவாய் நகையும்
திருமார் பழகுந் திகழும் முருகா!
தாயிற் பெரிதாய தயாபரனே
நேயர்க் குபசாந்த நிகேதனனே
காயத் திரியின் கருவே குக ஓம்
தேயச் சுடரே சிவஷண்முகனே!

# ஸந்த்யா

அ. சுவாமிநாதன்

‘கிளையில் உட்கார்ந்து பாடும் எழில் பறவையே! என் இதயத்தை ஏன் வதைக்கிறாய்? என் பொய்க் ‘காதல்’ மெய்யாக இருந்ததே! அந்தக் காலத்தின் ஆனந்தத்தை இப்பொழுது நினைப்பூட்டுகிறாய்! என் இதயத்தை ஏன் வதைக்கிறாய்?’

அருணோதயத்திலிருந்து தன் அன்பனைக் காணாது தவிக்கும் அந்தி விந்தைக் குமரிக்கு, பொழுது செல்லச் செல்ல ஊடலின் வெம்மை தாங்க முடியாக் கொடுமையாகி விடுகிறது. பிரிவாற்றாமையின் தாபத்தால், முன்னிரவு அணைந்து சென்ற காதலன், அன்று காலையிலிருந்து காணக் கிடைக்காததற்கே ஏதோ பல வருஷங்களாகத் தன் காதலன் தன்னைப் புறக்கணித்து விட்டது போல் கனவு கண்டு பொருமுகிறாள்.

மேலும் இயற்கையும் அவளுடன் போட்டி போடுகிறது. மலையிலுள்ள மரங்கள், தாங்கமுடியா மலர்ச் சுமையுடன் நின்றாடுகின்றன. காட்டின் எல்லைப்புறம், குயிலின் குரலையும், பல பறவைகளின் உருவற்ற நாதத்தையும் எதிரொலிக்கச் செய்கின்றது. இவைகளாலெல்லாம் கலங்காத உறுதியுடன் இருக்கின்றன சிறு குன்றுகள். ஆனால் இக் குன்றுகளைக் காண்பவர் உள்ளத்தில் காதல் கனிகின்றது. குயிலின் கூவுதலும், வண்டின் ரீங்காரமும், கனலை ஊதி வளர்க்கின்றன.

.........தேவி ஸந்த்யா பெருமூச்செறிகிறாள். இரவின் இருளலைகளைச் சந்திரன் அழிப்பதுபோல், அவள் எண்ண அலைகளை அழிக்கத் தாபம் பொங்கி எழுகிறது. அறிவு, காதல் நினைவாகிய போதையிலாழ்ந்துவிடத் தயாராகிறது. ஆனால், உணர்ச்சியோ ஊடலில் தவித்து உள்ளம் கலங்குகிற நிலையை ஊக்குகிறது. போராட்டம் பலமாகிறது.

......ஏ காதலே!—உன்னைச் சிறப்பித்துக் கவிஞர் செய்யுள் செய்வர்: உனக்கு ஆயர்கள் ஆனந்தமாய்க் குழல் ஊதுவர்; உனக்காகக் கன்னியர் தம் தனி மாடத்தில் பெருமூச்செறிவர்; பன்னாட்கள் பாவலர்கள் உன்னைப் பாடிக்கொண்டே இருப்பர். உலகம் முழுவதும் உன் புகழ் ஒலிக்கும். ஆனால், நானோ உன்னைப் போற்றாதது மன்றித் தூற்றவே செய்கிறேன், ஆம்! நீ எனக்கென்ன அளித்து விட்டாய்? உன்னைப் புகழ்ந்து கொண்டாட.

நீ பூமியினின்று எழுந்து அரக்கன் போல் வானுற வளர்ந்து எனக்குப் பயங்கரத் தோற்றத்தை அளிக்கிறாயே; அதற்கு உனக்குப் புகழ்மாலை வேறா?

நீ பூமியில் இருளையும் மின்னலையும் நிறைத்து என்னிடம் வரும்பொழுது, நான் காற்றில் மிதக்கும் இலைபோலும், மலரில் எழும் மணம் போலும், காட்டுத் தீயிலகப்பட்ட பறவைபோலும் இருக்கிறேனே யென்பதற்காகவா உனக்கு வெற்றி மாலை!.........சே சே, உனக்காக என் நேரத்தை வீணாக்குகிறேனே. உன் சூழ்ச்சி நிறைந்த பார்வையை அன்றே கண்டுகொண்டிருந்தால்.........என் காதலனைப் பிரித்துச் சென்று வேறொரு காரிகைக்கு நீ அளித்திருக்க முடியாதல்லவா? ...........ஏ காதலே! நீ எதையும் தகித்து அழிக்கும் தழலாய் எழுந்துள்ளாயே! என்னையும் தகித்து அமரர் உலகம் ஏற்றாயோ.................?

ஸந்த்யாவின் தாபம் எளிதில் தணிவதாயில்லை. தண்ணருள் வாய்ந்த அவளுடைய அன்பன் ஆதவன் வருகையிலன்றி வேறெதில் குளிர முடியும் அவள் உள்ளம்?

* * *

....அஸ்தமன சமயம்; மேல் வானம் தாமிரத்தை உருக்கி வார்த்தாற்போல் 'தகதக' வென்றிருக்கிறது. படர்ந்த மஞ்சள் வெயில் பூமியிலுள்ள சகல வஸ்துக்களின் மேலும் விழுந்து அவை களைப் பொன்னிறமாக்கிக் கொண்டிருக் கிறது.

திடீரென்று தோன்றி............விசனச் சாயைகள் மதிவதனத்தில் படர, பொலி வற்ற பூங்கொடி போல் துவண்டு சரிந்து விழுந்துகொண்டிருந்த குமரியைக் கையிலேந்தி......அவள் கோமள மேனி யைத் தழுவினன் ஒளிக் கோலப் பரிதிக் குமரன். அத் தழுவலின் பரவசத்திலே பால்போன்ற அவள் வெண் மேனி செம்மேனியாய்ச் சிவக்கிறது. அவளது மேனிச் சிவப்பின் மேன்மையால் வான மெல்லாம் பூஞ்சிவப்புக் கூடிய பொன் னொளியாய்ப் புன்னகையாகிறது. ஆனல், அதே சமயத்தில் இதனைக் கீழ்த்திசை வானத்திலே, காலைக் கன்னியாகிய உஷை காண்கிருள். அவள் முகத்தில் பொருமை நிறைய, அவ்விடத்தில் வானம் கறுத்து இருண்டு விட்டது. நல்ல வேளையாகச் சூரியன் இதனைக் கவனிக்கவில்லை.

காந்தன் முகம் கனிவு சொட்ட ஆரம் பித்தது!.......தேவியைச் சாந்தப்படுத்த முற்பட்டான்.

'என் அன்பே, நான் வர நேரமாகி விட்டதென்று விசனத்திலாழ்ந்து விட் டாயோ?'

'சுவாமி! தாங்கள் இப்படி என்னைத் தினமும் வருத்த வேண்டாம். காலையில், நான் கண் விழித்தெழுவதற்குள் கிளம்பி எங்கெங்கோ சென்று இஷ்டப்படி யெல்லாம் இருந்துவிட்டு, மாலை மங்கும் நேரத்திலாவது என்னை வந்து காண வேண்டுமென்று தோன்றிற்ரு?'

'இன்று தேவிக்கு என்ன இவ்வளவு கோபம்? உனக்காகவே, என் கடமை களைக் கடிதில் முடித்துக்கொண்டு வேக மாக வந்துகொண்டிருந்தேன். வழியில் ஒரு விசித்திர சம்பவம். அதனல் சற்றுத் தாமதமாகிவிட்டது. அதற்குள் இவ் வளவு சந்தேகமா? அப்பா பெண்மையே! ......கிட்டத்தட்ட 'இதே' தான் அவன்


# இந்தியன் பாங்க் லிமிடெட்

**இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,**
**நார்த் பீச் ரோட், மதராஸ்.**

●

மதராஸ் ஆபீஸ்கள்:

எஸ்பிளேனட், மவுண்ட் ரோடு,
திருவல்லிக்கேணி, தியாகராயநகர்,
மயிலாப்பூர், புரசைவாக்கம்,
எழும்பூர்.

●

தென் இந்தியாவில் எல்லா முக் கியமான இடங்களிலும் பம்பா யிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

●

| | |
|---|---|
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | - ரூ. 72,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ 53,00 000 |
| ரிஸர்வ் நிதி | - ரூ. 62,00,000 |

●

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

**N. கோபால அய்யர்.**
செக்ரெடரி.

தினமும் கையாளும் தந்திரம், அவள் தாபத்தை நீக்கி ஊடலைப் போக்க. சற்று நேரத்தில் அவள் பிணக்கம் சரியாகிவிடும்.

'அதிருக்கட்டும், தாங்கள் வழியில் ஏதோ விந்தையைக் கண்டதாகக் கூறி னீர்களே! அந்த அதிசயத்தை எனக்குக் கூறக் கூடாதா?' இது ஸந்த்யாவின் கோபம் தணிந்துவிட்டதற்கு அடையா ளம். கதிரவனும் களங்க மற்ற உள்ளத் துடன் எப்படித்தான் கதையைத்தொடங் கினனோ?.........

* * *

'ஸந்த்யா! இன்று மனிதர்களின் காதல் தன்மையைக் கண்டேன். ரொம்ப விசித்திரமாயிருந்தது. கதையைக் கேள்;- ஆம், விந்தியமலைச் சாரலில்தான் அந்த விந்தையைக் கண்டேன். பூம்பொழில் நிறைந்த ஓரிடத்தில் பூம்பாவை யொரு வள் பெருங்காற்றில் சிக்குண்ட பூங் கொடிபோல் பரதவித்துக்கொண்டிருந் தாள். எனக்கு மிகவும் பரிதாபகரமாகத் தோற்றியது அவள் நிலை. பூமியில் இறங்கி அவள் விசனத்துக்குக் காரணம் யாதென விசாரித்துத் தெளியலாமா வென்று சிந்தித்தேன். நான் ஒரு முடி வுக்கு வருவதற்குள்ளாகவே, அவளுடைய தோழி ஒருத்தி அங்கு வந்தாள். இனி என்ன நடக்கிறது பார்க்கலாமென்று ஒரு மரத்திற்குப்பின் மறைந்துகொண்டு அவர்கள் நடவடிக்கையைக் கூர்ந்து கவனித்தேன். அங்கு அவர்கள் பேசிக் கொண்டதிலிருந்து, அந்த இள மங்கை யின் நாயகனுக்கு ஒரு சோர நாயகி உண் டென்றும், அவன் அங்கே சென்று திரும் பாதது கண்டு, அந்தக் கட்டழகி மனம் விண்டு வாய் திறந்து அரற்றுகிருள் என் பதையும் தெரிந்துகொண்டேன். உடனே, ஓடிச் சென்று அவள் நாயகனின், கள்ள நாயகியின் இருப்பிடத்தைத் தேடி யடைந்தேன். அங்கு நான் கண்ட காட்சி தான் என்னே! தன்னை மறந்த தனிநிலை யிலாழ்ந்து, கொள்ளையின்பம் குலவு கவி தையில் மனதைப் பறி கொடுத்துவிட்ட பாவலன்போல, அவர்கள் அங்கு ஒன்றி ஒரு மனத்தோடு காதல் நாடகம் நடத் திக்கொண்டிருந்தனர். போதை யெல் லாம் சிறிது நேரத்துக்குத்தான். பிறகு, 'தாய் காத்திருப்பாள்' என்று கூறி விடை பெற்றுக் கிளம்பினன். எங்கு சென்ருன் என்று நினைக்கிருய்? நேரே, அந்தப் பூஞ்சோலையைத் தேடி யடைந்து, தன் நாயகியைக் கண்டு நிரம்பவும் கனி வுடன் காதல் மொழி பேசி, 'கண்ணே, முத்தே,' என்று குலவ ஆரம்பித்துவிட் டான்!............எனக்கு அதற்குமேல் அங்கு நிற்பதற்கு வெட்கமாய்ப் போய் விட்டது. அத்துடன் உன் நினைவு வேறு. வேகமாகக் கிளம்பி ஓடிவந்தேன். இதற் குள்தான் இங்கே தேவி கோபாக்ரகத்துக் குள் பிரவேசித்து விட்டார்கள்?......... என்று கூறி நிறுத்தினன்.

* * *

ஸந்த்யா, அளவு கடந்த பாசத்தோடு அவனை இறுகத்தழுவிக்கொண்டே, 'இந் தப்போலிக் காதலெல்லாம் மானிடர் உல கில்தான்; நமக்கென்ன அதைப்பற்றிக் கவலை?' என்றுகூறிச் சிரித்தாள்.

ஏதோ ஒருவித இன்ப லாகிரி அவள் மனதைக் கிளரும் பொழுது அவளால் தன் நிலையை இந்தக் கதையுடன் ஒப்பிட்டுப் பார்க்கக்கூட முடியவில்லை! பாவம்.

சிறிது நேரம் உரக்கச் சிரித்துக் கொண்டே என்ன என்னவோ பேசிக் கொண்டிருந்தார்கள். வரவர அமைதி நிலவ ஆரம்பித்தது. ஸந்த்யாவை நித்ரா தேவி தன் வசமாக்கிக்கொண்டாள். கதி ரவன் கண்டான் தருணமீதே யென்று. தன் கழுத்திலிருந்தும் அவள் கழுத்திலி ருந்தும் ஓரொரு மலர் மாலைகளை நீக்கி, அவற்றை ஒன்ருய்ப் பிணைத்து, அதனைத் தலைக்கு உயரமாக வைத்து, அப்படியே ஸந்த்யாவை அதில் கிடத்திவிட்டுக் கிளம்பினன்............

ஆயிற்று. கிழக்கு வெளுத்தது! காலைக் கன்னி கனிவு முகத்துடன் கதிரவனை வரவேற்றுக் களிப்புக் கடலில் ஆழ்த் தினள். அவன் உணர்ச்சியோடு உவகை பொங்க, 'உஷா......உஷா' என்று பல முறை அவள் நாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்தான்.

ஆனல், அங்கோ!...காலையில் எழுந்து தன் காதலனைக் காணுது விசனத்தில் ஆழ்ந்த ஸந்த்யா, பரிதாபகரமான தோற்றத்துடன், சோகம் கலந்த பார் வையால், கீழே பூமியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்!

# சமையல் தெரிய வேண்டுமா?

குட்டு

சுயம்பாகம் ஒரு ஸௌந்தர்யக் கலை. சித்திரத்திலுள்ள ஜீவன், சித்திரான்னங்களிலும் உண்டு. சங்கீத நயத்தைச் சமையலிலும் காணலாம். போஜ மகாராஜனும், காளிதாஸனும் சேர்ந்து கவிதைகளிலிருந்து வடித்த ரஸங்களை, போஜனக் கலையிலும் காணலாம்.

சமையலும் சாப்பாடும், பசித்தவுடன் புசித்து முடிப்பதோடு நின்று போகும் விவகாரமல்ல. சமைப்பதற்கும் சாமர்த்தியம் வேண்டும். பரிமாறுவதற்கும் ஒரு பக்குவம் வேண்டும். சாப்பிடுவதற்கும் ஒரு சக்தி வேண்டும்.

சமையலும் சாப்பாடும், இன்று, நேற்று, தோன்றிய லௌகிக வியவகாரமல்ல. அவைகளுக்கும் ஒரு பரம்பரை உண்டு; புராணம் உண்டு; இதிஹாஸம் உண்டு; வைதிக ஸம்பிரதாயம் உண்டு; ஆகம நெறியும் உண்டு.

நளமகாராஜனும், பீமசேனனும் சமைப்பதில் கெட்டிக்காரர்கள். குண்டோதரனே சாப்பிடுவதில் கெட்டிக்காரன். ஆரோக்யமான உணவு எது என்பதைச் சொல்லும் ஆகமங்கள் எத்தனை! சாத்வீக உணவு, ராஜஸ உணவு, தாமஸ உணவு என்றெல்லாம் பாகுபாடுகள் எத்தனை! உணவின் அளவு, உட்கொள்ளும் வேளை, நியமம், இவைகளையெல்லாம் கணிக்க விதிகள் எத்தனை!

காடுகளிலும், மலைகளிலும் அமர்ந்து ஆகமங்களையும், உபநிஷதங்களையும் போதித்த பெரியார்களே, ஆகார நியதிகள் பற்றியும், ஆகாராதிகளைக் கட்டுப்படுத்தும் ஔஷத முறைகள் பற்றியும் உபதேசம் செய்திருக்கிறார்கள்:

“தேஹி” என்று வந்து யாசிப்பவர்களுக்கு, ஒரு நாலணா நாணயம் போடலாம். ஒரு ஆழாக்கு அரிசியும் போடலாம். ஆனால், வயிறு நிறையச் சாப்பாடு போட்டு அனுப்புவதற்கு ஈடாகாது. “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்” ஆவர்.

ஆகவே, உயிரை வளர்க்கும் இந்தச் சிறந்த சாதனம், உன்னதமான கலை, பெண்களுக்கே ஏகபோகமான சமையலை, பெண்களே கைவிட்டு விட்டார்கள். 'காலேஜ் மாணவி' என்றால், அவளுக்கு வெந்நீர் வைக்கக்கூடத் தெரியாது என்ற அபக்கியாதி ஏற்பட்டு விட்டது.

என் சிநேகிதி சரஸா, காலேஜில் Chemistry graduate. அவள், ஒரு நாள், நான் இல்லாத சமயம் பார்த்து, என் வீட்டிற்கு வந்திருந்தாள். வீட்டில் என் தாயார் மட்டும்தான் இருந்தாள். தாயாருக்கோ தலை வலி. “ஸரஸா, சகுந்தலா வீட்டில் இல்லை. கொஞ்சம் வெந்நீர் வைத்துக்கொடேன்” என்று சொன்னாளாம் என் தாயார். அவ்வளவுதான் ஸரஸா, அடுப்பங்கரையில் போய், தன் ரஸாயன சக்தி முழுவதையும் உபயோகித்துப் பார்த்தும், அந்தப் பாழும் அடுப்பு, அவளுடன் எந்தவிதமான சமரஸ ஒப்பந்தத்துக்கும் வர மறுத்துவிட்டது. ஒரு மணி நேரம்கழித்து நான் வீடுபோய்ச் சேர்ந்த பிறகுதான், என் தாயாருக்கு வெந்நீர் கிடைத்தது.

“மீன் குஞ்சுக்கு நீந்தச் சொல்லித்தர வேண்டுமா? பெண்களுக்குச் சமையல் சொல்லித்தர வேண்டுமா?” என்று சிலர் சொல்லலாம். மீன் குஞ்சு விஷயம் வேறு. அது தண்ணீரிலேயே பிறந்து, தண்ணீரிலேயே வளர்ந்து, தண்ணீரிலேயே வாழ்கிறது. ஆனால், நமது பெண்களோ, வளர்வது drawing roomல்; வாழ்வது ladies clubல். சமையல் அறை எங்கிருக்கும் என்பதுகூடத் தெரியாது. “எங்காத்துலே Kitchen எங்கேருக்குன்னுகூடத் தெரியாதுடிம்மா, எனக்கு,” என்று பெருமையாகச் சொல்லிக்கொள்ளும் பிருஹஸ்பதினிகள்கூட இருக்கிறார்கள்.

அப்படியே, தப்பித் தவறி, மாமனார் வீடு போனால் சமைக்க வேண்டும் என்ற கவலையால், சில பட்டதாரிணிகள் சமையல் கற்றுக்கொள்ள அரை மனதோடு முன்

வருகிருர்கள். அவர்களுக்கோ, பாக சாஸ் திரம்தான் சுயம்பாக வேதம். சமையல் கற்றுக்கொள்வதென்ருல் வீட்டில் உள்ள பாட்டிகளிடம்தான் கற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் நல்லது. நமது கல்லூரி கோஷ்டியோ, பாட்டிகளை boycott செய்துவிடுகிருர்கள். "பாட்டிகளுக்கென்ன தெரியும்? சுத்தப் பட்டிக்காடு. வேப்பம்பூ துவையல் அரைக்கத்தான் தெரியும். அது வெறும் 'country' சமையல். நாம் சமைத்தால், அது 'modern' சமையலாய் இருக்க வேண்டும்" என்று நமது நவ நாகரிக யுவதிகள் சொல்லிவிட்டு, பாக சாஸ்திரத்தை வாங்கி வைத்துக்கொண்டு, பகவத்கீதைபோல் பாராயணம் செய்கின்ருர்கள்.

பாகசாஸ்திரம் படிப்பது என்பது, 'சங்கீதம் படிப்பது' என்பதைப் போலத்தான். சமையலும் சங்கீதமும், அப்யாசக் கலைகள், பழகப் பழகத்தான் தேர்ச்சி. பாக சாஸ்திரத்தை வைத்துக்கொண்டு உப்புமா செய்யத் துவங்கிய ஸ்ரீமதி ரஜனிதேவி B. A. M. Litt. கடைசியில் அதை உப்பு மாவாகவே அடித்துவிட்டாள். பாக சாஸ்திரத்தை நம்பிஞல், மிளகு ரஸம், மிளகாய் ஜலமாகிவிடும். வெங்காய ஸாம்பார், வெந்தயக் கஷாயமாகிவிடும்.

சமையல் செய்யத் தெரிந்துகொண்டால் மட்டும் போதாது. தெரிந்ததை வைத்துக் கொண்டு ஆராய்ச்சியும் செய்யவேண்டும். புதிய புதிய பதார்த்தங்கள் தயாரிக்கும் விதத்தைக் கண்டுபிடிக்கவேண்டும். கற்பனுசக்தியையும் கொஞ்சம் பிரயோகித்துப் பார்க்கவேண்டும். எனக்கு ஸரஸ்வதி என்ருெரு சிநேகிதை. அவள் நாளைக்கொரு விதமான பதார்த்தமாக, தினந்தோறும் புதுசு புதுசாய்ச் செய்து வைப்பாள்; ரொம்ப கெட்டிக்காரி; கிச்சிலிப் பழத் தோலில் அவள் தயாரித்த ஊறுகாய்க்கு இணை உலகத்திலேயே கிடையாது.

புது தினுஸு பதார்த்தங்களைக் கண்டுபிடிப்பதால் பத்திரிகைகளில், உள்ள மாதர் பகுதிகளின் ஒரு பெரிய குறை தீரும். வாராவாரம் புதிய புதிய பட்சண பதார்த்தங்களைத் தயாரிக்கும் முறைகளை வெளியிட ஆவலாயிருக்கும் அந்தப் பத்திரிகைகளுக்கு, போதுமான விஷயம் கிடைப்பதில்லை. ஆகவே, தேங்காய்ச் சாதம் செய்யும் முறையை, "நாரிகேளான்னம்", "கொப்ருபாத்" என்றெல்லாம் தசவித நாமங்களில் வெளியிட வேண்டியிருக்கிறது. "மோர்க்கூழ்" "Buttermilk Salad" ஆகிறது. 'வெந்த உருளைக்கிழங்கு வில்லைகள்' Vegetable Cutletகள் ஆகிவிடுகின்றன. காரணம்? சமையல் துறையில் போதுமான ஆராய்ச்சி கிடையாது.

சமைப்பது அகௌரவம் என்பது சிலர் கட்சி. இந்த மாதிரி எண்ணம் கொண்டவர்கள் வடிகட்டின முட்டாள்கள் என்று தான் நான் சொல்லுவேன். சமையல்காரர்களை வைத்துக் கொள்ளலாம். வேண்டாமென்று நான் சொல்லவில்லை. ஆனல் சமையல்காரர்களெல்லாம் வெறும் குமாஸ்தாக்கள்தான், வீட்டு எஜமானி தான் சூப்பிரண்டெண்டெண்டு, என்ற ஹோதாவில் நடந்துகொண்டு போகவேண்டும்.

சமையல் அறைதான் குடும்ப வளர்ச்சியின் ஜீவநாடி. "அடுப்பெரிந்தால் அரிசி கொதிக்கும். அரிசி கொதித்தால் அன்னம் நிறையும் அன்னம் நிறைந்தால் வயிறு நிறையும், வயிறு நிறைந்தால் சக்தி நிறையும். சக்தி நிறைந்தால் சம்பாத்யம் நிறையும்." ஆகவே "வரப்புயர" என்று ஔவையார் வாழ்த்தியது போல் 'அடுப்பெரிய' என்று நாம் வாழ்த்தலாம்.

நமது கையால் சமைத்து உண்பதுதான் சிறந்தது. மிளகாய் வறுக்க மின்சாரம் வேண்டாம். வெங்காயத் துவையல் அரைக்க இயந்திர சக்தி வேண்டாம். பலாக்காய் கறி பண்ண "எலக்ட்ரிக் வாணலி" வேண்டாம். இயந்திர சாதனம் நமக்கு அவசியம்தான். ஆனல் கையால் செய்யக் கூடியதைக் கையாலேயே செய்து கொள்ளுங்கள். இயந்திரம் வேண்டாம். தட்டிலிருந்து சாதத்தை எடுத்து வாயில் போட ஏதாவது யந்திரத்தைக் கொண்டு வந்து விடப்போகிறீர்கள்! என்று ராஜாஜி ஒரு முறை சொல்லியிருக்கிருர்.

நமது சமையலின் கலை மதிப்பு அபாரமானது. தென்னிந்திய பதார்த்தங்களின், ருசியும், பக்குவமும், அலாதி. அவ்வளவு தினுசுகள் எங்குமே கிடையாது. அந்தத் தினுசுகளிலும், ஒன்றையொன்று மாற்றி, திரித்து, எவ்வளவோ புது தினுசுகள் செய்யலாம். ஒவ்வொரு பெண்ணும், வீட்டில் சமையல்காரன் இருந்தாலும் சரி, இரண்டு வேளையும் பாட்டு வாத்தியார் வந்தாலும் சரி, காலையில் ஒரு மணி நேரம், மாலையில் ஒரு மணி நேரம், சமையல் அறையில் கழிக்கவேண்டும். பதார்த்தங்களின் நுட்பங்களை அறிந்துகொள்ள வேண்டும். கசப்பாய்க்கசந்து கொண்டுள்ள பாகற்காயையும், ருசியாகப் பக்குவம்

செய்ய வழிகாண வேண்டும். சமையல் அறையில் செலவழிக்கும் நேரம் வீண் போகாது.

பரிமாறும் முறையே ஒரு அலாதி விவகாரம் ஆகும். மேல்நாடுகளில், பதார்த்தம் தயார்செய்யத் தனி கோஷ்டி; பரிமாறத் தனிகோஷ்டி. ஆனால் நமக்கு அவர்களுடைய கத்தியும் ஈட்டியும் வேண்டாம். நாஸுக்காக, பாதிப் பாதி கடித்துவிட்டு வீணாக்கும் நாகரிக துர்வழக்கமும் வேண்டாம். ஆனால், சாப்பிடுகிறவர்களின் சௌகரியத்திற்கு ஏற்றவாறு பரிமாற வேண்டும். பரிமாறுவதில் முதல் விதி விதானம். இரண்டாவது விதி மித உபசாரம். அளவு அறிந்து பரிமாறுவதுதான் சிறந்தது. ''சாப்பிடுங்கள், சாப்பிடுங்கள்'' என்று கொண்டுவந்து கொட்டி இலையில் மலை குவிப்பதால், பதார்த்தங்கள் வீணாகும். சாப்பிடுகிறவர்களுக்கும் அலுப்புத் தட்டும்.

சமையல் துறையில் நாம் அறிய வேண்டிய விஷயங்கள் இன்னும் எவ்வளவோ உண்டு. அறிவது சிரமம் அல்ல. நமக்குத்தான் சிரத்தையில்லை.

வெறும் அறுசுவை உண்டி சமைக்கக் கற்றுக்கொண்டுவிடலாம். அது சுலபம்தான். அவ்வளவு கஷ்டமில்லை. ஆனால் பந்திக்குச் சமைப்பதைவிடப் பத்தியத்திற்குச் சமைப்பதுதான் கஷ்டம். நோயாளிகளுக்கு ஏற்றவாறு சமைப்பது, ஔஷத பூர்வமான பதார்த்தங்களைத் தயாரிப்பது.—இவைகளை [illegible] நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

மூன்று நாள் சம்பிரமமான போஜனம் செய்தால், ஒரு நாள் பத்திய போஜனம் செய்வது நல்லது. ஆரோக்கிய வாழ்வுக்கு அதுதான் சிறந்தது. பத்திய போஜனம் தயார் செய்வதென்றால், பாட்டிகளின் தயவு கட்டாயம்வேண்டும். பத்தியபோஜன முறையை அறிந்து கொண்டால், வைத்தியரின் விஜயம் குறையும். "டாக்டர் பில்" கண்ணை உறுத்தாதபடி காப்பாற்றிக்கொள்ளலாம்.

எனக்குத் தூரபந்து ஒருவர் வீட்டிற்குப் போயிருந்தேன். அவர், வீட்டில். தினந்தோறும் சமையல் செய்யவேண்டிய விபரம் பற்றி ஒரு Time table போட்டிருந்தார். அந்த Time table-ல் ஒவ்வொரு நாளும் ஒருதரமாவது வெங்காய சாம்பார் இல்லாமல் இல்லை. என்னோடுகூட வந்திருந்த என் அத்தைப்பாட்டி ஓயாமல் உபதேசம் செய்த பிறகுதான், ஏழு வெங்காய சாம்பாரில் மூன்று குறைந்து, அதன் ஸ்தானத்தை வெந்தயக்குழம்பு ஏற்றுக்கொண்டது.

'மாதர் கல்வி' 'மாதர் கல்வி' என்று நாமும் பிரசாரம் செய்கிறோம். நமக்காக, புருஷர்களும் பிரசாரம் செய்கிறார்கள். ஆனால் 'மாதர் கல்வி' வேண்டும் என்று முறையிடுகிறோமே தவிர, எந்த மாதிரி கல்வி வேண்டும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவில்லை. அப்படித்தான் உணர்ந்து கொண்டாலும், அது Domestic Arithmetic படிப்பதோடு நின்று விடுகிறது. Domestic Arthmatic என்ற பதங்களுக்கே, எனக்கு அர்த்தம் விளங்கவில்லை. அது பால் கணக்கா? தயிர்க் கணக்கா? அப்படித்தான் இருந்தால், அதற்குத் தனியாகப் படித்துத்தான் பால் கணக்கு எழுதத் தெரிந்துகொள்ள வேண்டுமா? இதெல்லாம் யோசிக்கவேண்டிய விஷயம்.

''ஏதடா, இவள் சாப்பாட்டையும் சமையலையும்பற்றிப் புராணம் அளக்க வந்துவிட்டாளே, சாப்பாட்டு ராமிகள் கோஷ்டியோ'' என்று சந்தேகப்படுகிறீர்களா? அந்தக் கோஷ்டியில் சேரத்தான் நான் பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன். நன்றாகச் சமைத்தால்தானே நன்றாகச் சாப்பிடலாம்?

# MEHTA'S SPECIALITIES

***Well-known for their efficacy and Medicinal values***

1 ***SUNDARI ELIXIR***

For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 ***PHOSPHORUS OIL***

A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 ***MASTANA PILLS***

Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 ***DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA***

A great Blood Purifier & digestive & Potential Tonic.

*Stocked by all important Chemists & Druggists of South India*

## K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRS.



# இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபிஸ்: மாயவரம் ★ ஸெண்ட்ரல் ஆபிஸ்: மதராஸ்.

| | |
|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. 25,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் ... | ரூ. 10,00,000 |
| ரிஸர்வ் பண்டு ... | ரூ. 10,00,000 |
| மொத்த ஆஸ்தி ... | ரூ. 6 கோடிக்குமேல் |

ஸிட்டி ஆபீஸ்கள்:

ஸைனுபஜார், மாம்பலம், மயிலாப்பூர், பெரியமேட், திருவல்லிக்கேணி

| | | | |
|---|---|---|---|
| அமதலவால்ஸா | கும்பகோணம் | திருநெல்வேலி ஜங்ஷன் | ராமநாதபுரம் |
| அனகாபள்ளி | சாலூர் | திருச்சினுப்பள்ளி | மதுரை |
| அம்பாசமுத்திரம் | சிப்பூருபள்ளி (Vizag) | திருவாரூர் | மாருடேரு |
| ஆம்பூர் | சிதம்பரம் | தூத்துக்குடி | விழுப்புரம் |
| ஈரோடு | சித்தூர் (கொச்சி) | தென்காசி | விருதுநகர் |
| கடலூர் N. T. | சீயாழி | நாகப்பட்டணம் | விஜயநகரம் |
| கடலூர் O. T. | தஞ்சாவூர் | பரமக்குடி | வேலூர் |
| காஞ்சீவரம் | தாடபள்ளிக்கூடம் | பாலக்காடு | வேதாரண்யம் |
| காரைக்குடி | திலாறு R. S. | பார்வதிபுரம் | ஜெய்பூர் |
| | திருநெல்வேலி டவுன் | புதுக்கோட்டை | (ஒரிஸ்ஸா) |

| | | |
|---|---|---|
| பிக்ஸட் டிபாஸிட்கள்:- | ஒரு வருஷம் நூற்றுக்கு வட்டி ... ... | 2¾% வீதம் |
| | இரண்டு ,, ,, ... ... | 3% ,, |
| சேவிங்ஸ் பாங்கு கணக்கு வாரம் ரூ. 250/வாங்கக்கூடியது ரூ. 10,000/வரை வட்டி | | 2½% ,, |
| கரண்ட் கணக்கு | .. .. .. .. | ½% ,, |

தங்கம், வெள்ளிபார், கவர்மெண்ட் பாண்டு, கடன் பத்திரங்கள், ஷேர்கள், வியாபாரச் சரக்குகள் முதலியவைகளின் பேரில் கடன்கள் கொடுக்கப்படும்.

எல்லாவிதமான பாங்கு நடவடிக்கைகளும் நடத்தப்படும்

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,

மானேஜிங் டைரக்டர்.

# பலி

மானஸீகன்

மங்கிய விளக்கொளியில் சிலையைக் கண்கொட்டாது பார்த்துக்கொண்டிருந்த நிரஞ்ஜய மன்னனின் கண்டத்தினின்றும், ஒரு பெரு மூச்சு வந்தது. அருகில் நின்றுகொண்டிருந்த கைவல்யனைப் பரிதாபத்துடன் பார்த்தன அவன் கண்கள். "சிற்பி, இந்தச்சிலை பார்க்கப்பார்க்க ரொம்ப அழகாயிருக்கிறது. இதைப் பார்த்துக் கொண்டிருந்தால் உணவுகூட வேண்டியதில்லை. ஆயிரம் கண்கள் வேண்டும் இதைக் காணுவதற்கு. ஆனால்............இதில் பூரணத்வம், நான் தேடியலையும் பூரணத்வம் எங்கே? நீ மானுஷத் தன்மையின் எல்லையை அடைந்துவிட்டாய். ஆனால் அமானுஷத்தின் படியில் உன் கால் படவில்லையே!" அவன் கண்டத்தில் ஏக்கம் புரண்டது. சோர்வினால் வாடிக்கிடந்த கைவல்யன் கண்களினின்றும் இரண்டு துளிகள் சிதறின. "பிரபோ! கலையிலும் கேள்வியிலும் கரை கண்டவர்கள் நீங்கள். என் உயிரைக்கொடுத்து வேலை செய்தேன். இந்தச் சிற்பத்தை இயற்றுங்கால், என் மனைவியின் நோயைக்கூடக்கவனியாது வேலை செய்தேன். அவள் என்னைச் சபித்துக் கொண்டே இறந்தாள். என் அருமை மகனும், தன் தாயைப் பின் தொடர்ந்துவிட்டான். நான் என்ன செய்வேன்? என் ஊக்கத்தின் எல்லையைக் கைகள் பிடிக்கவில்லையோ. அல்லது, என் மானஸீகத்தன்மையில் குறைபாடோ, தவறிவிட்டேன். உழைத்து என்ன பயன்? என் மனைவி மக்கள் இறப்பினும், இந்த லட்சியமே என் உயிரைப்பிடித்து நின்றது. லட்சியம் தவறியபின், நான் உயிர்வைத்து என்ன பயன்?" என்று சொல்லிக் கொண்டே கத்தியை உருவினான்.

நிரஞ்ஜயன் பதறிக்கொண்டு எழுந்தான். "கைவல்யா! என்ன செய்யத்துணிந்தாய்? லட்சியம் தவறினால் தற்கொலைதான் சாந்தியோ? பேடித்தனமல்லவா அது? அன்பனே! நம் லட்சியம் சாதாரணமானதா, தவறிவிட்டால் வெட்கப்படுவதற்கு? இவ்வுலகில் கடவுள்தான் பூரணத்வத்தை அடைந்தவர் என்று கவிகளும் யோகிகளும் சாதிக்கிறார்கள். அக்கடவுளைச் சிலை ரூபத்தில், பூரணத்வத்தன்மையில் நிரூபிக்க நாம் முயல்கிறோம். இதில் தோல்வி நம் லட்சியத்தை உறுதிப்படுத்த வேண்டுமே தவிர, தற்கொலை சாந்தியளிக்குமோ! என்ன பேடித்தனம்?" என்றான்.

தெள்ளிய சுனைகளும் தேன் சொரியும், தென்றல் வீசும் தோப்புகளும், நிறைந்த லாவண்ய நகரத்தின் அதிபன் நிரஞ்ஜயன். கல்வி கேள்விகளில் சிறந்து, கடவுள் பக்தியும், பெருந்தன்மையும் நிறைந்த அவனுடைய அரசாட்சியில், ராஜ்யம் செழிப்புற்று விளங்கியது. இரந்து உண்பவர்களை அங்கே காணமுடியாது. உழைத்துக் கூலி பெற்றால், அதுவே போதுமென்ற மனச்சந்துஷ்டியுடன் காலங்கழித்த மக்களிடம் துன்பம் தலைகாட்டவில்லை. நாட்டின் எம்மூலையிலும், சிரித்த முகங்களும், பாட்டு கேளிக்கைகளும் நிறைந்து, லாவண்ய நகரத்தை இன்னும் லாவண்யமாக்கியது.

நிரஞ்ஜயனுக்கு வெகுநாளாக ஒரு அவா. வாழ்க்கையில் நாம் காணும், மக்கள் கைத்திறத்திலே, அபூரணத்துவம், மிளிர்கிறது. மானின் மருட்சியில் மனதைப் பறிகொடுத்தனர், கவிகள். ஆனால் அதன் நடையில் தென்பட்ட நடுக்கமும், தடுமாற்றமும், அதன், அழகுக்குக் கெடுதி செய்தன. அன்னத்தின் நடை ஒப்பில்லாததுதான். ஆனால், அதனுடன், குயிலின் குரல் சேரவில்லை. ஏன் குயில் மட்டுமென்ன? குயிலின் கீதம் கேட்பதற்குத்தான் மதுரமே தவிர குயிலின் உருவம் மதுரமாயில்லை. இயற்கையிலேயே கடவுளின் சிருஷ்டியிலேயே அபூரணத்வம் நிறைந்திருக்கையில், மனிதனின் சிருஷ்டிக்குக் கேட்கவேண்டுமா? மனிதனே, ஒரு அபூரணத்வமான சிருஷ்டிதான். தயாளம் நிறைந்த மனிதனிடம் கோபம் படர்ந்து கிடக்கின்றது. சாந்தம் படைத்த மனிதனிடம், பொறாமை தலை

நீட்டுகிறது. இந்த அண்டாகாசத்தின் அமைப்பிலே, கடவுள்தான் பூரணத்துவம் பெற்றவர். மற்றவைகளெல்லாம், ஒவ்வொரு விதத்தில் அபூரணத்வம் நிறைந்தவை. இது கவிகளின் யோகிகளின் நியதி; கோட்பாடு. நிரஞ்ஜயன் இதை எதிர்க்க எண்ணினான். மனிதனின் உத்தமமான ஊக்கமென்பது காளியைப்போன்றது. முயம்சித்தால் கடவுளின் பூரணத்வத்தை உலகில் நிலைநாட்டலாம் என்பது அவன் கொள்கை. அதை அவன் நிரூபிக்கத்தலைப்பட்டான். என்றென்றைக்கும் குறைவு சொல்ல முடியாத அழகின் எல்லையிலே, மானுஷ நிர்ணயத்தைக் கடந்துவிட்டால், பூரணத்துவத்தை அடைந்து விடலாம் என்ற நியதியை அவன் கடைப்பிடித்தான். அதன் போக்கிலே ஒரு சிற்பத்தைச் செய்ய முயன்றான்.

கைவல்யன் ராஜ்யத்தின் சிற்பிகளின் தலைவன். அக்கலையில் அவனுக்கு நிகர் அவன்தான் என்று சொல்லக்கூடிய திறமை படைத்தவன். சிற்பிகள் எல்லோரும், அவனிடம் தலைபணிந்தனர். மனதில் ஒரு வித கல்மஷமின்றி, பொறாமையின்றி அவன் உயர்ந்தவன் என்று ஒப்புக்கொண்டனர். அத்தகையவனை அடைந்த அரசன் நிரஞ்ஜயன் எண்ணம் கைவல்யனின் ஊக்கத்திலே எண்ணெய் ஊற்றியது. அரசன் பணியில் தானும் பங்கெடுத்துக் கொண்டான். இருவரும், பூரணத்வத்தின் சிகரத்தை எட்டிப்பிடிக்கத் தடுமாறி ஏறிக்கொண்டிருந்தனர். வாழ்க்கையின் அமிர்தமெனும் இளமை கடந்து. முதுமைப் பிராயத்திலே, நரைத்த தாடியும், ஒளி மங்கிய கண்களுமுடைய காலத்திலுங்கூட, அவர்கள் தடுமாறி ஏறிக்கொண்டுதானிருந்தனர். பூரணத்வத்தை எட்டிப் பிடிக்கவில்லை. முயற்சி பயனளிக்கும். ஆனால் அதற்குக்கால நியதியில்லையே!

முடிவில் நிரஞ்ஜயன் கைவல்யனை அழைத்தான். "நண்பா, காலங்கிட்டுகிறது. உன்



உழைப்பில் குறைகூறவில்லை நான். ஆனால்……………" என்று இழுத்தான். கைவல்யனுக்குப் புரிந்து விட்டது. "பிரபோ புரிந்துகொண்டு விட்டேன். என்னால் முடியாதுதான் போலிருக்கிறது. நம் ராஜ்யத்தில் ஒருவன் கூடவா இல்லாது போய்விடுவான்? சுற்றிப் பார்த்தால் கிடைத்து விடுவான் என்று தோன்றுகிறது" என்றான். "சரி புறப்படுவோம் வா!" என்று ஆமோதித்தான் நிரஞ்ஜயன். ராஜ்யத்தை மந்திரியிடம் ஒப்புவித்து விட்டு, இருவரும் புறப்பட்டார்கள்.

காலையின் அமைதியிலே இயற்கை லயித்திருந்தது. பச்சைப் பசேலென்ற நெற்கதிர்கள், காற்றின் வீச்சிலே, தலைசாய்த்து நகைத்துக் கொண்டிருந்தன. பரவியிருந்த அமைதியை உறுதிப் படுத்துவது போல், தூரத்திலே இரண்டொரு காகங்கள், கரைந்துகொண்டிருந்தன. குளுகுளுவென்றிருந்த தோப்பில். மாடுகளை மேயவிட்டு, ஒரு இளைஞன், தடாகத்தினருகில் அமர்ந்திருந்தான். அவன் கவனமும், கண்களும் ஒரு இடத்தில் லயித்துப் போயிருந்தன. தடாகத்தின் படியின்மேல் ஒரு பெரிய தவளை உட்கார்ந்து கொண்டிருந்தது. இயற்கையின் அமைதியை ரஸிப்பதுபோல் அசைவற்றுக் கிடந்தது. மாட்டுக்காரச் சிறுவன், அங்கே கிடந்த களிமண்ணைப் பிசைந்து வைத்துக்கொண்டு தவளையைப் போல் செய்வதில் முனைந்திருந்தான். ஒவ்வொரு அம்சத்திலும், அதன் மூலத்தை ஒத்திருக்கப் பாடுபட்டன அவன் கைகள். தவளையின் முதுகிலே வெயில் படிந்து பிரகாசித்தது. அதை எடுத்துக் காட்டுவதற்கு, மாங்குச்சியை வைத்துக்கொண்டு, பளபளப்பேற்றிக் கொண்டிருந்தான் இளைஞன். ஒரு பெரிய சிற்பிகூட அந்தக் கைவேலையைக் கண்டு மூக்கில் விரலை வைத்திருப்பான். அவ்வளவு தத்ரூபமாய் இருந்தது சிற்பம். ஆனால் இளைஞன் மனதில் மட்டும் அமைதி படியவில்லை. ஏதோ குறைபாடு இருப்பதாகத் தோன்றியது அவன் மனதுக்கு. கண்ணைப் பிசைந்து கொண்டு, தவளையைப் பார்ப்பதும், சிற்பத்தில் மாறுபாடு செய்வதுமாக முனைந்திருந்தான். வேலையில் அவ்வளவு லயித்துப் போயிருந்த அவன், தன்னருகில் இரு பிரயாணிகள் வந்து நின்றதைக் கவனிக்கவில்லை. தடாகத்தில் குளித்துவிட்டுப் போகவந்தவர்கள், இளைஞனின் முயற்சியைக் கண்டு நின்று விட்டார்கள். இருவரும் அவன் வேலையை உன்னிப்பாய்க் கவனிப்பதில் ஈடுபட்டனர். அவர்கள் வேறு யாருமல்ல; தேசயாத்திரை சென்ற நிரஞ்ஜயனும், கைவல்யனுமே. அரசனது மனதில் பெருமிதம் ததும்பியது. தவளையின் தத்ரூபத்தை அடைந்த அந்தச்சிற்பத்தில் ஒரு பெரிய சிற்பிகூட வேலையை நிறுத்தியிருப்பான். ஆனால் இளைஞன் கண்களுக்கு அப்போதப்போது, ஏதோ குறைபாடுகள் தென்பட்டன. பூரணத்வத்தின் லட்சியத்தைக் கடைப்பிடிக்க, அவனைவிடச் சிறந்தவனைக் காணவில்லை அரசன்.

இளைஞன் வேலையை நிறுத்துவதாகக் காணோம். அரசன் ஒரு சிறு கல்லை எடுத்து, தவளையின் மேல் விட்டெறிந்தான். தவளை ஒரு கணத்தில் தண்ணீரில் மறைந்தது. சிறுவன் மிகுந்த கோபத்துடன் எழுந்தான். "யாரைய்யா நீங்கள்! இவ்வளவு பெரிய தடாகத்தில் இந்தக் கரைதானா அகப்பட்டது உங்களுக்கு? இன்னும் மூன்று கரைகள் இருக்கின்றனவே; கொஞ்சமேனும் அறிவில்லாதவர்களோ நீங்கள்?', என்று கோபத்தில் படபடத்தான். கைவல்யனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஒரு மாட்டுக்காரச் சிறுவன் அரசனைப் பார்த்து மடையனென்றால்? நிரஞ்ஜயன் முகத்தில் கோபமே காணப்படவில்லை. "அப்பனே! உன் வேலைதான் முடிந்து விட்டதே! நீ செய்திருக்கும் தவளையை நாங்கள் பார்த்தோம், அதில் அப்பழுக்குச் சொல்லமுடியாது. நல்ல வேலைப்பாடுதான், வேலை முடிந்தவுடன் தவளையை விரட்டவேண்டியதுதானே!" என்றான்.

இளைஞனுக்குக் கோபம் தணியவில்லை. "நல்ல வேலைப்பாட்டைக் கண்டுவிட்டீர்கள் நீங்கள். இன்னும் எவ்வளவோ குறைபாடுகள் இருந்தன. உங்களுக்கென்ன தெரியும்? என் கண்களுக்கு ஸ்பஷ்டமாகத் தெரிந்தன. இந்தத் தவளை இதன் மூலத்திற்குச் சிறிதும் ஒற்றுமையில்லாததுதான்" என்று முணுமுணுத்தான். நிரஞ்ஜயன் ஆனந்தத்தில் "கைவல்யா, கண்டு பிடித்து விட்டோம் தேடிவந்ததை!" என்று உரக்கக் கூவினான். கைவல்யனும் மௌனத்தால் அதை ஆமோதித்தான்.

அரசனும் சிற்பியும், அச்சிறுவனை அரண்மனைக்கு இழுத்துச் சென்றனர், தேவசுகன் என்பது அவன் பெயர். இயற்கையின் வளப்பிலே வளர்ந்தவன். பிறப்பில் மாட்டுக்காரச்சிறுவனாயிருந்த அவனுக்கு இளமை முதல் சிற்பத்தில் அலாதி பிரியம். இயற்கையைத் தன் குருவாகக் கொண்டு, தத்ரூபமாய்க் களிமண்ணால் பொம்மைகள் செய்வதில் தேர்ந்துவிட்டான். ஊரார் அவனைப் பைத்தியம் என்று கேலி செய்தனர். மாட்



# ஒரு சுத்தமான ஊற்றிலிருந்து

இயற்கை மைசூர் காடுகளில் மிக உன்னதமான சந்தன மரங்களை உண்டாக்கி யிருக்கிறது. இது தான் நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு மிகவும் நேர்த்தியான சந்தன அத்தருக்கு ஆதாரம். இத்துடன் தற்கால விக்ஞானமுறைகளும் சேர்ந்து நூற்றுக்கு நூறு சுத்தமான உயர்ந்த மைசூர் சந்தன அத்தர் கிடைக்கிறது. அது மருந்துகள், சோப் அல்லது வாசனை திரவியங்கள் தயாரிப்பதற்கு இன்றியமையாதது.

## மைசூர்
## சந்தன அத்தர்

MSK 16 TM

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு.

# பட்டு

## என்றால் மிருதுவாயுள்ளது

அது மைசூர் பட்டானால் ச்பர்சத்திற்கு மிருதுவாயுள்ளதுடன் உயர்ந்த நெசவு, அதிகநாள் உழைப்பு, மேலான ரகம் எல்லாம்சேர்ந்து மிக அழகானதாகும்.




மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு   கவர்ன்மெண்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

MSK-16-TM

டுக்காரச் சிறுவன் பொம்மை செய்வதில் தேர்ந்து என்ன பிரயோசனம் என்று எண்ணினார்கள் அவர்கள்.

தேவசுகனுக்குச் சிற்பக் கலையின் நுட்பங்கள் போதிக்கப்பட்டன. கைத்திறனுடன், மூளையைக் கலந்து செய்வதினால், கைத்திறனில் வெற்றியடைந்து விட்ட அவனுக்கு, மூளையின் நுண்ணறிவை அதிகரிக்கப்பாடு பட்டான் அரசன். காலத்தின் செலவை அவன் மதிக்கவில்லை. ஒரு திடநம்பிக்கையில் ஆழ்ந்துவிட்ட அவனது எண்ணத்தை, இனி மாற்ற முடியாதென்று எல்லோருக்கும் தெரிந்து விட்டது. அவனது அமைச்சர்கள் அவனைக் கண்டிக்கவில்லை. மற்றவைகளில் சிறந்து நின்ற அவனை, இவ்விஷயத்தைக் கொண்டு பைத்தியக்காரன் என்று சொல்லிவிட முடியுமா?

முடிவில் எல்லை தென்பட்டது. தேவசுகன் கல்வி கேள்விகளில் சிறந்த பண்டிதனானான், அரசனது எண்ணத்தை மிகுந்த ஆவலுடன் கிரகித்துக்கொண்டான். என்றும் அப்பழுக்குச் சொல்லமுடியாத, மானுஷத்தன்மையின் எல்லையைக் கடந்த ஒரு சிற்பத்தைச்செய்து முடிக்கவேண்டும். எந்த அம்சத்தில் வேலை செய்கிறானோ, அதில் பூரணத்வத்தை அடைந்திருக்கவேண்டும் என்பதே அது. தேவசுகன் ஆனந்தத்தால் துள்ளிக்குதித்தான். அவன் வெகுநாளைய ஆசைகளுள் அதுவும் ஒன்று.

சிறைப் பட்டவனைப்போல் தேவசுகனைக் தனிமையில் விட்டுவிட்டனர். பைத்தியம் பிடித்தவனைப் போல் இஷ்டப்பட்ட நேரத்தில் வேலை செய்வதும், உறங்குவதுமாக இருந்தான். அவன் கண்கள் வெளிப் பார்வையை இழந்தன; ரத்தச் சிவப்பாய்ச் சிவந்து, உள்ளே மனக் கண்ணில் ஈடு பட்டவை போல் தோற்றமளித்தன. காவலன் உணவு கொண்டுவந்து வைத்தால் அவனைக் கவனிப்பதில்லை. முணு முணுப்பதும், உளியைக் கையில் தூக்கிக்கொண்டு ஓடுவதுமாக இருந்தான். பாதி சாப்பிட்டுக் கொண்டிருப்பான்; திடீரென்று எழுந்து சிற்பக் கூடத்திற்கு ஓடுவான். பயங்கர மானவனாகக் காணப்பட்டான் அவன்.

கைவல்யன், ஒரு நாள் கலவரம் அடைந்த முகத்துடன் அரசனை அடைந்தான். "பிரபோ! வேண்டாம். இந்தப் பைத்தியக் காரவேலையை நிறுத்திவிடுங்கள். நாட்டிற்கு நாசம் வந்துவிடும்" என்றான். நிரஞ்ஜயன் உரக்கச் சிரித்தான். "என்ன கைவல்யா! பைத்தியம் பிடித்துவிட்டதா உனக்கு?" என்றான்.

"இல்லை அரசே! நேற்று ஒரு பயங்கரக் கனவு கண்டேன். தேவசுகன் செய்கிறானே காளியின் உருவம். அதைப் போன்ற உருவம் என் கண் முன் நின்றது. பயங்கரமாய்ச் சிரித்துக்கொண்டு, 'என்ன விதியின் இயற்கையை மாற்றவா பார்க்கிறீர்கள். நாட்டின் நாசத்திற்குத்தான் துணிகிறீர்கள். போய்ச் சொல்லு உன் அரசனிடம். கடவுளும் விதியும் ஒன்று. அவன் விதியை மாற்றத் துணிந்தால், உலகினுக்கே கேடு வைப்பானென்று சொல்லு' என்று உரக்கக் கூவிவிட்டு மறைந்தது. வேண்டாம் நிறுத்தி விடுங்கள்." அவன் உடல் பயத்தினால் நடுங்கியது. நிரஞ்ஜயன் கடகடவென்று நகைத்தான். "கைவல்யா! ராவணனுக்கு விபீஷணன் சொன்னது போலல்லவா சொல்லுகிறாய். கடவுளின் கோபத்திற்காளாகிறோம் என்று நம் லட்சியத்தைக் கைவிடுகிறதா? லட்சிய வாதிக்கு உயர்ந்த லட்சியமே தெய்வம். இதில் பாபமொன்றுமில்லை பயப்படாதே" என்று தேற்றினான். கைவல்யன் சாந்தியடையவில்லை. "சரி உங்கள் இஷ்டம்; சொல்ல வேண்டியதைச் சொன்னேன்" என்று அவ்விடத்தினின்றும் அகன்றான்.

தேவசுகனை நிரஞ்ஜயன் போய்க் கண்டான். அவன் உருவகப் படுத்திக் கொண்டிருந்த சிலை அரசன் மனதில் பெருமிதத்தை உண்டாக்கியது. அழகு அதில் பூரணமாய் மிளிர்ந்தது; இருப்பினும் அவ்வுருவத்தில் ஒரு பயங்கரமும் தொனித்தது. கைவல்யன் எட்டிப் பிடிக்க முடியாத உயர்வுகளை, தேவசுகன் எட்டிப் பிடித்திருந்தான். ஒவ்வொரு அம்சத்திலும் பூரணத்வத்தை எட்டிப் பிடிக்க முயற்சி செய்திருந்தான்.

"அன்பனே! என் லட்சியத்தை உருவாக்கும் உத்தமன் நீ" என்று அன்புடன் ஆலிங்கனம் செய்து கொண்ட நிரஞ்ஜயன் திடுக்கிட்டுப் பின்தாங்கினான். "தேவா! உன் உடம்பு ஏன் அனல் போல் கொதிக்கிறது? ஜ்வரமா?" என்று வினவினான். தேவசுகன் வறண்ட சிரிப்பொன்று சிரித்தான். "என் உடம்பா கொதிக்கிறது. இருக்கும், நான் உறங்கி ஒரு வாரமாகிறது" என்றான்.

எப்போதும் மௌனத்தில் கிடந்த தேவசுகன் ஒரு நாள் திடீரென்று ஆனந்தத்தில் நர்த்தனமாடத் தொடங்கி விட்டான். அங்கிருந்த காவலனை விளித்து "போ போ, அரசனிடம் போய்ச்சொல்லு. வாழ்க்கையின் லட்சியம் பூர்த்தியாகி விட்டதென்று. ஓடு" என்று விரட்டினான்.

நிரஞ்ஜயன் உள்ளத்தில் அளவில்லாத உவகை பெருக்கெடுத்து ஓடியது. ராஜ்யத்தின் எல்லா மூலைகளிலும் பறையடித்தான். பூரணத்வத்தை அடைந்த சிற்பத்தைக்காண மக்கள் உள்ளம் தவித்தது. கைவல்யன் பயத்தினால் பைத்தியம் பிடித்தவன் போலானான்.

கடலே மக்கள் உருவெடுத்து வந்தது போல் கூட்டம் கூடியது சிலையைக்காண. அரசன் தன் நரைத்த தாடியுடன் அங்கிருந்த மேடையின்மீது அமர்ந்தான். கூட்டத்தின் கோஷத்திற்கிடையில், தேவசுகன், தள்ளாடிக்கொண்டு, தான் செய்திருந்த சிலையைக் கொணர்ந்து மேடைமீது வைத்தான். ஆர்வமெனும் அக்னியிலே அவன் இளமை கருகிப் போய்விட்டது. குழிவிழுந்த கண்களும் கன்னங்களும் அவன் உருவத்தைக் கோரமாக்கின.

திரையை விலக்கினான் தேவசுகன். மக்கள் பைத்தியம் பிடித்தவர்கள் போல் கூத்தாடினர். நிரஞ்ஜயன் ஆனந்தத்தில் தேவசுனைக் கட்டிக்கொண்டான். சிலையின் அமைபிலே ஒவ்வொரு நரம்பும் துடிப்பதுபோல் எடுத்துக் காட்டப்பட்டிருந்தது. தேவியின் முகத்திலே அளவிடமுடியாத அழகு. ஆனால் அதே சமயத்தில் உள்ளத்தைத் தொடும் பயங்கரம்! கண்களில் இமைகள் மூடித் திறப்பனபோல் இருந்தன. என்றென்றைக்கும் குறைவு சொல்ல முடியாத வேலைப்பாடு. மானுஷ எல்லையைக் கடந்த அதிசயம்!

பேரிடி போன்ற சத்தத்தை ஒரு கை அசைப்பில் நிறுத்தினான் தேவசுகன். கோரமாய் இருமிக்கொண்டு சொன்னான். "மக்களே! இச்சிலை பூரணத்வத்தின் எல்லையை மிதித்துவிட்டது; ஆனால் பூரணத்வம் அடையவில்லை. ஒரே ஒரு குறைபாடு உள்ளது." மக்கள் ஆச்சர்யத்தினால் தங்கள் மூச்சைப் பிடித்துக்கொண்டனர். தேவசுகன் மேலும் சொன்னான் "என்ன வேலைப்பாடு செய்திருப்பினும், இது ஜடப்பொருள்தான்; உயிரில்லாததது. இதற்கு மட்டும் ஒரு ஜீவனைக் கொடுத்துவிட்டால், கலையின் பூரணத்வத்தைக் காண்பீர்கள். அந்த ஜீவனைக் கொடுக்க யாராவது முன் வருகிறீர்களா?" என்றான். குரலில் கம்பீரம் தொனித்தது. கைவல்யன் எழுந்தான். "அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. ஒருவனும் அவன் பேச்சைக் கேட்காதீர்கள்" என்று கூவினான். கோபத்தில் எழுந்த நிரஞ்ஜயன் அவன் மண்டையில் ஒரு அடி அடித்தான். கைவல்யன் மூர்ச்



அழகுத் தெய்வமான

மன்மதன், இளவேனில் ஓய்ந்ததும் பெண்மணிகளின் கூந்தலைத் தன் இருப்பிடமாகக் கொண்டான் என்பர் கவி காளிதாஸர். எந்த அழகிய கூந்தல் தேவதைகள் கண்ணையும் கருத்தையும் பிணிக்குமோ, அக் கூந்தலை வருஷம் முழுவதும் எல்லாப் பருவங்களிலும் கேசவர்த்தினியின் உதவியால் பெறுங்கள், மயிர் உதிர்வதை நிறுத்துங்கள். கூந்தலைப் பெருக்கிக்கொள்ளுங்கள்.

இளமையும் அழகும் கூந்தலுக்குத் தந்து கூந்தலை மனோஹரமாக்குவது கேசவர்த்தினி ஒன்றே.

முக அழகைக் கூந்தலினால் அழகு படுத்துங்கள். உங்கள் கூந்தலைக் கேசவர்த்தினி கொண்டு அழகுபடுத்திக் கொள்ளுங்கள்.

**கேசவர்த்தினி**

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

**விலை அணா 12**

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்

**தென் இந்திய ரஸாயன சாலை**

**கோயமுத்தூர்.**

சித்துக் கீழே விழுந்தான். கூட்டம் அசையவில்லை.

தேவசுகன் ஒரு கணம் கூட்டத்தைச் சுற்றிப் பார்த்தான். "என்ன! ஒருவருமா முன் வரவில்லை. என் வேலையின் வெற்றியை நான் காணலாமென்று மனப்பால் குடித்தேன். அதற்கு நீங்கள் சந்தர்ப்பம் அளிக்கவில்லை. இருப்பினும், அதற்காக நான் தொடங்கிய லட்சியம் தடைப்படாது. இதற்கு என் உயிரே அர்ப்பணம்" என்று சொல்லிக்கொண்டே யாரும் பார்ப்பதற்கு முன்பு கத்தியை எடுத்துக் குத்திக்கொண்டு விழுந்தான். திடுக்கிட்டு எழுந்த அரசன் ஒரு கணம் பிரமிப்பில் நின்றுவிட்டான்.

ஜடமாய் நின்று கொண்டிருந்த சிலை, திடீரென்று பிரகாசம் அடைந்தது. முகத்திலே ஒரு ஜோதி. சிலையின் கண்கள் ஒளிப்பிழம்பைக் கக்கிக்கொண்டு கூட்டத்தைப் பார்த்தன. அதன் ஒவ்வொரு கணுவிலும், ரத்த ஓட்டம் காணப்பட்டது. நண்பன் இறப்பை மறந்தான் அரசன். "என் வாழ்க்கையின் வெற்றி" என்று குதித்தான்.

நிர்மலமாய் இருந்த வானம் திடீரென்று இருண்டது. அண்டமே வெடித்ததுபோல் ஒரு பேரிடி உண்டாகி அந்த அதிர்ச்சியிலே, மலையின் மேல் கிடந்த சிறு குன்றுகள், பயங்கரமாய்ப் புரண்டு, அதலபாதாளத்தில் ஓடிய காட்டாறுகளில் பேரிரைச்சலுடன் சாய்ந்து விழுந்தன. எட்டுத் திக்குகளிலும், கரிய மேகங்கள் சூழ்ந்து, தீப்பற்றி எரிவது போல மின்னின. உண்டு பருத்த சிங்கம் கோபத்தில் உடல் சிலிர்ப்பது போல மேகக் கூட்டங்கள் உறுமிக்கொண்டு சிலிர்த்தன. சிலை, 'விடு விடு' என்று ஆடிக்கொண்டிருந்தது. நிமிஷத்திற்கு நிமிஷம் அதன் முகத்தின் காந்தி அதிகரித்துக்கொண்டே வந்தது. ஜனங்கள் தங்கள் நினைவை இழந்து எட்டுத் திக்குகளிலும் ஓடினார்கள். எங்கும் ஒரே ஓலமும் கூச்சலுமாக நிறைந்தது.

வேகமாய் ஒரு குதிரைக் காவலன் அரசனிடம் வந்து நின்றான், "அரசே! நம் நாட்டைச் சுற்றி இருந்த கடல் பொங்கி எழுந்து காடுகளையும் நாடுகளையும் விழுங்கி வருகிறது. மக்கள் கூட்டங் கூட்டமாய் அகப்பட்டு மடிகின்றார்கள்" என்று அறிவித்தான். அரசன் அசையவில்லை. சிலையின் மேல் வைத்த கண் வாங்கவில்லை. இன்னொரு காவலன் வியர்க்க விறுவிறுக்க ஓடிவந்தான். "அரசே, கடல் லாவண்ய நகரத்திற்கருகில் வந்து விட்டது. இன்னும் கொஞ்ச நேரத்தில் நகரத்தை விழுங்கிவிடலாம்" என்று சொன்னான். அவனது நடுங்கிய குரல் 'ஹோ' வென்ற இரைச்சலுடன் கலந்தது.

நினைவுவந்த கைவல்யன் செவிகளில் இம்மொழி விழுந்தது. ஒரு கணம் மடிந்து கிடந்த தேவசுகனையும்! அரசனையும் பார்த்தான். "அரசே, சொன்னேனே கேட்டீர்களா? போதும் பூரணத்வத்திற்கு நாம் கொடுத்த பலி" என்று சொல்லிக் கொண்டே அருகில் கிடந்த கட்டையை எடுத்துச் சிலையின் மேல் விட்டெறிந்தான். அது சிலையின் கன்னத்தில் பட்டு, பள்ளமுண்டாக்கி விட்டது. ஒரு கணத்தில் ஒளிப்பிழம்பாய்த் திகழ்ந்த அந்தச்சிலை தன் ஆட்டத்தை நிறுத்தி அசைவற்றதாகியது. அதன் ஜீவகளை மங்கி ஜடமாய்விட்டது. சிலையின் பூரணத்வம் சிதறிவிட்டது. அரசன் தடுமாறிக் கீழே விழுந்துவிட்டான்.

மறுநாள் காலையில் லாவண்ய நகரத்தின் உச்சியிலே கதிரவன் அமைதியாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தான். பயங்கரமாய்க் கொதித்தெழுந்த கடல் தணிந்து, மெல்லிய அலைகள் கரையை மருவிக் கொண்டிருந்தன.




கே. சுந்தரம்மாள்

## 8

"பதினைந்து நாட்களும் சென்றன. அவர் வரவுமில்லை; கடிதமும் எழுதவில்லை. "அவர் சுகத்திற்குக் குறைவோ" என்ற கவலை தோன்றவே, கடிதமெழுதினுள்; ஐந்து நாட்களாகியும் பதிலில்லை. இன்று ஒரு நாள் பார்ப்பது, ஒன்றும் தெரியாவிட்டால் தானே அவர் இருக்குமிடம் செல்வது என்ற முடிவிற்கு வந்தாள். மனம் எதிலும் நாடவில்லை. மத்தியானம் ஒருமணி சமயம். மாடியில் நடு ஹாலிலுள்ள சோபாவில் சாய்ந்து கொண்டிருந்தாள் மோகினி. எதிரில் ராஜாராமின் படம் பெரிய அளவில் மாட்டப்பட்டிருந்தது. அதையே உற்று நோக்கிய வண்ணம் தனது வாழ்க்கையில் ஏற்பட்ட சம்பவங்களைச் சிந்தித்த வண்ணமிருந்தாள்.

அந்தச் சமயம் வேலைக்காரி ஒரு கவரையும், ரிஜிஸ்டர் செய்யப்பட்ட நீண்ட கவர் ஒன்றையும் கொண்டுவந்து கொடுத்தாள். பின்னேடு தபாற்காரன் ரிஜிஸ்டருக்குக் கையெழுத்து வாங்க வந்தான். கையெழுத்துப் போட்டு அனுப்பிவிட்டு, நீண்ட கவரைப் பிரித்தாள். அதில் மாமனர் அவள் பெயருக்கு எழுதிவைத்த சொத்தின் உயில் இருந்தது. இது எதற்காக இப்பொழுது அனுப்பப்பட்டது என்று நினைத்தவளாகக் கவரைப் பிரித்தாள். ராஜாராமின் கடிதம் என்று தெரிந்ததும் "அப்பா" என்ற நீண்ட மூச்சுடன் கடிதத்தைப் படிக்கலானுள்.

"மோஹினி,

இக் கடிதம் உன் கைக்கு வரும்பொழுது நம்மிருவருக்கும் இடையில் அநேக ஆயிர மைல்கள் ஏற்பட்டுவிடும். உனது மாமனர், எழுதிவைத்த உயிலை அனுப்பியிருக்கிறேன். நிலத்தின் வரும்படிகளை நீ இருக்குமிடத்தில் கொண்டுவந்து கொடுப்பார்கள். பாங்கிப் பணத்தை நீயே எப்பொழுது வேண்டுமானுலும் பெற்றுக் கொள்ளலாம். ஆனுல் ராஜாபிமானம் பெற்ற உனக்கு இவை ஒரு பொருட்டல்ல. ஆனுலும் என் கடமையைச் செய்தேன்.

அவளுக்கும் இதே விதமான ஏற்பாடு செய்திருக்கிறேன். உன் ஆதரவிற்கு ஒரு பெண்; அவள் ஆதரவிற்கு ஒரு பிள்ளை பிறந்திருக்கிறுன். நான் இருப்பதும் ஒன்றுதான், இல்லாததும் ஒன்றுதான் அவளுக்கு. சுகபோக வாழ்விற்கு வேண்டிய பணமும் வசதியும் செய்திருப்பதினுல், உடன் பிறந்தார் உதவியுடன் நிம்மதியாகக் காலம் கழிப்பாள்; மிக்க தைரியசாலி. என் நிலைமை தெரிந்து என்னை மணந்தவள். அவளைப்பற்றிக் கவலையில்லை. அவள் பிள்ளையினுல் உன் சொத்திற்கு யாதொரு குறைவும் நேராவண்ணம் உன் மாமனர் நன்கு ஆராய்ந்து உறுதியாக எழுதி வைத்திருக்கிறுர். அதற்கும் கவலையில்லை; அவளைப்பற்றி உனக்கு ஏன் எழுதுகிறே

னென்றால் உன்னால் வந்த வினையல்லவா அவள்?

என் தாய், கடமையினின்றும் என்னைக் காப்பாற்றிவிட்டாள்; என் தகப்பனாரைப் பின்பற்றிவிட்டாள். அதுவும் ஒரு நன்மைக்கே.

மோஹினி! மனிதன் கிடைப்பதற்கரிய ஆனந்தத்தை அனுபவிப்பானானால் கூடிய சீக்கிரமே அதையிழந்து தவிப்பதும் சிருஷ்டியின் விநோதம்போலும். நீ பவானிபுரம் சென்று கிட்டத்தட்ட இரண்டு வருஷமாகிறது. இதில் எவ்வளவு மாறுதல்கள்? உன்னுடைய கலைமோகம் எவ்வளவு தூரம் என்னைப் பாதித்துவிட்டது?

அச் சண்டாள ஜமீந்தார் நம்மிருவர் அன்பைப் பாழாக்கிவிட்டான். அவனளித்த இரத்தின ஹாரத்தை உன் கழுத்தில் பார்க்கும்தோறும் என் தேகம் அனலாகப் பற்றியெரிந்தது. நாட்டிய ராணி! மஹாராஜாவின் பரிசும் தெரிசனமும் கிடைத்தன. இனி ஸ்பரிசமும் கிடைக்கும். நாட்டிய ராணி அந்தப்புர ராணியாகிவிடலாம். நடன மஹாநாடு நடக்கும். பலரும் கொண்டாடுவார்கள். மஹாராஜா அணைத்து ஆசி கூறுவார். உன் லக்ஷியம் நிறைவேறிவிடும்.

இவையெல்லாவற்றிற்கும் இடைஞ்சலாக நான் இருக்க வேண்டாமென்றே, வாழ்வில் வெறுப்புற்று, சர்க்காரிடம் வலியக்கேட்டு இந்தக் கேஸில் துப்புத் துலக்க ஒத்துக்கொண்டு, இவ் வட இந்தியா பக்கம் வந்தேன். இக்கேஸில் எதிரி கையில் சிக்குண்டு உயிரிழந்து விட்டால் என் வாழ்வு நிம்மதியடையும்; இல்லை வெற்றிபெற்றால் அபாக்யவானான நான் என் கலாவதியை எடுத்துக்கொண்டு உன் கண் காணா இடத்தில் வசிப்பேன். அதற்காகத்தான் தற்சமயம் குழந்தை உன்னிடம் விடப்பட்டிருக்கிறாள். அல்லாது நீ என்று அந்தப்புரம் செல்லுகிறாயோ அன்றே என் குழந்தை என்னிடம் சேர்க்கப்படுவாள். இதற்குத் தகுந்த ஏற்பாடு செய்திருக்கிறேன்.

என் மனமறிந்து நடப்பவளானால் முதல் தடவை நாட்டியத்தில் நான் காண்பித்த அசிரத்தையை அறிந்து, பிறகு நாட்டியம் என்ற நினைப்பை விட்டிருக்கமாட்டாய்? என்னைவிட நாட்டியம் பெரிதாகத் தோன்றியதினால் அறியும் சக்தியற்றாயோ, அல்லது கர்வம் கொண்டு செய்தாயோ. கர்வமானால் நாட்டியத்திற்கு வசதியளிக்கும் மஹாராஜாவிற்கு நீ மதிப்புக்கொடுப்பது வியப்பல்லவே. உங்களுக்கு இஷ்டமில்லாவிடில் விட்டுவிடுகிறேன் என்று உகப்பிற்குச் சொன்னாயே தவிர, காரியத்தில் தானே கண்ணாயிருந்தாய். கடைசியாக நான் வந்த தினம், நான் விரும்பிய உடனே வசந்தத் தோட்டத்திற்கு வந்திருந்தால் மஹாராஜா என்ன செய்யமுடியும்? என் மனம் சந்தோஷமடைய அன்று நீ நடந்திருந்தால், அன்றே அவ்வூரைவிட்டு உன்னை அழைத்துச் சென்றிருக்கமாட்டேனா? அவ்வளவு சக்தியில்லையா? ராஜாக்களா உன்னை என்ன செய்ய முடியும்?

ராஜாவின் நாட்டியப் பணிக்கு என் சுகபோகத்தைத் தியாகம் செய்யவேண்டுமாம். உன் மஹாராஜாவிடம் சொல்லு. நான் என் சுகபோகத்தை அடியுடன் தியாகம் செய்துவிட்டேனென்று.

பல பல எழுதுவானேன். உனது நாட்டியப்பணிக்கு இடையூறில்லாமல், உனது லக்ஷ்யம், உன் மஹாராஜா லக்ஷ்யம் எல்லாம் நிறைவேற உனக்கு விடுதலை அளித்துவிட்டேன். நம்முடைய பந்தம் விடுபட்டது. இனி நீ என்ன கடிதம் எழுதினாலும் நான் இருக்குமிடம் வரப் பிரயத்தனப்பட்டாலும் ஒன்றும் நடவாது. வீணாக வந்து அலையாதே. அடி பாதகி! உன் நினைவு மட்டும் என் நெஞ்சைவிட்டு அகல மாட்டேனென்கிறது. நீ உன் நாட்டியத்தில் என்னை மறந்துவிடுவாய்,

இப்படிக்கு
ஒரு காலத்தில் உன் காதலனாகத் திகழ்ந்த
அபாக்யன் ராஜா.

என்பதைப் படித்ததும் அந்த இடமே சுற்றுவதுபோல் தோன்றினது. அடுத்த கணம் உணர்வற்றுச் சாய்ந்து விட்டாள். சற்றுப் பொறுத்து குழந்தையுடன் அவ்விடம் வந்த வேலைக்காரி "அம்மா! அம்மா!" என்று அழைத்தாள். அசையாததினால், ஜலத்தினால் முகத்தைத் துடைத்தாள். கண் விழித்தாள் மோஹினி,

"ஏனம்மா என்ன விஷயம்?" என்றாள்.

"ஒன்றுமில்லை. குழந்தையை விட்டு விட்டுப் போ" என்றாள்.

அவள் சென்றதும் கதவைத் தாளிட்டு விட்டுக் குழந்தையை அணைத்துக்கொண்டு, "என் கண்ணே, கலாவதி, உன் அப்பா சதி செய்து விட்டாரடி. ஏறவிட்டு ஏணி வாங்கிவிட்டாரடீ. சூதறியாத பேதை அவர் பேச்செல்லாம் உண்மை என்று நம்பினேனடி. ஐயோ பவானி! அன்று கைகொடுத்துக் காப்பாற்றினாய் என்று இறுமாந்தேன். இன்று சதிசெய்து விட்டாயே. நான் என்ன செய்வேன்?

கலா, உன்னையும் பிரித்துவிடுவாராம். இந்தச் செய்தி கேட்டும் உனக்காகவன்றே உயிர் வைத்திருக்கிறேன். ஆனால் கண்ணே, நான் சாகக்கூடாது. நான் நிரபராதி என்பதை அவருக்கு நிரூபணம் செய்த பின்பே உயிரை விடவேண்டும். அவரை எப்படிக் காண்பேன்'' என்று பலவிதமாகக் கதறிக் கண்ணீர் வடித்தாள்.

ஒரு வயது கலாவதி தாயின் துக்கத்தைக் கண்டு தானும் அழலானாள். குழந்தையைச் சமாதானப் படுத்தத் தன் வருத்தத்தைச் சற்று அடக்கிக்கொண்டாள். தாயாரிடம் இவையொன்றையும் சொல்லாது, எப்படி யாவது ராஜாவைக் கண்டுபிடிக்கவேண்டும் என உறுதிகொண்டாள்.

அவர் அனுப்பிய கவரில் ஊரின் முத்திரை யிருந்தபடியினால், அவர் பெயரிட்டு அந்த ஊர் போலீஸ் இலாகா விலாசத்திற்கு, மனமுருகும் கடிதம் அநேகம் எழுதினாள். அவர் கைக்கும் கிடைத்தது. ஆனால் சமயங்களில் ''அவள் எழுதியிருப்பது உண்மைதான், சென்று பார்க்கலாமா'' என்று எண்ணுவார். மறுகணம் சந்தேகப் பேய் அதை மாற்றிவிடும்.

மோஹினி வெளியில் ஒன்றும் சொல்லா விடினும் மனதிற்குள் ஏங்கலானாள். ஆகாரம் வெறுத்தது. ஒரு மாதம் வரை கடிதம் எழுதிப் பதில் கிடைக்குமென்று நம்பி, பல விதமாக எழுதினாள். நாட்டியப் போட்டி விஷயமாக இவள் கலந்துகொள்ள வராததைக்கண்டு ஆசிரியர் வீட்டிற்கு வந்து கேட்டதற்குத் தேக அசௌக்யம் என்று சொல்லியனுப்பினாள். பத்து நாட்கள் சென்றபின் மறுபடியும் ஆசிரியர் வந்து கேட்டதற்குத் தான் நாட்டியத்தில் சேரவில்லையென்றும் வேறு யாரையாவது தேர்ந்தெடுக்கும்படியும் சொன்னாள்.

இதைக் கேள்வியுற்ற மகாராஜா ஒருவரும் அறியா வண்ணம் மோஹினியைக் காண வந்தார். அவர் வந்த சமயம் மாடியில் தனியாக வருந்தியவண்ணம் உட்கார்ந்திருந்தாள் மோஹினி.

ஹாலுக்குள் நுழைந்த மஹாராஜாவைக் கண்ட மோஹினி திடுக்கிட்டு எழுந்து நின்று, ''வரவேண்டும்! வரவேண்டும்! அரசே வந்தனம். இக் குடிசைக்குத் தாங்கள் வந்தது என் பாக்யம். இப்படி அமருங்கள்'' என்று சோபாவைக் காண்பித்தாள்.

உட்கார்ந்துகொண்டு ''அம்மா நீயும் உட்கார்'' என்றார்.

அவன் உட்கார்ந்து கொண்டதும், ''மோஹினி! கலையிலுள்ள ஆர்வம் காரணமாக, சுய மதிப்பைவிட்டு ஒருவரும் அறியா வண்ணம் உன்னிடம் வந்தேன். ஏன் போட்டியில் சேர மறுத்துவிட்டாய்? நான் வெகு நாளாகத் தேடிய அம்சம் பொருந்தியவள் கிடைத்தாய் என்று சந்தோஷப் பட்டேன். காரணம் என்ன அம்மா? உன் தந்தையைப் போல் நினைத்து உன் குறையைத் தெரியப்படுத்து'' என்றார் அன்பாக.

''ஆஹா! என்ன அருமையான குணம். இவரைக் கண்டபடி தூஷித்தாரே ராஜா! எதனால்?'' என்று நினைக்கும்பொழுது கண்களில் நீர் நிரம்பிற்று.

''வருத்தப்படாதே. மனம் விட்டு உள்ளதைச் சொல்லு.''

மண்டியிட்டு அவரை வணங்கி, ''தந்தையே! ஸ்திரீகளுக்கு முக்கியமானவர் கணவர் தானே?''

''அதில் சந்தேகமென்ன?''

''அக் கணவருக்கு நான் நாட்டியம் ஆடுவதில் விருப்பமில்லை. என்ன செய்வது?''

''உண்மையாகவா? அன்று நான் சொன்னதிற்கு அவர் மிகவும் அனுகூலமாகத் தானே பேசினார். ஆச்சர்யமாக இருக்கிறதே.''

''நானும் அவர் உள்ளம் அறியாமல் பேச்சில் மயங்கியே நடந்தேன். தொடக்கத்திலேயே சொல்லியிருந்தால் இவ்வளவு தூரம் வந்திருக்காது. தந்தையே! என் வாழ்வே பாழாகிவிட்டது'' என்று கதறி அழுதுவிட்டாள்.

''என்னம்மா நடந்தது. விபரமாகச் சொல்லு. என்னாலானதைச் செய்கிறேன்.''

''அவர் எங்களைத் துறந்து கண்காணாமல் சென்றுவிட்டார். என் மீது சந்தேகம் கொண்டு வெறுத்து ஒதுக்கிக் கடிதமும் எழுதிவிட்டார். நான் எவ்விதம் அவரைக் கண்டுபிடித்து நிரபராதி என்பதை நிலை நாட்டுவேன்'' என்றாள்.

''அம்மா, கவலையை விடு. நான் எட்டு நாளைக்குள் இவ்விடம் வரவழைக்கிறேன்'' என்றார்.

திடுக்கிட்டவளாக, ''ஐயோ வேண்டாம்; தாங்கள் இதில் எவ்வித முயற்சியும் எடுக்க வேண்டாம். அதனால் இன்னும் கெடுதல் தான் ஏற்படும். கூடிய சீக்கிரம் வெற்றியுடன் அவர் திரும்பவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். வந்தபிறகு நானே முயற்சி செய்து பார்க்கிறேன். தந்தையே! நான் உத்தமி என்பது சத்தியமானால்

நிரபராதி என்று அவர் அறிந்த பின்பே என் ஆவி போகும்'' என்றாள்.

''இருக்கட்டும், நான் தந்திரமாக வரவழைத்து விடுகிறேன்''.

''வேண்டாம் தந்தையே, கலையையே வெறுக்கும் அவர் மனதிற்குத் தங்கள் செய்கை விபரீத பலனைக் கொடுக்கும். மஹாராஜா! தங்கள் ஆணையினால் யாவற்றையும் நடத்தும் சக்திபெற்றிருந்தும் என்னை ஒரு பொருட்டாக எண்ணி என் குடிசைக்கு வந்து என் குறையை விசாரித்த உத்தம குணத்தில் ஈடுபட்டே தைரியமாக என் மனதை உள்ளது உள்ளபடி வெளியிடுகிறேன். தயவுசெய்து தாங்கள் இதை விட்டுவிடுங்கள்'' என்றாள் அவரைவணங்கி.

''பெண்கள் திலகம் என்றால் உனக்கே தகும். சரி உன்னிஷ்டப்படி விட்டுவிடுகிறேன். என்றாவது என் உதவி உனக்குத் தேவையென்றால் அஞ்சாமல் என்னிடம் வந்து தெரிவி. வேண்டியதைச் செய்கிறேன். இன்று ஏதாவது நான் செய்ய வேண்டுமா சொல்'' என்றார்.

''தாங்கள் மனமுவந்து சொல்லுவதினால் கேட்கிறேன். என் குறையைப் பவானிமாதாவிடம் முறையிட வெளியில் செல்லாமல், இவ்விடமிருந்து அவள் மூலஸ்தானம்செல்ல ஓர் சுரங்கம் அமைத்துக் கொடுத்தால் எனக்கு ஆறுதலாக இருக்கும்'' என்றாள்.

''சரி. எட்டு நாளைக்குள் கட்டி முடித்துவிடுகிறேன். கூடிய சீக்கிரம் உன் நாயகன் வந்து என் லக்ஷ்யம் நிறைவேறப் பவானி அருள் புரியட்டும். அம்மா, உலகில் ஓர் உன்னத லக்ஷ்யத்தை நிறைவேற்றவேண்டுமென்று நினைத்தால் ஆயிரம் இடையூறுகள் வருவது சகஜம் போலும். கிடைப்பதற்கரிய பொக்கிஷமாக நீ கிடைத்தாய் என்று மனப்பால் குடித்தேன், வீணாகிவிட்டது. தற்சமயம் மஹாநாட்டை நிறுத்த வேண்டியதே'' என்று எழுந்தார்.

பக்கத்தில் உறங்கும் கலாவைக் காட்டி ''இவள் உங்கள் லக்ஷ்யத்தை நிறைவேற்றுவாள்'' என்றாள்.

''உன் வாக்குப் பலிக்கட்டும். நான் சென்றுவரவா?''

''சித்தம். நமஸ்காரம்'' என்று தெரிவித்தாள்.

மஹாராஜா வந்து போன பின்னும் அவள் துக்கம் அதிகமாயிற்றே தவிர, குறையவில்லை. எட்டு நாளில் சுரங்கமும் கட்டிமுடிந்தது. பவானியிடம் கதறிவந்தாள் தினமும் இரவு அர்த்தசாமம் கழிந்தபின். பூர்வத்தின் பலன் தெய்வத்திற்கும் அப்பாலுள்ளது போலும். இன்றுவருவார், நாளை வருவார் என்ற ஆவலுடன் கடிதம் எழுதி எழுதி ஆறுமாதம் தள்ளினாள். மாடிஹாலைவிட்டு வெளி வருவதில்லை. தாயா



ருக்கும் விஷயம் ஒருவாறு தெரிந்தது. ஊரி லும் ராஜாராமின் பராமுகமும் மோஹினியின் துயரடைந்த வாழ்க்கை பற்றியும் வதந்தி பரவலாயிற்று.

மனது ஒடிந்த நிலைமையில் ஆறு மாதத் திற்குப் பின் நடமாடவும் சக்தியற்றுப் படுத்த படுக்கையானாள். சதா கண்ணீர் விட்டே காலம் கழித்தாள். குழந்தையின் மழலையில் சற்று ஆறுதல் தோன்றும். மறு கணம் தனது லக்ஷ்யம் சிதைந்ததை நினைக்க மனம் பகீர் பகீர் எனப் பற்றி எரியும்.

இவள் படுக்கையிலிருப்பதும் ராஜாராம் காதில் எட்டாமலில்லை. விதி அவர் மதியை மறைத்தது. அரண்மனை வைத்தியர்கள் வைத்தியம் வீணாகி வந்தது.

தான் குற்றமற்றவள் என்பதை நிரு பித்துவிட்ட பின்பே தன் பிராணனை விட வேண்டுமென்று துடித்தாள். உண்மை அன்பிற்கு, உத்தமப் பெண்ணின் கற்பிற்கு, தெய்வமாயினும் மதிப்புக்கொடுக்க வேண் டியது கடமையல்லவா?

ராஜாராமின் அத்யந்த நண்பர் ஸீதாராம். மோஹினியும் ராஜாராமும் ஆரம்பத்தில் கூடிவாழும் நாளில் அவர்களுடன் அடிக்கடி தங்குவார். சமீபத்தில் வெளிநாட்டுப் பிரயாணம் சென்றிருந்தாராதலால் இவர் கள் தகவல் தெரியாத நிலைமையில் சுதாவா கப் பவானிபுரம் வந்தார். ஊர் வாயை மூட உலைமூடி உண்டா? மோஹினியின் நடனம் பற்றியும் தற்சமயம் அவள் படுக்கையி லிருப்பதையும் கேள்விப்பட்டார். உடனே ஓடிச்சென்று மோஹினியைக் கண்டார். அவரைக் கண்டதும் கோவெனக் கதறி விட்டாள் மோஹினி. அவரும் மிக்க துக் கத்தை அடைந்தார்.

பிறகு மாமனார் வேண்டுகோளிலிருந்து அன்றுவரை நடந்த விஷயங்கள் முழுவதும் தெரிவித்துவிட்டு, "ஸீதாராம், எனக்கு வேறு ஒன்றும் வேண்டாம். பிராணன் போகுமுன் அவரைப் பார்த்துவிட்டால் போதும்" என்றாள்.

"அம்மா கவலைப்படாதே. எப்படி யாவது அவரை அழைத்து வருகிறேன்" என்று சொல்லும் சமயம், வேலைக்காரன் பத்திரிகையைக் கொண்டுவந்து வைத் தான். அதையெடுத்துப் பிரித்தார். ராஜாராமின் படமும் அவரது வெற்றிச் செய்தியும் பிரசுரமாயிருந்தன. "மோஹினி, இதோ பார். உன் நல்காலம் சமீபித்து விட்டது" என்று பத்திரிகையைக் கொடுத் தார்.

"பவானி, உன்னருள். ஸீதாராம், இருப் பிடம் தெரிந்துவிட்டது. அழைத்து வாருங்கள்" என்றாள்.

"இதோ" என்று உடனே புறப்பட்டார்.

புகழ் மாலை விருந்துபசாரம் எல்லாம் முடிந்து, தமது அறையில் சாய்மான நாற்காலியில் சாய்ந்துகொண்டு ஒரு புஸ்தகத்தைப் பிரித்தார் ராஜாராம். பிரித்த இடத்திலிருந்து மோஹினி எழுதிய கல்மனதை உருக்கும் கடிதம் அவர் மார்பின் மீது விழவே, எடுத்துப் பிரித் தார், படித்தார். கண்களில் நீர் நிரம்பினது. "நிரபராதியைப் பழி சுமத்திவிட்டோமே" என்ற நினைப்புத் தோன்றவே மனம் தவித்தது. அந்தச் சமயம்,

"ராஜா!" என்று அழைத்த சப்தம்கேட்டு எழுந்தார். எதிரில் ஸீதாராம் நின்றார்.

"வா! ஸீதா! வெளிநாடு சுற்றுப் பிரயாணம் முடிந்துவிட்டதா? யாவரும் சுகமா? உட்கார்" என்று சொல்லித் தாமும் உட்கார்ந்தார்.

"ராஜா, உட்கார அவகாசமில்லை; புறப் படு" என்றார்.

"என்ன விஷயம்?"

"மடையா, என்ன காரியம் செய்து விட்டாய்? உத்தமியைக் கொலை செய்து விட்டாயே. பெண் பாவத்தை ஏற்றுக் கொண்டாய். உலகம் புகழ்ந்தால் என்ன? வெற்றி மாலை சூடினால் என்ன? என்ன படித்தும் பிரயோஜனமென்ன? வண் டினையொத்தவர்கள் ஆண் இனம் என்பதை நிரூபணம் செய்துவிட்டாய்; பாவி! அவள் சாகும் தருணத்திலாவது நிம்மதியைக் கொடு" என்றார்.

"என்ன ஸீதா! விஷயம் விளங்காமல் திட்டுகிறாயே"

"சந்தேகப் பேய்க்கு இடங்கொடுத்து அவளை ஏன் வெறுத்தாய்?"

"ஸீதா! எல்லாம் அவளால் ஏற் பட்டதே. நான் அவளிடம் கொண்ட காதலின் தன்மையை அளவிட முடியுமா? என் அப்பாவின் பேச்சைக் கேட்டுக் கொண்டு, "கடமை கடமை" என்று புண் படுத்தி, தானும் புண்ணாக்கிக்கொண்டான். மோஹினியின் பிரிவு என்னை எவ்வளவு தூரம் பாதிக்கிறதென்பதை ஈசன்தான் அறியவேண்டும். சாமளாவிடம் சந்தோஷ மாக இருப்பதாக நடித்தேன். கடைசியில், அவளையும் விடவேண்டித்தான் வந்தது. ஸீதா! ஏதோ ஒரு மாதிரி பழைய






மனோஹரமான ரோஜாக்களின் மனதை மயக்கும் பரிமளத்தையும், அவைகளின் நேர்த்தியான பட்டுப் போன்ற மென்மையையும் வினோலியா ஒயிட்ரோஸ் உங்களை அனுபவிக்கச்செய்யும். உங்கள் இஷ்டத்திற்குரிய இச்சோப் மேனிக்கு மிக நன்மையளிக்கிறது; உங்கள் சௌந்தரியத்திற்கு அத்தியாவசியமானது.

# வினோலியா

## ஒயிட் ரோஸ் சோப்

VWR 25-23 TM

VINOLIA COMPANY LIMITED, LONDON, ENGLAND

அன்புடன் வாழ நினைக்கும் சமயம் நாட்டியம் நாட்டியம் என்று பித்துக் கொண்டாள். என்னுடன் கூடிவாழும் நாளில் நாட்டியத்தைப் பற்றி நினைக்காமல் இருந்துவிட்டு, பவானிபுரம் சென்றபின்பு மஹாராஜாவின் மனம் குளிர நாட்டிய மாடுவது என்பது என் மனதைப் பிளவு பண்ணிவிட்டது.

லீதா! வஜ்ரபாணமாகக் கடிதம் எழுதினேன். அவள் கடிதம் படிக்கும்பொழுதும் எப்பொழுதுமே அவள் நிரபராதி என்றே தோன்றும். ஓடிச் சென்று மன்னிப்பு கேட்கத் தோன்றும். ஆனுல் கொஞ்ச காலம் இப்படித் தவிக்கவிட்டால் நாட்டிய ஆசை விட்டுவிடும். பிறகு நிம்மதியாக வாழ்க்கை நடத்தலாம் என்பதுதான் எனது அந்தரங்க எண்ணம். மஹாராஜாவைச் சுட்டிக்காட்டினது வேண்டுமென்றே. அவரது உன்னத குணமும் என் மனம் அறியும். மோஹினியின் பரிசுத்தமும் என் மனம் அறியும். வரவர நாட்டியத்தில் பித்து அதிகமாகி என்னிடம் உள்ள காதல் குறைந்துவிடுமோ என்ற எண்ணத்தில் இவ்விதம் செய்தேன். ஆனுல் இவ்விஷயம் இவ்வளவு தூரம் மோஹினியைப் பாதிக்கும் என்று எண்ணவில்லை. குழந்தையைப் பார்த்துத் தேறுவாள் என்று நம்பினேன். நான் பாவி. அவள் நிலைமையைக் கேட்க என் இருதயம் துடிக்கின்றது. என் கண்மணி பிழைப்பாளா லீதா''! என்ருர்.

''ராஜா! எல்லாம் காலத்தின் கொடுமை. 'கேடுவரும் பின்னே, மதி கெட்டுவரும் முன்னே' என்பது இருவர் விஷயத்திலும் உண்மையாகின்றது. நடந்ததை நினைத்துப் புலம்புவதில் பிரயோஜனமில்லை. நடக்க வேண்டியதைக் கவனி. இந்த க்ஷணம் புறப்படு. நானும் வருகிறேன். அவளிடம் சென்று மன்னிப்புக் கேள். அவள் பரிசுத்தவதி என்பதை உன் மனம் அறியுமென்பதை அவள் உணர வேண்டும்'' என்ருர்.

''லீதா! அவள் முகத்தில் எப்படி விழிப்பேன். என் கண்மணி பிழைப்பாளா? பிழைப்பாளென்றே நம்புகிறேன். இனி ஒரு க்ஷணமும் அவளை விட்டுப் பிரியேன்'' என்ருர்.

''பிழைத்தால் உன் அதிருஷ்டம்தான். குழந்தையின் லாவண்யத்தைச் சொல்லி முடியாது. அதைப் பார்க்கும் பொழுது தான் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. உன்னைச் சித்ரவதை செய்தால்கூடப் பாபமில்லை என்று தோன்றுகிறது. உன் பரிக்ஷை அவளை எவ்வளவு தூரம் பாதித்துவிட்டது. அவள் கொள்கை மெச்சத் தகுந்ததே. உன் குலம் விளங்க, பெரியவர் மனம் நிம்மதியுறத் தன் வாழ்க்கையைத் தியாகம் செய்த பெண்கள் திலகத்தின் ஜீவனுக்கே உலைவைத்துவிட்டாய். நாட்டியத்தில் அவள் மனம் சென்றதில் தப்பு என்ன? உன் அணைப்பில் இருக்கும்பொழுது அவள் மனம் வேறு ஒன்றையும் நாடவில்லையே தவிர, இயற்கையான நாட்டியக் கலையின் உணர்ச்சி அவள் இருதயத்தை விட்டுப் பிரியுமா? பவானிபுரம் கலைத் தெய்வம் சான்னித்தியமாடும் உத்தம ஸ்தலம். ஜமீந்தார் லக்ஷியம் போற்றத் தகுந்தது. மோஹினி ஜமீந்தாரின் விருப்பத்தை நிறைவேற்றியதில் தப்பென்ன? அறிவு கெட்டவனே, சர்வமும் நாசம் போ. சரி புறப்படு'' என்ருர்.

* * *

கட்டிலில் படுத்தவண்ணம் எதிரில் மாட்டியிருக்கும் ராஜாராமின் படத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தவள் துக்க மிகுதியினுல் கண்களை மூடினுள். சற்றுப் பொறுத்து ''ராஜா! என் ஜீவன் பிரியும்முன் தங்களைக் காண்பேனு?'' என்று புலம்பிய வண்ணம் கண்ணைத் திறந்தாள். கவலை தோய்ந்த முகத்துடன் இளைத்து உருமாறி, கைகளைக் கட்டியவண்ணம் நிற்கும் ராஜாராமைக் கண்டாள். ஆச்சர்யம் தாங்கவில்லை. பிரமையோ என்று நினைத்துக் கண்களைக் கசக்கி, ''காண்பது கனவா நினைவா'' என்ருள்.

''மோஹினி!'' என்ருர் மேலே பேச முடியாமல் துக்கம் நெஞ்சை அடைத்தது.

''கட்டிலிலிருந்து மெதுவாகப் புரண்டு அவர் பாதத்தில் தலையைவைத்து, நான் நிரபராதி; கடமைக்காக வாழ்விழந்தவள்; என்னை ஏற்றுக் கொள்ளுங்கள். மன்னித்தேன் என்று சொல்லுங்கள்'' என்ருள் விம்மலுடன்.

''நீயன்ரு என்னை மன்னிக்கவேண்டும், பத்தரைமாற்றுத் தங்கத்திற்கும் உரைகல் தேடினேனே பாவி; மனமறிந்தும், வேண்டுமென்றே, உனது நாட்டிய உணர்ச்சி அற்றுப்போக வேண்டுமென்று, உத்தமரான ஜமீந்தாரையும் பழி சுமத்தினேன். மோஹினி, உன்னை இவ்வளவு மோசமான நிலைமைக்குக் கொண்டுவரும் அவ்விஷயம் என்று எண்ணவில்லை; வருந்தாதே. எல்லாம் விதிப்பயன். இனி ஒரு கணம்கூட உன்னைப் பிரியேன்'' என்று சொல்லியவண்ணம் குழந்தையைப்போல் தூக்கி, கட்டிலில் படுக்கவைத்துத் தாமும் பக்கத்தில் உட்கார்ந்து அன்புடன் அணைத்துக்கொண்டார்.

பசையற்ற தனது கரத்தினால் அவர் முகம் மார்பு இவைகளைத் தடவியவண்ணம், 'ஐயோ ஆஜானுபாகுவான தங்கள் உடம்பு எலும்பு தட்டுப்படுகிறதே'' என்றாள் மோஹினி.

''ஐயோ! உன் நிலைமையைவிடவா. பாவி எனது துராகிருதமான செய்கையால் உன்னை அலங்கோலமாக்கிவிட்டேன். உன் பாசம் என்னை விடவில்லை. துராகிருதமாக அவைகளை அடக்கினேன். மோஹினி! என்னை மன்னித்தேன் என்று சொல்லு'' என்றார்.

''ஐயோ நானா மன்னிப்பது. பளிங்கு போன்றிருந்த நமது வாழ்க்கையில் கடமை என்று ஊறி வடுவை ஏற்படுத்தினேன். தங்கள்மனமறியச்சக்தியற்று நாட்டியத்தில் பித்துக்கொண்டு உங்கள் சந்தேகத்திற்கும் ஆளானேன். நான் சாகுமுன் நிரபராதி என்பதைத் தங்கள் மனம் அறியவேண்டுமெனப் பவானியையே வேண்டினேன். நிறைவேறிற்று. இனி நிம்மதியாக உயிர் விடுவேன்''

''இல்லை. நீ நிச்சயம் பிழைத்தெழுந்திருப்பாய். அவள் உன்னுடனிருக்கப் பிரியப்படுகிறாள். உனக்காக அவளுடன், இவ்வூரிலேயே, இந்த வீட்டிலேயே இருதார வாழ்க்கை நடத்தப்போகிறோம். இனிமேல் உன்னை நடனமாட வேண்டாமென்று சொல்லமாட்டேன். அந்தப் பக்கங்களில் சென்றதற்குக் கலையின் அபூர்வம் புலனாயிற்று. மஹாராஜாவின் உன்னத லக்ஷயம் போற்றத் தகுந்ததே. கூடிய சீக்கிரம் நடன மஹாநாடு கூட்ட நானே ஏற்பாடு செய்கிறேன். நமது வாழ்க்கை பழையபடி காதலின் ஜோதியில் திகழும்'' என்று அன்புடன் முத்தமிட்டார்.

அந்த இன்ப ஸ்பர்சத்தில் தன்னை மறந்தாள். அதுவரை அனுபவித்த துன்பத்தின் சாயைகூட அவள் மனதில் தோன்றவில்லை.

பெயர்பெற்ற டாக்டர்கள் வந்து பார்த்தார்கள்: ஒரு மாதமாக அவள் பக்கத்தை விட்டு அசையாமல் சிசுருஷைகள் செய்தார். ஆயிரக்கணக்கில் பணத்தை வாரியிறைத்தார், ஆனால் பலனில்லை. உள்ளம் உருகி, ஆஹாரம் வெறுத்ததினால் குடல் ஒட்டி இரத்த ஓட்டமே அற்றுவிட்டது. மருந்துபிடிக்க இடமில்லை, பிழைக்கமாட்டாள் என்று வைத்தியர்கள் கைவிட்டுவிட்டார்கள். இதைக் கேட்ட ராஜாவின் உள்ளம் உடைந்தது. தமது மடமையான செய்கையினால் எத்தகைய விபரீதம் ஏற்பட்டுவிட்டதென்று உருகினார். பிரயோஜனம்?

கடைசிநாள் காலை. மோஹினி மிகவும் பலவீனமாகக் காணப்பட்டாள். ராஜாராம், ஸீதாராம், தாயார், குழந்தை யாவரையும் அருகில் வரும்படி சொன்னாள். ராஜாராமின் மடியில் தலை வைத்துக் கொண்டாள்.

''ராஜா! எனது ஜீவிய தசை மணிக்கணக்கில்தான் என்று தோன்றுகிறது. சாவை வருந்தியழைத்த நாள்போக, இப்பொழுது சாக மனமில்லை, உங்களையும், கலாவதியையும், சகலத்திற்கும் என்னையே நம்பியிருக்கும் என் தாயாரையும் விட்டுச்செல்ல மனமில்லை. என்ன செய்வது? ஆனாலும் நிரபராதி என்பதைத் தாங்கள் அறிந்து தங்கள் மடிமீது என் பிராணனை விடுகிறேனே அதுவே என் தவப்பயன்.

''அம்மா! ராஜா! ஸீதாராம்! நீங்கள் மூவரும் என் மரண வாக்கைக் காப்பாற்ற வேண்டும்'' என்றாள் ஈன ஸ்வரத்தில் மூச்சுத் தடுமாற.

''அப்படியே'' என்றார்கள்.

''ராஜா! என் கலாவதியைக் கைவிடாதீர்கள்'' என்றாள்.

''ஐயோ! மோஹினி! நீ பிழைப்பாய். இல்லையானால் என் மூச்சும் உன்னுடன் நின்றுவிடும். உனக்குப் பின் எனக்கு உலகில் வேலையில்லை. கலாவை விதி காப்பாற்றும்.''

''ராஜா! அப்படிச் சொல்லாதீர்கள். இரண்டு வயதில் என் செல்வம் பெற்றோர் இருவரையும் இழப்பதா?''

''விதி அதுவாயின் என்ன செய்வது?''

''ராஜா, என்ன அசட்டுப் பேச்சுப் பேசுகிறாய்? சாவு உன் கைக்குள்ளாகவா இருக்கிறது. அவள் மனம் நிம்மதியடையப் பதில் சொல்லு'' என்றார் ஸீதாராம்.

''மோஹினி, நான் உயிருடனிருந்தால், அவளை உன்னதமாக வளர்க்கிறேன். என் குலத்திலேயே விவாகம் செய்து வைக்கிறேன்.''

''ஐயோ அவையொன்றும் வேண்டாம். புதுமை இன்பத்தில் திகழ்ந்த தாங்களே ஜாதிக்குணம் என்று ஏசினீர்கள். உயர்ந்தோர்முன் செல்வம் தாழ்மையுற வேண்டாம். அவளுக்குச் சகல கலையும் கற்பிக்க வேண்டும். காதல் மணமே செய்து கொள்ளட்டும். தாங்கள் முன் சொன்னபடி மஹாராஜாவின் லக்ஷியப் பெண்ணாக விளங்கட்டும். தமது மதிப்பை விட்டு என்னிடம் மன்றாடிய அவரது கனவு இவளால் நனவாகட்டும், அவள் ஆனந்த

வெற்றி நடனம் ஆடும்பொழுது ஆவியாக நின்று மகிழ்வேன். ஆசி கூறுவேன். எனது நாட்டிய ஆவல் எனது குழந்தையினால் தணிக்கப்படட்டும். யாரிடத்திலும் அவள் தங்கள் குழந்தைஎன்று நீங்கள் தயங்காமல் சொல்லவேண்டும்.

"அம்மா! உன்னை அநாதரவாக விட்டுச் செல்லுகிறேன். என்ன செய்வது? நீ செய்த பூஜாபலன். என் செல்வியை குலத்தொழிலில் பழக்காதே. இயற்கையாகவே குலத்தொழிலை அவள் மனம் வெறுக்கும். அவள் பிரியப்படி மணம் நிகழட்டும். அல்லது கன்னிகையாகவே கலைப் பணி செய்வேனென்றால் அதையும் தடுக்காதே. அவள் கலைப்பணியில் என் ஆத்மா சாந்தியடையும். அவளுக்குப் பதினைந்து வயது வரும்பொழுது என் வாழ்க்கை வரலாற்றைச் சொல்லி, 'கடமைக்காகவே அகால மரணமடைந்தாள் உன் தாய். நாட்டியமே அவளது லக்ஷ்யம், அதை நீ நிறைவேற்று, என்று சொல்லு" என்றாள், மூச்சுத்திணறிற்று.

"இப்படி அகால மரணத்திற்கு ஆளாவேன் என்று கனவிலும் கருதவில்லை. கடமையைச் செய்தோம். ஏக புத்திரனை அடைந்த பெரியவரின் அந்திமக காலம் நிம்மதியுடன் முடிந்தது என்பதை நினைக்க, விதியினால் நேர்ந்த இத் துன்பமும் இன்பமாகவே தோன்றுகிறது. அம்மா! அவள் வித்தை பூர்த்தியடையுமுன் உன் அந்திம காலம் கிட்டிவிட்டால், மஹாராஜாவினிடம் அவளை ஒப்பித்து விடு, எனது விண்ணப்பம், அவளை லக்ஷியப் பெண்ணாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லு. நிச்சயம் ஏற்றுக்கொள்ளுவார். ராஜா! என் கண்மணி இவ்வூரிலேயே வளர வேண்டும்," என்று நிறுத்தினாள். சற்றுப் பொறுத்து "கலா! என் கண்ணே" என்று குழந்தையை அணைத்துக் கொண்டாள். கண்ணீரால் நனைத்தாள். சிறு கரத்தினால் தாயின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுத காட்சியானது. யமதர்ம ராஜனிடம் என் தாயை விட மாட்டேன் என்று மன்றாடுவது போலிருந்தது. குழந்தையின் அழுகையும், மோஹினியின் திணறலும் யாவர் மனதையும் வாட்டின. தாயும் ஸீதாராமும் கோவெனக் கதறினார்கள். ராஜாவின் நிலைமை சொல்லில் அடங்காது. துக்கம் நெஞ்சைக் கவ்வி, வாயை அடைத்து விட்டது, குனிந்து குழந்தையையும், மனைவியையும், அணைத்து முகத்தோடு முகம் வைத்துக்கொண்டார்.

"ராஜா" என்றாள் ஈனஸ்வரத்தில்.

"ஏன்" என்று நிமிர்ந்தார்.

"கலா" என்று சொல்லும்பொழுதே நாக்கு உளறிற்று. நிமிர்ந்து ராஜாராமை நோக்கினாள். அவ்வளவே திரும்பக் கண்கள் மூடவில்லை. சற்றுநேரம் சென்றது. ராஜா மனதில் திக்கென்றது. மூக்கிலும் மார்பிலும் கைவைத்தார். அவ்வளவே.

"ஐயோ! மோஹினி! நானே யமனாக உன்னை வதைத்துவிட்டேனே, மோஹினி மோஹினி" என்று மார்பிலும் தலையிலும் அறைந்துகொண்டார். தாயாரும் ஸீதாராமும் மோஹினி மோஹினி என்று அலறினார்கள். நாலு பக்கமும் அலறல் சப்தம் கேட்ட குழந்தை பயந்து, தனது பயத்தை நீக்கிக்கொள்ளத் தாயின் உயிரற்ற சடலத்தை இறுகத் தழுவிக்கொண்டாள்.

"மோஹினி மோஹினி" என்று கதறின ராஜாவின் குரல் கம்மி நாக்குழற, 'மோஹினி' என்ற ஈனசப்தம் கேட்ட ஸீதாராம் திடுக்கிட்டு அருகில் வரும் சமயம், ராஜாவின் ஆவி மோஹினியின் ஆவியுடன் ஒன்றுகூடிவிட்டது. குழந்தையின் முதுகின் மீது தலை சாயவே, சட்டெனத் தலையைத் தாங்கி, குழந்தையை ஒருகையில் எடுத்தார்.

டாக்டர் வந்தார். ஹ்ருதயம் வெடித்து விட்டது; நாளடைவில் மெலிந்த உள்ளம் துக்கம் தாங்காமல் நின்றுவிட்டது என்ற தீர்ப்பைக் கூறிச் சென்றார். அன்று ராஜா சொன்னபடி இருவரின் கடைசி மூச்சும் ஒன்றாகப் பிரிந்தது.

ராஜ மரியாதைகளுடன் அவர்கள் உடல் அடக்கம் செய்யப்பட்டது. மோஹினி ராஜாராம் காதலைப்பற்றி யாவரும் வியந்தார்கள். கலாவின் பொறுப்பைத் தாம் ஏற்றுக்கொள்ளுவதாக மஹாராஜா பாட்டிக்குச் சமாதானம் கூறினார். ஸீதாராமும் அடிக்கடி பார்த்துவிட்டுப் போவார்.

சாமளாவும் குழந்தையும் நிரந்தர அநாதரவானார்கள். அவருக்காக ஏங்கி நின்ற சாமளா என்றும் ஏங்கும் நிலைமையை அடைந்தாள்.

(தொடரும்)

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauvei Colour Press, Besant Road, Kumbakonam.

198053

# மிகவும் ருசிகரமானது மாத்திரமல்ல- இது நல்லது !




## தவிர ஜீவசக்தியளிக்கும் வீடமின்கள் நிறைந்தது

**போர்ன்-வீட்டா**விலுள்ள நேர்த்தியான சாக்லெட் வாசனை இளையோர் முதியோர் அனைவராலும் விரும்பப்படுவது. அதிலுள்ள கால்ஷியமும் விடமின்களும் உங்கள் எலும்புகளை நன்கு வளரச்செய்து புதிய ஆரோக்யமும ஜீவசக்தியும ததும்பச் செய்கின்றன.

## காட்பரீஸ்

# போர்ன்-வீடா

கால்ஷியம், விடமின்கள் நிறைந்தது.

KB 37 M

## காட்பரி என்பது சிறந்த ரகத்துக்கு அறிகுறி

சப்ளைகள் கிடைக்காவிட்டால் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—
காட்பரி-ப்ரை (எக்ஸ்போர்ட்) லிட், (Dept "16" ) தபால் பெட்டி 1417-பம்பாய்.




# டி எஸ். ஆர்.

தைலங்களுக்கு நிகரில்லை என்பது எல்லோருக்கும் கைகண்ட அனுபவம்.

வாசனைத் திரவியங்களுக்கோ கேட்பானேன். சுதந்திர இந்தியாவில் கோகுல் அம்பர் ஊதுவத்தி மணக்காத மாளிகையுமுண்டோ

**T. S. R. & Co.**

கும்பகோணம்.

Cauveri Colour Press, Kumbakonam